T. B. NO 349

3-1911.

[illegible]

Q6
N11
76759

A. M. D. G.

அர்ச். அன்னம்மாள் சபையின்

சகோதரிகளுக்கடுத்த

# ஞானப் பொக்கிஷம்.

இரண்டாம் பதிப்பு.

Printed by Rev. Br. Joseph, s. j., Superintendent,
St. Joseph's Industrial School Press,
TRICHINOPOLY.

1911.

Nihil obstat. L. BESSE, s. j., cens. dep.

Imprimatur:

+ JOANNES-MARIA, s. j.,

*Ep. Trichinopolit.*

# முகவுரை.

இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பற்பல சபைகளிலுள்ள சந்நியாசிமார்களுங் கன்னியாஸ்திரீகளுந் தங்கள் ஒழுங்குபிரகாரஞ் சொல்லக்கடனுள்ள செபங்களையும், பின்னும் பத்தியில் வர்த்திக்கும்படி தாங்களே வழக்கமாய்ச் செபித்துவருஞ் செபங்களையும் இப்புஸ்தகத்தில் சேர்த்து வைத்திருக்கிறோம். இத்தோடுகூட துறவறஸ்திதியின் முக்கிய ஞான முயற்சிகளாகிற தியானம், ஆத்துமசோதனை, மாதத்தின் பரிசோதனை இவை முதலியவைகளைச் செய்யும் வகையையுங் கூட்டிவைத்திருக்கிறோம். கடைசியாய்ச் சந்நியாசிமார்களுங் கன்னியாஸ்திரீகளுந் தாங்கள் கொடுக்கும் தரித்திரம், விரத்தத்துவம், கீழ்ப்படிதல், என்னும் மூன்று வார்த்தைப்பாடுகளால், தங்கள்மேற் சுமத்திக்கொள்ளுங் கடன் இம்மாத்திரமென்று அறிவது மிக்க அவசியமானதால், மூன்றாம் காண்டத்தில், வார்த்தைப்பாடுகளின் ஞான உபதேசச் சுருக்கத்தைச் சேர்த்துத் தருவது பிரயோசனமாயிருக்குமென்று நமக்குத் தோன்றினது.

## முகவுரை.

இப்புஸ்தகம் சந்நியாசிமார்களுக்குங் கன்னியாஸ்திரீமார்களுக்கும் உபயோகமாகச் செய்யப்பட்டபடியால், சேசுநாதரின் திவ்விய இருதயமானது இப்புஸ்தகத்தை ஆசீர்வதித்து; இத்தால் இவர்களிருதயத்திலே துறவற அந்தஸ்தின் உத்தம தனத்துக்குரிய ஞானக் கனிகளை ஏராளமாய்ப் பிறப்பிக்கும்படி, தேவமாதாவின் மாசற்ற இருதயத்தின் மன்றாட்டையும், அர்ச். சூசையப்பரின் வேண்டுதலையும் இரந்து கேட்கிறோம்.



அர்ச். அன்னம்மாளே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.




# முதற்காண்டம்.

## I. அர்ச். அன்னம்மாள் சபையில் ஜெபிக்கப்படும் பிரதான ஜெபங்கள்.

### எழுந்திருக்கும் வகையும் காலைச் செபமும்.

மணிச்சத்தங் கேட்டவுடனே நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் உங்களைக் கூப்பிடுகிறாரென்று நினைத்து, சாமத்தியமாய்ப் படுக்கையின்மேல் உட்கார்ந்திருந்து சிலுவை அடையாளத்தை வரைந்து,

அவளவள் தனது வஸ்திரத்தை, பரிசுத்தக் கன்னியாஸ்திரியின் கையிலே நின்று பெற்றுக்கொள்ளுகிறதுபோல உடுத்திக்கொள்ளுகிறது. இதற்குள்ளாகத் தியானிக்கவேண்டியதுகளின்பேரில் குறுகிய சில நினைவுகளை நினைத்துக்கொள்ளுகிறது.

¶ இதன்பின் தியான இடத்தில் முழங்காலிலிருந்து சிலுவை அடையாளத்தை வரைந்து, நெற்றித்தரைமட்டும் வணக்கத்தோடே குனிந்து, பரிசுத்த திரித்துவத்துக்கு ஆராதனையாகச் சொல்லுகிறதாவது:—

பரிசுத்தரே, பரிசுத்தரே, பரிசுத்தரே, படைப்புகளின் கடவுளான ஆண்டவரே, உலகமெல்லாம் உமது மகிமையினாலே நிறைந்துபோயிற்று.

பிதாவுக்குஞ் சுதனுக்கும் இஸ்பிரீத்துசாந்துவுக்குந் தோத்திரமுண்டாகக்கடவது,

ஆதியிலேயும் இப்பொழுதும் எப்பொழுதும் அநாதி சதாகாலமும் இருக்கும்படியே. ஆமென் சேசு.

¶ அப்பால் தனது கருத்துகளைச் செம்மைப்படுத்தலாவது:—

நித்திய சர்வேசுரா, இதோ நான் உமது சர்வத்துக்கும்வல்ல மேன்மையின் சந்நிதியில் முழங்காலிலிருந்து, உமக்கு நமஸ்காரமும், நன்றியறிதலான முயற்சிகளையும் ஒப்புக்கொடுக்கிறேன். இப்படி நமின் சத்தத்தினாலும், தேவ



இஷ்டப்பிரசாதத்தின் எவலினாலும் காண்பிக்கப்படும் உமது திவ்விய சித்தத்தை நிறைவேற்றவும், எனக்கு நீர் செய்திருக்கிற உபகாரங்களைக் குறித்து நன்றியறிந்து நடக்கவும், நல்ல மரணத்திற்குப் பிற்பாடு நித்திய சீவியத்தின் தேவ இஷ்டப்பிரசாதத்தை அடையவும், தேவ திரவிய அநுமானங்களை மிகுந்த ஆயத்தத்தோடே வாங்கவும், இன்றைக்கு என்னுடைய நினைவு, சொல், செய்கைகளை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

இதுவுமல்லாமல், இப்படிப்பட்ட கருத்துக்கள் என்னுடைய பாவங்களின் உத்தரிப்புக்காகவும், உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களின் ஆறுதலுக்காகவும், எங்களுடைய கூட்டமுகாந்தரங்களின் பாக்கியமான நிறைவேற்றுதலுக்காகவும் உதவும்படிக்கு ஆசையாயிருக்கிறதுமல்லாமல், நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் பரிசுத்த கன்னியாஸ்திரீ முதலான மோக்ஷவாசிகளுடைய கருத்துகளுக்கும் நன்றியறிதலான முயற்சிகளுக்கும் ஒத்திருக்கும்படி மன்றாடுகிறேன். நான் கேட்டுக்கொள்ளுகிற உம்முடைய தேவ இஷ்டப்பிரசாதத்தின் பலமான ஒத்தாசையினால் ஒரு சாவான பாவத்தையாகிலும், அற்பப்பாவத்தையென்கிலும்

கட்டிக்கொள்ளாதபடிக்கும், இன்றைக்கு என்னுடைய தனித்த ஆத்தும சோதனையை விசுவாசமாய்ச் செலுத்திவரும்படிக்கும் உறுதியான பிரதிக்கினை பண்ணுகிறேன். இந்த நாளில் அடையக்கூடுமான பரிபூரண பலன்களை அடையவும், எங்கெங்கும் நடந்துவருகிற பூசையின் பலிகளுக்குப் பங்காளியாயிருக்கவும் ஆசையாயிருக்கிறேன்.

¶ இந்தச் செபம் முடிந்தபிற்பாடு லொரேத்தூரிலிருக்கிற தேவமாதாவின் வீட்டைப்பார்த்துச் சொல்லத்தக்கதாவது:—

பரிசுத்த மரியாயே, என்னுடைய நேசமுள்ள தாயாரே, நான் உமக்குச் சொந்தமாயிருக்கவேணுமென்றதைக் காண்பிக்கத்தக்கதாக, என்னுடைய கண் மூக்கு செவி கை கால் இருதயம் சகலத்தையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இனிமேல் நான் உமக்குச் சொந்தமாயிருக்கிறபடியினாலே சாவான பாவத்துக்காகிலும் அற்பபாவத்துக்காகிலும் உட்படாதபடிக்கு என்னைக் காப்பாற்றியருளும். நான் தெரிந்துகொண்ட தொழிலின்பேரில் எனக்கு மகா பிரியம் எப்போதுமிருக்கும்படி தயை பண்ணும். வல்லமையுள்ள உமது அடைக்கலத்துக்குள் வாசம்பண்ணும்படி ஆதரவாயிரும்.



உமது தயாளமுள்ள ஆசீர்வாதத்தை எனக்குத் தந்தருளும்.

பிதாவுக்கும்—மற்றதும்.

¶ அதன் பிறகு மூன்றுவிசை தரையிலே முத்தி செய்து மூன்று பிரியதத்தமந்திரஞ் சொல்லுகிறது.

## விசுவாச முயற்சி.

என் சர்வேசுர சுவாமீ, திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களையெல்லாந் தேவரீர் தாமே அறிவித்தபடியினாலே நானும் உறுதியாக விசுவசிக்கிறேன். ஆமென் சேசு.

## நம்பிக்கை முயற்சி.

என் சர்வேசுரசுவாமீ, தேவரீர் வார்த்தைப்பாடு கொடுத்தபடியினாலே சேசுநாதர்சுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தப் பலன்களைப் பார்த்து என் பாவங்களையெல்லாம் பொறுத்து, எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும், மோக்ஷபாக்கியத்தையுந் தந்தருளுவீரென்று உறுதியாக நம்பியிருக்கிறேன். ஆமென் சேசு.

## தேவசிநேக முயற்சி.

என் சர்வேசுரசுவாமீ, தேவரீர் மட்டில்லாத சிநேகத்துக்குப் பாத்திரமாயிருக்கிறபடியினாலே எல்லாத்தையும்பார்க்க உம்மை நான் முழுமனதோடே சிநேகிக்கிறேன். பின்னையும்

உம்மைப்பற்றி என்னை நான் சிநேகிக்கிறப் போலே மற்றெல்லோரையுஞ் சிநேகிக்கிறேன். ஆமென் சேசு.

## சேசு அப்போஸ்தலர் சபைக்குப் பொதுவான சிறு செபம்.

சேசுவின் திரு இருதயமே! நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத் தானே பலியாக ஒப்புக்கொடுக்குஞ் சகல கருத்துகளுக்காகவும், அடியேன் இன்று செய்யும் செபங்களையும், கிரியைகளையும், படும் துன்ப வருத்தங்களையும், அர்ச். கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின் வழியாக உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்.

இந்த மாதத்துக்கும் இந்த நாளுக்கும் சபையாருக்குக் குறிக்கப்பட்ட கருத்துகளுக்காக விசேஷமாய் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன். ஆமென் சேசு.

இந்தக் கருத்துகளுக்காகச் செய்யும் நற்கிரிகை ஒவ்வொன்றுக்கும் 100-நாள் பலன்.

## திரிகாலசெபம்.

ஆண்டவருடைய சம்மனசானவர் மரியாயிடமே விசேஷஞ் சொல்லிற்று, அவள் இஸ்பிரீத்துசாந்துவினாலே கர்ப்பணியானாள். பிரி.



இதோ ஆண்டவருடைய அடிமையானவள் உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது. பிரி.

வார்த்தையானது மாம்சமாகி, எங்களுடனேகூட வாசமாயிருந்தது. பிரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி, சம்மனசு சொன்னதினாலே உமக்குக் குமாரனாகிய சேசுக்கிறீஸ்து மனுஷனானதை அறிந்திருக்கிற நாங்கள் அவருடைய பாடுகளினாலேயுஞ் சிலுவையினாலேயும் உத்தானத்தின் மகிமையை அடையத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளவேணுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். இந்த மன்றாட்டுகளையெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென் சேசு.

## நித்திரையொழுக்கம்.

ஒழுங்குப்படியே இராச்செபத்துக்காக அர்ச். தேவமாதா சகல அர்ச்சியசிஷ்டவர்களின் பிரார்த்தனை சொல்லி, ஆத்துமசோதனை முதலிய கடனான செபங்களை முடித்தபிற்பாடு, படுக்கிற இடத்திலே முழங்காலிலேயிருந்து பரிசுத்த தேவமாதாவை நோக்கிச் சொல்லத்தகும் செபமாவது: "என் ஆண்டவளே! என் தாயாரே!"—மற்றதும்.

அதன்பிறகு மூன்றுவிசை தரையிலே முத்திசெய்து மூன்று பிரியத்தச்சமந்திரஞ் சொல்லுகிறது. கடைசியிலே காவலான சம்மனசின் ஆதாரவைக் கேட்டு, சத்தமில்லாமல் படுக்கிறது.

## யாதொரு வேலை ஆரம்பிக்குமுன் சொல்லவேண்டிய செபம்.

முதலாளி.—இஸ்பிரீத்து சாந்துவே, தேவரீர் எழுந்தருளிவாரும்.

அனைவர்.—உமது விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பும்; மேலும் உமது தேவசிநேக அக்கினியை அவர்களிடத்தில் எரியப்பண்ணியருளும்.

மு.—உமது ஞான ஆவியை வரவிடும், அப்போது அவர்கள் சிருஷ்டிக்கப்படுவார்கள்.

அ.—உலகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

பிரார்த்திக்கக்கடவோம்,

சர்வேசுர சுவாமி, விசுவாசிகளுடைய இருதயங்களை, இஸ்பிரீத்து சாந்துவின் பிரகாசத்தால் படிப்பித்தருளினீரே, அந்த இஸ்பிரீத்து சாந்துவினால் சரியானவைகளை உணரவும், அவருடைய ஆறுதலால் எப்போதும் மகிழ்ந்திருக்கவும் எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும். இதுகளையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும். ஆமென் சேசு.



## வேலை முடிந்தபின்.

சர்வேசுரனுடைய அர்ச்சியசிஷ்ட மாதாவே, இதோ உம்முடைய சரணமாக ஓடிவந்தோம்; எங்கள் அவசரங்களிலே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு நீர் பராமுகமாயிராதேயும். ஆசீர்வதிக்கப்பட்டவளுமாய் மோட்சமுடையவளுமாயிருக்கிற நித்திய கன்னிகையே, சகல ஆபத்துகளிலே நின்று எங்களைத் தற்காத்துக் கொள்ளும். ஆமென் சேசு.

## 4. அசனத்துக்குமுன் சொல்ல வேண்டிய செபம்.

மு.—ஆண்டவரை வாழ்த்துவீர்களாக.

அ.—ஆண்டவரை வாழ்த்துவீர்களாக.

மு.—சகலருடைய பார்வையும்.

அ.—ஆண்டவரே, உம்மில் நம்பிக்கை வைத்திருக்கின்றது; நீரும் தக்க நேரத்தில் அவர்களுக்கு அன்னத்தைத் தருகிறீர். உமது கரத்தை விரித்துச் சகல ஜெந்துக்களுக்கும் ஆசீர்வாதந் தந்து நிரப்புவீர்.

மு.—பிதாவுக்குஞ் சுதனுக்கும் இஸ்பிரீத்து சாந்துவுக்குந் தோத்திரமுண்டாகக்கடவது,

அ.—ஆதியிலேயும் இப்போதும் எப்போதும் அநாதி சதாகாலமும் இருக்கும்படியே, ஆமென் சேசு.

மு.—சுவாமீ கிருபையாயிரும்.

து.—கிறீஸ்துவே கிருபையாயிரும்.

மு.—சுவாமீ கிருபையாயிரும். பர. எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும்,

து.—தின்மையிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

மு.—சர்வேசுரா சுவாமீ, என்னையும் உமது அருளினாலே நான் புசிக்கவிருக்கின்ற இந்தப் புசிப்புக்களையும் என்னாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து ஆசீர்வதித்தருளும்.

து.—ஆமென் சேசு.

## அசனத்துக்குப்பின் நன்றியறிந்த தோத்திரம்.

மு.—சதாகாலத்துக்கும் நித்தியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகின்றவருமாயிருக்கிற சர்வ வல்லபமுள்ள சர்வேசுரா, தேவரீர் எனக்குத் தந்தருளின இந்த ஆகாரங்களுக்காகவுந் தேவரீர் எனக்குச் செய்துவருகிற சகல உபகாரங்களுக்காகவுந் தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறேன்.

து.—ஆமென் சேசு.

மு.—சுவாமீ கிருபையாயிரும்.

து.—கிறீஸ்துவே கிருபையாயிரும்.



மு.—சுவாமீ கிருபையாயிரும். பர. எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும்,

து.—தின்மையிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

மு.—இப்பொழுதும் எப்பொழுதும் ஆண்டவருடைய திருநாமம் வாழ்த்தப்படக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்,

ஆண்டவரே, உமது திருநாமத்தினாலே எங்களுக்கு உபகாரம் பண்ணுகிறவர்களுக்கெல்லாம் நித்திய சீவியத்தைக் கட்டளையிட அநுக்கிரகம் பண்ணியருளும். ஆமென் சேசு.

## அர்ச். அன்னம்மாளைக்குறித்து ஒன்பது மன்றாட்டு.

### முதலாவது மன்றாட்டு.

ஆதியருள் பெருகி ஆபிரகாமின் சந்ததியில் தாவீது இராஜகுல வங்கிஷத்திற் பிறந்த அர்ச். அன்னம்மாளே, உமது உத்தம நன்மை உகந்த பத்தி, விசுவாசம், தர்ம நடக்கை, தபசு முதலானதினால் நீர் சர்வேசுரனை மிகவும் சிநேகித்தநுசரித்திருந்ததினாலே சர்வேசுரன் உமதுபேரில் வைத்த பட்சத்தால் அவருடைய வ

சுதனாகிய நம்முடைய நாதரும் உலக இரட்சகருமாகிற சேசுக்கிறீஸ்துநாதருக்குத் தாயாராகப்போகிற அமலோற்பவியான அர்ச். தேவமாதாவை உம்முடைய கர்ப்பத்திலே உற்பவிக்கப்போகிற விசேஷத்தைச் சம்மனசுவின் முகாந்தரமாக அறிந்து, நீர் மகிழ்ந்தடைந்த சந்தோஷத்தைப் பார்த்து,

* பாக்கியமுள்ள அர்ச். அன்னம்மாளே, பாவிகளாயிருக்கிற நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்கிரங்கி நீர் சர்வேசுரனை மன்றாடினால், உமது மன்றாட்டைப் புறக்கணித்துத் தள்ளுகிறதில்லையே. அதேதெனில் சகல மோக்ஷவாசிகளையும் பார்க்க அவருடைய ஏக சுதனுமாய் நமதாண்டவருமாகிய சுதனாகிய சர்வேசுரனுடைய பரிசுத்த தேவமாதாவுக்கு நீர் தாயாராயிருக்கிறதினாலேயும், சுதனாகிய சர்வேசுரனுக்கு நீர் பாட்டியாக ஸ்தாபித்திருக்க வல்லபியாயிருக்கிறதினாலேயும், விசேஷமாய் அவர் உமது மன்றாட்டுக்கு உடனே கட்டளையிடுவார் என்கிறதினாலே, நாங்கள் செய்த அநேக பாவங்களுக்கெல்லாம் விமோசனம் பெற்று, எங்களுக்கு வருகிற சகல விக்கினம் பொல்லாப்புகளை

---

* இதைப் பின்வரும் ஒவ்வொரு மன்றாட்டுக்குப்பின் ஜெபிக்கவும்.



யும் தள்ளி, தருமவழியிலே நடக்கவுஞ் சாகிற தருவாயிலே நல்ல மரணமடைந்து, எங்கள் ஆத்துமம் மோக்ஷத்திலே உம்மோடேகூட சர்வேசுரனைத் தரிசித்திருக்கவும் வேணுமென்று உம்முடைய திருக்குமாரத்தியாகிய அர்ச். மரியாயி என்கிற திருநாம மகத்துவத்துக்கும், உம்முடைய பத்தாவாகிய அர்ச். சுவக்கீனு என்கிறவருக்கும், உமக்கும் தோத்திரமுண்டாக உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

## இரண்டாவது மன்றாட்டு.

ஆதி பிதாவினால் அமைக்கப்பட்ட விருட்சத்தின் அடிவேரான அர்ச். அன்னம்மாளே, சர்வேசுரன் கட்டளையிட்டபடியே சம்மனசுவின் முகாந்தரமாகப் பரிசுத்த தேவமாதாவை உம்முடைய கர்ப்பத்திலே உற்பவிக்கப் பண்ணின பரம இரகசியத்தை அறிந்து, அவ்வார்த்தைகளுக்கு அவரை வணங்கி ஸ்துதித்துத் தோத்திரம்பண்ணி, நீர் மனமகிழ்ந்து அடைந்த சந்தோஷத்தைப் பார்த்து,

* பாக்கியமுள்ள—மற்றதும்.

## மூன்றாவது மன்றாட்டு.

பிதாவுக்குகந்த புஷ்ப மலர் விரியும் பூந்தோட்டமான அர்ச். அன்னம்மாளே, மாசற்ற

நிர்மல மகிமைப்பிரகாசமுள்ள அர்ச். தேவமாதாவை உம்முடைய கர்ப்பத்திலே இலவலேசமாகிலும் பாவத்தினுடைய நிழல்படாமற் சகல வரப்பிரசாதங்களினாலே அலங்கரிக்கப்பட்டு, ஜென்மப்பாவமில்லாமல் உற்பவிக்கப் பாத்திரமானதினாலே உமது அங்கம் பூரித்து அதிக சந்தோஷங்கொண்ட பாக்கியத்தைப் பார்த்து,

* பாக்கியமுள்ள.—மற்றதும்.

### நான்காவது மன்றாட்டு.

அளவில்லாத காலத்தின் நித்திய சீவியத்தின் வித்தான அர்ச். அன்னம்மாளே, சிறுவத்திலே துவக்கி வயசு காலமட்டும் மலடாயிருந்து நீர் செய்த தவத்தின் மேகாந்தரமாகச் சர்வேசுரனுக்கு ஒரு மகளாகச் சர்வலோகத்துக்கும் தயாபரியான சம்மனசுக்களுடைய இராக்கினியை உம்முடைய வயிற்றிலே ஆச்சரியமாய் உற்பவிக்கப் பெறுபேறுபெற்று அமலோற்பவியான அர்ச். தேவமாதாவை ஒன்பது மாதஞ் சுமந்து தாங்கிக் களித்து நலமடைந்த சந்தோஷ பாக்கியத்தைப் பார்த்து,

* பாக்கியமுள்ள.—மற்றதும்.



### ஐந்தாவது மன்றாட்டு.

தேவகனி உதித்துப் பூதலத்தை இரட்சிக்கும் சிங்காரத் தோப்பான அர்ச். அன்னம்மாளே, உம்முடைய வயிற்றிலே தானே அர்ச். தேவமாதா அளவுறுக்கப்படாத சகல நன்மைகளின் வரப்பிரசாதங்களை அடைந்து ஆத்தும சவுந்தரியமும் அங்க அலங்காரமும் பரலோக பூலோகத்திலும் காணாத நிகரில்லாத ஒளிவீசும் திருக்குழந்தையான பரிசுத்த தேவமாதாவைப் பெற்று நீர் பார்த்து மனமகிழ்ந்து மோட்ச பரவசமடைந்த சந்தோஷ பாக்கியத்தைப் பார்த்து,

* பாக்கியமுள்ள.—மற்றதும்.

### ஆறாவது மன்றாட்டு.

தேவ களஞ்சியத்தின் திருவுளத்தாலே அர்ச். அன்னம்மாளே, இத்தனை மகிமையுள்ள வரப்பிரசாதங்களோடே விண் மண்டலத்தில் மட்டில்லாத நவமாய்த் தோன்றி ஒளிர்ச் சந்திர தாரகைபோலப் பூலோகத்துக்கு ஆனந்தமாய்ப் பிறந்திருக்கும் திருக்குழந்தையான பரிசுத்த தேவமாதாவுக்குச் சர்வேசுரன் தாமே தேவதூதனை அனுப்பி மரியாயியென்ற நிறைந்த நாமதேயந் சூட்டச்செய்ததைக் கண்டு களிகூர்ந்த சந்தோஷ பாக்கியத்தைப் பார்த்து,

* பாக்கியமுள்ள.—மற்றதும்.

### ஏழாவது மன்றாட்டு.

தேவ அபிஷேகத்தின் திருப்பெட்டகமான அர்ச். அன்னம்மாளே, இப்படிக்கொத்த மகிமை நிறைந்த மரியாயியென்ற திருக்குழந்தையான பரிசுத்த தேவமாதா பூமண்டலத்தில் முன் காணாத நூதன காந்தி வீசி பரிசுத்தமாய்ப் பிறந்திருக்கிறதைக் கண்டு கோவிலிலே கொண்டுபோய்க் காணிக்கையிட்டு மீட்டுக்கொண்டு உலகத்தை இரட்சிக்கப்போகிற சுதனாகிய சர்வேசுரனுக்குத் தாயாராகப்போகிறதென்கிறதினாலே மகா ஆசாரத்தோடேயும் பூச்சியத்தோடேயும் வளர்க்க அதிக மகிழ்ச்சி ஆசைகொண்டடைந்த சந்தோஷ பாக்கியத்தைப்பார்த்து,

* பாக்கியமுள்ள.—மற்றதும்.

### எட்டாவது மன்றாட்டு.

நன்மை பொழிந்து நற்றமைகளுக்கு அருள் புரியும் ஞானக்கடலான அர்ச். அன்னம்மாளே, உண்டாக்கப்பட்ட சகல வஸ்துக்களுடைய புத்திக்குள்ளே அடங்காத ஞானப்பலன்களை அதிகமாக உண்டு வளர்ந்த திருக்குழந்தையாகிற பரிசுத்த தேவமாதா மூன்று வயதாயிருக்கும்போது சர்வேசுரன் கட்டளைப்படிக்குக் கோவிலிலே கொண்டுபோய் ஸ்தாபிக்கப்பட்டதைக்கண்டு நீர் அடைந்த வாக்குக்கெட்டாத சந்தோஷ பாக்கியத்தைப் பார்த்து,



* பாக்கியமுள்ள.—மற்றதும்.

### ஒன்பதாவது மன்றாட்டு.

ஜெகதலத்தோர் பசியாற்றிச் சீவியர்களாக்குவிக்கும் தேவதாழ்ச்சித்தோட்டமான அர்ச். அன்னம்மாளே, நீர் இந்தப் பூலோகத்திலே இத்தனை சந்தோஷ பாக்கியங்களை அனுபவித்ததுமல்லாமல், உம்முடைய மரண அவஸ்தை நேரத்திலே உம்முடைய திருக்குமாரத்தியாகிற பரிசுத்த தேவமாதாவின் மடியிலிருந்து ஆறுதலடைந்து சகல சம்மனசுக்கள் மோக்ஷவாசிகளும் ஆனந்த சங்கீதங்களோடே உமது ஆத்துமத்தைப் பிதாவாகிய சர்வேசுரன் சந்நிதியிலே சேர்த்தபோது சர்வேசுரன் உம்மைச் சதாகாலத்துக்கு நித்தியசீவியமான பாக்கியங்களுக்குப் பொக்கிஷக்காரியாக கிரீடந்தரித்ததைக்கண்டு நீர் அடைந்த சந்தோஷ பாக்கியத்தைப்பார்த்து,

* பாக்கியமுள்ள.—மற்றதும்.

## அர்ச். அன்னம்மாள் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

தேவமாதாவாகிய அர்ச். கன்னிமரியாயே,

அர்ச். அன்னம்மாளே,

பெத்லகேம் நகரில் பிறந்தவளான அர்ச். அன்னம்மாளே,

எஸ்தோலானு எமெரென்சியானுவுடைய குமாரத்தியான அர்ச். அன்னம்மாளே,

அர்ச். சுவக்கீனு என்பவருக்குப் பத்தினியான அர்ச். அன்னம்மாளே,

மிகுந்த பொறுமையோடே வெகுநாள் மலடியாயிருந்த அர்ச். அன்னம்மாளே,

(எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.)



பத்தியுள்ள வேண்டுதலால் ஒரு உத்தம குமாரத்தியைப் பெற்ற அர்ச். அன்னம்மாளே,

பரலோக இராக்கினியாகிய கன்னிமரியம்மாளுக்குத் தாயாரான அர்ச். அன்னம்மாளே,

சேசுக்கிறீஸ்துவின் பாட்டியாரான அர்ச். அன்னம்மாளே,

அர்ச். சூசையப்பருக்கு மாமியாராகிய அர்ச். அன்னம்மாளே,

நோயே என்பவருடைய பெட்டகப் பாவனையான அர்ச். அன்னம்மாளே,

கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டகமான அர்ச். அன்னம்மாளே,

ஒரேப்பென்கிற பர்வதத்தின் பாவனையான அர்ச். அன்னம்மாளே,

ஜெஸ்சை என்கிறவருடைய வங்கிஷபதியான அர்ச். அன்னம்மாளே,

இராஜ கோத்திரத்தில் உதித்த அர்ச். அன்.

நன்மரமாகிய அர்ச். அன்னம்மாளே,

உத்தம கனிதந்த விருட்சமாகிய அர்ச். அன்னம்மாளே,

பேரின்ப இரசக் கனியுள்ள முந்திரிகைக் கொடியாகிய அர்ச். அன்னம்மாளே,

சம்மனசுகளுக்குச் சந்தோஷங் கொடுக்கிற அர்ச். அன்னம்மாளே,

பிதாப்பிதாக்களுக்கு மகளான அர்ச். அன்.

தீர்க்கதரிசிகளுடைய திருமொழியான அர்ச். அன்னம்மாளே,

(எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.)

சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்கு மகிமையான அர்ச். அன்னம்மாளே,
குருத்துவம் பெற்றவர்களுக்கு மாட்சிமையான அர்ச். அன்னம்மாளே,
செழுமைக்குரிய மழையைப் பொழிகிற மேகமான அர்ச். அன்னம்மாளே,
பிரகாசமிலங்கிய மேகமாகிய அர்ச். அன்.
தெளிவுபொருந்திய பளிங்கான அர்ச். அன்.
தேவப்பிரசாதம் நிரம்பின பாத்திரமாகிய அர்ச். அன்னம்மாளே,
கிரவண கீழ்ப்படிதலுக்குக் கண்ணாடியாகிய அர்ச். அன்னம்மாளே,
பொறுமைக்கு மாதிரிகையாகிய அர்ச். அன்.
தயை இரக்கத்துக்கு ஆஸ்பதமாகிய அர்ச். அன்னம்மாளே,
பத்திக்கு நன்மாதிரிகையாகிய அர்ச். அன்.
திருச்சபைக்கு அரணாகிய அர்ச். அன்னம்.
பாவிகளுக்கு அடைக்கலமான அர்ச். அன்.
கிறீஸ்துவர்களுக்குச் சகாயமாகிய அர்ச். அன்.
சிறைப்பட்டவர்களுக்கு மீட்பான அர்ச். அ.
சமுசாரிகளின் ஆதரவாகிய அர்ச். அன்னம்.
விதவை ஸ்திரீகளுக்குத் தாயாராகிய அர்ச். அன்னம்மாளே,
கன்னியாஸ்திரிகளுக்குப் பரிபாலனமாகிய அர்ச். அன்னம்மாளே,
பிள்ளைகளைப் படிப்பித்து வளர்க்கிறபேருக்கு உத்தம மாதிரிகையாகிய அர்ச். அன்னம்மாளே,

} எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



கப்பலிலே போகிறவர்களுக்கு நிச்சயமான அடைக்கலமாகிய அர்ச். அன்னம்மாளே,
தேசாந்திரிகளுக்குப் பாதையாகிய அர்ச். அ.
வியாதிக்காரருக்குப் பரிகாரமாகிய அர்ச். அ.
நோவாளிகளின் ஆரோக்கியமாகிய அர்ச். அ.
அந்தகருக்கு நேத்திரமாகிய அர்ச். அன்னம்.
சப்பாணிகளுக்கு நடை கொடுக்கிற அர்ச். அன்னம்மாளே,
ஊமைகளுக்கு மொழியாகிய அர்ச். அன்ன.
செவிடருக்குக் காதாகிய அர்ச். அன்னம்.
கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவாகிய அர்ச். அன்னம்மாளே,
உம்மை மன்றாடுகிற யாவருக்கும் சகாயம்பண்ணுகிற அர்ச். அன்னம்மாளே,

} எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளும் சுவாமீ.
உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்சுவாமீ.
உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ்சுவாமீ.
சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ தயவாயிரும்.—(பரமண்டல மந்திரம்.)

மு.—சேசுநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாயிருக்கத்தக்கதாக,

து.—அர்ச். அன்னம்மாளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ சத்தியுள்ள சர்வேசுரசுவாமீ, அர்ச். அன்னம்மாளை உம்முடைய திவ்விய ஏக சுதனுடைய தாயாருக்கு மாதாவாயிருக்கத் திருவுளமானீரே, அப்படிப்பட்ட உத்தம புண்ணியவதியாகிய அர்ச். அன்னம்மாளை நினைத்து, அவளைப் பத்தியுடனே புகழுகிற நாங்கள் அவளுடைய பேறுபலன்களினாலேயும் மன்றாட்டினாலேயும் நித்திய பதவியின் நன்மையை அடையத்தக்கதாகக் கிருபைபண்ணி இரட்சியும். ஆண்டவரே! இந்த மன்றாட்டுகளையெல்லாம் சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும் சுவாமீ. ஆமென் சேசு.

---

### அர்ச். அன்னம்மாள் செபம்.

பரிசுத்த வணக்கத்துக்கு இருப்பிடமும் பாக்கியவதியுமான அர்ச். அன்னம்மாளே!

தேவ வரப்பிரசாத சுனையின் மூலமும், பெண்சாதிகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளும், மனுஷனைப் அவதரித்த தேவசுதனின் தாயும் கன்னிகையுமான அர்ச். மரியாயை உலகத்துக்குத் தந்தருளும் சுதந்தரத்தை, உமது



புண்ணியங்களினாலும், அர்ச்சியசிஷ்டதனத்தினாலும் அடைந்தருளினவளே!

மிகவும் கிருபாகரியே! இந்த அபூர்வ வரப்பிரசாதங்களை நினைந்து, என்பேரில் கிருபைகூர்ந்து, இப்பொழுதும், என் சீவியகாலமுழுதும் உமது பத்தர்களில் ஒருவனாயிருக்கத் தயைபுரிந்தருளும்.

உமது வல்லபமுள்ள மன்றாட்டால் என்னைப் பாதுகாத்து, உமது புண்ணியங்களைக் கண்டு பாவிக்கச்செய்தருளும்.

என் பாவங்களின் கனத்தைக் கண்டுபிடித்து, அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு சேசுநாதரையும், அர்ச். மரியாயையும் நேசித்து, என் அந்தஸ்துக்குரிய கடமைகளைப் பழுதற நிறைவேற்றும்படி வேண்டிய வரப்பிரசாதங்களை அடைந்து தந்தருளும்.

சீவியகாலத்தில் எனக்கு வரும் ஆபத்துகளினின்று என்னைக் காத்துக்கொள்ளும்.

உமது குமாரத்தியான அர்ச். கன்னிமரியாயையும், உம்மோடுகூட மோட்சத்தில் புகழும்படி சாகிற சமயத்தில் எனக்கு ஒத்தாசையாயிரும். ஆமென் சேசு.

3 பர. 3 பிரி. 3 திரி. (300-நாள் பலன். 13-ம் சிங்கராயர்.)

---

# அர்ச். சுவக்கீன் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ்சுவாமீ.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ்சுவாமீ.

அர்ச்சியஷ்ட தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ்சுவாமீ.

அர்ச். சுவக்கீனுடைய புத்திரியாகிய அர்ச். மரியாயே,

பூலோகத்துக்கு ஒர் தீபமாகத் தோன்றின அர்ச். சுவக்கீனுவே,

தேவமாதாவுக்குத் தகப்பனாக ஆதியிலே நியமிக்கப்பட்ட அர்ச். சுவக்கீனுவே,

சகல புண்ணியக் கனிகளாற் குலுங்கிய ஆச்சரியப் பொருளாகிய அர்ச். சுவக்கீனுவே,

தேவ இஷ்டப்பிரசாதங்களால் அலங்கரிக்கப்பட்ட அர்ச். சுவக்கீனுவே,

எங். வேண்டிக்கொள்ளும்.



சிறுபத்திலேயே தீர்க்கதரிசிகளுடைய ஆகமங்களிலேயும், வேதத்தின் ஆழ்ந்த கருத்துகளிலேயும், தியானம் பண்ணிக்கொண்டிருந்த இடைவிடாத செபத்தியானியாகிய அர்ச். சுவ.

ஞானத்திலே புத்தியெல்லாம் செலுத்தி, பூலோக வாழ்வைத் துறந்த அர்ச். சுவக்கீனு.

பெத்லகேமூரிலே மகா புண்ணியங்களால் விளங்கிய அர்ச். அன்னம்மாளை விவாகஞ்செய்யக் கபிரியேலென்னும் சம்மனசுவினால் பரமபிதாவின் சித்தமென்று அறிந்த அர்ச். சுவக்.

நாற்பது வருஷகாலம் கலியாணத்தை வெறுத்து, துறவறத்தில் மூழ்கியிருந்தாலும், சுவாமியின் சித்தத்துக்கமைந்து, அந்தப் பரிசுத்த கன்னிகையை விவாகஞ் செய்துகொள்ளச் சம்மதித்த அர்ச். சுவக்கீனுவே,

சம்மனசுவினால் சொல்லப்பட்டதைத் தாழ்ச்சியால் உமது பத்தினிக்கு மறைத்த அர்ச். சுவ.

வேத ஆசாரப்படி வழுவாமல் நடந்து இருவரும் நசரேத்தூரில் வசிக்கும்போது அவ்வூருக்குப் புண்ணியங்களால் பிரமிப்பை வருவித்த அர்ச். சுவக்கீனுவே,

வருஷந்தோறும் ஆஸ்தியால் வரும் வருமானத்தை மூன்று பங்காகப் பிரித்து, கோவிலுக்கொன்றும் பிச்சைக்காரருக்கொன்றும் வீட்டு சமுசார செலவுக்கொன்றுமாகப் பிரித்துக்கொடுத்து, தரித்திரத்தில் நாள்போக்கி பின்னை இல்

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

லாமலிருப்பது அக்காலத்தில் இழிவுள்ளதாகையால், இருபது வருஷம் பிள்ளை இல்லாமையால் வரப்பட்ட நிந்தைகளை மிகப் பொறுமையோடே சகித்த அர்ச். சுவக்கீனுவே,

இசாக்கென்னும் குருவானவர், நீர் தேவாலயத்தில் அளித்த காணிக்கையை ஏற்றுக்கொள்ளாமற் போனதால் விசனப்பட்டுக் காட்டுக்குப் போய், அவ்விடத்தில் நித்திய பிதாவை மிக்க விசனத்துடன் வேண்டிக்கொண்ட அர்ச். சுவ.

எனக்கு ஓர் பிள்ளையைக் கட்டளையிட்டால், அதை உம்முடைய ஊழியத்துக்கு ஒப்புக்கொடுப்பேனென்று பிதாவுக்கும் பொருத்தனை செய்த அர்ச். சுவக்கீனுவே,

அந்நேரத்தில் உமது பத்தினியாகிய அர்ச். அன்னம்மாளுந் தேவ ஏவலினால் இப்படியே வேண்டிக்கொள்ளவே, கபிரியேலென்னும் சம்மனசானவரால் உனக்கு ஓர் பெண்குழந்தை பிறக்கும், அது ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டதாகையால், அதை எல்லா ஜனங்களும் ஆசீர்வதிக்கப்பட்டது என்பார்கள். நீர் அதைத் தேவாலயத்தில் ஒப்புக்கொடுமென்று சொல்லவாய்பெற்ற அர்ச். சுவக்கீனுவே,

பின்னும் உமது மனைவியாகிய அர்ச். அன்னம்மாளோடு தேவாலயத்துக்குப்போய், சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணின அர்ச். சுவக்கீனுவே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



வீட்டுக்கு வந்தபின் உன்னைக் கலியாணம் பண்ண இருபது வருஷத்துக்குமுன் சம்மனசு எனக்கு ஆண்டவர் கட்டளையாகச் சொன்னதென்று உமது பத்தினியாகிய அன்னம்மாளுக்குச் சொல்லி, அவளோடு சுவாமிக்குத் தோத்திரஞ்செய்த அர்ச். சுவக்கீனுவே,

உமக்கு அறுபது பிராயமும், அர்ச். அன்னம்மாளுக்கு நாற்பத்துநாலு பிராயமும் நடக்கையில் சம்மனசுகள் கூடிப் பாடவே, தேவதாயார் பிறப்பைக்கண்டு அக்களித்த அர்ச். சுவக்கீனு.

அர்ச். அன்னம்மாளுக்கு மாத்திரம் இந்தக் குழந்தை தெய்வத்துக்குத் தாயாராகுமென்று சம்மனசு சொல்லி, உமக்கு அதைச் சொல்லவேண்டாமென்று அவளுக்குச் சொல்லியிருந்தாலும், இந்தக் குழந்தை பரலோகவாசியென்று நினைத்து, அந்தக் குழந்தைக்கு மகா சங்கை செய்துகொண்டுவந்த அர்ச். சுவக்கீனுவே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ்சுவாமீ.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளுஞ்சுவாமீ.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ தயவாயிரும்.—(பரமண்டல மந்திரம்.)

மு.—சேசுநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாயிருக்கத்தக்கதாக,

து.—அர்ச். சுவக்கீனுவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்.

சேசுக்கிறீஸ்துநாதரே, சுவாமீ, இந்தப் பெரிய அர்ச்சியசிஷ்டவரை ஆதிகாலம் துவக்கி, மனுக்குலம் இரட்சணியமடைய வேண்டிய உமது மாதாவுக்குத் தகப்பனாக நியமித்து, அந்தப் பட்டத்தை நிறைவேற்ற வேண்டிய வரங்களையெல்லாம் அவருக்குக் கொடுத்தீரே, அவருடைய பேறுபலன்களினாலே நீர் பூலோகத்தில் நாங்கள் செய்யும்படி மனதாகிய காரியங்களையும், எங்களுக்கு நீர் நியமித்த அலுவல்களையும் நாங்களும் பரிசுத்தமாய்ச் செய்ய அநுக்கிரகித்தருளும். சிறு பிராயந் துவக்கி மகா மேன்பாடான ஞானத்தில் அவர் உயர்ந்து மேலான புண்ணியங்களை எல்லாம் பண்ணினதுபோல நாங்களுஞ் செய்யாமல், உமது வரப்பிரசாதங்களை அடிக்கடி துர்ப்பிரயோகம் பண்ணியிருந்தாலும், அவர் திருமுகத்தைப் பார்த்து அதைப் பொறுத்துக்கொண்டு, இனியாகிலும் நீர் எங்களுக்குக் கட்டளையிட்ட கடமைகளைச் சுமுத்திரையாய் முடித்து, வரும் தந்திரங்களை ஜெயித்து, நித்திய பேறடையச்செய்தருளுஞ் சுவாமீ. ஆமென் சேசு.

---



## அர்ச். சுவக்கீன் செபம்.

தேவமாதா மோட்சத்துக்கு ஆரோகணமான திருநாளுக்குப் பின்வரும் ஞாயிற்றுக்கிழமை.

மகிமை பொருந்திய பிதாப்பிதாவாகிய அர்ச். சுவக்கீனே, சர்வேசுரனுடைய பரம இரகசியங்கள் நிறைவேறும்படிக்கு தேவமாதாவை இவ்வுலகத்தில் தரும்படி சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்குள்ளே சர்வேசுரன் உம்மைத் தெரிந்துகொண்டாரென்று நினைக்கும்போது எனக்கு எவ்வளவோ அகமகிழ்ச்சி உண்டாகிறது.

இந்த விசேஷ சுதந்தரத்தின் முகாந்தரமாக, தேவமாதாவிடத்திலும், தேவகுமாரனிடத்திலும் எவ்வளவு வல்லபமுள்ளவராயிருக்கிறீர். உம்மால் அடையக்கூடாத வரப்பிரசாதம் ஒன்றுமில்லையே.

இந்த நம்பிக்கையால் ஏவப்பட்டு, உமது வல்லபமுள்ள அடைக்கலத்தை நாடி, எனக்கும் என் குடும்பத்துக்கும் அவசரமான இலௌகீக நன்மைகளையும், ஞான நன்மைகளையும், அடைந்து தந்தருளும்படி மன்றாடுகிறேன். நான் இரந்து மன்றாடுகிற இந்த விசேஷ வரப்பிரசாதத்தை அடைந்து தந்தருளும்.

நீரோ, உள்ளாங்க சீவிய சாங்கோபாங்கத்தின் மாதிரிகையாயிருந்தீர். ஆகையினாலே, நான் உலக ஆசாபாசத்தை வெறுத்து, மனஏகாந்தமுள்ளவனாயும் இருந்து, சேசுநாதரையும், தேவமாதாவையும் நோக்கித் தீயை செய்தருளும். சேசு மரியாயே சூசை என்னும் திருநாமங்களை உச்சரித்து, விசுவாசம், நம்பிக்கை தேவ சிநேகமுள்ளவனாய்ச் சீவித்து, திருச்சபைக்கும் அதை ஆண்டுவருகிற அர்ச். பாப்பானவருக்கும் கீழ்ப்படிந்து சர்வேசுரனுடைய சமாதானத்தில் சாகும்படி அனுக்கிரகம் பண்ணியருளும். ஆமென் சேசு.

3 பர. 3 பிரி. 3 திரி. (ஒரு நாளைக்கு ஒரு விசை 300-நாள் பலன். 1836-ஹு மார்ச்சு-மீ 20உ 13-ம் சிங்கராயர்.)

---

## அர்ச். வியாகுலமாதாவின் செபமாலை.

¶ விபரம்.—அதற்கதிகாரம் பெற்ற குருக்களால் மந்திரிக்கப்பட்ட வியாகுலமாதாவின் செபமாலையை யாராவது கையிலேந்திச் செபித்தாற் செபிக்கிறபோதெல்லாம் ஒவ்வொரு பரமண்டல மந்திரத்துக்கும் பிரியதத்த மந்திரத்துக்கும் நூறுநாட் பலனுண்டு. வெள்ளிக்கிழமைகளிலுந் தபசுகாலத்தின் சகல நாட்களிலும் இருநூறுநாட் பலனுண்டு.



அதல்லாமலும் பாவசங்கீர்த்தனம் பண்ணுவதற்கு முன்னே இந்தச் செபமாலையை முழுவதுஞ் செபித்தால் நூறு வருஷப் பலனும், பாவசங்கீர்த்தனம் பண்ணினபின் அதைத் திரும்ப முழுவதுஞ் செபித்தால் இருநூறு வருஷப் பலனுமுண்டு.

¶ பிரியமுள்ள சகோதரர்களே, பரிசுத்த கன்னிமரியாயி தமது திருக்குமாரன் பாடுகள் நிமித்தமாக அநுபவித்த ஏழு வியாகுலங்களைத் தியானிப்போமாக.

### 1-ம் வியாகுலம்.

இந்த முதல் இரகசியத்திலே அர்ச். கன்னிமரியாயிக்கு சிமையோன் சொன்ன தீர்க்கதரிசனத்தால் தமது திருக்குமாரனுடைய மரணத்தையும், மனுஷருடைய சேதத்தையும் அறிந்து அவள் தமது இருதயத்தில் வியாகுலவாளால் ஊடுருவப்பட்டாளென்று தியானிப்போமாக.

1-பர. 7-பிரி. 1-திரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

வியாகுலமாதாவே, உமது ஆத்துமத்தில் வியாகுலவாள் ஊடுருவப்படுமென்று சிமையோன் தீர்க்கதரிசனஞ் சொன்னதைக்கேட்டு மிகுந்த வியாகுலப்பட்டீரே, அந்த வியாகுலத்தைப் பார்த்து நாங்கள் இவ்வுலக சீவியத்தைச் சட்டைபண்ணாமல் பரலோக சீவியத்தை அடை

யும்படி உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ள உம்மை மன்றாடுகிறேன்.—ஆமென் சேசு.

## 2-ம். வியாகுலம்.

இந்த இரண்டாம் இரகசியத்திலே அர்ச். கன்னிமரியாயி தமது திருக்குமாரனை ஏரோதேசென்பவன் கொல்லத்தேடுகிறதை அறிந்து அவரை எடுத்துக்கொண்டு எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போய் ஏழுவருஷகாலமும் மகா துக்கம் அநுபவித்தாளென்று தியானிப்போமாக. 1-பா. 7-பிரி. 1-திரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

வியாகுலமாதாவே, நீர் ஏரோதேசென்பவனுக்குப் பயந்து உமது திருக்குமாரனை எடுத்துக்கொண்டு எஜிப்துதேசத்துக்கு ஓடிப்போகிறபோது நீர் மிகுந்த வியாகுலப்பட்டீரே, அந்த வியாகுலத்தைப்பார்த்து நான் பசாசின் தந்திரங்களுக்குத் தப்பிப் பரலோக வழி தவறாமல் நடக்க உம்மை மன்றாடுகிறேன்.—ஆமென் சேசு.

## 3-ம் வியாகுலம்.

இந்த மூன்றாம் இரகசியத்திலே அர்ச். கன்னிமரியாயி தமது திருக்குமாரனோடு தேவாலயத்



துக்குப் போனவிடத்தில் மூன்றுநாள் அவரைத் தேடியுங் காணாதே போனபடியினாலே தமதாத்துமத்தில் மிகுந்த வியாகுலப்பட்டாளென்று தியானிப்போமாக.—1-பா. 7-பிரி. 1-திரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

வியாகுலமாதாவே, உமது திருக்குமாரனைப் பன்னிரண்டுவயதில் மூன்றுநாள் காணாமற்போனதால் மிகுந்த வியாகுலப்பட்டீரே, அந்த வியாகுலத்தைப் பார்த்து நான் பாவத்தினால் அவரை இழந்து போகாதபடிக்கு உம்மை மன்றாடுகிறேன்.—ஆமென் சேசு.

## 4-ம். வியாகுலம்.

இந்த நான்காம் இரகசியத்திலே அர்ச். கன்னிமரியாயி தமது திருக்குமாரன் கபாலமலையில் மரணமடையச் சிலுவைசுமந்து போகையில் அவரை எதிர்கொண்டு நினைவின்போது வாக்குக்கெட்டாத வியாகுலம் அநுபவித்தாளென்று தியானிப்போமாக.—1-பா. 7-பிரி. 1-திரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

வியாகுலமாதாவே, உமது திருக்குமாரன் பாரமான சிலுவை சுமந்துகொண்டு போகிறதைக்கண்டு நீர் மிகுந்த வியாகுலப்பட்டீரே, அந்த வியாகுலத்தைப் பார்த்துப் பாவத்தி

ளுள் எனக்கு வருகிற கஸ்திகளை இம்மையில் நான் பொறுமையோடு சகிக்கவும், மறுமையில் கடேற்றமையையும் உம்மை மன்றாடுகிறேன். ஆமென்சேசு.

## 5-ம் வியாகுலம்.

இந்த ஐந்தாம் இரகசியத்திலே அர்ச். கன்னி மரியாயி தமது திருக்குமாரன் சிலுவையில் அறையுண்டு அவர் சகலராலும் கைவிடப்பட்டு ஓர் ஆறுதலுமில்லாமல் மரணமடைகிறதைக் கண்டு அந்த சாகரத்தில் அமிழ்ந்தி மனோவாக்குக்கெட்டாத வியாகுலப்பட்டாளென்று தியானிப்போமாக.—1-பர. 7-பிரி. 1-திரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

வியாகுலமாதாவே, உம்முடைய திருக்குமாரன் எண்ணிக்கையில்லாத கஸ்திவேதனைப்பட்டுச் சிலுவையிலே மரணமடைந்ததைக் கண்டு நீர் மிகுந்த வியாகுலம் அநுபவித்தீரே, அந்த வியாகுலத்தைப்பார்த்து அவருடைய திருப்பாடுகளையும் வேதனைகளையும் நான் நினைத்து நல்ல மரணமடைய உம்மை மன்றாடுகிறேன்.— ஆமென்சேசு.

## 6-ம் வியாகுலம்.

இந்த ஆறும் இரகசியத்திலே அர்ச். கன்னி மரியாயி தமது திருக்குமாரனுடைய திருச் சரீ



ரத்தைச் சிலுவையினின்றிறக்கித் தமது மடிமேல்வளர்த்தி அதிலுள்ள காயங்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கையில் சொல்லக்கூடாத வியாகுலம் அநுபவித்தாளென்று தியானிப்போமாக.—1-பர. 7-பிரி. 1-திரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

வியாகுலமாதாவே, உமது திருக்குமாரனுடைய திருச்சரீரத்தை உமது திருக்கரங்களில் வளர்த்தி அந்தக் கட்டி தழுவிக்கொண்டபோது மிகுந்த வியாகுலப்பட்டீரே, அந்த வியாகுலத்தைப்பார்த்து அவருடைய மரணநினைவு என் இருதயத்தில் பதிந்திருக்கவும் நான் என் பாவங்களுக்காக மாறாமல் கண்ணீர் சொரிந்தழவும், உம்மை மன்றாடுகிறேன். ஆமென்சேசு.

## 7-ம் வியாகுலம்.

இந்த ஏழாம் இரகசியத்திலே அர்ச். கன்னி மரியாயி தமது திருக்குமாரனுடைய சரீரத்தைக் கல்லறையில் அடக்கம் பண்ணினபின்பு அவருடைய மரணத்தையும் திருப்பாடுகளையும் தமது தனிமையையும் நினைத்து மட்டில்லாத கிலேசம் அநுபவித்தாளென்று தியானிப்போமாக.—1-பர. 7-பிரி. 1-திரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

வியாகுலமாதாவே, உமது திருக்குமாரனுடைய திருச்சரீரத்தைக் கல்லறையில் அடக்கம் பண்ணினபிற்பாடு நீர் மிகுந்த வியாகுலப்பட்டீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து நான் ஒருபோதும் சர்வேசுரனைவிட்டுப் பிரிந்து தனிமையாய் இராதபடிக்கு உம்மை மன்றாடுகிறேன்.—ஆமென் சேசு.

கண்ணீர் வணக்கம்.

மிகவும் வியாகுலம் நிறைந்த கன்னிகையே, உமது திருக்குமாரனுடைய சீவியத்திலும் மரணத்திலும் நீர் அழுத கண்ணீரைப்பார்த்து நாங்கள் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபமாயிருந்து உமக்கு ஆறுதல் வருமளவும் நாங்கள் பிரலாபிக்க உம்மை மன்றாடுகிறோம்.—3-பிரி.

---

## வியாகுலமாதாவைக்குறித்துப் பாடல்.

1. திருமக னறையுண்ட
சிலுவை யடியில் நின்ற
தேவதாய் நொந்தழுதாள்.

2. வேதனைக்கட லமிழ்ந்த
மாதா ஆத்துமம் வதையக்
கேதுவா ளுருவிற்று.



3. தனிமகனை யிழந்த
தா யநுபவித்த துயர்
தா னுரைக்க நாவுண்டோ?

4. அடியில் தானீன்ற சுதன்
படும் வாதை கண்டுளகி
நடுங்கிப் புலம்பினாள்.

5. இரட்சகர் திருத்தாயார்
இக்கொடிய வாதைப்பட
யார்கண் டழாதிருப்பார்?

6. திருமகன் துயரத்தால்
உருகுந் தாயைக்கண் டுள்ளங்
கரையாதாரு முண்டோ?

7. நேச தஞ்சனைப் பாவத்தால்
நீசநிந்தை யடிபட
சேசு வாதையைக்கண்டாள்.

8. அன்புள்ள தன்திருமகன்
துன்பதுய ரவஸ்தையுள்
தன் சீவன் தரக்கண்டாள்.

9. பீட்ச ஜனனிமாதாவே,
பரிதாபந்தந் தும்மோடு
பாவிநா னழச்செய்யும்.

10. ஆதிசேசுவை நேசித்தே
யானவர்க் கினியனாக
அன்பா லென்னுள்ளஞ் சுடும்.

11. சேவதாயே, தயைசெய்து
சிறியா னுள்ளத்தில் மிக
சேசுநாமம் பதியும்.

12. எனக்கும் மகனை நூங்கி
யிட்டபட்ட பாடுகளில்
யான் பங்கடையச்செய்யும்.

13. உயிருள்ள தனயதான்
உதித்த சேசுபாலனை
உட்புட வழிச்செய்யும்.

14. சிலுவை யடியினிலும்
புலம்பலின் பங்கடைந்து
வலிய ஆசிக்கின்றேன்.

15. கன்னியரசே கன்னி
கருணைசேர் தன்கன்னிநீ
கன்னிமை பேற்றருளும்.

16. யான் காயமெண்ணி யவர்
பாடு மரணத்திற்கு நான்
பங்காளியாகச் செய்யும்.

17. சேசுநாயகர்தாம் தொங்கிச்
சிலுவையால் யான் பூரிக்கச்
சுதனைப்பற்றச் செய்யும்.

18. அன்பா மக்களினை மூட்டி
அடியானைத் தீமைவரினில்
ஆதரிக்கும் கன்னியே.



19. பரன் சிலுவைத் தந்தரூபம்
மரண ரட்சிப்பும் பக்தி
வாழும் பெறச்செய்யும்.

20. என்னுடை உயிர் பிரிந்தால்
வான்மோட்சத் தாத்துமஞ்சேர்ந்து
வாழவுஞ் செய்தருளும்.

மு.—நாங்கள் சேசுக்கிறிஸ்துநாதரின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத்தக்கதாக,

ஜ.—மிகவும் வியாகுலமுள்ள கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சுவாமீ! தேவரீர் சிமையோன் தீர்க்கதரிசனஞ் சொன்னபடியே பாடுபட்டபொழுது மகிமைப்பிரதாபமுள்ள கன்னித்தாயான மரியாயின் மகா மதுரமான ஆத்துமம் வியாகுலவாளால் ஊடுருவப்பட்டதாமே. அவள் வியாகுலத்தையும் வேதனையையும் வணங்கி ஆராதிக்கிற நாங்கள், அவளுடைய சிலுவையைச் சுமுத்திரையாய் நேசித்த சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மகிமையுள்ள பேறுகளினாலும் மன்றாட்டுகளினாலும் உமது திருப்பாடுகளின் பலனை அடையும்படி தயைபுரிந்தருளும்.

ஆமென்சேசு. பா. பிரி.

# அர்ச். வியாகுலமாதாவின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலே யிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

அர்ச்சியசிஷ்ட மரியாயே,
சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,
கன்னியாஸ்திரிகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,
உபாதியையடைந்த மாதாவே,
வியாகுல மாதாவே,
(எங். வேண்டிக்.)



கண்ணீர் சொரிந்த மாதாவே,
துயரமடைந்த மாதாவே,
கைவிடப்பட்ட மாதாவே,
ஆறுதலற்ற மாதாவே,
குமாரனை இழந்த மாதாவே,
வாளால் ஊடுருவப்பட்ட மாதாவே,
சஞ்சலத்தில் அமிழ்ந்திய மாதாவே,
இருதயத்தினுட் சிலுவையை ஊன்றின மாதாவே,
மகா துக்கமுள்ள மாதாவே,
கண்ணீர்ச் சுனையே,
பாடுகளின் திரளே,
பொறுமையின் கண்ணாடியே,
உறுதிநிலைமையின் குன்றே,
நம்பிக்கையின் பெட்டகமே,
கைவிடப்பட்டோர்களுக்கு அடைக்கலமே,
உபத்திரவப்படுகிறவர்களுக்குக் கேடயமே,
அவிசுவாசிகளின் ஜெயசீலியே,
நிர்ப்பாக்கியர்களுக்கு ஆதரவே,
வியாதிஸ்தர்களுக்கு அவுழ்தமே,
மெலிந்தோர்களுக்குத் திடனே,
யாத்திரையில் அவதிப்படுகிறவர்களுக்குத் துறைமுகமே,
(எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.)

பெரும்புசலைத் தணித்தவளே,
துன்பப்படுகிறவர்களுக்குத் தஞ்சமே,
துஷ்டர்களுக்கு அச்சமே,
விசுவாசிகளின் பொக்கிஷமே,
தீர்க்கதரிசிகளின் நேத்திரமே,
அப்போஸ்தலர்களின் உத்தியே,
வேதசாட்சிகளின் கிரீடமே,
ஸ்துதியர்களின் ஜோதியே,
கன்னியாஸ்திரீகளின் ஆரமே,
கைம்பெண்களின் தேற்றரவே,
சகல அர்ச்சியசிஷ்டவர்களின் ஆனந்தமே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளும் சுவாமீ.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே,—எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும் சுவாமீ.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியும் சுவாமீ.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ கிருபையாயிரும்.



மு.—நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத் தக்கதாக,

து.—மிகவும் வியாகுலமுள்ள கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சுவாமீ! சேவரீர் சிமையோன் தீர்க்கதரிசனஞ் சொன்னபடியே பாடுபட்டபொழுது மகிமைப்பிரதாபமுள்ள கன்னித்தாயான மரியாயின் மகா மதுரமான ஆத்துமம் வியாகுலவாளால் ஊடுருவப்பட்டதாமே. அவள் வியாகுலத்தையும் வேதனையையும் வணங்கி ஆராதிக்கிற நாங்கள், அவருடைய சிலுவையைச் சமுத்திரையாய் நேசித்த சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மகிமையுள்ள பேறுகளினாலும் மன்றாட்டுகளினாலும் உமது திருப்பாடுகளின் பலனை அடையும்படி தயைபுரிந்தருளும்.

ஆமென் சேசு. பா. பிரி.

## ஐம்பத்து மூன்றுமணிச் செபம்.

¶ ஐம்பத்து மூன்றுமணிச்செபந் துவக்குகிற வகையாவது:

அளவில்லாத சகல நன்மைச் சொரூபியாயிருக்கிற சர்வேசுரா சுவாமீ, நீச மனுஷனும்

மாய் நன்றியறியாத பாவிகளுமாயிருக்கிற அடியோர்கள் மட்டில்லாத மகிமைப்பிரதாபத்தைக் கொண்டிருக்கிற தேவரீருடைய சந்நிதியிலேயிருந்து, செபம்பண்ண பாத்திரமாகாதவர்களாயிருந்தாலுந் தேவரீருடைய அளவில்லாத தயையை நம்பிக்கொண்டு, தேவரீருக்கு ஸ்துதி வணக்கமாகவும், அர்ச். தேவமாதாவுக்குத் தோத்திரமாகவும் ஐம்பத்து மூன்றுமணிச் செபம் பண்ண ஆசையாயிருக்கிறோம். இந்தச் செபத்தைப் பத்தியோடே செய்து பராக்கில்லாமல் முடிக்கத் தேவரீருடைய ஒத்தாசை கட்டளை பண்ணியருளுந் சுவாமீ.

¶ சகலமான புண்ணியங்களுக்கும் விசுவாசமென்கிற புண்ணியம் அஸ்திவாரமாயிருக்கிறபடியினாலே முந்த முந்த விசுவாசமந்திரஞ் சொல்லுகிறது.

¶ பின்பு மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனும் ஒன்றாயிருக்கிற சேசுநாதர்சுவாமி படிப்பித்த பரமண்டலமந்திரஞ் சொல்லுகிறது.

¶ பரிசுத்தக் கன்னியாஸ்திரீயாயிருக்கிற தேவமாதாவினுடைய பிரதான மகிமைகளைக்குறித்து மூன்று பிரதான புண்ணியங்களைக் கேட்கிறது:

பிதாவாகிய சர்வேசுரனுக்குக் குமாரத்தியாயிருக்கிற பரிசுத்த தேவமாதாவே, எங்களிடத்திலே தேவ விசுவாசமென்கிற புண்ணியமுண்டாகிப் பலனளிக்கும்படிக்கு உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—1-பிரி.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS 7 AUG 1911 MADRAS

சுதனாகிய சர்வேசுரனுக்குத் தாயாராயிருக்கிற பரிசுத்த தேவமாதாவே, எங்களிடத்திலே தேவ நம்பிக்கையென்கிற புண்ணியமுண்டாகி வளரும்படிக்கு உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—1-பிரி.

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமுள்ளவளாயிருக்கிற பரிசுத்த தேவமாதாவே, எங்களிடத்திலே தேவ பத்தியென்கிற புண்ணியமுண்டாகி அதிகரிக்கும்படிக்கு உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—1-பிரி.

திரித்துவமந்திரஞ் சொல்லவும்.

## சந்தோஷத்தேவ இரகசியங்கள்.

### முதல் தேவ இரகசியம்.

அர்ச். கன்னிமரியாயிக்குக் கபிரியேலென்கிற சம்மனசு மங்களவார்த்தை சொன்னதைத் தியானிப்போமாக.— ஒரு-பா. பத்து-பிரி. ஒரு-திரி.

சம்மனசுக்களுக்கெல்லாம் பிரதான சம்மனசாயிருக்கிற அர்ச். மிக்கேல் என்கிற சம்மனசானவரே, நாங்களெத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும், அர்ச். தேவமாதாவின் திருப்

பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடே கூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, நாங்கள் தாழ்ச்சியென்கிற புண்ணியத்தை அநுசரிக்க உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

### இரண்டாம் தேவ இரகசியம்.

அர்ச். கன்னிமரியாயி எலிசபெத்தம்மாளைக் கண்டுகொள்ளப் போனதைத் தியானிப்போமாக.—ஒரு-பா. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். கபிரியேலென்கிற சம்மனசானவரே, நாங்களெத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, எங்களிடத்தில் ஆத்துமாக்களைக் கரைசேர்க்கிற ஆசையுண்டாக உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

### மூன்றாம் தேவ இரகசியம்.

கர்த்தர் பிறந்ததைத் தியானிப்போமாக.—ஒரு-பா. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். இரபயேலென்கிற சம்மனசானவரே, நாங்களெத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்



டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, நாங்கள் தரித்திரமென்கிற புண்ணியத்தை அடைய உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

### நான்காம் தேவ இரகசியம்.

கர்த்தரைத் தேவாலயத்திலே காணிக்கையாக ஒப்புக்கொடுத்ததைத் தியானிப்போமாக.—ஒரு-பா. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். சூசையப்பரே, நாங்களெத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, நாங்கள் சுயபட்சத்தை அடக்கி படைக்கப்பட்ட வஸ்துக்கள்பேரில் பற்றுதலில்லாமலிருக்க உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

### ஐந்தாம் தேவ இரகசியம்.

காணமற்போன கர்த்தரைத் தேவாலயத்தில் அர்ச். கன்னிமரியாயி கண்டு களிகூர்ந்ததைத் தியானிப்போமாக.—ஒரு-பா. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். ஸ்நாபக அருளப்பரே, நாங்களெத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்த பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, சர்வேசுரனுடைய சித்தம் எங்களிடத்தில் நிறைவேற உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

## துக்கத்தேவ இரகசியங்கள்

### முதல் தேவ இரகசியம்.

கர்த்தர் நமக்காகப் பூங்காவனத்தில் இரத்த வேர்வை வேர்த்ததைத் தியானிப்போமாக. ஒரு-பர. பத்து-பிரி. ஒரு-திரி.

அப்போஸ்தலர்களுக்குள்ளே பிரதான அப்போஸ்தலர்களாயிருக்கிற அர்ச். இராயப்பரே, சின்னப்பரே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உங்களுடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, நாங்கள் செய்த பாவங்களின்பேரில் உத்தம மனஸ்தாபமாயிருக்க உங்களைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.



### 2-ம். தேவ இரகசியம்.

கர்த்தர் நமக்காக அடிபட்டதைத் தியானிப்போமாக.—ஒரு-பர. பத்து-பிரி. ஒரு-திரி.

அப்போஸ்தலரான அர்ச். அருளப்பரே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, எங்கள் சரீரத்தின்பேரில் நாங்கள் பரிசுத்த பகையாயிருக்க உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

### 3-ம். தேவ இரகசியம்.

கர்த்தர் நமக்காக முண்முடி சூட்டப்பட்டதைத் தியானிப்போயாக.—ஒரு-பர. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். இஞ்ஞாசியாரே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, நாங்கள் பொறுமையென்கிற புண்ணியத்தையடைய உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

### 4-ம். தேவ இரகசியம்.

கர்த்தர் நமக்காக சிலுவை சுமந்துகொண்டு போனதைத் தியானிப்போமாக.—ஒரு-பர. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். சவேரியாரே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, நாங்கள் சிலுவையை முழுமனதோடே கையேற்றுக்கொள்ள உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

### 5-ம். தேவ இரகசியம்.

கர்த்தர் சிலுவையில் அறையுண்டதைத் தியானிப்போமாக.—ஒரு-பர. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். ஞானப்பிரகாசியாரே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக் கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, நாங்கள் மரணபரியந்தம் சேசுநாதருடைய திவ்விய திருப்பாடுகளைக் கண்டுபாவிக்க உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.



## மகிமைத் தேவ இரகசியங்கள்.

### முதல் தேவ இரகசியம்.

கர்த்தர் உயிர்த்ததைத் தியானிப்போமாக, ஒரு-பர. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். அன்னம்மாளே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, நாங்கள் செய்த பிரதிக்கினையில் நிலைமையாயிருக்க உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

### 2-ம். தேவ இரகசியம்.

கர்த்தர் மோட்சத்துக்கு ஆரோகணமானதைத் தியானிப்போமாக.—ஒரு-பர. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். எலிசபெத்தம்மாளே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக் கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, மோட்ச ஆசை-

எங்கள் இருதயத்தில் உண்டாக உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

### 3-ம். தேவ இரகசியம்.

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரன் இறங்கி வந்ததைத் தியானிப்போமாக.—ஒரு-பர. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். மோனிக்கம்மாளே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடே கூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, நாங்கள் இஸ்பிரீத்து சாந்துவின் வரப்பிரசாதங்களை அடைய உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

### 4-ம். தேவ இரகசியம்.

தேவமாதா மோட்சத்துக்குப் போனதைத் தியானிப்போமாக.—ஒரு-பர. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். விரிச்சித்தம்மாளே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் உம்முடைய தோத்திரங்களோடே கூட ஒன்றாகக்கூட்டிப்



பாதகாணிக்கையாக வைத்து, நாங்கள் அர்ச். கன்னிமரியாயியைச் சீவியத்திலும் மரணத்திலும் கண்டுபாவிக்க உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

### 5-ம். தேவ இரகசியம்.

தேவமாதாவுக்கு மோட்சத்தில் முடிசூட்டப்பட்டதைத் தியானிப்போமாக.—ஒரு-பர. பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். அருளாயி பிராஞ்சிஸ்கம்மாளே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக் கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக் கூட்டிப் பாதகாணிக்கையாக வைத்து, அர்ச். மரியாயின் வணக்கம் எங்கும் அதிகரிக்க உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

### ஐம்பத்து மூன்றுமணிச்செபம் செய்து முடிக்கிற வகையாவது.

அர்ச். சம்மனசானவர்களே, சகல அர்ச்சியசிஷ்டவர்களே, நாங்கள் எத்தனை பாவிகளாயிருந்தாலும் வேண்டிக்கொண்ட இந்த ஐம்பத்துமூன்றுமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உங்களுடைய

தோத்திரங்களோடேகூட ஒன்றாகக் கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உங்களைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—ஆமென்சேசு.

☞ விபரம்.—திங்கள், வியாழக்கிழமைகளிலே சந்தோஷத் தேவ இரகசியங்களையும், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலே துக்கத் தேவஇரகசியங்களையும், புதன், சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலே மகிமைத் தேவ இரகசியங்களையும் தியானிக்கிறது.

---

## கிருபைதயாபத்து மந்திரம்.

கிருபைதயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க, எங்கள் சீவமே, எங்கள் தஞ்சமே, எங்கள் மதுரமே வாழ்க, பரதேசிகளாயிருக்கிற நாங்கள் ஏவையின் மக்கள், உம்மைப்பார்த்துக் கூப்பிடுகிறோம், இந்தக் கண்ணீர் கணவாயிலேநின்று பிரலாபித்தழுது, உம்மையே நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம். ஆதலால் எங்களுக்காக வேண்டிமன்றாடுகிற தாயே, உம்முடைய தயாபமுள்ள திருக்கண்களை எங்கள்பேரிலே திருப்பியருளும். இதன்றியே நாங்களிந்தப் பரதேசங் கடந்தபிற்பாடு, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசுநாதருடைய, பிரத்தியக்ஷமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும்.



கிருபாகரியே, தயாபரியே, பேரின்ப இரசமுள்ள கன்னிமரியாயே.

மு.—சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக,

ந.—சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ சத்தியுடையவருமாய் நித்தியருமாயிருக்கிற சர்வேசுரா, முத்திப்பேறுபெற்ற கன்னித்தாயான மரியாயியுடைய ஆத்துமமுஞ் சரீரமும் இஸ்பிரித்துசாந்துவின் அனுக்கிரகத்தினாலே தேவரீருடைய திருக்குமாரனுக்கு யோக்கியமான பீடமாயிருக்க ஏற்கனவே நியமித்தருளினீரே, அந்தத் திவ்விய தாயை நினைத்து மகிழ்கின்ற நாங்கள் அவளுடைய இரக்கமுள்ள மன்றாட்டினாலே இவ்வுலகின் சகல பொல்லாப்புக்களிலேயும் நித்திய மரணத்திலேயும் நின்று இரட்சிக்கப்படும்படிக்குக் கிருபை கூர்ந்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

---

## பாஸ்குக்காலத்தின் திரிகாலச்செபம்.

பரலோகத்துக்கு இராக்கினியே மனங்களி கூரும்.—அல்லேலூயா.

அதேதெனிற் பாக்கியவதியான உமது திரு உதரத்தில் அவதரித்தவர்.—அல்லேலூயா.

திருவுளம்பற்றின வாக்கின்படியே உயிர்த்தெழுந்தருளினார்.—அல்லேலூயா.

எங்களுக்காக சர்வேசுரனை மன்றாடும்.—அல்லேலூயா.

எப்பொழுதுங் கன்னிகையான மரியாயே! அகமகிழ்ந்து பூரிக்கக்கடவீர்.—அல்லேலூய்யா.

அதேதெனில் ஆண்டவர் மெய்யாகவே உத்தானமாயினார்.—அல்லேலூயா.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமீ! உம்முடைய திருக்குமாரனுமாய் எங்கள் ஆண்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துவின் உத்தானத்தினாலே உலகங் களிக்கச் சித்தமானீரே, கன்னிமரியாயியாகிய அவருடைய திருத்தாயாராலே நித்திய சீவியமான பரலோகவாழ்வை நாங்கள் அடையும்படிக்கு அநுக்கிரகம் பண்ணியருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

¶ விபரம்.—இந்தச் செபம் பெரிய சனிவாரந்துவக்கி அர்ச். தமதிரித்துவத்தின் திருநாள் வரைக்குந் நின்றுகொண்டு சொல்லத்தக்கது.



## அர்ச். பெர்நர்து தேவமாதாவை நோக்கி வேண்டின செபம்.

மிகவும் இரக்கமுள்ள தாயே! உமது அடைக்கலமாக ஓடிவந்து, உம்முடைய உபகார சகாயங்களை இரந்து, உம்முடைய மன்றாட்டுக்களின் உதவியைக் கேட்ட ஒருவனாகிலும், உம்மாற் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகிற் கேள்விப்பட்டதில்லையென்று நினைத்தருளும். கன்னியருடைய இராக்கினியான கன்னிகையே, தயையுள்ள தாயே, இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உமது திருப்பாதத்தை அண்டிவருகிறேன். பெருமூச்செறிந்து அழுது பாவியாகிய நான் உமது தயாளத்துக்குக் காத்துக்கொண்டு உமது சமூகத்திலே நிற்கிறேன். அவதரித்த வார்த்தையின் தாயே! என் மன்றாட்டைப் புறக்கணியாமல் தயாபரியாய்க் கேட்டுத் தந்தருளும்.—ஆமென்சேசு.

¶ விபரம்.—இந்தச் செபத்தைப் பத்திமனஸ்தாபத்தோடு செபிக்கும்போதெல்லாம் முன்னூறு நாட் பலனுண்டு.

## பரிசுத்த தேவமாதாவை நோக்கி சொல்லத்தகுஞ் செபம்.

என் ஆண்டவளே! என் தாயாரே! இதோ என்னை முழுதும் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். தேவரீர்பேரில் அடியாள் வைத்த பக்தியைக் காண்பிக்கத்தக்கதாக இன்றைக்கு என் கண் காதுகளையும், வாய் இருதயத்தையும் என்னை முழுதும் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். நல்ல தாயாரே! நான் தேவரீருக்குச் சொந்தமாயிருக்கிறபடியினாலே, என்னை உம்முடைய உடைமையாகவும் சுதந்தரப் பொருளாகவும் ஆதரித்துக் காப்பாற்றியருளும்.

என் ஆண்டவளே! என் தாயாரே! நான் தேவரீருக்குச் சொந்தமாயிருக்கிறேனென்று நினைத்துக்கொள்ளும். என்னை உம்முடைய உடைமையாகவும் சுதந்தரப் பொருளாகவும் ஆதரித்துக் காப்பாற்றியருளும்.—ஆமென் சேசு.

¶ விபரம். முதலாவது.—முதல் செபத்தை அந்திசந்தி இருவேளை செபிப்பவர்களுக்கு நூறுநாட் பலன். மாதம் ஒருதினம் இதைச் செபித்துப் பாவசங்கீர்த்தனம் பண்ணித் தேவநற்கருணை வாங்குகிறவர்களுக்குப் பரிபூரண பலனுண்டு.

2-வது.—இரண்டாஞ் செபத்தை பசாசின் சோதனை நேரத்திலே பத்தியோடு உச்சரித்தால், நாற்பதுநாட் பலனுண்டு.



## அர்ச். தேவமாதாவினுடையவுஞ் சகல அர்ச்சியசிஷ்டவர்களுடையவும் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.
கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.
பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.
உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.
இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.
அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

அர்ச். மரியாயே,
சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,
கன்னியாஸ்திரீகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,
கிறீஸ்துவினுடைய மாதாவே,
தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே, } எ. இ. செ.

மகா பரிசுத்த மாதாவே,
அத்தியந்த விரத்தியாயிருக்கிற மாதாவே,
பழுதற்ற கன்னியாஸ்திரியாயிருக்கிற மாதாவே,
கன்னிசுத்தங்கெடாத மாதாவே,
மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதாவே,
ஆச்சரியத்துக்குரிய மாதாவே,
நல்லாலோசனை மாதாவே,
சிருஷ்டிகருடைய மாதாவே,
இரட்சகருடைய மாதாவே,
மகா புத்தியுடைத்தான கன்னிகையே,
மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே,
பிரகாசமாய் ஸ்துதிக்கப்பட்ட யோக்கியமாயிருக்கிற கன்னிகையே,
சத்தியுடையவளாயிருக்கிற கன்னிகையே,
தயையுள்ள கன்னிகையே,
விசுவாசியாயிருக்கிற கன்னிகையே,
தருமத்தினுடைய கண்ணாடியே,
ஞானத்துக்கு இருப்பிடமே,
எங்கள் சந்தோஷத்தினுடைய காரணமே,
ஞான பாத்திரமே,
மகிமைக்குரிய பாத்திரமே,
அத்தியந்த பத்தியுடைத்தான பாத்திரமே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



தேவ இரகசியத்தைக்கொண்டிருக்கிற உரோசையென்கிற புஷ்பமே,
தாவீது இராஜாவினுடைய உப்பரிகையே,
தந்தமயமாயிருக்கிற உப்பரிகையே,
சொர்ணமயமாயிருக்கிற ஆலயமே,
வாக்குத்தத்தத்தின் பெட்டியே,
பரலோகத்தினுடைய வாசலே,
விடியற்காலத்தின் நக்ஷத்திரமே,
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே,
பாவிகளுக்கு அடைக்கலமே,
கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவே,
கிறீஸ்துவர்களுடைய சகாயமே,
சம்மனசுக்களுடைய இராக்கினியே,
பிதாப்பிதாக்களுடைய இராக்கினியே,
தீர்க்கதரிசிகளுடைய இராக்கினியே,
அப்போஸ்தலர்களுடைய இராக்கினியே,
வேதசாட்சிகளுடைய இராக்கினியே,
ஸ்துதியருடைய இராக்கினியே,
கன்னியாஸ்திரிகளுடைய இராக்கினியே,
சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய இராக்கினியே,
ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த இராக்கினியே,
திருச்செபமாலை இராக்கினியே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அர்ச். மிக்கயேலே,
அர்ச். கபிரியேலே,
அர்ச். இரபயேலே,
* தூதரும் அதிதூதருமாயிருக்கிற சகல சம்மனசுக்களே,
* நவவிலாச சபையாயிருக்கிற சகல சம்மனசுக்களே,
அர்ச். சுவக்கீனே,
அர்ச். ஸ்நாபக அருளப்பரே,
அர்ச். சூசையப்பரே,
* பிரதான பிதாக்களுந் தீர்க்கதரிசிகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
அர்ச். இராயப்பரே,
அர்ச். சின்னப்பரே,
அர்ச். பெலவேந்திரரே,
அர்ச். யாகப்பரே,
அர்ச். அருளப்பரே,
அர்ச். தோமையாரே,
அர்ச். சின்னயாகப்பரே,
அர்ச். பிலிப்புவே,
அர்ச். பற்தொலோமையே,
அர்ச். மத்தேயுவே,
அர்ச். சீமோனே,
அர்ச். ததேயுவே,
அர்ச். மத்தியாசே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

* இக்குறியிட்டிருக்கிற முதலோதி சொல்லும் வாக்கியங்களுக்குத் துணைவர் "எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" என்று சொல்லவும்.



அர்ச். பர்ணபாவே,
அர்ச். லூக்காவே,
அர்ச். மாற்குவே,
* அப்போஸ்தலருஞ் சுவிசேஷகருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
* எங்களாண்டவருடைய சீஷர்களாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
* மாசில்லாத சகல அர்ச்சியசிஷ்ட குழந்தைகளே,
அர்ச். முடியப்பரே,
அர்ச். செய்ப்பிப்பரே,
அர்ச். வின்சேத்திபுவே,
* பபியானுஞ் செபஸ்தியானுமென்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,
* அருளப்பருஞ் சின்னப்பருமென்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,
* கொஸ்மாவுந் தமியானுமென்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,
* சேர்வாசியும் புரோத்தாசியுமென்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,
* வேதசாட்சிகளான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
அர்ச். சில்வெஸ்திரியுவே,
அர்ச். கிறகோரியுவே,
அர்ச். அம்பிரோசே,
அர்ச். அகுஸ்தினே,
அர்ச். இயெரோனிமுவே,
அர்ச். மர்த்தினுவே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அர்ச். நிக்கோலாவே,
* மேற்றிராணிகளும் ஸ்துதியர்களுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
* வேத வித்தியாபாரகரான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
அர்ச். அந்தோனியாரே,
அர்ச். ஆசீர்வாதப்பரே,
அர்ச். பெர்நர்துவே,
அர்ச். சாமிநாதரே,
அர்ச். பிராஞ்சிஸ்குவே,
அர்ச். இஞ்ஞாசியாரே,
அர்ச். சவேரியாரே,
அர்ச். ஞானப்பிரகாசியாரே,
அர்ச். ஸ்தனிஸ்லாசே,
* குருக்களும் ஆசாரியருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
* சந்நியாசிகளுந் தபோதனருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
அர்ச். மரியமக்தலேனம்மையே,
அர்ச். ஆகத்தம்மாளே,
அர்ச். பிரகாசியம்மாளே,
அர்ச். அகினேசியே,
அர்ச். செசிலியே,
அர்ச். கத்தரீனம்மாளே,
அர்ச். அனஸ்தாசியே,
அர்ச். அன்னம்மாளே,
அர்ச். எலிசபெத்தம்மாளே,
அர்ச். மோனிக்கம்மாளே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.



அர்ச். விரிச்சித்தம்மாளே,
அர்ச். அருளாயி பிராஞ்சிஸ்கம்மாளே,
* கன்னியாஸ்திரீகளும் விதவை ஸ்திரீகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

எங். வே.

ஆண்டவருடைய திருவடியார்களான ஸ்திரீ பூமான்களாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே, —எங்களுக்காக மன்றாடிக்கொள்ளுங்கள்.

தயாபராயிருந்து, —எங்கள் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ.

தயாபராயிருந்து, —எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமீ.

சகல பொல்லாப்புகளிலே நின்று,
சகல பாவங்களிலே நின்று,
உமது கோபத்திலே நின்று,
பூமியதிர்ச்சியாகிற அகோர ஆக்கினையிலே நின்று,
அசுப்பில் வருகிற துர்மரணத்திலே நின்று,
பசாசினுடைய சகல தந்திரங்களிலே நின்று,
கோபம் பகை முதலான சகல துர்க்குணங்களிலே நின்று,
மோக அக்கினியிலே நின்று,
இடி பெருங் காற்றிலே நின்று,
நித்திய மரணத்திலே நின்று,

எங்களை இரட்சித்துக்கொள்ளும் சுவாமீ.

கொள்ளைநோய் பஞ்சம் சண்டையிலே நின்று,

தேவரீருடைய திரு மனுஷாவதாரத்தின் பரம ரகசியத்தைப் பார்த்து,

தேவரீருடைய ஆகமனத்தைப் பார்த்து,

தேவரீருடைய பிறப்பைப் பார்த்து,

தேவரீருடைய ஸ்நானத்தையும் உபவாசத்தையும் பார்த்து,

தேவரீருடைய சிலுவையையும் பாடுகளையும் பார்த்து,

தேவரீருடைய மரணத்தையும் அடக்கத்தையும் பார்த்து,

தேவரீருடைய திவ்விய உத்தானத்தைப் பார்த்து,

தேவரீருடைய ஆச்சரியமான ஆரோகணத்தைப் பார்த்து,

தேற்றரவு பண்ணுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனத்தைப்பார்த்து,

நடுத்தீர்க்கிற நாளிலே,

எங்களை இரட்சித்துக் கொள்ளும் சுவாமி.

பாவிகளாயிருக்கிற நாங்கள் தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் பாவங்களைப் போக்கியருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்களுக்குத் தயைபண்ணி இரட்சித்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எ. மன். கேட். சுவாமி.



நாங்கள் மெய்யான தவம்புரிய உதவி செய்ய வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

தேவரீர் உமது அர்ச்சியசிஷ்ட சபையை ஆளவும் பாதுகாத்தருளவும் வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

அர்ச். பாப்புமுதலான அதிசிரேஷ்ட ஆசாரியரையும் ஆகம சபைகளிலுட்பட்ட சகல குருக்களையுஞ் சந்நியாசிகளையுஞ் சத்தியவேத முறைமைகளில் தற்காத்தருள வேணுமென்று தேவரீரைமன்றாடுகிறோம்,

உமது அர்ச்சியசிஷ்ட சபையின் சத்துருக்களைக் கீழ்ப்படுத்த வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

சத்தியவேத இராஜாக்களுக்கும் பிரபுக்களுக்கும் சமாதானத்தையுஞ் சரியான ஒருமைப்பாட்டையுந் தந்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

சமஸ்தமான கிறீஸ்துவர்களுக்குஞ் சமாதானத்தையும் ஒருமைப் பந்தனத்தையுங் கட்டளையிட்டருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

தேவரீருடைய திருப்பணியிலே அடியோரைத் திடப்படுத்திக் காப்பாற்ற வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மனது பரலோக ஆசையைப் பற்றி உயர வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி.

எங்களுடைய உபகாரிகளுக்கு நித்திய நன்மையைப் பலனாகக் கட்டளையிட்டருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்களாத்துமங்களையும் எங்களுடைய சகோதரர் பந்துக்கள் உபகாரிகளுடைய ஆத்துமங்களையும் நித்திய நாகாக்கினையிலேநின்று இரட்சித்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

பூமியிலே நல்ல பயிர் விளைவின் பலன் தந்து காப்பாற்ற வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

மரணத்தையடைந்த சமஸ்த விசுவாசிகளுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் வேண்டுதலை நன்றாகக் கேட்டருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

சர்வேசுரனுடைய சுதனே, உம்மை மன்றாடுகிறோம்,

எங்கள் மனுவைக் கேட்டருளுஞ் சுவாமீ.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே,— எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே,— எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளுஞ் சுவாமீ.



உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே,— எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ கிருபையாயிரும்—ஒரு-பர.

மு.—எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும்,

து.—தின்மையிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

## 69-ம் சங்கீதச் செபம்.

மு.—சர்வேசுரா, எனக்கு உதவியாக நோக்கியருளும், * கர்த்தாவே, எனக்கொத்தாசை செய்யத் தீவிரியும்.

து.—என் உயிரைப் பறிக்கத் தேடுகிறவர்கள் * வெட்கிப் பயந்திருக்கக்கடவார்கள்.

மு.—எனக்குப் பொல்லாப்புச்செய்ய நினைக்கிறவர்கள் * பின்னிட்டு நாணக்கடவார்கள்.

து.—என்னைப்பார்த்து தூஷணிக்கிறவர்கள் * உடனே நாணி நிற்கக்கடவார்கள்.

மு.—உம்மைத் தேடுகிற யாவரும் ஆண்டவரை வாழ்த்திப் பாடக்கடவதென்று இடை—

விடாமற் சொல்லுகிறவர்களும் * உம்மால் அனுப்பப்படப் போகிறவரைச் சிநேகிக்கிறவர்களும் மனம் பூரித்து மகிழக்கடவார்கள்.

து.—அடியேன் வறுமையுந் தரித்திரமுமுள்ளவனாயிருக்கிறேன்: * சர்வேசுரா, எனக்கு உதவிசெய்தருளும்.

மு.—எனக்கு உதவிசெய்கிறவரும் நீரே; என்னை மீட்டிரட்சிக்கிறவரும் நீரே, * ஆண்டவரே; தேவரீர் தாமதம் பண்ணாதேயும்.

து.—பிதாவுக்கும்—மற்றதும்.

மு.—ஆதியிலே—மற்றதும்.

து.—ஆமென்சேசு.

மு.—என் சர்வேசுரா, தேவரீர்பேரில் நம்பிக்கை வைத்திருக்கிற உமதடியோர்களை இரட்சித்தருளுஞ் சுவாமீ.

து.—சத்துராதியின் சமுகத்தில் ஆண்டவரே, அடியோர்களுக்கு நீரே திடமாயிரும்.

மு.—சத்துராதியானது எங்களிடத்தில் ஒரு அநுகூலத்தையும் அடையாதிருக்கக்கடவது.

து.—அக்கிரமத்தின் பிள்ளையானது எங்களுக்குத் தின்மை செய்யாதிருக்கக்கடவது.

மு.—ஆண்டவரே, அடியோர்கள் கட்டிக்கொண்ட பாவ அக்கிரமத்தின் பிரகாரம் எங்களைத் தண்டியாதேயும்,

து.—எங்கள் அக்கிரமத்தின் பிரகாரம் எங்களுக்கு ஆக்கினையிடாதேயும்.



மு.—நமக்கு அதிமேற்றிராணியாராகிய * 10-ம் பத்திநாதர் என்கிறவருக்காக வேண்டிக்கொள்ளுவோமாக,

து.—கர்த்தர் அவரை ஆதரித்துக் காப்பாற்றி இவ்வுலகத்தில் பாக்கியவானாக்கி அவருடைய சத்துராதிகளிடத்தில் அவரைக் கையளியாமல் இரட்சித்துக்கொள்ளுவாராக.

மு.—எங்களுக்கு உபகாரம் பண்ணுகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுவோமாக,

து.—ஆண்டவரே, உமது திருநாமத்தினால் எங்களுக்கு உபகாரம் பண்ணுகிறவர்களுக்கெல்லாம் நித்திய சீவியத்தைக் கட்டளையிட அநுக்கிரகம் பண்ணியருளும்.—ஆமென்சேசு.

மு.—மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளுவோமாக,

து.—ஆண்டவரே, அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும்; ஊழியுள்ள பிரகாசம் அவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது.

மு.—அவர்கள் சமாதானத்திலே இளைப்பாறக்கடவர்களாக,

து.—ஆமென்சேசு.

மு.—தூரத்திலிருக்கிற எங்கள் சகோதரர்களுக்காக வேண்டிக்கொள்ளுவோமாக,

* அந்தந்தக் காலத்திலிருக்கப்பட்ட பாப்பானவருடைய பெயரைச் சொல்லவும்.

தா.—என் சர்வேசுரா, தேவரீர்பேரில் நம்பிக்கை வைத்திருக்கிற உமதடியோர்களை இரட்சித்தருளுஞ் சுவாமீ.

மு.—பரிசுத்த பருவதத்திலிருந்து, ஆண்டவரே, அவர்களுக்கு உதவியனுப்பியருளும்,

தா.—சீயோனிநின்று அவர்களைக் காப்பாற்றியருளும்.

மு.—ஆண்டவரே, என் மன்றாட்டுக்குக் காதுகொடுத்தருளும்,

தா.—அடியான் கூப்பிடுகிற சத்தந் தேவரீருடைய சந்நிதிமட்டும் வரக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

எப்பொழுதைக்கும் இரக்கமும் பொறுத்தலுமுடையவராயிருக்கிற சர்வேசுரா, உமதடியோர்களுடைய மன்றாட்டுக்குச் செவிகொடுத்துப் பாவக்கட்டினாற் கட்டப்பட்டிருக்கிற உமதடியோர்களுக்குந் தாசர்களான சமஸ்தருக்கும் உமது இரக்கமானது தயாபரமாய்ப் பொறுத்தலைத் தந்தருளக்கடவது.

ஆண்டவரே, உம்மைப் பிரார்த்திக்கிறவர்களுடைய மன்றாட்டுக்குக் காதுகொடுத்து, உம்மை நம்பினவர்களுடைய பாவங்களைப் பொறுத்து, எங்கள்பேரிலிரங்கி பாவமன்னிப்பையுஞ் சமாதானத்தையுங் கட்டளையிட்டருளும்.



ஆண்டவரே, தேவரீருடைய மட்டற்ற இரக்கத்தைத் தயையோடு அடியோர்களுக்குக் காண்பித்து, அடியோர்கள் கட்டிக்கொண்ட சகல பாவங்களில்நின்று விடுவித்து, நாங்கள் செய்த பாவங்களுக்காக எங்களுக்கு வரவேண்டிய ஆக்கினையில் நின்று எங்களை இரட்சித்தருளுஞ் சுவாமீ.

மனுஷர் செய்கிற பாவத்தினால் கஸ்திப்பட்டுச் செய்கிற தபசினாலே கோபந் தணிந்திருக்கிற கர்த்தாவே, உமது பிரஜைகள் உம்மைப் பார்த்துச் சொல்லும் மன்றாட்டைத் தயையோடே கேட்டருளும். மேலும் எங்கள் பாவங்களுக்காக எங்களுக்குச் செல்லுமான உமது கோபாக்கினையை எங்களைவிட்டு நீக்கியருளும்.

சர்வ வல்லவரும் நித்திய சீவியருமாயிருக்கிற சர்வேசுரா, உமது ஊழியராயிருக்கிற எங்கள் அதிமேற்றிராணியாராகிய *10-ம் பத்திநாதரென்னும் பாப்பானவர்மேல் தயவாயிரும்; அவரும் உம்முடைய வரப்பிரசாதத்தைக்கொண்டு உமக்குப் பிரியமானதுகளை அபேட்சித்துத் தம்மாலியன்றமட்டும் அதுகளை நிறைவேற்றும்படிக்கு நித்திய ஈடேற்றத்தின் நன்னெறியில் அவரை உம்முடைய தயாளத்தின்படியே நடப்பித்தருளுஞ் சுவாமீ.

* அந்தந்தக் காலத்திலிருக்கப்பட்ட பாப்பானவருடைய பெயரைச் சொல்லவும்.

பரிசுத்த விருப்பங்களுக்கும் நேர்மையான விமரிசைகளுக்கும் நீதிக்கடுத்த கிரியைகளுக்கும் ஊறணியாயிருக்கிற சர்வேசுரா சுவாமீ; உலகத்தால் நாங்களடையக்கூடாத சமாதானத்தை உமதடியோர்களுக்குத் தந்தருளி, உம்முடைய கற்பனைகளில் எங்கள் மனதுநாடிச் சத்துராதிகளுடைய பயங்கரமான கலகங்களெல்லாம் அகன்று, தேவரீருடைய உதவி சகாயத்தினால் எங்கள் வாழ்நாட்கள் அமரிக்கையாயிருக்கச் செய்தருளுஞ் சுவாமீ.

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய தேவசிநேக அக்கினியினாலே ஆண்டவரே, எங்களிடுப்பையும் இருதயத்தையும் பற்றியெரியச் செய்தருளும்; கற்புள்ள சரீரத்தோடே தேவரீருக்குரிய பணிவிடைசெய்து சுத்த மனதோடு உமக்குப் பிரியமுள்ளவர்களாய் நடக்கத் துணை பண்ணியருளுஞ் சுவாமீ.

சமஸ்த விசுவாசிகளையும் படைத்து இரட்சிக்குங் கர்த்தாவாகிய சர்வேசுரா, உமதடியோர்களுடையவும் அடியாள்களுடையவும் ஆத்துமங்களுக்குப் பாவப்பொறுத்தலைத் தந்தருளி, அவர்கள் எப்போதும் அபேட்சித்துக் கொண்டு வந்த பாவமன்னிப்பை எங்கள் பத்தியுள்ள மன்றாட்டுக்களினால் அடையச்செய்தருளுஞ் சுவாமீ.

ஆண்டவரே, எங்கள் செபக்கிரியை யாவும் எப்போதும் உம்மால் துவக்கவும், உம்மால்



துவக்கினது முடிக்கப்படவும், எங்கள் கிரியைகளுக்கு உம்முடைய ஏவுதலினாலே முன்வந்து, அதுகளை முடியுமட்டும் உம்முடைய உதவியினாலே ஆதரிக்க வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

சர்வ வல்லவரும் நித்திய சீவியருமாயிருக்கிற சர்வேசுரா சுவாமீ, சீவியர்கள்மேலும் மரித்தவர்கள்மேலும் செங்கோன்மை செலுத்தி, விசுவாசத்தாலும் நற்கிரியையாலும் உமது பட்சமாவார்களென்று தேவரீர் முன் தெரிந்த சமஸ்தருக்குந் தயையுள்ளவராயிருக்கிறீர்; நாங்கள் யாராருக்காக வேண்டிக்கொள்ளுகிறோமோ அவர்களெல்லாரும் சரீர சம்பந்தத்தோடிருந்தாலும், சரீரத்தைவிட்டு மறுஉலகத்திற் சென்றவர்களாயினும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய வேண்டுதலாலும் உமது நன்மைப் பெருக்கத்தின் கிருபாகடாட்சத்தினாலும் பாவப்பொறுத்தலை அடையத்தக்கதாகத் தேவரீரைப் பிரார்த்திக்கிறோம். இந்த மன்றாட்டை தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் சுயஞ்சீவியருமாய் இராச்சிய பரிபாலருமாயிருக்கிற உம்முடைய திருச்சுதனாகிய சேசுக்கிறீஸ்துவினுடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளுஞ் சுவாமீ.—ஆமென் சேசு.

மு.—சர்வ வல்லவருந் தயாபரருமாகிய சர்வேசுரன் எங்கள் மன்றாட்டுக்குக் காதுகொடுத்தருளக்கடவாராக,

து.—ஆமென் சேசு.

மு.—மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவது,

து.—ஆமென் சேசு,

---

## தேவமாதாவைக்குறித்துப் பாடல்.

சமுத்திரத்தின் நட்சத்திரமே, சர்வேசுரனுடைய பூசிக்கப்பட்ட மாதாவே, நித்திய கன்னிகையே, பரலோகத்தின் பாக்கியமான வாசலே, வாழ்க.

கபிரியேல் என்கிற சம்மனசினுடைய வாக்கிலே நின்று புறப்பட்ட மங்கள வார்த்தையைக்கேட்டு ஏவையின் பெயரை மாற்றி எங்களைச் சமாதானத்திலே நிலைநிறுத்தும்.

ஆக்கினைக்குப் பாத்திரமானவர்களுடைய கட்டுக்களை அவிழும்; குருடருக்குப் பிரகாசத்தைக்கொடும், எங்கள் பொல்லாப்புகளைத் தள்ளும்; சகல நன்மைகளும் எங்களுக்கு வரமன்றாடும்.

நீர் எங்களுக்குத் தாயாராயிருக்கிறீரென்று காண்பியும், எங்களுக்காக அவதரித்த உம்முடைய திருக்குமாரன் சேசுநாதர் உம்மாலே எங்கள் வேண்டுதலைக் கேட்கக்கடவாராக.

உத்தம கன்னிகையே! எல்லாத்தினுஞ் சாதுவே, நாங்கள் பாவங்களினின்று விடப்பட்டவர்களாகிச் சாதுக்களாகவுங் கற்புடையவாகவுஞ் செய்தருளும்.



நாங்கள் சேசுநாதரைத் தரிசித்து நிரந்தரங் களிகூர்ந்திருக்கச் சுத்த நடக்கையைத் தந்து பயமில்லாத வழியிற் கூட்டிக்கொண்டுபோக அநுக்கிரகஞ் செய்தருளும்.

சர்வேசுரனாகிய பிதாவுக்குத் தோத்திரம், உத்தம கிறீஸ்துவுக்குப் பூசை, இஸ்பிரீத்துசாந்துவுக்கு மங்களம், இந்த மூன்றாட்களுக்கும் ஒரே உத்தம தேவாராதனை உண்டாகக்கடவது. —ஆமென் சேசு.

சர்வேசுரனுடைய அர்ச்சியசிஷ்ட மாதாவே, இதோ உம்முடைய சரணமாக ஓடிவந்தோம், எங்கள் அவசரங்களிலே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு நீர் பராமுகமாயிராதேயும், ஆசீர்வதிக்கப்பட்டவளுமாய் மோட்சமுடையவளுமாயிருக்கிற நித்திய கன்னிகையே, சகல ஆபத்துக்களிலே நின்று எங்களைத் தற்காத்துக்கொள்ளும்.

மு.—சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக,

து.—சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்.

சுவாமீ, முழுமனதோடே தண்டனாக விழுந்துகிடக்கிற இந்தக் குடும்பத்தைப் பார்த்து எப்போதும் பரிசுத்த கன்னிகையான முத்திப்பேறுபெற்ற மரியாயியுடைய வேண்டுதலி

னுமேலே சகல சத்துருக்களின் சர்ப்பனையிலே நின்று பிரசன்னராய்த் தயைசெய்து இரட்சியும்.

சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரா சுவாமீ, தேவரீர் பரிசுத்த கன்னிமரியம்மாளுக்கு மாசற்ற பத்தாவாகவும், உம்முடைய திவ்விய குமாரனை இவ்வுலகத்தில் வளர்க்குந் தகப்பனாகவும் அர்ச். சூசையப்பனை முன்னால் தெரிந்துகொண்டீரே, அவருடைய புண்ணிய பலன்களைப் பார்த்து, எத்தேசத்திலும் அக்கியானம் நீங்கவும், திருச்சபை வர்த்திக்கவும், அவரை நம்பின நாங்களெல்லாரும் புண்ணியத்திலே நிலைநின்று நல்ல மரணத்தையடையவும் அவரோடு எப்போதுந் தேவரீரை ஸ்துதித்து மோட்ச பாக்கியத்தை அநுபவிக்கவுங் கிருபை பண்ணியருளும்.

தயாபரரான சர்வேசுரா, மனுவாக்குக்கெட்டாத தேவ ஞான பராமரிப்பினால் எங்களைக் காத்து நடத்த உம்முடைய பரிசுத்த சம்மனசுக்களை அனுப்பியருளுகிறீரே, உமக்கே தோத்திரமுண்டாகக்கடவது. தேவரீரை மன்றாடுகிற அடியோர்கள் இவ்வுலகத்தில் அவர்களுடைய ஆதரவினால் காப்பாற்றப்பட்டு உமக்கும் அவர்களுக்கும் பிரியப்படச் சுமுத்திரையுள்ள பத்தியாய் நடக்கவும், மோட்சத்தில் அவர்களோடு உம்மை அநவரதகாலம் ஸ்துதித்து வாழவுங் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ.



சர்வ வல்லவரும் நித்திய பிதாவுமாகிய சர்வேசுரா, தேவரீருக்கு மிகவும் நேசகுமாரனாகிய சேசுக்கிறீஸ்துவின் திவ்விய இருதயத்தையும், அவர் பாவிகளின் பேராலே தேவரீருக்குச் செலுத்தின தோத்திரங்களையும், பாவப்பரிகாரங்களையும், அவர் எங்கள்பேரில் வைத்த பட்ச மிகுதியாற் பட்ட வேதனைகளையுந் தேவரீர் பார்த்திரங்கி உமது கிருபையை மன்றாடிக் கேட்கிற அடியோர்களுக்குத் தயாபரராய்ப் பொறுத்தலைக் கொடுத்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

* சேசுமரியாயி சூசை என் இருதயத்தையும் ஆத்துமத்தையும் உங்களுக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

* சேசுமரியாயி சூசை என் கடைசி அவஸ்தையில் எனக்கு உதவிசெய்தருளுங்கள்.

* சேசுமரியாயி சூசை என் ஆத்துமம் உங்களோடே சமாதான ஐக்கியமாக என் உடலைவிட்டுப் பிரியக்கடவது.

¶ விபரம்.—இம்மூன்று மனவல்லயச் செபங்களையுஞ் செபிக்கிறவர்களுக்கு முன்னூறுநாட் பலன்களையும், அதுகளிற் ஒன்றைமாத்திரஞ் செபிக்கிறவர்களுக்கு நூறுநாட் பலனையும் அர்ச். பாப்பானவர் கட்டளையிட்டருளினார். இதுகளை உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்காகச் செலுத்தலாகும்.

## ஒவ்வொரு நாளிலும் தேவமாதாவைப்பார்த்து வேண்டிக்கொள்ளுஞ் செபம்.

சம்மனசுக்களுடைய இராக்கினியே! மனுஷர்களுடைய சரணமே! சர்வலோகத்துக்கும் நாயகியே! நாங்கள் எல்லோரும் உம்முடைய பிள்ளைகளாய் இருக்கிறோம், எப்படியாகிலும் எங்களை இரட்சிக்கவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். தாயாரே! மாதாவே! ஆண்டவளே! உம்மை நம்பினோம், உம்மை நம்பினோம், எங்களைக் கைவிடாதேயும். விசேஷமாய் நாங்கள் சாகும்போது பசாசினுடைய தந்திரங்களையெல்லாந் தள்ளிப்போட்டு, உம்முடைய திருக்குமாரன் சேசுநாதருடைய அண்டைக்கு நாங்கள் வந்து சேருமட்டும் தேவரீர் துணையாயிரும். இது நிமித்தமாக உம்முடைய திருப்பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து உம்முடைய பரிபூரண ஆசீர்வாதத்தைக் கேட்கிறோம். அதை அடியோர்களுக்கு இரக்கத்தோடே கட்டளைபண்ணியருந் தாயாரே! மாதாவே! ஆண்டவளே! ஆமென்சேசு.



## அர்ச். தேவமாதா சுவாமியைப் புகழ்ந்து வசனித்த பத்து வாக்கியங்கள்.

என் ஆத்துமமானது * ஆண்டவரை வணங்கித் தோத்திரம் பண்ணுகிறது.

என் இரட்சண்ணியமாகிய சர்வேசுரனிடத்தில் * என் ஆத்துமம் ஆனந்தமாய் எழும்பி மனமகிழ்கின்றது.

தமது அடிமையானவளுடைய நீசத்தனத்தைக் கிருபாகடாட்சத்தால் பார்த்தபடியினாலே, * இதோ எல்லாரும் இக்கால்முதல் தலைமுறை தலைமுறையாக என்னைப் பாக்கியமுள்ளவளென்பார்கள்.

வல்லபமிக்கவர் தம்முடைய பெருமையுள்ளதுகளை என்னிடத்திற் செய்தருளினார், * மேலும் அவருடைய நாமமானது அர்ச்சியசிஷ்ட நாமந்தானே.

தமக்குப் பயந்திருக்கிறவர்களுக்கே * தலைமுறை தலைமுறையாகத் தமது கிருபையைச் செய்வார்.

தம்முடைய கையின் பலத்தைக் காட்டித் * தங்கள் தங்கள் இருதயத்தின் விசாரத்தினாலே கர்வமுள்ளோர்களைச் சிதறப்பண்ணினார்.

பலமுடைத்தானவர்களை ஆசனத்தினின்று தள்ளி * தாழ்ந்தவர்களை உயர்த்தினார்.

பசித்திருக்கிறவர்களைத் தம்முடைய நன்மையினாலே நிரப்பி * தனமுள்ளோர்களை வறுமையுள்ளவர்களாக்கினார்.

அபிரகாமென்பவருக்கும் ஊழியுள்ளகாலம் அவருடைய சுய பரம்பரையாகிய * எங்கள் பிதாக்களுக்குஞ் சர்வேசுரன் திருவுளம்பற்றி னபடியே ;

தமது கிருபையை நினைத்து * தம்முடைய தாசராகிய இசராயேல் ஜனங்களைப் பரிக்கிரகம் பண்ணினார்.

பிதாவுக்குஞ் சுதனுக்கும்—மற்றதும்.





## அர்ச். சூசையப்பருடைய ஏழு வியாகுலங்களையும் ஏழு சந்தோஷங்களையும் குறித்து கேட்கு மன்றாட்டு.

1-வது. அர்ச். சூசையப்பரே! நீர் கன்னிமரியாயின் கர்ப்பத்துக்குக் காரணமறியாமல் நீர் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் அதன் காரணத்தைச் சம்மனசுவினால் அறிந்து, நீர் அனுபவித்த சந்தோஷத்தைப் பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! நீர் அனுபவித்த இந்தத் துக்கத்தையும் சந்தோஷத்தையும் பார்த்து எங்களுக்காக மனுப் பேசியருளும், (அல்லது அவனவன் தனக்கு வேண்டியதைக் கேட்கிறது.) பர. பிரி. திரி.

2-வது. அர்ச். சூசையப்பரே! சேசுநாதர் மாட்டுக்கொட்டிலில் பிறந்ததைக் கண்டு, நீர் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் அவர் சம்மனசுக்களாலும் மனிதர்க

ளாலும் ஆராதிக்கப்படுகிறதைக் கண்டு, நீர் அநுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! பர. பிரி. திரி.

3-வது. அர்ச். சூசையப்பரே! திவ்விய குழந்தை விருத்தசேதனப்பட்டதைக் கண்டு, நீர்பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் அவருக்கு சேசுவென்னுந் திருநாமந் தரிக்கப்படுவதைக்கண்டு நீர் அநுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! பர. பிரி. திரி.

4-வது. அர்ச். சூசையப்பரே! திவ்விய குமாரனுடைய பாடுகளையும், அவர் திருத்தாயாருடைய வியாகுலங்களையும் சிமியோன் முன்னறிவிக்கக் கேட்டு, நீர் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் மனுக்குலத்தின் இரட்சணியத்தை அவர் முன்னறிவிக்கக்கேட்டு நீர் அநுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! பர. பிரி. திரி.

5-வது. அர்ச். சூசையப்பரே! நீர் எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போனதைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் நீர் திவ்விய இரட்சகரைக் காப்பாற்றினதைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! பர. பிரி. திரி.

6-வது. அர்ச். சூசையப்பரே! எஜிப்து தேசத்திலின்று திரும்பி வருகையில் நீர் பட்ட பயத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும்



சம்மனசுவின் காட்சியால் தேறுதலடைந்ததைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! பர. பிரி. திரி.

7-வது. அர்ச். சூசையப்பரே! சேசுநாதரைக் காணாமற்போனதினால் நீர் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் அவரை மறுபடியும் கண்டு, நீர் அநுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே! பர. பிரி. திரி.

மு.—நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத்தக்கதாக,

து.—அர்ச். சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமி! உம்முடைய திருமாதாவுக்குப் பரிசுத்த பத்தாவாக முத்தனான அர்ச். சூசையப்பரை மகிமைக்கெட்டாத பராமரிப்பால் தெரிந்துகொள்ளத் திருவுளமானீரே, பூலோகத்தில் அடியோர்களை ஆதரிக்கிறவரென்று எங்களால் வணங்கப்படுகிற அவர் பரலோகத்தில் எங்களுக்காக மனுப்பேசுகிறவராயிருக்கும்படிக்கு நாங்கள் பாத்திரவான்களாகத்தக்கதாகத் தேவரீர் அநுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். சதா பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடுஞ் சதா காலஞ் சீவியருமாய் இராட்சிய பரிபாலனம்

பண்ணுகின்றவருமாயிருக்கிற ஆண்டவரே. ஆமென்சேசு.

---

## அர்ச். சூசையப்பருக்குத் தோத்திரப் பாடல்.

பத்தியோடு இந்த மந்திரங்களைச் செபிப்பவர்களுக்கு ஒரு வருஷப் பலனை அர்ச். பாப்பானவர் கட்டளையிட்டருளினார். இதையும் உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஆத்துமாக்களுக்குச் செலுத்தலாகும்.

சவுக்கியனாய்ச் சீவிக்கவுங் கடைசியாய்ச் சீவியகாலத்தின் பாக்கியமான முடிவையடையவும் விரும்புகிறவன் எவனோ அவன் சூசையப்பர் உதவியைக் கேட்கக்கடவான்.

இவர் தயாள திருக்கன்னியின் மாசற்ற பத்தாவுஞ் சேசுவின் பிதாவாக எண்ணப்பட்டவரும் நீதிமானும் பிரமாணிக்கரும் பரிசுத்தருமாகையால், தாம் மன்றாடிக் கேட்கிறதெல்லாம் பெற்றருளுகிறார்.
சவுக்கியனாய்ச்...

காய்ந்த புல்லின்மேல் வளர்த்தப்பட்ட பாலனை ஆராதித்தவரும், பின்னும் பரதேசத்தில் அத்திருப் பாலனைத் தேற்றினவரும், பின்பு காணமற்போன அவரைத் துயரத்துடனே தேடிக் கண்டவரும் இவரே. சவுக்கியனாய்ச்...

உலகத்தைச் சிருஷ்டித்த பரம கர்த்தர் இவருடைய கைத்தொழிலால் அமுது கொண்டார், பரம பிதாவினுடைய சுதன் இவருக்குக் கீழ்ப்படிந்து ஏவல் செய்தார். சவுக்கியனாய்ச்...



சேசுநாதரும் தேவமாதாவும் தமக்கு மரண வேளையில் உதவியாய் நின்றதைக் கண்டு அவர்கள் திருக்கரங்களில் அகமகிழ்ச்சியுடன் இன்பமான நித்திரை கொண்டாற்போலச் சிவித்தார்.
சவுக்கியனாய்ச்...

பிதாவுக்கும்..............சவுக்கியனாய்ச்...

இதோ கர்த்தர் தமது குடும்பத்தின்மேலே ஏற்படுத்தின பிரமாணிக்க விமரிசையுள்ள பணிவிடைக்காரன்.

மு.—நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத்தக்கதாக,

து.—அர்ச். சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரசுவாமீ! உம்முடைய மிகவும் அர்ச். திருமாதாவின் பரிசுத்த பத்தாவாக முத்தனை அர்ச். சூசையப்பரை மனோவாக்குக்கெட்டாத பராமரிக்கையால் தெரிந்துகொண்டீரே. பூலோகத்தில் அடியோர்களை ஆதரிக்கிறவரென்று எங்களால் வணங்கப்படுகிற அவர் பரலோகத்தில் எங்களுக்காக மனுப்பேசுகிறவராய் இருக்கும்படிக்கு நாங்கள் பாத்திரவான்களாகத்தக்கதாகத் தேவரீர் அநுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் சதாகாலஞ் சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே, ஆமென்சேசு.

## அர்ச். சூசையப்பரைக்குறித்து சுகிர்த மன்றாட்டு.

கிருபைதயாள நிறைந்தவருமாய் எங்கள் நேசவிணக்கத்துக்குரியவருமாயிருக்கிற பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே! தேவரீரை மன்றாடி, தேவரீருடைய அடைக்கலத்தைத் தேடி, உம்மிடத்தில் நாமிரந்து கேட்டதை அடையாமற் போனதில்லையென்று அர்ச். தெரேசம்மாள் நிச்சயித்ததை நினைத்தருளும். என் அன்புள்ள தகப்பனே! இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு, நான் உம்முடைய திருப்பாதத்தை அண்டிவருகிறேன். பெருமூச்செறிந்தழுது பாவியாயிருக்கிற நான் உமது தயாளத்துக்குக் காத்துக்கொண்டு, உமது சமுகத்திற் சாஷ்டாங்கமாய் விழுகிறேன். மிகவும் இரக்கமுள்ள பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே! சொற்பமும் அயோக்கியமுமாயிருக்கிற என் மன்றாட்டைப் புறக்கணியாமல் தயாபரராய்க் கேட்டுக் கிருபை புரிந்தருளும். ஆமென் சேசு.

---

## அர்ச். சூசையப்பருக்குத் தன்னை முழுதும் ஒப்புக்கொடுக்குஞ் செபம்.

மகிமை நிறைந்த பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே! தேவமாதாவுக்குப் பரிசுத்த பத்தாவானவரே, சேசுக்கிறீஸ்துநாதரை வளர்த்த தகப்பனே, தேவரீரை நம்பினவர்



களுக்குத் தப்பாத அடைக்கலமே, நன்மரணத்துக்கு யாத்திரையுந் தஞ்சமுமானவரே, தேவரீருடைய தாசராயிருக்கிற நாங்கள் எங்களை முழுதும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். உமது சிம்மாசனத்தண்டையில் சாஷ்டாங்கமாக விழுந்து ஏகதிரித்துவமான சர்வேசுரனுடைய சமுகத்திலேயும், உமது திவ்விய குமாரனை சேசுநாதருடையவும், உமது பரிசுத்த பத்தினியாகிய தேவமாதாவினுடையவுஞ் சகலமான மோக்ஷவாசிகளுடையவும் அண்டையிலேயும் மிகுந்த வணக்கத்துடனே தேவரீரை எங்களுக்குத் தகப்பனாகவும், ஆண்டவராகவும், அடைக்கலமாகவுந் தெரிந்துகொள்ளுகிறோம். தேவரீருக்கு எங்களுடைய சரீரத்தையும், ஆத்துமத்தையும், அவயவங்களையும், சக்திகளையும், உடைமையுற்பத்திகளையும், எங்களுடைய மற்ற யாவற்றையும் ஒப்புக்கொடுக்கிறோம். உமது மகிமையைக்கொண்டாடி உமக்குரிய வணக்கத்தைப் பிரசித்தம்பண்ணி ஒருநாளாவது உமக்கு ஸ்துதியையும் வேண்டுதலையுஞ் செலுத்தாமல் இருக்கப்போகிறதில்லை. தேவரீரும் இடைவிடாமல் எங்களை நினைத்து எங்களுடைய இக்கட்டுகளை நிவர்த்திபண்ணி எங்களைப் புண்ணிய நெறியிலே வழுவாமல் நடப்பித்தருளும். சேசுநாதருடையவுந் தேவமாதாவினுடையவுந் திருக்கரங்களில் பாக்கியமான மரணத்தையடைந்த தேவரீர், நாங்கள் மரிக்கும்போது மோக்ஷ இஷ்டப்பிரசாதத்தோடே செத்து,

பேரின்ப பாக்கியத்தை அடைந்து, உம்முடனே என்றென்றைக்கும் வாழப்பண்ணியருளும். உமது பிள்ளைகளாயிருக்கிற எங்களைக் கைவிடாதேயும், தகப்பனே. ஆமென் சேசு.

---

## அர்ச். சூசையப்பரைக்குறித்து செபம்.

மகா பாக்கியம் பெற்ற அர்ச். சூசையப்பரே! எங்களுடைய துன்பவேளையில் உமது பரிசுத்த பத்தினியின் உதவியை இரந்து மன்றாடின பின்பு, உமது பாதுகாவலையும் நம்பிக்கையோடு தேடி வருகிறோம். தேவ தாயாரான ஜென்மப்பாவமில்லாமலுற்பவித்த அர்ச். கன்னிமரியாயிடத்தில் உமக்குள்ள சிநேகத்தின் பேராலும், திவ்விய குழந்தை சேசுநாதருக்கு நீர் காண்பித்த தந்தையின் அன்பைக்குறித்தும், உம்மிடத்தில் நாங்கள் கேட்கும் மன்றாட்டு ஏதென்றால், சேசுக்கிறீஸ்துநாதர் தமது இரத்தத்தால் நமக்காக சம்பாதித்த சுதந்தரத்தைத் தேவரீர் கிருபையாய்ப் பார்க்கவும், எங்கள் இக்கட்டிலே உமது பலமுள்ள ஒத்தாசையால் துணையாயிருக்கவும் மன்றாடுகிறோம்.

ஓ! திவ்விய குடும்பத்தை உத்தம ஞானத்தோடு நடத்திவந்த கைத்தாதையே! சேசுக்கிறீஸ்துநாதர் தம்முடையவர்களாகத் தெரிந்துகொண்ட ஜனங்களைப் பராமரித்தருளும். ஓ! மிகவும் அன்பு நிறைந்த எங்கள் தகப்பனே! நாங்கள் எவ்வித தப்பிதத்திலும் கேட்டிலும்



விழாதபடி எங்களைக் காப்பாற்றும். ஓ! எங்களைப் பாதுகாத்தருளும்படி மேலான வல்லமையுள்ளவரே! நரக சத்துருக்களோடு நாங்கள் செய்யும் யுத்தத்திலே நீர் மோக்ஷ சிம்மாசனத்திலிருந்து கிருபையாய் எங்களைப் பார்த்துத் துணையாய் வருவீராக. திவ்விய பாலகன் முன்னாள் சாவின் ஆபத்துக்குத் தப்பித்துக் கொள்ளும்படி தேவரீர் எவ்விதம் ஏதுவாயிருந்தீரோ, அவ்விதமே சர்வேசுரனுடைய திருச்சபையும் பசாசின் வலையிலும், எவ்வித ஆபத்திலுமிருந்து பாதுகாத்தருளும். உமது பாதுகாவல் இடைவிடாமல் என்றுமிருக்கக்கடவது. உமது புண்ணிய மாதிரிகையாலும் உம்முடைய உதவியின் துணையாலும் நாங்கள் எல்லோரும் பரிசுத்தமாய்ச் சீவித்துப் பத்தியாய் மரித்துப் பரகதியின் முடிவில்லாப் பாக்கியம்பெற்று வாழும்படி கிருபை செய்ய உம்மை மன்றாடுகிறோம். ஆமென் சேசு.

---

## நன்மரணமடைய அர்ச். சூசையப்பரைப்பார்த்து வேண்டிக் கொள்ளுஞ் செபம்.

மிகுந்த சாமர்த்தியமுள்ள அர்ச். சூசையப்பரே! பசாசு உலோகஞ் சரீரமாகிற மூன்று சத்துருக்கள் என்னுடைய மரணவேளையிலே என்னோடே தொடுக்கப்போகிற பெலத்த சண்

டையையும் நான் செய்த பாவங்களையும் என்னுத்துமத்தின் பலவீனத்தையும் நினைக்கிறபோது எனக்குத் தோர்வை வருகிறதேயல்லாமல் நான் ஜெயங்கொள்ள வழி காணேன். இப்படி வாராதபடிக்கு உம்முடைய சன்னதியிலே இரண்டு மன்றாட்டுக் கேட்கிறேன். அதாவது: சாகும் வேளைக்கு வேண்டிய விசுவாசம், நம்பிக்கை முதலான மற்றப் புண்ணியங்களிலே நான் இப்போ பழகவும், சாகிற சமயத்திலே தேவரீருடைய அடைக்கலத்துக்குள்ளாகச் சாகவும், இரண்டு மன்றாட்டையுந் தேவரீர் எனக்காக ஆண்டவர் சன்னதியிலே கேட்டால், உம்முடைய மன்றாடுதல் மிகுந்த [illegible] உள்ளதாயிருக்கிறதினாலே அதுகளை நான் கைக்கொள்ளுவேனென்று கெட்டி நம்பிக்கையாயிருக்கிறேன். இந்தத் தயை தேவரீர் அடியேனுக்குச் செய்யச் சேசுநாதரையும் தேவமாதாவையுங் குறித்து உம்மை மன்றாடுகிறேன் தகப்பனே, ஆமென்சேசு.

கன்னியர்களின் தந்தையும் பாதுகாவலுமாகிய மகிமைபொருந்திய அர்ச். சூசையப்பரே! மாசற்ற சுரூபியாகிய சேசுநாதரையும் கன்னியர்களுக்கு இராக்கினியாகிய அர்ச். மரியாயையும் விசாரிப்பதற்கு சர்வேசுரனாலே நியமிக்கப்பட்ட பிரமாணிக்கமுள்ள பாதுகாவலே, தேவரீருக்கு அவ்வளவு பிரியமாயிருந்த இரு பொக்கிஷங்களாகிய சேசுநாதரையும், அர்ச். மரியாயையுங் குறித்து நான் உம்மைப் பிரார்த்தித்து,



அடியேன் எந்தப்பாவ அசுத்தமுமில்லாதவனாய்க் காப்பாற்றப்பட்டுத் தூய இருதயத்தாலும் பரிசுத்த புத்தியாலும் கற்புள்ள சரீரத்தாலும், சேசுநாதருக்கும் அர்ச். மரியாயிக்கும் எப்போதும் பரிசுத்தமாய் ஊழியம் பண்ணும்படி செய்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறேன். ஆமென்சேசு.

ஒருகாலைக்கு ஒருவிசை 100 நாள் பலன்.

---

அர்ச். சூசையப்பர் வணக்கமாதமாகிற மார்ச்சு மாசம்.— இந்த மாசத்தில் தினந்தோறும் அர்ச். சூசையப்பருக்குத் தோத்திர வணக்கமாக யாதோர் பத்தி முயற்சியைக் கோவிலிலாவது வீட்டிலெங்கிலும் செய்கிறவர்கள் தினம் 300 நாள் பலனும், இந்த மாதத்தில் தங்களுக்குப் பிரியமான ஓர் நாள் ஒரு பரிபூரண பலனும் அடையலாம்.

---

### பரிசுத்த பிதா 10-ம் பத்திநாதரால் புதிதாய் அங்கீகரிக்கப்பட்ட அர்ச். சூசையப்பர் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்... மற்றதும்.
அர்ச். மரியாயே,
அர்ச். சூசையப்பரே,
தாவீது இராஜாவின் கீர்த்திபெற்ற
புத்திரனே,
} ஒ. த. செ.

பிதாப் பிதாக்களின் மகிமையே,
தேவதாயாரின் பத்தாவே,
கன்னிமரியாயின் கற்புள்ள காவலனே,
தேவ குமாரனை வளர்த்த தகப்பனே,
கிறீஸ்துநாதரை உற்சாகப் பற்றுதலுடன் காப்பாற்றினவரே,
திருக்குடும்பத்தின் தலைமையானவரே,
உத்தம நீதிமானான அர்ச். சூசையப்பரே,
உத்தம விரத்தரான அர்ச். சூசையப்பரே,
உத்தம விவேகமுடைத்தான அர்ச். சூசையப்பரே,
உத்தம தைரியசாலியான அர்ச். சூசையப்பரே,
உத்தம கீழ்ப்படிதலுள்ளவரான அர்ச். சூசையப்பரே,
உத்தம பிரமாணிக்கமுள்ளவரான அர்ச். சூசையப்பரே,
பொறுமையின் கண்ணாடியே,
தரித்திரத்தின் அன்பனே,
தொழிலாளிகளுக்கு மாதிரிகையே,
சமுசார வாழ்க்கையின் ஆபரணமே,
கன்னிகைகளின் காவலனே,
குடும்பங்களுக்கு ஆதாரமே,
கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலே,
வியாதிக்காரர்களுக்கு நம்பிக்கையே,
மரிக்கிறவர்களுக்குப் பாதுகாவலே,
பசாசுகளை நடுநடுங்கச் செய்பவரே,
பரிசுத்த திருச்சபையின் பரிபாலனே,

} எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



உலகத்தின் பாவங்களைப் போக்குகிற......
மற்றதும்.

மு. கர்த்தர் அவரைத் தமது வீட்டின் எஜமானாக ஏற்படுத்தினார்.

து. அவருடைய உடைமைகளையெல்லாம் நடப்பிக்கவும் ஏற்படுத்தினார்.

### பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரசுவாமி; உம்முடைய மகா அர்ச்சியசிஷ்ட திருமாதாவின் பரிசுத்த பத்தாவாக முத்தனான சூசையப்பரை மனோவாக்குக்கெட்டாத பராமரிக்கையால் தெரிந்துகொள்ளத் திருவுளமானீரே. பூலோகத்தில் அடியோர்களை ஆதரிக்கிறவரென்று எங்களால் வணங்கப்படுகிறவர் பரலோகத்தில் எங்களுக்காக மனுப்பேசுகிறவராயிருக்கும்படிக்கு நாங்கள் பாத்திரவான்கள் ஆகத்தக்கதாக தேவரீர் அனுக்கிரகம் செய்தருளவேணுமென்று மன்றாடுகிறோம். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் சதாகாலம் சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே—
ஆமென் சேசு.

---

1909-ம் ஆண்டு மார்ச்சு-மீ 18-உ பரிசுத்த பிதா 10-ம் பத்திநாதர் என்னும் அர்ச். பாப்பானவர் இந்தப் பிரார்த்தனையைப் பத்தியோடு சொல்லுகிறவர்களுக்கு ஒருநாளைக்கு ஒரு விசை 300-நாட் பலனைக் கட்டளையிட்டிருக்கிறார். இந்தப் பலன்களை உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்குச் செலுத்தலாம்.

## பூசைக்கு முன் ஆயத்தச் செபம்.

கருணை நிறைந்த பிதாவே! இரக்கம் நிறைந்த கர்த்தாவே, பாவத்தால் கெட்டழிந்த மனுஷ சந்ததியை மீட்டு இரட்சிக்கும்படி உமது ஏக சுதன் முன்னொருநாள் கொடிய வேதனைப்பட்டுச் சிலுவையில் உயிர்விடத் திருவுளமானதுமல்லாமல், அவர் அன்று சிலுவையில் உமக்கு ஒப்புக்கொடுத்த பலியைத் தேவரீர் என்றும் மறவாதிருக்கவும், நாங்கள் அதினால் அடையவேண்டிய பலனை இடைவிடாமல் அடையவுந் திருவுளமாகி இந்தப் பூசைப் பலி எந்நாளுந் திருச்சபையில் நிறைவேறும்படிச் சித்தமானீரல்லவோ! உமது மட்டற்ற வல்லபமும் அளவற்ற ஞானமும் குறையற்ற நன்மைத்தனமும் விளங்குகிற ஆச்சரியமான இந்தப் பூசையில் அடியோர் சாவதானத்தோடும் பயபத்தியோடுமிருக்கவும், உதிரஞ் சிந்தாத இந்தப் பலியைக் கொண்டு உதிரப் பலியின் பேறுகளைக் குறை இல்லாமல் கைக்கொள்ளவும் அநுக்கிரகம் பண்ணியருள வேணுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். ஆ! மட்டற்ற பிரதாபம் உடைத்தான பிதாவே! அடியேன் தேவரீருடைய கிருபாகடாட்சத்துக்கு அபாத்திரனாயினும் உம்முடைய நேச குமாரன் எனக்காகச் சிந்தின விலைமதியாத திரு இரத்தத்தைப் பார்த்து எனக்குத் தயைசெய்தருளும். ஆராதனைக்குப் பாத்திரமான கர்த்தாவே! உமது திவ்விய பூசையின் பலியைக் காண



வேணுமென்று உமது பீடத்தை அண்டி வருகிறேன். இந்தத் திவ்விய பலியினால் அடியேனுக்கு வரவேண்டுமென்று தேவரீர் சித்தமாயிருக்கிற நன்மைகள் யாவையும் நான் குறைவில்லாமல் அடையவும், அதற்கு என்னிடத்திலுள்ள குற்றங்களை மாற்றவும் தேவரீர் சித்தம் வைத்தருள வேணுமென்றும் உம்மை மன்றாடுகிறேன்.

தேவரீருடைய இனிய கருணையைப் பெற என் இருதயத்தைத் தக்கதாக்கி, எனது பொறிகள் போம் வழி விடாமல் நிறுத்தி, பாவியான அடியேனுடைய பாவங்களை உமது திருவுளத்தாற் போக்கி, [illegible] சுத்தப்படுத்தியருளும். தயாபரான சர்வேசுரா, தேவரீர் அடியேனுடைய பாவங்களைப் பாராட்டாதேயும். அதேதெனில் தேவரீருக்குப் பொருந்தாதென்கிறதினாலே அவைகளை முழுதும் வெறுத்துத் தள்ளுகிறேன். ஆரகிலும் எனக்குப் பொல்லாப்புச் செய்திருந்தால் அவர்களுடைய குற்றங்களை நான் நல்ல மனதோடு பொறுத்துக்கொள்ளுகிறேன். தேவரீரும் அடியேனுடைய பாவங்களைப் பொறுத்தருள வேணுமென்று மகா தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறேன். என் மதுர சேசுவே! தேவரீர் அடியேனுக்காக முழுதும் உம்மைப் பலியாகத் தந்தீரே, அவ்வண்ணமாய்த் தேவரீருடைய திருவுளத்தோடு என் கருத்தையும் ஒன்றுப்படுத்தி அடியேனை முழுதும்

உமக்குப் பலியாகக் கொடுக்கிறேன்.—ஆமென் சேசு.

### பூசை ஒப்புக்கொடுக்கவேண்டிய கருத்து.

¶ முதலாவது.—சர்வேசுரன் அர்ச். தேவமாதாவுக்கும் மற்ற அர்ச்சியசிஷ்டவர்களுக்குஞ் செய்த உபகாரங்களைக் குறித்து அவருக்குத் தோத்திரமாகவும்.—2-வது. நாமும் பிறரும் அடைந்த நன்மைகளுக்கு நன்றியறிந்த தோத்திரமாகவும்.—3-வது. நாமும் பிறரும் இனி வேண்டிய நலங்களைப் பெறுவதற்காகவும்.—4-வது. உத்தரிக்கிற ஸ்தலத்திலிருக்கிற ஆத்துமாக்களுக்கு ஆறுதல் கிடைக்கவும். இந்நான்கு வகை முகாந்தரங்களைத் தொகுத்தும், அவரவர் பத்திக்கு அவசரமானபடியே தனித்தும், பூசையை ஒப்புக்கொடுக்கலாம்.

### பூசை ஒப்புக்கொடுக்கிற செபம்.

அகண்டமும் நிர்மலமுமான திரித்துவ ஏக சர்வேசுரா, எங்கள் நாதரான சேசுக்கிறீஸ்து பாடுபடுநாளுக்கு முதல் நாள் இராவமுது செய்யும்பொழுதும் சிலுவைப் பீடத்தில் பலியாகும்பொழுதுந் தேவரீருக்குக் கொடுத்த மாசற்ற பலியோடும், உலகம் எங்குஞ் சகல குருக்களால் ஒப்புக்கொடுக்கப்பட்ட பலியோடும், இனி ஒப்புக்கொடுக்கப்படப்போகிற பலியோடும், நீசப் பாவியாயிருக்கிற அடியேனும் மகா பத்தி நம்பிக்கையோடும், தாழ்ச்சி விநயத்தோடும், சேசுநாதருடைய கருத்தோ



டும், என் கருத்தையும் ஏகித்துக் குருவின் கைங்கரியத்தைக்கொண்டு இந்தப் பலியைத் தேவரீருக்குக் காணிக்கையாக வைக்கிறேன். ஆண்டவரே! உமது மகிமைப் பிரதாபத்துக்கு அர்ச்சனையாகவும், கர்த்தத்துவத்திற்குக் கப்பமாகவும், சேசுக்கிறீஸ்துவின் பாடுகளை எப்பொழுதும் நினைப்பூட்டும் ஸ்மரணமாகவும், தேவமாதா முதலிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்குச் சங்கையாகவுஞ் சேசுக்கிறீஸ்துவின் மனுஷீகத்திற்கும் எப்பொழுதுங் கன்னிகையான அவர் திருத்தாயாருக்கும் சகலமான சம்மனசுக்கள் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் நீசப் பாவியாயிருக்கிற அடியேனுக்கும் இதுவரைக்குந் தேவரீர் செய்துவருகிற மட்டில்லாத உபகாரங்களுக்கும் இனி நித்தியமுஞ் செய்யப்படும் உபகாரங்களுக்கும் நன்றியறிந்த தோத்திரமாகவும், சீவித்திருக்கிறவர்கள் மரித்திருக்கிறவர்களான சகல விசுவாசிகளுடைய பாவப் பொறுத்தலுக்கும், அடியேனுடைய எண்ணிறந்த பாவப்பொறுத்தலுக்கும் († இன்னார் இன்னார் இன்னின்ன) உதவி சகாயம் அடையும்படிக்கும், நான் ஆருக்காக வேண்டிக்கொள்ள வேண்டியிருக்குமோ அவர்கள் எல்லாருக்கும், கடைசியாய் மரித்தவர்கள் இளைப்பாற்றி அடையவும், உயிரோடு இருக்கிறவர்கள் தேவரீரை அறிந்து சிநேகித்து இந்தப் பரதேசத்தில் உம்மைத் தோத்தரித்தபின், நித்தியமுந் தங்கள் சுய சீமையில் உம்மை வாழ்

த்தி ஸ்துதித்து வணங்கும்படிக்கும், குருவின் கைங்கரியத்தைக்கொண்டு அடியேன் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற இந்தப் பூசைப் பலியைத் தேவரீர் கையேற்றுக்கொண்டு, நீசனுயிருக்கிற அடியேன் மன்றாட்டுக்குச் செவி கொடுத்தருளவேணுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் உமது ஏக சுதனை யேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும் ஆமென் யேசு.






# திவ்விய பூசை காணச் சுருக்கமான வகை.

(முத்திப்பேறுபெற்ற லேயோனார்த்.)

## பூசை ஆரம்பமுதல் சுவிசேஷம் வாசிக்கிற வரையில்.

என் சர்வேசுரசுவாமி! தேவரீர் என்னுத்துமத்தின் காரணக் கர்த்தாவாகவும், எஜமானனாகவும் இருக்கிறீரென்று நான் அங்கீகரித்து தேவரீரை ஆராதனை பண்ணுகிறேன். என்

உயிர் ஸ்திதி அனைத்தும், மற்றெனக்குள்ள யாவும், தேவரீராலேயே எனக்குக் கிடைத்தது. ஆகையால், தேவரீருடைய உன்னத மகத்துவத்துக்குரிய அளவற்ற ஆராதனை வணக்க ஸ்தோத்திரங்களை நான் செலுத்தவேண்டியவனாயிருந்தாலும், இப்பேர்ப்பட்ட பெரிய கடமையை நிறைவேற்ற நீசப் பாவியாகிய என்னாலே எவ்வளவேனும் கூடாததாய் இருக்கின்றது. எனது திவ்விய இரட்சகர்தாமே இத்திருப் பீடத்தில் எழுந்தருளிவந்து தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற தமது தாழ்மை நிந்தை அவமானங்களையும், ஆராதனை நமஸ்காரங்களையும் நானும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

எனது திவ்விய இரட்சகர் செய்வதையே நானும் அவரோடு ஒன்றித்துச் செய்ய ஆசைப்படுகிறேன். தேவரீருடைய திவ்விய மகிமைப் பிரதாப சந்நிதியில் அடியேன் சாஷ்டாங்கமாக விழுந்து தாழ்ச்சியோடு தேவரீரை ஆராதிக்கிறேன். திவ்விய கர்த்தருடைய நிந்தை அவமானமுள்ள பாடுகளோடு ஒன்றித்து தேவரீரை வணங்கி நமஸ்கரிக்கிறேன். எனது திவ்விய கர்த்தர் எனக்குப் பதிலாய் அளவற்ற ஆராதனை வணக்க ஸ்தோத்திரங்களைத் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறதைப் பார்த்து நான் மனமகிழ்ந்து அக்களிக்கிறேன். என் சர்வேசுரா சுவாமி! தேவரீருடைய திவ்விய மகத்துவ சந்நிதானத்திற்கு இத்திருப்பலிபூசை அள-



வில்லாத ஆராதனையாய் இருப்பதைப் பார்த்து உண்மையாகவே நான் களிகூருகிறேன். என்னால் இயன்றமட்டும் இந்தப் பூசைப்பலியைக் கண்டு சந்தோஷித்து, தேவரீரை வாழ்த்தி ஸ்துதிக்கிறேன்.

### சுவிசேஷம் வாசித்ததுமுதல் திவ்விய சற்பிரசாத எழுந்தேற்றம் வரையில்.

என் சர்வேசுரா சுவாமி! தேவரீருக்கு விரோதமாய் இத்தனைவிசை துரோகஞ்செய்த பாவி நான் இதோ வந்தேன். இப்போது என் முழு இருதயத்தோடும் துக்க மனஸ்தாபத்தோடும் என் பாவ அக்கிரமங்களையெல்லாம் வெறுத்துத் தள்ளுகிறேன். அவைகளுக்குப் பரிகாரமாக திவ்விய கர்த்தரானவர் இத்திருப் பீடத்தில் தேவரீருக்குச் செலுத்தும் பரிகாரங்களையே நானும் ஒப்புக்கொடுக்கிறேன். சேசுக்கிறீஸ்துவினுடைய திருப் பேறுபலன்களையும் அவருடைய திரு இரத்தத்தையும் இன்னும் எனக்காக திரும்பவும் பலியாகும் பூஜ்யவஸ்துவான திவ்விய கர்த்தரைத்தானே நானும் ஒப்புக்கொடுக்கிறேன். இத்திருப்பீடத்தில் அவர் தமது விலைமதிப்பற்ற திரு இரத்தத்தைக் கொண்டு எனது மத்தியஸ்தருமாய் மனுப்பேசுகிறவருமாய் அமைந்திருந்து எனக்காகப் பொறுத்தலை இரந்து மன்றாடுகிறபடியால், அந்தத் தேவ திரு இரத்தத்தின் பேறுபலனோடு நானும் ஒன்றித்து எனது தோஷ துரோகங்களுக்கெல்லாம் பொறுத்தலை இரந்து மன்றாடுகிறேன்.

திவ்விய கர்த்தருடைய திரு இரத்தமானது இரக்கத்தின்பொருட்டுத் தேவரீரை நோக்கிக் கூப்பிடுகின்றது. மனஸ்தாபப்படும் என்னுள்ளமும் இரக்கத்திற்காகவே தேவரீரை நோக்கி அபயமிடுகின்றது. ஆ! எனது அன்பான தேவனே! என் கண்ணீர்களைக் கண்டு தேவரீர் இரங்காவிட்டாலும், என் திவ்விய இரட்சகருடைய பெருமூச்சுகளைக் கேட்டாவது என்மேல் இரக்கமாயிரும். அவர் சிலுவைமரத்தில் சகல மனுக்குலத்திற்கும் பேறுபெற்றடைந்த இரக்கத்தை இத்திருப்பீடத்தில் அவர் எனக்கு வருவிக்கக்கூடாதிருப்பதெப்படி? அந்த விலைமதிக்கப்படாத திரு இரத்தத்தின் பேறுபலன்களைக்கொண்டு தேவரீர் என் பாவங்களை எல்லாம் பொறுத்தருளுவீரென்று நம்பியிருக்கிறேன். எனது சீவியகாலக் கடைசி நிமிஷம் வரையிலும் நான் அவைகளுக்காகத் துக்கித்து அழுவேன்.

எனது அன்புக்குரிய இரட்சகரே! அர்ச். இராயப்பருடைய கண்ணீரையும், மரியமதலேனாளுடைய மனஸ்தாபத்தையும் எனக்குத் தந்தருளும். இன்னும் பாவச் சீவியத்தில் நின்று உண்மையாய் மனந்திரும்பின புண்ணியவாளருடைய அபார மனஸ்தாபத்தை எனக்குத் தந்து இந்தத் திருப் பூசைப்பலி நேரத்தில் என் சகல பாவங்களுக்கும் முழுப் பொறுத்தலடையக் கிருபை செய்தருளுஞ் சுவாமி.



ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே, உலகத்தின் பாவங்களைப் போக்குகிறவரே, எழுந்தருளியாரும். உம் தீர்ப்புகளின் மேலான அற்புதமாகிற இந்தப் பரம இரகசியத்தை நிறைவேற்றவாரும். இதோ உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையானவர் எழுந்தருளிவருகிறார். என்னை உண்டாக்கி இரட்சித்த கர்த்தர் என்னைப்பற்றிப் பூலோகத்தில் எழுந்தருளி வருகிறார். என்னுத்தமமே, பத்தியோடே அவரை ஸ்துதித்து ஆராதிப்பாயாக.

## திரு தேவநற்கருணை எழுந்தருளப்பண்ணுகிற போது.

நடுப்பூசையில் தேவநற்கருணை எழுந்தேற்றமாகும்போதென்கிலும் அல்லது பீடத்தின் மேல் தேவநற்கருணை ஸ்தாபகம் பண்ணியிருக்கும்போதென்கிலும் சற்பிரசாத ஆண்டவரைப் பத்தியுடன் உற்றுநோக்கி: "என் ஆண்டவரே! என் தேவனே!" என்று சொல்லுகிற ஒவ்வொரு தடவையும் 7-வருஷம் 7-மண்டலப் பலன்.

இது தவிர ஒரு வாரமாக தினந்தோறும் இச்செபத்தைச் சொல்லுகிறவர்கள் அந்த வாரத்தில் நன்மை வாங்குகிற ஒரு தினத்தில் பரிபூரணபலன் அடையலாம்.

10-ம் பத்திநாதர்.

அவதரித்த வார்த்தையே, திவ்விய சேசுவே, மெய்யான தேவனும், மெய்யான மனுஷனும் ஒன்றானவரே! தேவரீர் இந்தப் பீடத்தின்பேரில் மெய்யாகவே எழுந்தருளிவந்திருக்கிறீரென்று உறுதியாக விசுவசித்து மிகுந்த தாழ்ச்சியோடு வணங்கி ஆராதித்து முழுமனதோடு உம்மை அபேட்சித்து நேசிக்கிறேன். என்மேல் வைத்த நிகரில்லாத அன்பினால் தேவரீர் இந்தப் பீடத்தின்மேல் எழுந்தருளி வந்தமையால் என்னை முழுதும் உமக்குத் தேவவசீகாரம் பண்ணுகிறேன் சுவாமி.

சகல மனுஷருக்காகத் தேவரீர் சிந்தின இந்த விலைமதியாத திரு இரத்தத்தை ஆராதனை பண்ணுகிறேன். என் சர்வேசுரா! எனக்காகச் சிந்தின இந்தத் திரு இரத்தம் வீண்போகாதென்று நம்புகிறேன். உமது திரு இரத்தத்தின் பலன்களை நானடையும் பொருட்டாக அனுக்கிரகம் பண்ணியருளும். மகா அன்புக்குரிய எனது திவ்விய சேசுவே, எனக்காக உம்முடைய இந்தத் திருவிரத்தத்தைச் சிந்த உண்டாயிருந்த அளவில்லாத உமது நேசத்துக்கு நன்றியறிந்த தோத்திரமாக நானும் என்னிரத்தத்தை எல்லாந் தேவரீருக்கு முழுதும் ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி.



## திவ்விய சற்பிரசாத எழுந்தேற்றமுதல் அதை உட்கொள்ளும் நேரம் வரையில்.

என் அன்பான தேவனே! இதோ தேவரீர் அடியேனுக்குக் கட்டளையிட்ட பொதுவும் விசேஷித்ததுமான நன்மை வரப்பிரசாதங்களாலே நிறையலானேன். இன்னம் இம்மை மறுமையிலும் தேவரீர் எனக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிற நன்மைகளையும் கண்டுணர்ந்தேன். அடியேன்மேல் தேவரீர் கொண்டிருக்கும் இரக்கம் மட்டற்றதாயிருந்தவண்ணமே இன்னமும் இருக்கிறதென்று நம்பியிருக்கிறேன். அதற்காகவே தேவரீர்மட்டில் எனக்குள்ள கடமையெல்லாம் கடைசிமட்டும் சரிவர நிறைவேற்ற ஆயத்தமாயிருக்கிறேன்: ஆகையால் இதற்கு நன்றியறிதலாகவும் உத்தரிப்புப் பலியாகவும், குருவானவருடைய கைங்கிரியத்தைக்கொண்டு நான் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற மாசற்ற பலி இதோ! திவ்விய கர்த்தருடைய விலையேறப்பெற்ற திரு இரத்தம் இதோ! தேவரீர் எனக்குக் கட்டளையிட்ட நன்மை வரப்பிரசாதங்களுக்கெல்லாம் நான் இப்போது ஒப்புக்கொடுக்கிற இந்தத் திருப்பூசைப் பலியானது போதுமான பிரதிதானமாம். அளவில்லாத விலைபொருந்திய இந்தப் பிரதிதானமானது, தேவரீரிடத்தில் நான் பெற்றுக்கொண்டதும், இன்னும் பெறக்கூடியதுமான சகல நன்மைகளுக்கும் யோக்கியப் பெறுமதியாமே.

ஓ! பரிசுத்த சம்மனசுக்களே! மோக்ஷவாசிகளே! சர்வேசுரன் எனக்குத் தந்தருளின சகல நன்மைகளுக்கும் நான் நன்றியறிந்த தோத்திரஞ்செய்ய எனக்கு ஒத்தாசை செய்யுங்கள். இதைப்பற்றியே இந்தத் திருப்பூசையை மாத்திரமல்ல, இன்னம் பூலோகமெங்கும் இப்போது நடக்கும் சகல பூசைப் பலிகளையும் நான் நன்றியறிந்த தோத்திரமாய் ஒப்புக்கொடுக்க அடியேனுக்கு உதவி செய்யுங்கள். இப்படியாய் அன்புக்குரிய தயாள சம்பன்னராகிய சர்வேசுரன் எனக்குத் தந்தருளினதும், இன்னும் எப்போதும் அவர் தந்தருளுவதுமான சகல உபகாரங்களுக்கும் இதுவே பிரதிதானமாகும்.

ஓ! என் அன்புக்குரிய அர்ச்சியசிஷ்டவர்களே! பாக்கியவான்களானவர்களே! நான் நன்றிகெட்டவனாய் வாழ்ந்து, மரணம் அடையாதபடிக்கு நன்மைத்தனமுள்ள தேவனுக்கு நீங்கள் எனக்குப் பதிலாய் இந்த நன்றியறிந்த ஸ்தோத்திரத்தைச் செலுத்தத் தயைசெய்யுங்கள். அவர் என் நன்மனதைக் கையேற்றுக்கொண்டு எனக்காக திவ்விய கர்த்தர் இந்தத் திருப்பூசைப்பலியில் ஒப்புக்கொடுக்கும் பட்சமுள்ள நன்றியறிதலான முயற்சிகளைக் கிருபையாய்க் கேட்டருள வேண்டுமென்றும் மன்றாடுங்கள்.



## திவ்விய சற்பிரசாதம் உட்கொண்ட நேரமுதல் பூசை முடியுமட்டும்.

என் அன்பான சர்வேசுரா! தேவரீருடைய அபார நன்மை உபகாரங்களுக்கு நான் முழுதும் அபாத்திரவானென்று ஏற்றுக்கொள்ளுகிறேன். இப்பேர்ப்பட்ட எனது முற்றும் அபாத்திரமான தன்மையைச் சங்கீர்த்தனமாய் வெளிப்படுத்துகிறேன். என்னுடைய பாவ துரோகங்களைப் பற்றி தேவரீர் சமுகத்தில் என் விண்ணப்பம் அநுகூலமடைய அபாத்திரமானதாயினும், இத்திருப்பீடத்தில் எழுந்தருளிவந்து எனக்காகத் தமது திரு உயிரைப் பலியிட்டுப் பிரார்த்திக்கும் உமது திவ்விய குமாரனுக்குத் தேவரீர் செவி கொடாதிருக்கக்கூடுமோ?

என் அன்பான தேவனே! இந்த உன்னத பரிபாலகரின் செபத்தைக் கேட்டருளி எனது இரட்சண்ணிய அலுவலை நிறைவேற்ற அவசியமான வரப்பிரசாதங்களையெல்லாம் அவருடைய திருமுகத்தைக் குறித்து எனக்குத் தந்தருளும் சுவாமி. என் சகல பாவங்களுக்கும் பொறுப்பெறுதலைத் தந்து கடைசிமட்டும் இஷ்டப்பிரசாதத்தில் நிலைத்திருக்கத்தக்க வரத்தை எனக்கு கட்டளையிட்டருளத் தேவரீரை இரந்து மன்றாடுகிறேன். என் சர்வேசுரா சுவாமி! திவ்விய கர்த்தருடைய மன்றாட்டை நம்பிக்கொண்டு நான் அர்ச்சியசிஷ்டவனாய் ஜீவிக்கத்தக்க உறுதியான சகல புண்ணியங்

களையும் பலமான ஒத்தாசையையும் தந்தருள மன்றாடுகிறோம் சுவாமி.

இதன்றியே, சகல பாவிகளும் அவிசுவாசிகளும், விசேஷமாய் ஆத்தும சம்பந்தத்தாலேயாவது இரத்தக் கலப்பினாலேயாவது எங்களோடு ஐக்கியப்பட்டிருக்கிற யாவரும் மனந்திரும்பிச் சீவிக்க வரந்தந்தருளுஞ் சுவாமி. உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள சகல ஆத்துமங்களும் வேதனை குறைந்து மீட்சி அடையத் தயை செய்தருளும். இந்தத் திவ்விய பூசைப்பலியின் பேறு பலன்களைக்கொண்டு அந்த உத்தரிப்பு ஸ்தலச் சிறையினின்று அவர்கள் எல்லோரையும் மீட்டருளும். சகல சீவியர்களும் சத்தியவேத நெறி தவறாமல் நடக்க அவர்களை மனந்திருப்பியருளும். இப்படியாய் இந்த நிர்ப்பாக்கியமான பூலோகம் தேவரீருக்கு இனிய ஆனந்த ஸ்தலமாகக்கடவது. இதின்மேல் தேவரீர் சகலராலும் நேசித்து வணங்கி ஸ்தோத்தரிக்கப்பட்டபின், நித்திய காலத்திற்கும் தேவரீரை நாங்கள் வாழ்த்தி ஸ்துதிக்க மறுமையில் வந்து சேரக்கடவோமாக.

1884-ம் ௵ ஜனவரி-மீ 6-௳, 13-ம் சிங்கராயர் என்கிற நாமதேயமுள்ள அர்ச். பாப்பானவர் உத்தாரப்படி, இதற்கடியில் வருஞ் செபங்களை முழந்தாளிலிருந்து பூசைக்குப் பிறகு குருவுடனே வேண்டிக்கொள்ளுகிறவர்கள் 300-நாள் பலன் அடையலாம்.

மூன்று பிரியதத்த மந்திரமும், ஒரு கிருபைதயாபத்து மந்திரமும் சொல்லவும்.



### பிரார்த்திக்கக்கடவோம்.

எங்கள் அடைக்கலமும் பலமுமாகிய சர்வேசுரா! உம்முடைய திருச்சபையின் பத்தியுள்ள செபங்களுக்குச் செவிகொடுத்தருளும். மகத்துவம் பொருந்திய அமலோற்பவ கன்னியும் தேவதாயாருமாகிய அர்ச். மரியம்மாள், முத். அர்ச். சூசையப்பர், உம்முடைய அப்போஸ்தலராகிய அர்ச். இராயப்பர், சின்னப்பர் முதலிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய மன்றாட்டுக்குத் தேவரீர் இரங்கி, தற்கால துன்பங்களில் அடியோர்கள் இரந்துகேட்கிற நன்மைகளை அடையும்படி தயைபுரியும். இந்த மன்றாட்டை ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும். ஆமென் சேசு.

அதிதூதரான அர்ச். மிக்கேலே, எங்கள் போராட்டத்தில் எங்களைத் தற்காத்தருளும். பசாசின் துர்க்கருத்தையும் அதின் சற்பனைகளையும் அகற்றி எங்களுக்குத் துணையாயிரும். தாழ்மையான எங்கள் மன்றாட்டைக்கேட்டு சர்வேசுரன் பசாசுக்குக் கற்பிப்பாராக. நீரும் மோட்ச சேனைக்குத் தலைமையானவரே! ஆத்துமங்களை அழிக்கிறதற்கு இவ்வுலகத்தில் சுற்றித்திரியும் பேயையும் மற்றத் துஷ்ட அரூபிகளையும் தேவ வல்லமையின் பலத்தால் நரகத்தில் தள்ளுவீராக. ஆமென் சேசு.

சேசுவின் திரு இருதயமே! எங்கள்பேரில்
இரக்கமாயிரும். (மூன்று தடவை.)

300-நாள் பலன்.

---

## தேவநற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கிறபோது செபம்.

மகா அன்புள்ள கடவுளே, ஆச்சரியத்துக்கு
ரிய இரட்சகரே, தேவரீர் என்னைக் காப்பாற்ற
இம்மாத்திரந் தாழ்ந்து அப்பத்தின் ரூபமாய்
தேவநற்கருணையில் எழுந்தருளி என்னை ஆசீர்
வதிக்கத் தயைபுரிந்தபடியால் சாஷ்டாங்கமாக
விழுந்து உம்மைத் தும்பிடுகிறேன். சஞ்சலக்
கடலில் மூழ்கி சிலுவையில் அறையுண்டு என்னை
இரட்சித்த ஆண்டவரே, நான் எனக்குள் ஒடு
ங்கி நடுநடுங்கி இருகரங்குவித்து பஞ்சேந்திரி
யம் ஞானேந்திரியங்களையும் அடக்கிக் கொண்டு
உமக்கு நமஸ்காரம் பண்ணுகிறேன். என் ஜீவி
யத்தை மாற்றித் தேவரீருக்கு இனி நல்ல ஊழி
யம் பண்ண வார்த்தைப்பாடு கொடுக்கிறேன்.
தேவரீரே எனக்கு ஓர் நாள் தீர்வையிட ஓட்
டோலக்ஷமாய் வருவீராகையால், அந்தப் பயங்
கரமான காலத்திலே என்பேரில் கிருபைவைக்க
உம்மை இரந்து மன்றாடுகிறேன். உமது சோதிப்
பிரகாசத்தை என் கண்ணாற் காணக்கூடாது இப்
போது இந்தத் தேவநற்கருணையில் என் சமீப
சாருகிய தேவரீர் மெய்யாகவே எழுந்தருளி
இருக்கிறீர் என்று உயிருக்கொட்டி விசுவசிக்



த் தாழ்ச்சியோடும் பக்தியோடும் உமக்குத்
தேவாராதனை பண்ணி எனது ஆசைப்பற்று
தல் எல்லாந் தேவரீர்பேரில் வைக்கிறேன்.—
ஆமென்சேசு.

---

## திவ்வியநற்கருணை வாங்குமுன் சேசுவை அழைத்தல்.

எல்லா மதுரத்தையும் பார்க்க ஆயிரம்விசை
அதிக மதுரமான சேசுவே! மனுமக்களோ
டிருப்பது உமக்கு மகா பிரியமென்று திருவு
ளம்பற்றினீரே, என் ஆத்துமம் உம்மை தேடி
த்து என் இருதயந் சோர்ந்துபோகிறது.
உமது அன்பர்கள் எப்போதும் உம்மை அழை
க்கிற பக்தி சிநேகத்தோடு உம்மை அழைக்கி
றேன். என் ஆத்துமத்தின் மிகவும் பிரியமுள்
ளவரே, வாரும்; என் ஆத்துமத்தின் அதிகப்
பிரியமான சிநேகமே, வாரும்; என் இருதயத்
தின் ஏழை குச்சுக்குள்ளே ஒரு க்ஷணமாகிலும்
வாரும்; பரலோக வைத்தியரே, வாரும்; என்
ஆத்தும வியாதியைச் சொஸ்தப்படுத்த
வாரும்; என் இருதயத்தின் ஆயிரமுறை அதிக
பிரியமுள்ள சிநேகிதரே, வாரும்; என் ஆத்து
மத்தின் மிகுதியான தரித்திரத்தை நீக்கி அதை
ஐசுவரியமாக்க வாரும். மிகவும் மதுரமான
சூரியனே! என் ஆத்துமத்தின் அழுந்த இருளை
நீக்கி அதைப்பிரகாசிக்கும்படி செய்ய வாரும்;
அதிக இன்பமான மன்னாவே! என் ஆத்துமத்

தின் மிகுதியான பசியைத் தீர்த்து திருப்தியாக்க வாரும்; பரிசுத்த சிநேகப் பிரியமான சேசுவே, என் ஆசைகளுக்குக் காரணமான எனது மிகவும் பிரியமுள்ளவரே, வாரும்; என் இருதயத்தின் அதிக நீசமான அன்னசாலையில் உமக்கு ஆயத்தமாக நான் செய்திருக்கிற விருந்தில் வந்து உட்காரும். உமது மகிமைக்குத் தக்க ஆயத்தம் செய்யாதிருந்தபோதிலும், என் நல்ல மனசையும் நிறைந்த சிநேகத்தையும் என் இருதயத்தில் காண்பீர்.

ஓ! என் ஏக சிநேகமே! உம்மை அநுபவிக்கவேணுமென்கிற ஆசையால் பற்றி எரிகிறேன். மிகுந்த ஆசையோடு உமக்குக் காத்திருக்கிறேன். மனுஷ பிள்ளைகளில் அதிக அழகுள்ளவரே, வற்றாத மதுர ஊறணியே, சகல இன்பங்களிலும் அதிக இன்பமே, உமது ஏழையாகிய சிறிய ஊழியக்காரியை புறக்கணியாமல் என்னிடத்தில் வாரும்.

இவ்விடத்தில் சேசுநாதருடைய படத்தை அர்ச். ஜெர்த்துருத்தம்மாளோடு முத்திசெய்து சொல்லத் தக்கதாவது:

எனது அதிக அன்புக்குரிய சேசுவே! என் இருதயத்தின் ஆவலான சிநேகத்தோடு உம்மை முத்திசெய்து, எப்போதும் உமது அதிமதுரமான இருதயத்தில் சொரிந்த சர்வ பட்சம் நிறைந்த செபங்களைக்கொண்டு உம்மை மன்றாடுகிறதாவது: மிகவும் அற்பமும் ஏழையு



மான என் இருதயம் உம்மை விருந்துக்கு அழைக்கிறதினால் திரும்பி வந்தருளும்.

திவ்வியநற்கருணை வாங்குகிற இடத்துக்குப் போகும்போது அர்ச். ஜெர்த்துருத்தம்மாளுக்கு சேசுநாதர் படிப்பித்த பின்வரும் வார்த்தைகளைச் சொல்லுவாயாக:

ஆண்டவரே! இதோ நீசமான ஏழைப் பாவியாகிய நான் உம்மிடத்தில் வருகிறதற்கு அபாத்திரமானவள். என்னிடத்திலுள்ள பாவதோஷங்களையெல்லாம் கழுவி உமது வரப்பிரசாதத்தால் அதை நிரப்பியருளும்படி பிரளயமும் ஆழ்ந்ததுமான உமது இரக்கத்தை அண்டிவருகிறேன்.

[இந்த வார்த்தைகளைத் தொடர்ந்து வெகு பிரியத்தோடு சொல்லு. ஏனென்றால் இந்த ஆயத்தத்தோடு திவ்வியநன்மை வாங்க திவ்விய பந்தியை அண்டிவருகிறவர்கள், ஒருக்காலும் வணக்கக்குறைவாய் திவ்விய நற்கருணையை வாங்கமாட்டார்களென்று சேசுநாதர்சுவாமி ஜெர்த்துருத்தம்மாளுக்குத் திருவுளம் பற்றினார்.]

நான் முழுதும் அபாத்திர பாவியாயிருக்கிறேன் என்று அறியக்கடவேன். பகைக்கப்படவும் அருவருக்கப்படவுந்தான் பாத்திரமானவளாயிருக்கிறேன். ஆகிலும் சொல்லிலடங்காத உமது இரக்கத்தின்பேரில் நிறைந்த நம்பிக்கையாய் உமது சிநேகத்துக்கு பதில் சிநேகமாக மிகுந்த ஆயத்தத்தோடு ஆராதனைக்குரிய உமது திருச்சரீரத்தையும் உட்கொள்ள வருகிறேன். நீர் எனக்கு மனம் தந்தருளினதற்காக,

கூடுமாகில் தீர்வைக்குக் காரணமான இன்னின்ன காரியங்களின்பேரில் பற்றுதல் வைக்கமாட்டேன். நீர் உமது நன்மைத்தனத்தைக் காண்பித்தருளும். இத்தனை அபாத்திரமான வஸ்துவாகிய என்னோடு ஒன்றித்திருக்கும்படி உம்மைக் கொண்டுவருகிற நன்மைத்தனத்தைக் காண்பித்தருளும்.

திவ்விய நற்கருணை வாங்கும் பலகைமேல் முழங்காலிலிருந்து, உனது மிகவும் பிரியமுள்ளவரை நோக்கி ஓயாமல் பெருமூச்செறிந்து சொல்லவேண்டியதாவது:

என் நல்ல சேசுவே வாரும்; என் ஆத்துமத்தின் பத்தாவே, பரிசுத்த கன்னியாஸ்திரியின் திரு உதிரத்தில் எத்தனை காந்தலான சிநேகத்தோடு பிரவேசித்தீரோ, அப்படியே என் ஏழை இருதயத்தில் வந்தருளும், எழுந்தருளிவாரும்; என் ஆத்தும அன்பனே வாரும்; நான் உம்முடையபேரில் வைக்கவேண்டிய சிநேகத்தை சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள் பங்கிட்டுக்கொள்ளாதபடி என் இருதய வாசலை இறுக அடைத்துப்போட வாரும்; ஆராதனைக்குப் பாத்திரமான என் மதுரமான இரட்சகரே! நீர் மாத்திரம் என்னை ஆட்கொள்ளவாரும்; உமக்கு மாத்திரம் என்னை முழுதும் சொந்தமாக்கிக்கொள்ள வாரும்; என் இருதய விருப்பமே, என் மதுரமே, என்னுருயிரே, என் பாக்கியமே, என் நம்பிக்கையே, என் சிநேக தேவனான சேசுவே, எழுந்தருளிவாரும்; என் இருதயம்



உம்மை ஆவலுடன் தேடி சோர்ந்துபோகிறது. என் இருதயத்தைச் சந்தோஷப்படுத்தவாரும், என் இருதயத்துக்குள் நுழைந்தருளும் சுவாமி நுழைந்தருளும். ஏன் இன்னம் தாமதம் செய்கிறீர்? என் ஆத்தும நேசரே, சுவாமி எழுந்தருளிவாரும்; என் இருதயத்துக்குள் ஆழமாய்ப் பார்க்கும் தகனிக்கும் அக்கினியே, என் இருதயத்தில் உமது சமுகத்துக்கு அயோக்கியமாகத் தோன்றுகிறதெல்லாவற்றையும், உமது மகிமைக்கும் எனது இரட்சணியத்திற்கும் தடையாயிருக்கக்கூடியதெல்லாவற்றையும் சுட்டெரித்தருளும்.

---

## மனஸ்தாப முயற்சி.

அளவில்லாத நன்மைத்தனமுள்ளவரும் மட்டில்லாத சிநேகத்துக்குப் பாத்திரமானவருமான சர்வேசுரனுக்கு, பாவியாகிய நான் இந்த வாரத்திலும் சிறு பிள்ளை துவக்கி இன்றுமட்டும் செய்த சகல பாவ அக்கிரமங்களைப் பற்றி மனஸ்தாபமாய் இருக்கிறேன். என் அசட்டைத்தனங்களுக்காக உம்மிடத்தில் பொறுத்தல் கேட்கிறேன். என் நல்ல தகப்பனே! என்மேல் இரக்கமாயிருந்து என்னுடையவும் மற்றவர்களுடையவும் பாவங்களை மன்னிக்க உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேன். என் நல்ல பிதாவே, நீரென்னை நரகத்தில் தள்ளுவீரென்கிற பயத்தைப்பற்றியுமல்ல; மோக்ஷத்தை யிழந்த

போவேனென்கிற சேதத்தைப்பற்றியுமல்ல; உமது பரிசுத்தமான தங்க இருதயத்திற்கு மனம்நோகச் செய்தேனே என்கிற நினைவானது எனக்குப் பெரும் வருத்தமாய் இருக்கிறது. நீர் சிலுவையில் பட்ட ஆராட்டத்தையும், பூங்காவனத்தில் பட்ட மரண அவஸ்தையையும், உம்முடைய பரிசுத்த மாதா சிலுவையடியில் அனுபவித்த வியாகுலத்தையும் பார்த்து, எனக்குப் பாவப்பொறுத்தல் அளிக்கும்படி உம்மை மன்றாடுகிறேன். நான் அறிந்தும் அறியாமல் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக, உமது திருப்பாடுகளையும், சிந்தின விலைமதியாத திரு இரத்தத்தையும், திருநேசத்தையும், கண்ணீர்களையும், நல்லோர்களுடைய மனஸ்தாபத்தையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். மகா மதுரம் பொருந்திய சேசுவே! தேவரீர் பாடுபடும்பொழுது எனக்காக அனுபவித்த சகல வேதனை நிர்ப்பந்தங்களையும் பார்த்து, என் பாவ துரோகங்களுக்காக மெய்யான துக்க மனஸ்தாபப்படவும், மனம் நொந்துவாடியவும் கிருபை செய்தருளவேணுமென்று தேவரீரை இரந்து மன்றாடுகிறேன். என் மன்றாட்டுக்கு திருச் செவி கொடுத்தருளும். அன்றியும் என் நேச வணக்கத்துக்குரிய அர்ச். வியாகுலத்தாயே, நீர் பாவிகளுடைய இரக்ஷணியத்திற்காக உம்முடைய திருக்குமாரனைப் பலியாக ஒப்புக்கொடுத்ததுபோல, இந்த நிர்ப்



பாக்கியப் பாவியின் இரக்ஷணியத்திற்காக உமது ஏக குமாரன்தானே தமது பலியை பிதாவுக்கு ஒப்புக்கொடுக்க மன்றாடும். நீர் அனுபவித்த வியாகுலங்களுக்குக் காரணமான என் பாவங்களையும் பொறுத்து நான் தேவ சமுகத்துக்கு யோக்கியவதியாகச் செய்தருளும். ஆமென் சேசு.

---

## சேசுநாதரை நோக்கி விடும் மூன்று நேசப் பெருமூச்சு.

1. சேசுவே! சர்வ தகனப்பலியாக நான் உமக்கு ஒப்புக்கொடுக்கிற என் இருதயத்தை உமது சிநேக அக்கினியால் பற்றி எரியச்செய்யும். தேவரீரல்லாமல் உலகத்திலே வேறொன்றும் எனக்குப் பிரியப்படாதபடிக்கு இலௌகிகப் பற்றுதல்களின் அக்கினியெல்லாத்தையும் என்னிடத்தில் அவித்துப்போடும். நான் உமது நேசத்திலே சீவிக்கவும் மரிக்கவும் அபேட்சிக்கிறேன்.

2. என் சேசுவே! "வருத்தச் சுமை சுமக்கிறவர்களே, நீங்கள் அனைவரும் என்னிடத்தில் வாருங்கள். நானே உங்களை இளைப்பாற்றுவேன்" என்று அன்போடு அழைக்கிறீர். சேசுவே, இதோ ஓடி வருகிறேன். என்னைக் கையேற்றுக்கொள்ளவேணுமென்று உம்மை மன்றாடுகிறேன். உமது நேச அரவணைப்பிலே நான் எப்போதும் உம்மோடே ஒருமித்திருக்க எனக்குக் கிருபை செய்தருளும்.

3. உமது சமுகத்திலே நான் வெறுங்கையாய் வந்து நிற்கலாகாதென்று எனக்குக் கற்பிக்கிறீர். ஆனால், என் நேசமே, நான் உமக்கு என்னத்தைக் கொடுக்கப்போகிறேன். நீர் தயை செய்து எனக்குத் தந்தருளின புத்தி மனது நினைவென்னும் என்னாத்துமத்தின் புலன்களை உமக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். அதுகளைக் கையேற்றுக்கொள்ளும். நான் உமது பேரில் மாத்திரம் நினைவாய் இருக்கக்கடவேன். உம்மைத்தவிர வேறொன்றையும் நான் அறியாதிருக்கக்கடவேன். உம்மையன்றி வேறொன்றையும் நான் சிநேகியாதிருக்கக்கடவேன். எந்தக் காரியத்திலும் என் மனது நிறைவேறாமல் உமது சித்தமே நிறைவேறக்கடவது. ஆமென்சேசு.

---

### தக்க ஆயத்தத்தோடு தேவநற்கருணை வாங்குகிறதற்கு தேவமாதாவை நோக்கிக் கேட்கும் மூன்று மன்றாட்டு.

1. அத்தியந்த விரத்தியாயிருக்கிற கன்னிமரியாயே! உம்முடைய மன்றாட்டினாலே நான் சகல பாவக்கறையினின்று சுத்தமாகும்படிக்கு உமது கன்னிமைகெடாத திரு உதரத்திலே தேவசுதனுக்கு யோக்கியமான இருப்பிடத்தை நீர் முஸ்திப்புச் செய்கிறதற்கு ஆதாரமாயிருந்த உம்முடைய அற்ப மாசுமற்ற கற்பின் பேரால் உம்மை மன்றாடிக்கொள்ளுகிறேன்.



2. அத்தியந்த தாழ்ச்சியுடைத்தான கன்னிமரியாயே! உம்முடைய மன்றாட்டினால் என் அசட்டைத்தனமெல்லாம் பரிகாரமாகும்படிக்கு, சகல சம்மனசுகளுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் மேலாக நீர் உயர்த்தப்பட பாத்திரமாகிறதற்கு ஆதாரமாய் இருந்த உமது ஆழ்ந்த தாழ்ச்சியின் பேரால் உம்மை மன்றாடிக்கொள்ளுகிறேன்.

3. அத்தியந்த அன்புக்குப் பாத்திரமான கன்னிமரியாயே! உம்முடைய மன்றாட்டினால் எனக்கு அவசரமான பேறுபலன்கள் எனக்குக் கிடைக்கும்படிக்கு, உமது பரிசுத்த ஆத்துமத்தை இணைபிரியாத வகையாய் சர்வேசுரனோடு ஏக பந்தனமாக்கின மகா பெரியதும் நூதனமுமான உமது தேவசிநேகத்தின் பேரால் உம்மை மன்றாடிக்கொள்ளுகிறேன்.— ஆமென்சேசு.

---

### திவ்வியநற்கருணை வாங்கினபின் ஆராதனை முயற்சி.

சகல பரிசுத்தத்தனமும் நிறைந்த ஆண்டவரே, என்னை உண்டுபண்ணினவரான என் தேவனே, தேவரீர் இப்போது என்னுடைய ஆத்துமத்தில் வந்திருக்கிறீரோ! உலகம் முழுவதிலும் அடங்காதவரான என் தேவனாகிய நீர் இந்த இருதயத்துக்குள் வந்திருக்கிறீரோ!

தூதர்களும் அதிதூதர்களும் தேவமாதாவும் எப்போதும் வணங்கிப் போற்றுகிற மகத்துவமுள்ள ஆண்டவராகிய தேவரீர் பாவியான அடியாளிடத்தில் வந்திருக்கிறீரோ! நான் யார்? சிறுவயதுக்குள்ளே எத்தனையோ பெரிய துரோகங்களைச் செய்துகொண்ட பாவியல்லோ? ஆண்டவரே! என் சேசுவே! என் ஆத்துமத்தின் ஒரே ஒரு நேசமே! நீர் என்னிடத்தில் சேரத் திருவுளமானீரோ! ஆண்டவரே, இதோ நான் விசுவசிக்கிறேன். தேவரீர் இப்போதுதானே என்னுடைய ஆத்துமத்திலே இருக்கிறீர் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் என்னுடைய இருதயத்தைப்போல இவ்வளவு கேடுகெட்டதாகிய இடத்துக்கு நீர் வர எப்படி மனங்கொண்டீர் சுவாமி? முன்னே நீர் எனக்காக வந்து பிறந்த மாட்டுக் கொட்டிலும் இந்த இருதயத்தைப்போல அவ்வளவு நிர்ப்பந்தம் உள்ளதாக இருக்கவில்லையே. "ஆண்டவரே, என்னைவிட்டு அகன்றுபோய்விடும். ஏனென்றால் நான் பாவி" என்று சொல்வேனோ? "உமக்கு ஏற்ற வேறே ஆத்துமங்களிடத்தில் போம் சுவாமீ" என்று சொல்வேனோ? ஆ! என் சேசுவே! அப்படி ஆகக்கடவதல்ல. நான் உம்மைவிட்டுப்பிரிந்து இருப்பதெப்படி? என் நேசமாகிய உம்மைவிட்டுப் பிரிந்து இருக்கவுங் கூடுமோ? என் சேசுவே, அடியாள் உம்மை ஒருபோதும் போகவிடமாட்டேன். மரியமதலேனாள் உமது பாதத்தில் விழுந்து தனது கண்



ரால் உமது பாதத்தைக் கழுவி அதை ஆயிரந்தரம் நேசமாய் முத்தி செய்ததுபோல நானும் முத்திசெய்கிறேன். எனக்காக ஆணிகளால் ஊடுருவப்பட்ட உமது திருக்கைகளையும் முத்தி செய்கிறேன். ஏழைப் பாவியாகிய அடியாள் உம்மை வணங்குகிறேன் சுவாமீ. நான் உமக்குத் தகுந்த வணக்கஞ் செலுத்தக் கூடியதென்றால் எனக்கு எவ்வளவோ சந்தோஷம். ஆனால் பாவியான நான் உம்மைத் தக்க விதமாய் வணங்குவது எப்படி? ஓ! நேசமான சம்மனசுக்களே! நீங்கள் எப்போதும் போற்றுகிற சேசுநாதர் இதோ எனக்குள்ளே இருக்கிறார். நீங்கள் வந்து அவரை என்னோடு ஆராதியுங்களென்று உங்களை மன்றாடுகிறேன். மோக்ஷத்திலே இருக்கிற சகல சுத்தவாளர்களே! உங்கள் ஆனந்தமானவரும் உங்கள் பிரகாசமானவருமான என் ஆசை சேசுநாதர் இதோ என் ஆத்துமத்திலே இருக்கிறார் பாருங்கள்! ஓ! அடியாள்மேல் அன்புவைத்து நீங்களும் எனக்காக சேசுநாதரை நமஸ்கரியுங்கள். சேசுவே! என் நேசமே! அடியாளுடைய பக்திக் குறைச்சலுக்காக உமது சம்மனசுக்கள் மோக்ஷவாசிகளுடைய தோத்திரங்களை ஏற்றுக்கொள்ளும். பரிசுத்த மரியாயே! என் அன்பு நிறைந்த மாதாவே! நீரே எனக்காக சேசுநாதரை ஆராதிப்பீராக. உமது மகா வேகமான பத்தி நேசத்தைப் பார்த்து ஆண்டவர் என் பத்திக் குறைச்சலைப் பொறுத்துக்கொள்வார்.

## நன்றியறிதல் முயற்சி.

இது என்ன ஆச்சரியம்! என்னை உண்டாக்கின தேவன் எனக்குள்ளே வந்து இருக்கிறார்! இது என்ன பெரிய ஆச்சரியம்! நீசப்பாவியான என்னிடத்தில் மட்டில்லாத பரிசுத்தமுள்ளவர் வந்து இருக்கிறார். ஆண்டவரே, என் சிவமே, என் சேசுவே, நான் உமது செயல்களைப் பார்த்து ஆச்சரியப்படுவதைத் தவிர வேறு என்ன செய்வேன்? நிர்ப்பாக்கிய புழுவாகிய அடியாள் உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்வது எப்படி? என் ஆண்டவர் எனக்குச் செய்தருளியவைகளுக்காக நான் அவருக்கு என்ன செய்வேன்? அவர் என்மேல் மழைபோல பொழிந்த நன்மைகளுக்காக நான் அவரை என்னென்று தோத்தரிப்பேன் சுவாமீ? நீர் என்னை ஒன்றுமில்லாமையில் நின்று உண்டுபண்ணினீரே. நான் அஞ்ஞானிகளைப்போல இல்லாமல், உம்மை அறியவும் உமது திருச்சபையில் சேரவும் செய்தீரே. எனக்காக நீர் கொடிய பாடுகள் பட்டீரே. உமது அருமையான தாயாரான மரியாயை எனக்கு நேச மாதாவாகக் கொடுத்தீரே. ஆ! சுவாமீ, நீர் எனக்கு இந்த அன்பான தாயாரைக் கொடுத்ததற்காக நான் உம்மை எப்படி தோத்தரிக்கலாம்? இது எல்லாம் அடியாளுக்குச் செய்ததுமல்லாமல், இப்போது உம்மைத்தானே எனக்கு முழுமையாகத் தந்துவிட்டீரே சுவாமீ. எப்படி உமது நன்மைகளால் என்னை மூடிக்



கொண்டீரோ? ஆகையால் உமது முன்பாக மௌனமாயிருப்பேன். ஏனென்றால் என் இருதயம் நிறைந்துவிட்டது. கண்ணீர்களால் மாத்திரமேயல்லாமல் வாயினால் என் நன்றியறிதலைக் காட்டக்கூடாமல் இருக்கிறதே சுவாமீ. சகல படைப்புண்ட பொருட்களும் உம்மைத் துதிப்பதாக! மலைகளும் ஆறுகளும் சமுத்திரங்களும் விருட்சங்களும் உம்மைத் துதிக்கக்கடவன! மிருகங்களும் பட்சிகளும் மனிதரும் சம்மனசுக்களும் உமது மகிமையைப் பாடக்கடவன! நானோவென்றால் என் இருதயத்தின் பெலமெல்லாங்கொண்டு உம்மை நேசித்து உமது முன்பாக உருகிக் கண்ணீர்விட்டு அழுவேன்.

---

## நேச முயற்சி.

என் சேசுவே! நீர் உமது நேசத்தின் அக்கினியை உலகத்தில் பரப்பிவிடும்படியாக வந்தீரென்று சொன்னீரே. இதோ! என் இருதயமும் உமது நேசமாகிய நெருப்பினால் பற்றி எரியச்செய்யும். நீர் எனக்காக சிறு பாலனாக வந்து பிறந்தபோது மாட்டுக் கொட்டிலிலே மாரிகாலக் குளிர்பட்டு வேதனைகள் பட்டீரே; ஆனால் இப்போது நீர் எழுந்தருளி வந்திருக்கிற இடமாகிய என் இருதயத்திலே அதிலும் அதிக கொடுமையான குளிர் இருக்கிறதென்ன சுவாமீ. உமது நேசத்தினால் நான் பற்றி எரியாமல் இன்னும் குளிர்ந்த இருதயத்தோடு

இருப்பேனோ? ஆண்டவரே! என் இருதயம் நேசத்தினாலே பற்றியெரியச்செய்யும். அடியாளுடைய இருதயத்தை உமது நேசத்தின் ஈட்டியினால் குத்திக் காயப்படுத்தும். அப்போது தான் நான் உம்மைத் தக்கவிதமாய் நேசிப்பேன். ஓ! பக்திசுவாலகர் என்னப்படுகிற சம்மனசுக்களே! என் ஆண்டவர் முன்பாக எப்பொழுதும் நேசத்தினால் எரிந்துகொண்டு இருக்கிறீர்களே; பாவியாகிய அடியாளும் உங்களைப்போல எரியச்செய்யுங்கள். பரிசுத்த தேவமாதாவே! நான் சேசுநாதரைத் தக்க விதமாக நேசிக்கும்படியாக நீர் எனக்கு உதவி செய்தருளும்.

---

### காணிக்கை முயற்சி.

ஆண்டவரே, நீர் என்னிடத்தில் வந்ததற்காக நான் உமக்கு என்ன செய்வேன்? நீர் எனக்காக உமது திரு இரத்தமெல்லாஞ் சிந்தி பாடுபட்டதும் போதாமல், இப்போது உம்மை முழுமையாக எனக்குத் தந்திருக்கிறீரே. இப்படிப்பட்ட நேச தேவனாகிய உமக்கு நான் கொடுக்கக்கூடியது என்ன உண்டு சுவாமீ? எனக்கு உண்டானவைகள் எல்லாம் இதோ உமது கைவசமாய் இருக்கிறது. இதுவரையும் தேவரீர் எனது இருதயத்தைக் கேட்டு வந்தீர். நானோ அதை உமக்கு முற்றாகக் கொடாமற் போனேன். என் சேசுவே! சுவாமி, அதை நான் இப்போது உமக்கு முற்றாகக் கை



யளித்துவிடுகிறேன். இனிமேல் உம்மிலேயே யல்லாமல் வேறொன்றிலும் நான் நேசம் வைக்கமாட்டேன். என் இருதயம் உமக்கே சொந்தம். நீரே அதில் எப்போதும் வாசமாயிரும். என் இருதயம் இனிமேல் உலக பொருட்களின் நேசத்தினால் உமக்குத் துரோகம் செய்யாதபடிக்குக் காத்துக்கொள்ளும் சுவாமீ. என் சரீரத்தையும் உமக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். உமது திருச்சரீரத்தைத் தொட்ட என் நாவினால் இனிமேல் ஒருபோதும் கெட்ட பேச்சுகளாவது கோபமான வார்த்தைகளாவது பேசமாட்டேன். என் கண்களையும் உமக்குக் காணிக்கையாக வைக்கிறேன். அவைகளினால் இனிமேல் நான் உமது மட்டற்ற பரிசுத்தனத்துக்கு அருவருப்பானவைகள் ஒன்றையும் பார்க்கமாட்டேன். என் கைகளினால் உமது கற்பனைகளை மீறாதபடி, அவைகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். கடைசியாய், என் அன்புக்குரிய சேசுவே! என் ஆத்துமத்தையும் சரீரத்தையும் எனக்குண்டாகிய சகலத்தையும் உமக்கே கொடுத்து அவைகளை நீர் எப்போதும் உமக்கே சொந்தமாக வைத்துக்கொள்ள உம்மைப் பிரார்த்திக்கிறேன். ஓ! என் சேசுவே, தேவரீர் அடியாளை முற்றாக மாற்றி அடியாள் முழுதும் உமக்கு ஏற்றவளாயிருக்கச்செய்யும். உம்மோடே நான் எப்போதும் ஒன்றாயிருக்க ஆசைப்படுகிறேன் சுவாமீ. ஆமென் சேசு.

## பரிகார முயற்சி.

நித்திய பிதாவே! என்னுடைய ஜீவியமும் வழியும் சத்தியமுமாக சேசுவின் திரு இருதயத்தோடு உம்மை ஆராதிக்கிறேன். உம்மை ஆராதிக்காமல் இருக்கிறவர்களுக்காக உம்மை ஆராதிக்கிறேன். உம்மைச் சிநேகியாமல் இருக்கிறவர்களுக்காக உம்மைச் சிநேகிக்கிறேன். வேறுமென்று ஞானக்குருடராய் உம்மை அறியாமல் இருக்கிறவர்களுக்காக உம்மை அறிந்திருக்கிறேன். சாவுக்குரிய மனிதர்களுக்கு உமதுமட்டில் உண்டான கடமைக்குப் பரிகாரஞ்செய்ய இந்தத் திரு இருதயத்தோடு வருகிறேன். என் திவ்விய பத்தாவின் விலைமதியாத திரு இரத்தத்தால் மீட்டு இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களைத் தேடுகிறதற்காக என் புத்தியைக்கொண்டு இந்த உலகமெல்லாம் சுற்றிவரவும், இந்தத் திவ்விய இருதயத்தோடு அதுகளை தேவசிநேக அக்கினியால் சுட்டெரிக்கும்படிக்கு அவர்களை உமக்கு ஒப்புக்கொடுத்து அவர்களை மனந்திருப்ப அவர்களோடு உம்மை மன்றாடுகிறேன்.

ஆ! என்ன! என் நித்திய பிதாவே, என் சேசுநாதரை அவர்கள் அறியாதிருக்கிறதைப் பார்க்க உமக்குச் சகிக்கக்கூடுமோ? அவர்கள் எல்லாருக்காகவும் அவர் மரித்திருக்க அவர்கள் அவருக்காகச் சீவிக்காமல் இருக்கிறதைக் கதியில்லாமல் பார்க்கக்கூடுமோ? அவர்கள் உயிரில்லாமல் இருக்கிறதைப் பார்க்கிறீர். அவர்கள்



எல்லோரையும் இந்தத் திவ்விய இருதயத்தோடு ஒன்றித்தருளும். மனுஷ அவதாரமான வார்த்தையே! எனக்கு மிகவும் அன்புக்குரிய சேசுவே! உமது பிதா உம்மிலும் நீர் அவரிலும் இருக்கிறதினால் உமது அர்ச்சிக்கப்பட்ட ஆத்துமத்தோடும் திரு இருதயத்தோடும் அவருக்குச் சொன்னதெல்லாம் உமக்குச் சொன்னேன் என்று உமக்குத் தெரியும். என் மதுர சேசுவே! இந்தப் பிரியமுள்ள ஆத்துமங்களை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். உமது நித்திய பிதாவோடு நீர் இருக்கிறதுபோல அவர்களும் உம்மிடத்தில் இருக்கச்செய்தருளும். ஆமென் சேசு.

---

## மன்றாட்டு முயற்சி.

1. திரு விலாக் காயத்தைப் பார்த்து, தனக்குத்தானே தேவசிநேகமும், சம்மனசுகளுக்கடுத்த பரிசுத்தத்தனமும், அப்போஸ்தலர்களுக்கடுத்த புத்தி நிலைமை இது முதலான புண்ணியங்களைக் கேட்கிறது.

2. வலதுகைக் காயத்தைப் பார்த்து, அர்ச். பாப்பானவர் கருத்தின்படி திருச்சபை அவசரங்களுக்கும், விசுவாசப் பரம்புதலுக்கும், பதிதர் மனந்திரும்பவும், பிரிவினைக் கலகம் நீங்கவும், திருச்சபையின் சகல ஊழியர்களுக்காகவும் மன்றாடுகிறது.

3. இடதுகைக் காயத்தைப் பார்த்து, கிறீஸ்துவர்களான சகல இராஜாக்களுக்காக மன்றாடுகிறது.

4. வலதுகால் காயத்தைப்பார்த்து, சகல சந்நியாச சபைகளுக்கும் விசேஷமாய் நமது அதிசிரேஷ்டர் கருத்தின் பிரகாரம் நாமிருக்குஞ் சபைக்காகவும் மன்றாடுகிறது.

5. இடதுகால் காயத்தைப்பார்த்து, தாய் தகப்பன், உறவின்முறையார், சிநேகிதர், நமக்கு நன்மை செய்தவர்கள், நமது சத்துராதிகள், பாவிகள் முதலானவர்களுக்காக மன்றாடுகிறது.

---

## அர்ச். இஞ்ஞாசியார் செய்த சேபம்.

ஆண்டவரே! எனக்கு இருக்கும் சுவாதீனம் முழுவதையும் தேவரீர் எடுத்துக்கொள்ளுவீராக. என் ஞாபகம், புத்தி, மனசு முழுவதையும் தேவரீர் கையேற்றுக்கொள்ளும். என்னிடத்தில் எதுதான் உண்டோ, எனக்கு எது சொந்தமோ, அவையெல்லாம் தேவரீர்தாமே எனக்குத் தந்தருளினீர். இவை யாவையும் உமக்குத் திரும்பவும் நான் கொடுத்துவிடுகிறேன். இவைகளை உமது பூரண சித்தப்பிரகாரம் முற்றும் நடத்துவீராக. உமது சிநேகம் ஒன்று மாத்திரம் உமது இஷ்டப்பிரசாதத்தோடுகூட



எனக்குத் தருவீராக. நானே போதுமானமட்டும் ஆஸ்திவந்தனாய் இருப்பேன். இதைத் தவிர வேறு யாதொன்றும் உம்மிடத்தில் நான் கேட்கவேமாட்டேன்.—ஆமென்சேசு.

☞ இந்த மனஸ்தாப இருதயத்தோடு சொல்லுகிறவர்களுக்கு ஒரு நாளைக்கு 300-நாட் பலன். திவ்வியநன்மை வாங்கினவுடன் சொல்லுகிறவர்களுக்கு 7-வருஷம் 7-மண்டலப் பலன்.

---

## பெரிய புதன்கிழமை திரிகாலச் சேபம்.

**பெரிய புதன்கிழமை சாயுங்காலந் துவக்கிப் பெரிய சனிவாரங் காலைமட்டுஞ் சொல்லத்தக்கது.**

கிறீஸ்துவானவர் நமக்காக மரணமட்டுங் கீழ்ப்படிதலானார், மேலுஞ் சிலுவையிலே மரித்தார்.

ஆதலால் சர்வேசுரன் அவரை உயர்த்தி, எல்லா நாமத்துக்கும் மேலான நாமதேயத்தை அவருக்குத் தந்தருளினார்.—பா.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி! எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் பாவிகளாகிய யூதர்களுடைய கையிற் காட்டிக் கொடுக்கப்பட்டுச் சிலுவையின் நிர்ப்பந்தத்தை அனுபவிக்க இஷ்டித்தருளின இந்தக் குடும்பத்தைக் கிருபைக் கண்கொண்டு பாரும். இந்த மன்றாட்டைத் தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும்

ஏக தேவனுமாய் சதாகாலமு சீவியருமாய் பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற சேசுநாதரைக் குறித்து எங்களுக்குத் தந்தருளும்—ஆமென் சேசு.

---

## பெரிய வியாழக்கிழமை பூசை செபம்.

என் மதுரமுள்ள இரட்சகரே, நான் உமக்கு எவ்வளவோ நன்றியறிந்திருக்கவேணும், எம்மாத்திரமோ உமதுபட்டில் கடனாளியாயிருக்கிறேன். என் சேசுவே! எனக்காக இத்தனை அன்போடு மரணத்தைக் கையேற்றுக்கொண்டீர். ஆனதால் நான் உமக்காக என் பிராணனைக் கொடுக்க ஆசையாயிருக்கிறேன். ஆனால் எண்ணிறந்த வேதசாட்சிகளுக்குச் சம்பவித்தாற்போல கொலைக்காரர் கையால் உமது தோத்திரத்துக்காக என் இரத்தத்தைச் சிந்தி உயிர் கொடுக்கிற பாக்கியம் எனக்குக் கிடையாவிட்டாலும், எனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற மரணத்தையாகிலும் அமைந்த மனதோடு கையேற்றுக்கொள்ளுகிறேன். உமக்குச் சித்தமானபடிக்கும் உமக்கு இஷ்டமானகாலத்திலும் அதை ஒப்புக்கொள்ளுகிறேன். என் பாவங்களுக்குச் சொற்பமான பரிகாரமாக உமது பரிசுத்த மகத்துவத்திற்கு இன்றுதானே அதை ஒப்புக்கொடுக்கிறேன். உமது வியாகுலம் நிறைந்த மரணத்தின் பேறுபலன்களைப்



பார்த்து நான் தேவசிநேக முயற்சிசெய்து உமது நேசமுள்ளவனாய் உயிர்விடுகிற பாக்கியத்தை எனக்குக் கட்டளையிடவேணுமென்று உம்மை மன்றாடுகிறேன். என் ஆண்டவரே, உமக்கு இம்மாத்திரம் பொல்லாங்கு செய்த சிஷ்டிகளுக்கு நீர் இத்தனை நன்மைசெய்யக்கூடுமாயிருந்ததெப்படி? சர்வேசுரா, என்னைப் படைத்தவருடைய அன்பை நான் அடையும்படி நீர் இத்தனை நிர்ப்பந்தப்பட்டு உயிர்விடச் சித்தமானீரே. நானோவெனில் மனதுபொருந்தி என் பிசகினாலே அதை இத்தனைவிசை இழந்துபோனேன். நான் அதை யோசிக்கும்போது துக்க மனஸ்தாபத்தினால் உயிர்விடமனதாயிருக்கிறேன். எத்தனையோவிசை நீர் எனக்குப் பொறுத்தல் கொடுத்தீர். இந்த இரக்கத்தையும் பாராமல் உமக்குத் துரோகஞ் செய்துகொண்டுவந்தேன். திவ்விய இரட்சகரே, மதுர சேசுவே, நான் உமக்கு எதிர்த்துத் துரோகஞ் செய்ததற்காக மனஸ்தாபப்படுகிறேன். உமது பேறுபலன்களைப்பார்த்து எனக்குப் பொறுத்தல்கொடும். நான் உமக்கு இனித் துரோகஞ் செய்யாதிருக்க உடன்படுகிறேன். இலௌகீக நன்மைகளையெல்லாம் விட உமது நேசத்தை அதிக கனமாய் எண்ணித் தெரிந்துகொள்ளுகிறேன். இன்னமும் நான் அதற்கு அபாத்திரவானாகவொட்டாதேயும். இந்த ஆக்கினைதவிர மற்ற எந்த ஆக்கினையாகிலும் இடும். என் சேசுவே, அப்படியல்ல, இனி உம்மை

இறந்துபோக எனக்கு மனதில்லை. அதைப் பார்க்கிலும் உயிரையிழக்க ஆசையாயிருக்கிறேன். எப்போதும் உம்மைச் சிநேகிக்கிறதே என்னுடைய கபடற்ற ஆசையாமே.

ஆ! என் சர்வேசுரனுடைய நேசத்தின் மிகுதியே, ஒரு தேவன் படைத்தவர்களால் கொலையுண்கிறார். அவருடைய நேசந் தன்னிடத்தில் பிறக்கிறதாகத் தோற்றாதவன் எவனாகிலும் உண்டோ? ஆ! என் ஆத்துமத்தினுடைய நித்திய அன்பனே, வெகுகாலம் பொறுத்து நான் உம்மைச் சிநேகிக்கத் துவக்குகிறேன் என்பது மெய்தான். ஆகிலும் எனக்கு இன்னம் இருக்கப்பட்ட காலத்திலாவது நான் வீணாய்ச் செலவழித்த காலத்தைப் பரிகரிக்கும்படி செய்தருளும். நான் என்ன செய்தபோதிலும் உமக்கு என்பேரிலுள்ள சிநேகத்துடனே அதை இணையிட்டுப்பார்த்தால், மகா சொற்பக்காரியமாயிருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஆனால் என் முழு இருதயத்துடனேயாகிலும் உம்மைச் சிநேகிக்க மனதாயிருக்கிறேன். உமது நேசமானது தேடின இத்தனை உபாயங்களைக் கண்டும் நான் என் இருதயத்தைப் பகிர்ந்து நீரல்லாதே வேறே வஸ்துவுக்கு ஒரு பங்கு கொடுப்பேனாகில் மகா அநீதமுள்ளவனாயிருப்பேன். என் உயிரையும், என் மனதையும், மனச்சுதந்தரத்தையும் உமக்கே இனி வசிகாரஞ் செய்கிறேன். உமக்கு இஷ்டமானபடி என்னை நடப்பியும்.



என் பலன்கொண்டமட்டும் உம்மைச் சிநேகிக்கிறதற்காக எனக்கு மோக்ஷத்தைக் கட்டளையிடவேணுமென்று உம்மைக் கேட்கிறேன். நித்தியகால முழுதும் உம்மைச் சிநேகிக்கும்படி இவ்வுலகத்திலேதானே நான் உம்மை மிகவும் சிநேகிக்க மனதாயிருக்கிறேன். உமது வரப்பிரசாதத்தின் உதவியை எனக்குத் தந்தருளும். உமது பேறுபலன்களின்பேரால் அதைக் கேட்கிறேன். கொடுப்பீரென்று நம்பியிருக்கிறேன் சுவாமி.—ஆமென் சேசு.

---

## சுவிசேஷம்.

### அர்ச். அருளப்பர் 13-ம் அதிகாரம், 1-ம். வசனமுதல், 15-ம் வசனம்வரையில்.

பாஸ்குத் திருநாளுக்குமுன் சேசுநாதர் இவ்வுலகத்தினின்று தம்முடைய பிதாவினிடத்துக்குப் போகத் தமது நேரம் வந்திருக்கிறதென்று அறிந்து இவ்வுலகத்திலிருந்த தம்முடையவர்களை நேசித்திருக்கையில் முடிவுபரியந்தம் அவர்களைச் சிநேகித்தார். மேலும் இராப்போசனம் ஆனபின்பு சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ் இஸ்காரியோத்தென்பவன் அவரைக் காட்டிக்கொடுக்கும்படிக்குப் பசாசு முன்னமே அவனுடைய இருதயத்தில் துர் ஆலோசனையை ஏவிவிட்டிருக்கிறபோது, சேசுநாதர் தம்முடைய பிதா எல்லாவற்றையுந் தமக்குக் கையளித்திருக்கிறதையுந் தாம் சர்வேசுரனிடத்திற்கு மறுபடி போகிறதையும் அறிந்து இராப்போசனத்தை விட்டெழுந்து தம்முடைய வஸ்

திரங்களை வைத்துவிட்டார். பின்னும் ஓர் துணியை எடுத்துத் தமது இடையிற் சுற்றிக் கட்டினார். அதற்குப்பின் ஓர் கிண்ணியில் தண்ணீரை வார்த்து சீஷர்களுடைய கால்களைக் கழுவவும் தாம் இடையிற் சுற்றிக் கட்டிக்கொண்டிருந்த துணியால் துடைக்கவுந் தொடங்கினார். ஆகையால் சிமோன் இராயப்பரிடத்துக்கு வந்தார். அப்போது இராயப்பர் ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவுகிறீரோ என்று அவருக்குச் சொன்னார். சேசுநாதர் மறுமொழியாக நான் செய்கிறதை இப்போது அறியாய். ஆனால் பிற்பாடு அறிவாய் என்று அவருக்குத் திருவுளம்பற்றினார். இராயப்பர் என்றென்றைக்கும் என் கால்களைக் கழுவுவதில்லை என்று அவருக்குச் சொல்லவே, சேசுநாதர் அவருக்கு மறுமொழியாக நான் உன்னைக் கழுவாவிட்டால், என்னோடு உனக்குப் பங்கிருப்பதில்லை என்றார். சிமோன் இராயப்பர் அவரை நோக்கி ஆண்டவரே, என் கால்களை மாத்திரம் அல்லவே, என் கைகளையுந் தலையையும் கழுவியருளும் என்றார். சேசுநாதர் அவருக்குத் திருவுளம்பற்றினதாவது: ஸ்நானத்தால் கழுவப்பட்டவன் தன் கால்களைக் கழுவவேண்டுமொழிய மற்றொன்றுமல்ல. ஏனெனில் முழுதுஞ் சுத்தமாயிருக்கிறான், நீங்களுஞ் சுத்தமாயிருக்கிறீர்கள். ஆயினும் எல்லோருமல்லவே என்றார். ஏனெனில் தம்மைக் காட்டிக்கொடுப்பவன் இன்னான் என்று அறிந்திருந்தார். அதைப்பற்றி நீங்கள் எல்லோருஞ் சுத்தமுள்ளவர்கள் அல்லவென்று திருவுளம்பற்றினார். ஆகையால் அவர் அவர்களுடைய கால்களையுங் கழுவித் தம்முடைய வஸ்திரங்களையும் அணிந்துகொண்டபிறகு மறுபடியும் பந்தியில் அமர்ந்து அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களோ? நீங்கள் என்னைக் குருவென்றும் ஆண்டவரென்றும்



அழைக்கிறீர்களே; நீங்கள் சொல்லுகிறதுஞ் சரி, ஏனெனில் அப்படியே இருக்கிறேன். ஆகையால் ஆண்டவனும் குருவுமாகிய நான் உங்கள் கால்களைக் கழுவியிருக்க, நீங்களும் ஒருவர் ஒருவருடைய கால்களைக் கழுவக்கடவீர்கள். ஏனெனில் நான் உங்களுக்குச் செய்ததுபோலே நீங்களும் செய்யும்பொருட்டு உங்களுக்கு மாதிரிகை காட்டிக்கொடுத்தேன்.

---

## பெரிய வெள்ளிக்கிழமை காலை உற்சவம்.

¶ இன்று குருவானவர் கருப்புநிற பூசை வஸ்திரம் அணிந்து மெழுகுதிரி வெளிச்சந் தூபமின்றிப் பீடத்துக்குமுன் போய் சாஷ்டாங்கமாய் விழுந்து சற்றுநேரஞ் செபித்தபின் அக்கோலித்தென்றும் பட்டம்பெற்றவர்கள் பீடத்துத் துகிலில் ஒன்றை மாத்திரம் பீடத்தின்மேல் நீட்டி விரிக்கிறார்கள். குருவானவர் உதவிக்காரரோடு செபஞ் செய்தபின் பீடத்துக்கேறி அதின் நடுவில் முத்திசெய்து நிருபம் வாசிக்கப்படுகிற இடத்தில் தீர்க்கதரிசனத்தை வாசிக்கிறார்.

### ஓசையா, 6-ம் அதிகாரம்.

துன்ப மிகுதியில் சுறுக்காய் நமதண்டைக்கு எழும்புவார்கள் என்று ஆண்டவர் திருவுளம்பற்றினார். நாம் சர்வேசுரனிடத்திற்குத் திரும்புவோம் வாருங்கள். ஏனெனில் அவர் நம்மைத் தன் வசமாக்கினார். குணப்படுத்துவார், அடிப்பார், சுகப்படுத்துவார், இரண்டுநாளைக்குப்பிறகு நமக்கு உயிர் கொடுப்பார், மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார், நாமும் அவர் சமூகத்தில் சீவிப்போம். சர்வேசுரனை

உணரும்படி அறிந்து பின்செல்லுவோம். அவருடைய வெளிப்பாடு வைகறைபோல் ஆயத்தம்பண்ணப்பட்டதன்றியும், பூமியில் வசந்தகால மாரிகாலத்தில் பெய்யும் மாரிபோல் நம்மிடத்திற்கு வருவார் என்பார்கள். எபிராயிமே, உனக்கு நான் எதுசெய்வேன். யூதாவே, உனக்கு நான் என்னசெய்வேன். உங்கள் இரக்கம் விடியற்காலத்தின் முகில்போலும் காலையிற் தோன்றி ஒழியும் பனிபோலும் இருக்கின்றது. இதினிமித்தம் தீர்க்கதரிசிகள் வழியாய் அவர்களைக் கண்டித்தேன். என்னுடைய வாய்மொழிகளால் அவர்களைக் கொலைசெய்தேன். என்னுடைய தீர்வையின் நீதி ஒளிபோல வெளிப்படும். ஏனென்றால் இரக்கமே எனக்குப் பிரியமொழிய பலியை நான் ஆசிக்கவில்லை. தகனப்பலியைப்பார்க்கிலும் தேவ அறிவை விரும்பினேன்.

---

தொடர்ச்சி, அபாக்குக், 3-ம். அதிகாரம்.

கர்த்தாவே, உமது வாக்கை நான் கேட்டு அஞ்சினேன். உமது செய்கைகளைத் தியானித்து நடுங்கினேன். இரு மிருகங்களுக்கிடையே நீர் வெளிப்படுவீர். காலஞ் சமீபிக்கும்போது அறியப்படுவீர். காலம் வரும்போது காண்பிக்கப்படுவீர். முனிவால் என் ஆத்துமம் கலங்கப்படும்போது இரக்கத்தின்மீது ஞாபகமுள்ளவராயிருப்பீர். சர்வேசுரன் லீபானெனிலும் பர்வதத்தினின்று வருவார். பரிசுத்தர் நிழலுள்ளதும் அடர்ந்ததுமான மலையினின்று வருவார். அவருடைய மகிமைப் பிரதாபம் பரமண்டலங்களைச் சூழ்ந்தது, பூமி அவருடைய துதியால் நிரம்பியிருக்கின்றது.



## தொடர்ச்சி முடிந்தபின் குருவானவர் திருப்பக்கத்தி லிருந்து சொல்லுகிறதாவது.

குருவானவர்.—பிரார்த்திக்கக்கடவோம்.

தியாக்கோன்.—முழந்தாளிடுவோமாக.

சுப்தியாக்கோன்.—எழுந்திருங்கள்.

## செபம்.

சர்வேசுரா! யூதாஸ் தன் பாவத்துக்கு ஆக்கினையும் நல்ல கள்ளன் தன் சங்கீர்த்தனத்துக்குப் பலனையும் பெற்றுக்கொண்டார்களே. எங்கள் நாயக சேசுக்கிறீஸ்துநாதர், தமது திருப்பாடுகளினால் இருபேருக்கும் வெவ்வேறு பலனைக் கொடுத்ததுபோலே, எங்களுடைய பழைய அபத்தம் விலக அவர் உயிர்த்தலின் பிரகாசத்தைத் அளித்தருளும்படி உமது கிருபைப்பலனை எங்களுக்குத் தந்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் உம்மோடு இஸ்பிரீத்து சாந்துவின் ஐக்கியத்தாலுஞ் சதாகாலஞ் சீவியரும் இராச்சியபரிபாலனம் பண்ணுகிறவருமாகிய ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்சேசு.

---

## நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய சுவிசேஷ திருப்பாடுகளின் சரித்திரம்.

### அர்ச். அருளப்பர் 18-ம், 19-ம். அதிகாரம்.

அக்காலத்தில் சேசுநாதர் தம்முடைய சீஷர்களோடு செதிரோன் என்னும் வெள்ளவாய்க்காலுக் கப்பாலே புறப்பட்டுப்போனார். அங்கே ஓர் பூங்காவனம் இருந்தது. அதிலே அவரும் அவருடைய சீஷர்களும் பிரவேசித்தார்கள். ஆனால் சேசுநாதர் தம்முடைய சீஷர்களோடு அடிக்கடி அங்கே கூடி வந்திருந்ததினால் அவருக்குச் சதிமானஞ்செய்து கொண்டிருந்த யூதாசும் அவ்விடத்தை அறிந்திருந்தான். ஆகையால் யூதாஸ் ஓர் படைவகுப்பையும் பிரதான ஆசாரியர்களிடத்திலும் பரிசேயர்களிடத்திலும் இருந்து ஊழியர்களையும் பெற்றுக்கொண்டு, தீபங்களோடும் பந்தங்களோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான். சேசுநாதரோவெனில் தம்மேல் வர இருந்த யாவற்றையும் அறிந்து எதிராக முந்திப்போய் யாரைத் தேடுகிறீர்கள் என்று அவர்களுக்குச் சொன்னார். அவர்கள் அவருக்கு மறுமொழியாக நாசரையனாகிய சேசுவை என்னவே, அவன் நானே என்று சேசுநாதர் அவர்களுக்குத் திருவுளம்பற்றினார்.

அப்போது அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களோடு நின்றுகொண்டிருந்தான். ஆகையால் அவன் நானே என்று அவர்களுக்கு அவர் சொன்னவுடனே, அவர்கள் பின்னிட்டதுமன்றித் தரையிலேயும் விழுந்தார்கள். அப்படியிருக்க, ஆரைத் தேடுகிறீர்கள் என்று மறுபடி அவர்களைக் கேட்டார். அவர்களோவென்றால் நாசரையனாகிய சேசுவை என்றார்கள். சேசுநாதர் மறுமொழியாக அவன்



நானே என்று உங்களுக்குச் சொன்னேனே. ஆதலால் என்னைத் தேடுகிறீர்களேயாகில் இவர்களைப் போகவிடுங்கள் என்றார். நீர் எனக்குத் தந்தருளினவர்களில் ஒருவனையும் நான் இழக்கவில்லை என்று அவர் திருவுளம்பற்றிய வாக்கியம் நிறைவேறும்படியாயிற்று. அப்படியாகையில் கத்தியைக் கொண்டிருந்த சீமோன் என்னும் இராயப்பர் அதை உருவிப் பிரதான ஆசாரியனுடைய ஊழியனைத்தாக்கி அவனுடைய வலதுகாதை அற வெட்டினார். அவ்வூழியன் பெயரோவென்னில் மல்க்குஸ் என்பதாம். அதைப் பற்றிச் சேசுநாதர் இராயப்பரை நோக்கி, உன் கத்தியை உறையிற்போடு. பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தை நான் பானஞ்செய்யாதிருப்பேனோ என்றார்.

ஆதலால் படைவகுப்புஞ் சேனபதியும் யூதர்களுடைய ஊழியருஞ் சேசுநாதரைப் பிடித்து அவரைக் கட்டினார்கள். பின்னும் முந்த அன்னாவென்பவனிடத்தில் அவரைக் கூட்டிக்கொண்டு போனார்கள். ஏனெனில், அவன் அவ்வருஷத்தில் பிரதான ஆசாரியனாயிருந்த கைப்பாஸ் என்பவனுக்கு மாமனாயிருந்தான். கைப்பாவென்பவனோவெனில் ஒரே மனிதன் ஜனத்துக்காக இறப்பதே நலம் என்று யூதர்களுக்கு ஆலோசனை தந்தவனாயிருந்தான். அப்படியிருக்கச் சீமோன் இராயப்பரும் வேறோர் சீஷனுஞ் சேசுநாதரைப் பின்சென்று கொண்டிருந்தார்கள். அச்சீஷனோவென்றால் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமாயிருந்தார். ஆகையால் சேசுநாதரோடு பிரதான ஆசாரியனுடைய தலைவாசலுக்குட் பிரவேசித்தார். ஆனால் இராயப்பர் வாசலின் அருகே வெளியே நின்றார். ஆதலால் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமாயிருந்த அவ்வேறு சீஷன் வெளியில்போய் வாசற்படிக்காரியிடத்தில் பேசி இராயப்பரை உள்ளே பிர

வேசிப்பித்தார். அதைப்பற்றி வாசலைக் காக்கிற ஊழியக்காரி நீயும் அம்மனிதனுடைய சீஷரில் ஒருவன் அல்லவோ என்று இராயப்பருக்குச் சொன்னாள். அவரோ நான் அல்ல என்றார். ஆனால் குளிருண்டாயிருந்தமையால், ஊழியருஞ் சேவகரும் அனலண்டையில் நின்றுகொண்டு குளிர் காய்ந்துகொண்டிருந்தார்கள். இராயப்பருங்கூட அவர்களோடே நின்று குளிர் காய்ந்தார். அப்படியிருக்கப் பிரதான ஆசாரியன் சேசுநாதருடைய சீஷர்களைக் குறித்தும் அவருடைய போதகத்தைக் குறித்தும் அவரை வினவினான். சேசுநாதர் அவனுக்கு மறுமொழியாகத் திருவுளம்பற்றினதாவது: நான் உலகத்துக்கு வெளியரங்கமாய்ப் பேசினேன், நான் எப்போதுஞ் செபக்கூடத்திலும் யூதரெல்லோருங் கூடிவருகிற தேவாலயத்திலும் பிரசங்கித்தேனொழிய அந்தரங்கத்தில் ஒன்றையும் பேசினேனேயில்லை. நீர் என்னை வினவுவானேன். அவர்களுக்கு நான் சொன்னது என்னவென்று கேட்டவர்களை வினவும். இதோ நான் சொன்னவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்றார்.

ஆனால் அவர் இவைகளைத் திருவுளம்பற்றினபின்பு அவ்விடத்தில் இருந்தவனாகிய ஊழியரில் ஒருவன் பிரதான ஆசாரியனுக்கு இவ்விதமாய்ப் பிரத்தியுத்தாரஞ்சொல்லுகிறாயோவென்று சேசுநாதரைக் கன்னத்தில் அறைந்தான். சேசுநாதர் அவனுக்கு மறுமொழியாக நான் பேசினவிதந் தகாதாகில் தகாததற்கு அத்தாட்சி கொடு. ஆனால் அது தக்கதாகில் நீ என்னை அடிப்பானேன் என்றார். பின்னும் அன்னாஸென்பவன் பிரதான ஆசாரியனை கைப்பாசிடத்தில் அவரைக் கட்டப்பட்டவராகவே அனுப்பினான். அப்போது சிமோன் இராயப்பர் நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தார். அப்படியிருக்க நீயும் அவனு-



டைய சீஷர்களில் ஒருவனல்லவோ என்று அவருக்குச் சொன்னார்கள். அவர் மறுதலித்து, நான் அல்ல என்றார். இராயப்பர் காதறவெட்டினவனுக்கு இனத்தானாகிய பிரதான ஆசாரியனுடைய ஊழியரில் ஒருவன் அவரை நோக்கி நான் அவனோடு உன்னைத் தோட்டத்திலே காணவில்லையோ என்றான். ஆனால் இராயப்பர் மறுபடியும் மறுதலித்தார். உடனே சாவலுங் கொக்கரித்தது. பின்னும் கைப்பாசிடத்தினின்று பிரெத்தோர் அதிகாரியின் நீதியாசனசாலைக்குச் சேசுநாதரைக் கூட்டிக்கொண்டு போனார்கள். அப்போது காலைநேரமாயிருந்தது ஆனால் அசுசிப்படாமல் பாஸ்காவைப் பொசிக்கத்தக்கதாக அவர்கள் அதிகாரியின் நீதியாசனசாலைக்குட் பிரவேசித்ததில்லை. ஆகையால் பிலாத்தன் அவர்களிடத்தில் வெளியே வந்து இம்மனிதனுக்கு விரோதமாய் நீங்கள் என்ன பிரியாது கொண்டுவருகிறீர்கள் என்றான்.

அதற்கு மறுமொழியாக அவன் குற்றவாளி அல்லாதிருந்தால், அவனை உமக்குக் கையளித்திருக்கமாட்டோம் என்று அவனுக்குச் சொன்னார்கள். அதைப்பற்றிப் பிலாத்தன் நீங்களே அவனைக் கொண்டுபோய் உங்கள் வேத கட்டளையின்படியே அவனுக்கு நடுத்தீருங்கள் என்றான். யூதர்களோவெனில் எவனையுங் கொல்ல எங்களுக்கு உத்தரவில்லை என்று அவனுக்குச் சொன்னார்கள். சேசுநாதர் தாம் மரிக்கும் மரணத்தைக் குறித்துத் திருவுளம்பற்றின வாக்கியம் நிறைவேறும்படியாயிற்று. ஆகையால் பிலாத்தன் மறுபடி நீதியாசன சாலைக்குள்ளும் பிரவேசித்துச் சேசுநாதரையும் வரவழைத்து, நீ யூதர்களுடைய இராஜாவாயிருக்கிறாயோ என்று அவருக்குச் சொன்னான். சேசுநாதர் மறுமொழியாக இதை நீர் உம்மாலே சொல்லுகிறீரோ அல்லது மற்றவர்கள் என் பேரில் உமக்குச் சொன்னார்களோ என்றார்.

பிலாத்தன் பிரத்தியுத்தாரமாக நான் யூதனாயிருக்கிறேனோ; உன் ஜனமும் பிரதான ஆசாரியர்களும் உன்னை எனக்குக் கையளித்தார்கள், என்னசெய்தாய் என்றான். சேசுநாதர் மறுவுத்தாரமாக என் இராச்சியம் இவ்வுலகத்தினின்று உண்டானதல்ல. என் இராச்சியம் இவ்வுலகத்தினின்று உண்டானதாயிருந்தால் நான் யூதர்களுக்குக் கையளிக்கப்படாதபடிக்கு என் ஊழியர் சந்தேகமறப் போராடியிருப்பார்கள். ஆனால் இப்போது என் இராச்சியம் இவ்விடத்தினின்று உண்டானதல்ல என்று திருவுளம்பற்றினார். ஆதலால் பிலாத்தன் அவரை நோக்கி: அப்படியிருக்க, நீ இராஜாவாயிருக்கிறாயோ என்றான். சேசுநாதர் மறுமொழியாக நான் இராஜாவாயிருக்கிறேன் என்று நீர் உள்ளபடி சொல்லுகிறீர். நான் சத்தியத்துக்குச் சாட்சி சொல்லும்பொருட்டு அதற்காகவும் பிறந்தேன், அதற்காகவும் உலகத்தில் வந்தேன். சத்தியத்துக்குரியவனாயிருக்கிற எவனும் என் குரலொலியைக் கேட்கிறான் என்றார். சத்தியமாவதேதென்று பிலாத்தன் அவருக்குச்சொன்னான். மேலும் அவன் இதைச் சொன்னபின் மறுபடியும் யூதரிடத்தில் வெளியே வந்து அவர்களுக்குச் சொன்னதாவது: நான் இவனிடத்தில் ஓர் குற்றத்தையும் காணேன். ஆனால் பாஸ்காப்பண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலாக்குவது உங்களுக்கு வழக்கமாயிருக்கின்றதே; ஆகையால் யூதருடைய இராஜாவை நான் உங்களுக்கு விடுதலாக்கும்படி மனதாயிருக்கிறீர்களோ என்றான். அதைப்பற்றி மறுபடி எல்லோருங் கூவி இவனை அல்ல, பரபாசையே விடுதலாக்கும் என்றார்கள். பரபாசோவென்றால் கள்ளனாயிருந்தான்.

ஆதலால் அப்போது பிலாத்தன் சேசுநாதரைப் பிடித்துச் சாட்டைகளால் அடிப்பித்தான். பின்னும்



போர்ச்சேவகர் முள்ளுக்களால் ஓர் முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்தார்கள். தாமிரப் போர்வையையும் அவருக்குச் சுற்றினார்கள். மீளவும் அவரிடத்தில் வந்து யூதருடைய இராஜாவே வாழ்க என்றதுமன்றி அவரைக் கன்னத்திலும் அறைந்தார்கள். அப்போது பிலாத்தன் மறுபடியும் வெளியிலே வந்து, நான் அவனிடத்தில் ஓர் குற்றத்தையுங் காணவில்லையென்று நீங்கள் அறியும்படிக்கு இதோ அவனை வெளியே உங்களிடத்தில் கூட்டிக்கொண்டு வருகிறேன் என்று யூதரானவர்களுக்குச் சொன்னான். ஆகையால் சேசுநாதர் முண்முடியுந் தாமிரப்போர்வையையுந் தரித்துக்கொண்டு வெளியே வந்தார். மீளவும் பிலாத்தன் "இதோ மனிதன்" என்று அவர்களுக்குச் சொன்னான். ஆனால் பிரதான ஆசாரியர்களும் அவர்களுடைய ஊழியர்களும் அவரைக் கண்டபோது அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூவினார்கள்.

பிலாத்தன் அவர்களை நோக்கி, நீங்களே அவனைப் பிடித்துச் சிலுவையில் அறையுங்கள். ஏனெனில் நான் அவனிடத்தில் குற்றங்காணேன் என்றான். யூதர்கள் அவனுக்கு மறுமொழியாக எங்களுக்கு ஓர் வேத கட்டளையுண்டு. அன்றியும் அக்கட்டளையின்படியே அவன் சாகவேண்டும். ஏனெனில் தன்னைத்தான் சர்வேசுரனுடைய குமாரன் ஆக்கினான் என்றார்கள். ஆதலால் பிலாத்தன் இவ்வார்த்தையைக் கேட்டபிறகு அதிகமாய்ப் பயந்தான். மறுபடியும் பிறெத்தோர் அதிகாரியின் நீதியாசனசாலைக்குட் பிரவேசித்து, உன் ஜென்மஸ்தலம் எதென்று சேசுநாதருக்குச் சொன்னான். சேசுநாதரோவெனில் அவனுக்கு மறுமொழி ஒன்றுஞ் சொல்லவில்லை. ஆகையால் பிலாத்தன் என்னோடு பேசாயோ, உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரம்

உண்டென்றும் அறியாயோ என்று அவருக்குச் சொன்னான். அதற்குச் சேசுநாதர் பிரத்தியுத்தாரமாக மேலேயிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஓர் அதிகாரமும் இராது. அதினிமித்தம் என்னை உமக்குக் கையளித்தவனுக்கு அதிக பெரிதான பாவம் உண்டென்றார். பின்னும் அதுமுதல் பிலாத்தன் அவரை விடுதலாக்கத் தேடிக்கொண்டிருந்தான். யூதரோவெனில் இவனை விடுதலாக்குவீராகில் நீர் செசார் என்னும் இராயனுக்குச் சிநேகிதனல்ல, ஏனென்றால் தன்னை இராஜாவாக்குகிற எவனுஞ் செசாருக்கு விரோதியாயிருக்கிறான் என்று கூவிக்கொண்டிருந்தார்கள். பிலாத்தனோவெனில் இந்த வார்த்தைகளைக் கேட்டபின்பு சேசுநாதரை வெளியில் கூட்டிக்கொண்டு வந்து எபிரேய பாஷையில் கப்பத்தா என்கிறதாய்க் கிரேக்கு பாஷையில் லித்தொஸ்திரோத்தொசென்னப்படுகிற ஸ்தலத்திலே நியாயாசனத்தில் உட்கார்ந்தான்.

அப்பொழுது பாஸ்குப் பண்டிகைக்கு ஆயத்த நாளில் ஏறக்குறைய ஆறுமணி நேரமாயிருந்தது. மீளவும் இதோ உங்கள் இராஜா என்று யூதர்களுக்குச் சொன்னான். அவர்களோவென்றால் அவனை நிர்மூலமாக்கும், அவனைச் சிலுவையில் அறையும் என்று கூவினார்கள். அதற்குப் பிலாத்தன் உங்கள் இராஜாவைச் சிலுவையில் அறைவேனோவென்று அவர்களுக்குச் சொல்லவே, பிரதான ஆசாரியர்கள் மறுமொழியாகச் செசாரை அல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை என்றார்கள். ஆகையால் அப்போது அவர் சிலுவையில் அறையப்படும்படிக்கு அவரை அவர்களுக்குக் கையளித்தான். அதைப்பற்றி அவர்கள் சேசுநாதரைப் பிடித்து வெளியில் கூட்டிக்கொண்டுபோனார்கள். மேலும் அவர் தமது சிலுவையைச் சுமந்துகொண்டு எபிரேய பாஷையில்



கொல்கொத்தா என்கிற கபாலவிடம் என்னப்படுகிற ஸ்தலத்துக்குப் புறப்பட்டுப் போனார். அங்கே நடுவிலுள்ளவராகச் சேசுநாதரையும் அவரோடு இப்பக்கத்திலும் அப்பக்கத்திலும் வேறு இருவரையுஞ் சிலுவையில் அறைந்தார்கள். அப்படியிருக்கப் பிலாத்தன் மேல் எழுத்தையும் எழுதினான். அதை சிலுவையின்பேரிலும் வைப்பித்தான். அதேதென்றால் யூதரின் இராஜாவாகிய நசரேயனான சேசு என்று எழுதப்பட்டிருந்தது. ஆதலால் யூதரில் அநேகர் அந்த மேலெழுத்தை வாசித்தார்கள். ஏனெனில் சேசுநாதர் சிலுவையில் அறையுண்ட ஸ்தலம் பட்டணத்துக்குச் சமீபமாயிருந்தது. மேலும் அது எபிரேய கிரேக்கு இலத்தீன் பாஷைகளில் எழுதப்பட்டிருந்தது. ஆனதைப்பற்றி யூதருடைய பிரதான ஆசாரியர்கள் பிலாத்தனை நோக்கி யூதரின் இராஜாவென்று நீர் எழுதவேண்டாம். ஆனால் யூதரின் இராஜாவாயிருக்கிறேன் என்று தானே சொன்னான் என்கிறதாக எழுதும் என்றார்கள். பிலாத்தன் பிரத்தியுத்தாரமாக நான் எழுதினதை எழுதினேன் என்றான்.

அப்படியாகையில் போர்ச்சேவகர் அவரைச் சிலுவையில் அறைந்தபின்பு அவருடைய வஸ்திரங்களையும் எடுத்தார்கள். அவைகளில் ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்கையுஞ் செய்தார்கள். அங்கியையும் எடுத்தார்கள். அங்கியோவெனில் தையலில்லாமல் மேலே துடங்கி முழுமையும் நெய்யப்பட்டதாயிருந்தது. அதினிமித்தம் ஒருவன் ஒருவனைநோக்கி அதைக் கிழியாமல் ஆருக்கு இருக்குமென்று அதின்மட்டில் அதிர்ஷ்டச் சீட்டுப்போடுவோமாக என்றார்கள். இவ்வண்ணமே என் வஸ்திரங்களையுந் தங்களுக்குள்ளே பங்கிட்டார்கள், என் சட்டையின்பேரிலும் அதிர்ஷ்டச்சீட்டு போட்டார்கள் என்கிற வேத வாக்கியம் நிறைவேறும்படி ஆயிற்று.

சேவகரும் உள்ளபடி இவைகளைச் செய்தார்கள்.
ஆனால் சேசுநாதருடைய மாதாவும் அவருடைய மா
தாவின் சகோதரியாகிய மரியம்மாளும் மரியமதலே
னம்மாளும் அவருடைய சிலுவையின் அண்டையில்
நின்றுகொண்டிருந்தார்கள். அப்படியிருக்கையில்
சேசுநாதர் தம்முடைய தாயாரையும் அருகில் நின்று
தாம் நேசித்திருந்த சீஷனையுங் கண்டபோது தம்மு
டைய மாதாவைநோக்கி: ஸ்திரீயே, இதோ உம்மு
டைய குமாரன் என்றார். பின்னுஞ் சீஷனைநோக்கி:
இதோ உன் மாதா என்றார். ஆதலால் அந்நேரமு
தல் சீஷன் வீட்டில் அவளைச் சேர்த்துக்கொண்டார்.
பிற்பாடு எல்லாம் முடிந்தது என்று சேசுநாதர் அறி
ந்து, வேதவாக்கியம் நிறைவேறும்படிக்குத் தாகமாயி
ருக்கிறேன் என்றார். அப்படியிருக்கக் காடிநிறைந்த
ஓர் பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது. அதை
ப்பற்றி அவர்கள் காடியால் நிரப்பப்பட்ட கடற்கா
ளானை ஈசோப் என்னும் பூண்டிற்குச் சுற்றிவைத்து
அவருடைய வாயில் கொடுத்தார்கள். ஆகையால்
சேசுநாதர் காடியை வாங்கிக்கொண்டபின்பு நிறை
வேறிற்று என்று திருவுளம்பற்றினார். பின்னுந் தலை
குனிந்து உயிர்விட்டார். ஆயத்த தினமாயிருந்ததி
னால் சரீரங்கள் ஓய்வுநாளில் சிலுவையிலே நில்லாத
படிக்கு அவர்களுடைய கணைக்கால்களை முறிக்கவும்
அவர்கள் எடுக்கவும்படும்பொருட்டு யூதர்கள் பிலாத்
தனை மன்றாடினார்கள். ஏனெனில் அந்த ஓய்வுநாள்
பெருநாளாயிருந்தது. ஆதலால் போர்ச்சேவகர்கள்
வந்து முந்தினவனுக்கும் அவரோடு சிலுவையில்
அறையுண்ட மற்றவனுக்கும் கணைக்கால்களை
முறித்தார்கள். ஆனால் அவர்கள் சேசுநாதரிடத்
தில் வந்தபோது அவர் முன்னமே மரித்தார் என்று
கண்டு அவருடைய கணைக்கால்களை முறித்ததில்லை.
ஆயினும் போர்ச்சேவகர்களில் ஒருவன் ஈட்டியால்



அவருடைய விலாவைக் குத்தித் திறந்தான். உட
னே இரத்தமுந் தண்ணீரும் புறப்பட்டது. இதைக்
கண்டவனும் சாட்சிசொன்னான். அவனுடைய சாட்சி
யும் உண்மையாயிருக்கின்றது. மேலும் நீங்கள் முத
லாய் விசுவசிக்கும் பொருட்டுத் தான் உண்மை
யானவைகளைச் சொல்லுகிறதாக அறிந்திருக்கிறான்.
ஏனென்றால் அவரிடத்தில் ஒரு எலும்பையும் நீங்கள்
முறிப்பதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்
படிக்கு இவை சம்பவித்தன. மீளவுந் தாங்கள்
ஊடுருவினவரைப் பார்ப்பார்களென்று வேறோர்
வேதவாக்கியம் வசனிக்கின்றது. இவைகளுக்குப்
பின்போவென்றால் அரிமத்தியா ஊராரான சூசை
யப்பர் யூதர்களுக்குப் பயந்ததைப்பற்றிச் சேசுநாத
ருடைய இரகசிய அநுசாரியானாலும், அவருக்குச்
சீஷனாயிருந்ததினாலே சேசுநாதருடைய சரீரத்தை
எடுக்கப் பிலாத்தனை மன்றாடினார். பிலாத்தன்
அதற்கு உத்தரவு கொடுத்தான். ஆகையால்
அவர் வந்து சேசுநாதருடைய சரீரத்தை எடுத்தார்.
மேலும் முந்த இரவில் சேசுநாதரிடத்தில் வந்திருந்த
நிக்கோதேம் என்பவரும் வெள்ளைப்போளம் கரியப்
போளம் கலப்பை ஏறக்குறைய நூறு இராத்தலாகச் சும
ந்துகொண்டுவந்தார். ஆதலால் அவர்கள் சேசுநாத
ருடைய சரீரத்தை எடுத்து, அடக்கஞ்செய்ய யூதரு
க்கு முறைமையானபடியே அதைப் பரிமள வர்க்கங்
களோடே சீலைகளாற் சுற்றிக் கட்டினார்கள். அன்
றியும் அவர் சிலுவையில் அறையுண்ட ஸ்தலத்தில்
ஓர் தோட்டமும் அத்தோட்டத்தில் எவனும் இன்
னும் வைக்கப்படாதிருந்த புதுக்கல்லறையும் இருந்
தது. ஆகையால் அக்கல்லறை சமீபமாயிருந்தபடியி
னாலே யூதர்களுடைய பண்டிகைக்கு ஆயத்தத் தின
த்தைப்பற்றிச் சேசுநாதரை அவ்விடத்தில் அடக்
கஞ்செய்து வைத்தார்கள்.

### பின் குரு நிருபம் வாசிக்கும் பக்கத்திலிருந்து சொல்லுகிறதாவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

அன்புள்ள சகோதரர்களே, நமதாண்டவரும் கர்த்தருமாயிருக்கிறவர் தமது திருச்சபைக்குச் சமாதானத்தைத் தரவும் அந்த ஒருமையில் நடத்தவும் பூலோகமெங்கும் அதைப் பாதுகாத்துக் கிருபைசெய்தருள வேணுமென்றும், உலகத்தின் அரசர்களும் பிரபுக்களும் அதற்கு அமைந்திருக்கவும், சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய சர்வேசுரனை நாம் உலகத்தாருடைய நடுவிலே போற்றி வாழ்த்த, சமாதானத்திலும் அமரிக்கையிலும் நாம் வாழ நமக்கு அநுக்கிரகம் பண்ணியருளவும் வேணுமென்று பிரார்த்தித்துக்கொள்ளுவோமாக.

குருவானவர்.—பிரார்த்திக்கக்கடவோம்.

தியாக்கோன்.—முழந்தாளிடுவோமாக.

சுப்தியாக்கோன்.—எழுந்திருங்கள்.

சர்வவல்லவரும் நித்தியருமான சர்வேசுரா, தேவரீர் உமது மகிமையைக் கிறீஸ்துநாதரால் சகல* ஜனங்களுக்கும் வெளிப்படுத்தினீரே. உமது திருச்சபை உமது திருநாமத்தைப் புகழ்ந்தேற்றி அறிவிக்கையில் ஸ்திரமான விசுவாசத்துடன் நிலைநிற்க உமது இரக்கச் செய்கைகளைக் காத்தருளும். இந்த மன்றாட்டுகளையெல்லாம் உம்மோடும் இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்திலும் சீவியரும் இராச்சிய பரிபால



னம் பண்ணுகிறவருமான ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்சேசு.

எங்கள் தேவனும் ஆண்டவருமானவர் தமது பரிசுத்த ஜனத்தை நடத்த அர்ச். திருச்சபைக்குப் பிரயோசனமாக பாப்புப்பட்டத்துக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட எங்கள் பரிசுத்த பிதாவாகிய *பத்தாம் பத்திநாதரென்னும் அர்ச். பாப்பானவரைச் சுக செளக்கியராகக் காத்தருளும்படி பிரார்த்தித்துக்கொள்ளுவோமாக.

குரு.—பிரார்த்திக்கக்கடவோம்.

தியா.—முழந்தாளிடுவோமாக.

சுப்தி.—எழுந்திருங்கள்.

சர்வவல்லப சர்வேசுரா, தேவரீர் தெரிந்து எங்களுக்கு நியமித்தருளிய மேற்றிராணியாரை இரக்கமாய்க் காப்பாற்றியருளும். இவ்வளவு மகிமை தங்கிய மேற்றிராணியாரின் கீழடங்கிச் சிஷ்டிகராகிய உம்மால் ஆண்டுவரப்பட்ட கிறீஸ்துவ ஜனமானது தனது விசுவாசத்தின் பேறுகளில் விருத்தியடையும்படி தயை செய்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப்பார்த்துத் தந்தருளும். ஆமென்சேசு.

சமஸ்த மேற்றிராணியார்களுக்குங் குருப்பிரசாதிகளுக்குந் தியாக்கோன், சுப்தியாக்

---

*அந்தந்தக் காலங்களில் இருக்கப்பட்ட பாப்பானவருடைய பேரைச் சொல்லவும்.

கோன், அக்கோலித்து, எக்சொர்சீஸ்து, லெக்தோர், ஒஸ்தியாரியூஸ் என்னும் பட்டம்பெற்றவர்களுக்காகவும் ஸ்துதியர், கன்னியாஸ்திரிகள், விதவைகள் சர்வேசுரனுடைய பரிசுத்த ஜனங்களுக்காகவும் மன்றாடுவோமாக.

குரு.—பிரார்த்திக்கக்கடவோம்.
தியா.—முழந்தாளிடுவோமாக.
சுப்தி.—எழுந்திருங்கள்.

சர்வவல்லமையுள்ள நித்திய சர்வேசுரா, தேவரீருடைய இஸ்பிரீத்துவினால் திருச்சபை முழுதும் அர்ச்சிக்கவும் நடத்தவும் படுகின்றதே, உமது கிருபைக்கொடையால் அவரவர்கள் தங்கள் தங்கள் அந்தஸ்துகளில் உமக்குப் பிரமாணிக்கமாய் ஊழியம்பண்ணும்படி பட்டம்பெற்ற சமஸ்தர்களுக்காக மன்றாடுகிற எங்கள் மன்றாட்டுக்களைக் கேட்டருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம்...மற்றதும்.

ஆமென்சேசு.

எங்கள் தேவனும் ஆண்டவருமானவர் ஞானஸ்நானம் பெற ஆயத்தமாயிருக்கிறவர்களுடைய இருதயங்களின் செவிகளையுந் தமது இரக்கத்தின் வழியையுந் திறந்து அவர்கள் ஞானசீவியத்தின் ஸ்நானத்தால் சகல பாவங்களுக்கும் பொறுதி அடையப்பண்ணி நமது நாயகன் சேசுக்கிறீஸ்துவினிடத்தில் காணப்படும்படி கிருபை செய்ய அவர்களுக்காக அவரை மன்றாடுவோமாக.



குரு.—பிரார்த்திக்கக்கடவோம்.
தியா.—முழந்தாளிடுவோமாக.
சுப்தி.—எழுந்திருங்கள்.

சர்வ வல்லப நித்திய சர்வேசுரா, தேவரீர் உமது திருச்சபையை நூதன சந்ததியால் எப்போதும் விர்த்தியாக்குகிறீரே. ஞான உபதேசம் படிக்கிறவர்கள் ஞானஸ்நானத்தின் ஊற்றால் திரும்பப் பிறந்து, உமது சுவீகாரத்தின் புத்திரராக ஏற்றுக்கொள்ளப்படும்படி அவர்களுக்கு விசுவாசத்தையும் நல்ல அறிவையும் அதிகரிக்கப் பண்ணியருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம்...மற்றதும்.

ஆமென்சேசு.

நேசமுள்ள சகோதரரே, சர்வவல்லப பிதாவாகிய சர்வேசுரன் உலகத்தைச் சகல அபத்தங்களிலே நின்று சுத்திகரிக்கவும், பிணிகளை நீக்கவும், பஞ்சத்தை விலக்கவும், சிறைச்சாலைகளைத் திறக்கவும், விலங்குகளைத் தரிக்கவும் பண்ணி, யாத்திரை செய்பவர்களுக்குத் திரும்பி வருதலையும், வியாதிக்காரருக்கு ஆரோக்கியத்தையும், கப்பல் யாத்திரைக்காரருக்குச் சுகதுறைமுகத்தையுந் தந்தருளும்படி அவரை மன்றாடுவோமாக.

குரு.—பிரார்த்திக்கக்கடவோம்.
தியா.—முழந்தாளிடுவோமாக.
சுப்தி.—எழுந்திருங்கள்.

கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலும் வருத்தப்படுகிறவர்களுக்குத் தைரியமுமாகிய சர்வ வல்லப நித்திய சர்வேசுரா, எந்தெந்த ஆபத்திலும் அபயமிடுகிறவர்களுடைய மன்றாட்டு உம்மிடத்துக்கு வரக்கடவது. தங்கள் நெருக்கிடைகளில் உமது இரக்கத்தை அடைந்து சமஸ்தரும் மகிழும்படி அநுக்கிரகம் பண்ணியருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம்... மற்றதும். ஆமென் சேசு.

நமது கர்த்தாவான சர்வேசுரன் பதிதர்களையும் பிரிவினைக்காரர்களையுஞ் சர்வ அபத்தங்களில் நின்று திருப்பிப் பரிசுத்த மாதாவாகிய சாதாரண அப்போஸ்தோலிக்குத் திருச்சபைக்கு அழைத்தருளும்படி அவர்களுக்காக மன்றாடுவோமாக.

குரு.—பிரார்த்திக்கக்கடவோம்.

தியா.—முழந்தாளிடுவோமாக.

சுப்தி.—எழுந்திருங்கள்.

சர்வ வல்லப நித்திய சர்வேசுரா, தேவரீர் எவனுஞ் சிதைந்துபோகச் சித்தமில்லாமல் சகலத்தையுஞ் இரட்சிக்க விரும்புகிறீரே. பசாசின் மோச தந்திரத்தால் மயக்கப்பட்ட ஆத்துமங்களை நோக்கியருளும். தவறினவர்களுடைய இருதயம் சர்வ பதிதத்தனத்துக்கு விலகிக் குணப்படவும் உமது உண்மையின் ஐக்கியத்துக்குத் திரும்பிவரவுந் தயைசெய்தருளும்.



இந்த மன்றாட்டுக்களையெல்லாம்... மற்றதும். ஆமென் சேசு.

நமது ஆண்டவரான தேவனானவர் சதிமார்க்கரான யூதருடைய இருதயங்களில் மூடியிருக்குந் திரையை எடுக்கவும், அவர்களும் நமது நாயகர் சேசுக்கிறீஸ்துவை அறியும்படியாயும் அவர்களுக்காகச் சர்வேசுரனை மன்றாடுவோமாக.

சர்வவல்லப நித்திய சர்வேசுரா, தேவரீர் சண்டாள யூதருக்கு முதலாய் உமது இரக்கத்தைக் காட்டுகிறீரே, அஞ்ஞானத்தின் குருட்டாட்டம் நீங்கி, உமது உண்மையின் பிரகாசமாகிய கிறீஸ்துநாதரை அறிந்து, அவர்கள் தங்கள் அந்தகாரங்களில் நின்று எடுக்கப்பட நாங்கள் செய்கிற மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமீ. ஆமென் சேசு.

சர்வ வல்லப கடவுள் அஞ்ஞானிகள் தங்கள் விக்கிரக ஆராதனையைவிட்டு உண்மையான சுயஞ்சீவியாகிய சர்வேசுரனிடத்திலும் அவருடைய ஏகசுதனாகிய நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துநாதர்சுவாமியிடத்திலும் மனந்திரும்பி வரும்படி அவர்கள் இருதயத்தில் நின்று பாவ அக்கிரமத்தை நீக்கக் கிருபைசெய்தருளப் பிரார்த்திப்போமாக.

குரு.—பிரார்த்திக்கக்கடவோம்.

தியா.—முழந்தாளிடுவோமாக.

சுப்தி.—எழுந்திருங்கள்.

சர்வவல்லப நித்திய சர்வேசுரா, தேவரீர் பாவிகளுடைய சாவைத் தேடாமல் அவர்கள் ஜீவிக்க எப்போதும் விரும்புகிறீரே. எங்கள் வேண்டுதலைக் கிருபையோடே ஏற்றுக் கொண்டு அவர்களை விக்கிரக ஆராதனையில் நின்று இரட்சித்து உமது திருநாமத்தின் ஸ்துதிக்காகவும் மகிமைக்காகவும் பரிசுத்தமான உமது திருச்சபையோடு அவர்களைச் சேர்த்தருளுஞ் சுவாமீ. இந்த மன்றாட்டுக்களையெல்லாம்... மற்றதும்:—ஆமென் சேசு.

¶ செபங்கள் வாசித்து முடிந்தபின் குரு தாம் அணிந்திருந்த பூசை ஆயத்தத்தைக் கழற்றி நிருபப் பக்கத்துக்குப்போய் அங்கே பீடத்தில் ஏற்கனவே ஆயத்தம் பண்ணிவைக்கப்பட்ட சிலுவையைத் தியாக்கோனென்னும் பட்டம்பெற்றவர் கொடுக்க வாங்கி ஜனத்தின் முன்பாக முகந்திருப்பிச் சிலுவையின் உச்சியில் மூடிய துகிலைச் சற்றே திறந்து, "இதோ சிலுவைமரம்" என்ற வாக்கியத்தை தான் மாத்திரந் துவக்கிய பின்பு "ஆராதிப்போம் வாருங்கள்" என்ற சொல்மட்டுந் தேவபலியூழியர் கொஞ்சப் பாட்டில் உதவியாய்ப் பாடுவார்கள். பாடுவர் கூட்டம் "ஆராதிப்போம் வாருங்கள்" என்றதைப் பாட, பூசைசெய்பவர் நீங்கலாக மற்றனைவரும் தெண்டனிட்டு ஆராதனைபண்ணுகிறது. மீளவும் நிருபப் பக்கத்தில் சென்று சிலுவையின் வலது புயத்தை மூடிய துகிலைத் திறந்து சற்றே அச்சிலுவையை உயர்த்தி முன்னையைப்பார்க்க அதிக உரத்த தொனியோடு இதோ சிலுவைமரம் என்கிற வாக்கியத்தைத் துவக்க, மற்றவர்கள் மேற்சொல்லிய பிரகாரம் பாடி ஆராதிக்கக்கடவார்கள். பின்னையுங் குரு பீடத்தின் நடுவே சென்று சிலுவையை மூடிய துகிலை முழுதுங்



களைந்து அதை உயர்த்தி இதோ சிலுவைமரம் என்ற வசனத்தை. இரண்டாம் முறையைப் பார்க்கிலும் இன்னும் அதிக உரத்த தொனியோடு துவக்க, மேற்சொல்லியபடி மற்றவர்கள் பாடவும் ஆராதிக்கவுங் கடவார்கள்.

---

### குரு பீடத்துக்குவந்து இரசத்தை பாத்திரத்தில் வார்த்து ஒப்புக்கொடுக்கையில் தூபக்கலசத்தில் சாம்பிராணி போடும்போது சொல்வது.

கர்த்தாவே, உம்மால் ஆசீர்வதிக்கப்பட்ட இந்தப் பூம்புகை உம்மிடத்துக்கேறவும், உமது இரக்கம் எங்கள்மேல் இறங்கவுங்கடவதாக.

### பீடத்துக்குப் பூம்புகையிடும்போது சொல்வது.

ஆண்டவரே, என்னுடைய பிரார்த்தனை உமது சன்னிதானத்துக்குப் பூம்புகைபோலவும் எனது கரங்களின் உயர்த்துகை அந்திய காலத்தின் பலிபோலவுஞ் செலுத்தப்படுவதாக. கர்த்தாவே, என் இருதயம் பாவங்களைப் பற்றிச் சாக்குப்போக்குச் சொல்லித் துர்க்குண மொழிகளில் சாயாதபடி என் வாய்க்குக் காவலும், என் இதழ்களுக்குச் சாவதானமான வாசலையும் வைத்தருளுவீராக.

### தியாக்கோனபட்டம் பெற்றவருக்குத் தூபக் கலசங் கொடுக்கையில் சொல்வது.

ஆண்டவர் நம்மிடத்தில் தமது நேச அக்கினியையும் நித்திய சிநேகத்தின் சுவாலையையும் பற்றுவிப்பாராக.

பின்பு குருவானவர் நிருபப்பக்கத்திலே பீடத்துக்குப் புறந்தே ஒன்றுஞ் சொல்லாமல் கைசுத்தி பண்ணினபின்பு, பீடத்து நடுவில் தலைகுனிந்து கைகூப்பி சொல்வது.

ஆண்டவரே, புத்தியின் தாழ்ச்சியிலும் மனஸ்தாபித்த உள்ளத்திலும் உம்மாலே நாங்கள் ஏற்கப்படவும் இப்படியே சர்வேசுரா சுவாமி உம்முடைய சன்னதியில் எங்கள் பலி உமக்குப் பிரியமாயிருக்கவுஞ் செய்வீராக.

பின்னையும் ஜனத்தைத் திரும்பிப்பார்த்து மினவுதல் பண்ணி வழமையின்படி சொல்வது.

சகோதரரே, என் பலியும் உங்களுடைய பலியுஞ் சர்வவல்ல பிதாவாகிய சர்வேசுரனுக்குப் பிரியமுள்ளதாகும்படிப் பிரார்த்தியுங்கள்.

ஜனத்தை மினவுதல் பண்ணித் திரும்பித் தானே சொல்வது.

பிரார்த்திக்கக்கடவோம்.

உமது பிரயோஜனமுள்ள கற்பனைகளாலனுசரிக்கப்பட்டுத் தேவபோதனையினாலே திருத்தப்பட்டு நாங்கள் சொல்லத் துணிகிறதாவது.

பரமண்டலமந்திரஞ் சொல்லவும்.

குருவானவர் அடக்கமாய் ஆமென் என்று வசனத்தைச் சொல்லியபின்பு ஓசையோடு சொல்வது.

ஆண்டவரே, தேவதாயாகிய அர்ச்சியசிஷ்ட நித்திய ஸ்துதிக்குரிய கன்னிமரியாயின் வேண்டுதலாலும், உமது அப்போஸ்தலரான இராயப்பர், சின்னப்பர், பிலேந்திரர், சகல அர்ச்-



சிஷ்டவர்களுடைய மன்றாட்டுக்களாலும் இறப்பெதிர் நிகழ்காலத்தின் சகல பொல்லாப்புகளிலே நின்று எங்களை இரட்சித்தருளும். எங்கள் காலத்தில் தயாபரராய்ச் சமாதானத்தைத் தந்தருளும். உமது இரக்கத்தின் சகாயத்தால் நாங்கள் உதவியடைந்து எப்போதும் நாங்கள் பாவமின்றியுஞ் சர்வ கலக்க மோசமின்றியும் உறுதிகொண்டிருக்கும்படி தயைசெய்தருளும் சுவாமி. இந்த மன்றாட்டுக்களையெல்லாம்... மற்றதும். ஆமென் சேசு.

## தேவமாதாவின் ஐந்து துயரத்தைக் குறித்து வேண்டிக்கொள்ளுஞ் செபம்.

முதலாவது.—சேசுநாதர் சுவாமி பிறந்த 40-ம் நாள் கோவிலிலே சிமியோனென்ற தீர்க்கதரிசி சேசுநாதர் சுவாமியைக் கையிலேந்தி ஸ்தோத்திரஞ்செய்து மீண்டும் மாதாவின் கையிற்கொடுக்கிறபோது இவர் உலகத்தாருக்காகத் தன் பிராணனைத் தருவார் என்று சொன்னதினாலே அர்ச். தேவமாதாவுக்கு உண்டான துக்கம் எண்ணிக்கையில்லை.—பர. பிர. திரி.

இரண்டாவது.—சேசுநாதர்சுவாமிக்குப் பன்னிரண்டு வயது நடக்கிறபோது மூன்று நாள் அவரைக்காணாமல் தேடினதினாலே அர்ச். தேவமாதாவுக்கு உண்டான துக்கமுங் கஸ்தியுஞ் சொல்லக்கூடாது.—பர. பிர. திரி.

மூன்றாவது.—சேசுநாதர்சுவாமியை யூதர்கள் பூங்காவனத்திற் பிடித்துக் கையோடு கையைச் சேர்த்துக் கட்டிக்கொண்டுபோனதினாலே அர்ச். தேவமாதாவுக்கு உண்டான துக்கமும் தாபமும் கணக்கில்லை.—பர. பிரி. திரி.

நான்காவது.—சேசுநாதர் சுவாமி சிலுவையில் அறையுண்டிருக்கிறபோது அர்ச். தேவமாதா சிலுவையடியிலே நின்று அநுபவித்த மிகுந்த விசனமுங் கஸ்தியும் வாக்கினாலே சொல்லிமுடியாது.—பர. பிரி. திரி.

ஐந்தாவது.—சேசுநாதர்சுவாமியைச் சிலுவையில் நின்று இறக்கி கல்லறையில் வைத்ததினால் அர்ச். தேவமாதாவுக்குண்டான தாபமும் மனஸ்தாபமும் மிகுந்த வியாகுலமான சலிப்பும் சொல்லக்கூடாது.—பர. பிரி. திரி.

இந்த ஐந்து துக்கங்களையும் நினைத்துத் தினம் ஐந்து பரமண்டல மந்திரம் ஐந்து பிரியதத்தமந்திரம் உத்தம மனஸ்தாபத்தோடு செபஞ்செய்து வருகிறவர்களுக்கு முதலாவது—உத்தம மனஸ்தாபத்தைக் கொடுப்போம். இரண்டாவது—அவர்கள் பாவத்தைப் பொறுத்துக்கொள்வோம். மூன்றாவது—சாக மூன்று நாளைக்குமுன் அவர்கள் கண்ணிலே தரிசிப்போம். நான்காவது—பாவசங்கீர்த்தனங்கொடுப்போம். ஐந்தாவது—இப்பிரகாரம் நடக்கிறவர்களை சமமாக நம்முடைய மோட்சத்தில் வைத்துக்கொள்ளுவோமென்று சேசுநாதர்சுவாமி தமது திருவாக்கினாலே திருவுளம் பற்றினார்.



## சேசுவின் திரு இருதயத்திற்கு நவநாட் செபம்.

"கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் அகப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்," என்று திருவுளம்பற்றியிருக்கிற திவ்விய சேசுவே! தேவரீருடைய இருதயத்தினின்று உற்பத்தியாகி, ஆராதனைக்குரிய உமது திரு நாவினால் உரைக்கப்பட்ட இந்த வாக்குத்தத்தங்களை நம்பிக்கொண்டு உயிருள்ள விசுவாசத்தால் ஏவப்பட்டு உம்முடைய திருப்பாதத்தில் இதோ அடியேன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கித் தாழ்ச்சியுடன் கேட்டுக்கொள்ளும் மன்றாட்டு ஏதென்றால்,—

சகல நன்மைகளுக்கும் பேறுபலன்களுக்கும் வற்றாத ஊறணியாகிய தேவரீருடைய திரு இருதயத்தினின்று அல்லாமல் வேறே யாரிடத்தினின்று இதைக் கேட்கப்போகிறேன். தயாள சம்பன்ன ஐசுவரியங்களெல்லாம் அடங்கிய பொக்கிஷத்திலன்றி வேறெங்கே நான் தேடப்போகிறேன். சர்வேசுரன் தானே பிரசன்னமாகிறதுமாய் நாங்கள் அவரிடத்திற்குப்போக வழியுமாயிருக்கிற உமது திரு இருதய வாசலிடத்தில் வந்து தட்டாமல், வேறெங்கே நான் தட்டிக் கேட்கப்போகிறேன். ஆகையால் என் நேச சேசுவின் திரு இருதயமே! தேவரீருடைய தஞ்சமாகவே ஓடிவந்தேன். இக்கட்டு

இடைஞ்சலில் என் ஆறுதல் நீரே. துன்ப துயரத்தில் என் அடைக்கலம் நீரே. சோதனைத் தருணத்தில் எனக்கு ஊன்றுகோல் நீரே. தேவரீருக்குச் சித்தமானால் அற்புதம் வேண்டியிருந்தாலும் நடத்தி இந்த வரத்தை எனக்குத் தந்தருளுவீரென்று நம்பியிருக்கிறேன். தேவரீர் சித்தம் வைத்தாலே போதும்; என் செபம் பிரார்த்தனைகள் அநுகூலமாகும். திவ்விய சேசுவே! தேவரீருடைய நன்மை உபகாரங்களுக்கு நான் முழுதும் அபாத்திரவான்தான். ஆகிலும் நான் இதினாலே அவதைரியப்பட்டுப் பின்னடைந்து போவேனல்ல. தேவரீர் இரக்கத்தின் தேவனாகையால் துக்க மனஸ்தாபப்படும் தாழ்ச்சியுள்ள இருதயத்தைத் தேவரீர் தள்ளுவீரல்ல. உமது இரக்கமுள்ள கண்களால் என்னை நோக்கியருளும். என் நிர்ப்பாக்கியத்தையும் பெலவீனத்தையும் கண்ட மாத்திரத்தில் தேவரீருடைய கிருபைநிறைந்த இருதயம் எனக்கு இரங்காமல் போகாது.

இரக்கமுள்ள திரு இருதயமே! என் விண்ணப்பத்தின்மட்டில் தேவரீர் என்ன தீர்மானம் செய்தாலும் சரியே. தேவரீரை நான் வாழ்த்தி வணங்கிப் போற்றிப் புகழ்ந்து சேவிக்க நான் ஒருக்காலும் பின்வாங்குவேனல்ல. அன்புக்குரிய இரட்சகரே! ஆராதனைக்குரிய உம்முடைய திவ்விய இருதயத் தீர்மானத்திற்கு முழுதும் அமைந்து நடக்க நான் செய்யும் சகித்த முயற்சியைக் கிருபையாய்க் கையேற்றுக்



கொள்ளும். நானும் சகல சிருஷ்டிகளும் இப்படி உமது சித்தத்தை நாடி நடந்து சதாகாலத்திற்கும் இதை நிறைவேற்ற ஆசையாயிருக்கிறேன் சுவாமி. ஆமென் சேசு.

---

## அர்ச். பாப்பானவரால் புதிதாய் அங்கீகரிக்கப்பட்ட சேசுநாதருடைய திரு இருதயப் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா,

அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,

1. நித்திய பிதாவின் சுதனாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

2. பரிசுத்த கன்னித்தாயின் உதரத்திலே இஸ்பிரீத்து சாந்துவினால் உருவான சேசுவின் திவ்விய இருதயமே,

(எங்கள்பேரில் இரக்கமாயிரும்.)

3. தேவ வார்த்தையான சுதனோடு ஓரே பொருளாய் ஒன்றித்திருக்கும் சேசுவின் திவ்விய இருதயமே,

4. அளவற்ற மகத்துவப் பிரதாப நிறைந்த சேசுவின் திவ்விய இருதயமே,

5. சர்வேசுரனுடைய அர்ச்சிக்கப்பட்ட ஆலயமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

6. அதியுன்னத ஆண்டவரின் வாசஸ்தலமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

7. சர்வேசுரனுடைய வீடும் மோட்சத்தின் வாசலுமான சேசுவின் திவ்விய இருதயமே,

8. சிநேக அக்கினி சுவாலித்தெரியும் சூளையான சேசுவின் திவ்விய இருதயமே,

9. நீதியும் சிநேகமும் தங்கி இருக்கும் இல்லிடமான சேசுவின் திவ்விய இருதயமே,

10. தயாளமும் சிநேகமும் நிறைந்த சேசுவின் திவ்விய இருதயமே,

11. சகல புண்ணியங்களுஞ் சம்பூரணமாய் நிறையப்பெற்ற சேசுவின் திவ்விய இருதயமே,

12. எவ்வித ஸ்துதி புகழ்ச்சிக்கும் முற்றும் உரிய சேசுவின் திவ்விய இருதயமே.

13. இருதயங்களுக்கெல்லாம் அரசும் அவைகளின் மத்திய ஸ்தானமுமான சேசுவின் திவ்விய இருதயமே,

எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.



14. ஞானமும் அறிவும் நிறைந்த பூரண பொக்கிஷமான சேசுவின் திவ்விய இருதயமே,

15. தெய்வத்துவ சம்பூரணம் தங்கி வாசஞ்செய்யும் சேசுவின் திவ்விய இருதயமே,

16. உமது பிதாவுக்கு உகந்த பிரிய நேசமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,

17. உம்மிடத்தில் நிறைந்திருக்கும் நன்மைகளை நாங்கள் அனைவோரும் பெற்று மகிழச்செய்யும் சேசுவின் திவ்விய இருதயமே,

18. நித்திய சிகரங்களின் ஆசையாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

19. பொறுமையும் மிகுந்த தயாளமுமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,

20. உம்மை மன்றாடிப் பிரார்த்திக்கும் சகலருக்கும் சம்பூரணங்கொடுக்குந் தாராளமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,

21. ஜீவியத்துக்கும் அர்ச்சியசிஷ்டதனத்துக்கும் ஊற்றாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

22. எங்கள் பாவங்களின் மன்னிப்புக்கேற்ற பரிகாரமான சேசுவின் திவ்விய இருதயமே,

23. நிந்தை அவமானங்களால் நிறைந்து மிகுந்த சேசுவின் திவ்விய இருதயமே,

எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

24. எங்கள் அக்கிரமங்களின் நிமித்தம் நொந்து வருந்தின சேசுவின் திவ்விய இருதயமே,

25. *மரணமட்டுங் கீழ்ப்படிந்திருந்த சேசுவின் திவ்விய இருதயமே,

26. ஈட்டியால் குத்தி ஊடுருவப்பட்ட சேசுவின் திவ்விய இருதயமே,

27. சர்வ ஆறுதலின் ஊற்றாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

28. எங்கள் சீவனும் உத்தானமுமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

29. எங்கள் சமாதானமும் ஒற்றுமைப் பந்தனமுமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

30. பாவங்களின் பலியான சேசுவின் திவ்விய இருதயமே,

31. உம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களுக்கு இரட்சண்ணியமான சேசுவின் திவ்விய இருதயமே,

32. உம்மிடம் மரிக்கிறவர்களின் நம்பிக்கையாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

33. சகல அர்ச்சியசிஷ்டவர்களின் ஆனந்தமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.



உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.
எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும் சுவாமி.
எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

மு.—இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள சேசுவே,

து.—எங்கள் இருதயம் உமது இருதயத்தைப்போலாகும்படி கிருபைசெய்யும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லபரான நித்திய சர்வேசுரா! உமக்கு மிகவும் பிரிய குமாரனுடைய இருதயத்தையும், அவர் பாவிகள் பேரால் உமக்குச் செலுத்தின பரிகாரத்தையும், ஸ்துதி புகழ்ச்சியையும் கிருபையாய்ப் பார்த்தருளுஞ் சுவாமி. உமது இரக்கத்தை மன்றாடிக் கேட்பவர்களுக்கு தேவரீர் இரங்கி மன்னிப்புக்கொடுத்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் சுயஞ்சீவியராய்ச் சதாகாலமும் இராச்சிய பரிபாலனஞ் செய்யும் உமது திவ்விய குமாரன் சேசுக்கிறீஸ்துநாதர் பெயரால் எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமி. ஆமென் சேசு.

☞ 1899-ம் வருஷம் ஏப்ரில்-மீ 2-ம் உ பதின்மூன்றாம் சிங்கராயரென்னும் அர்ச் பாப்பானவர் இந்தப் பிரார்த்தனையை பக்தியோடு சொல்லுகிற ஒவ்வொரு விசைக்கும் 300 நாட்பலனைக் கட்டளையிட்டிருக்கிறார்.

## சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய இருதயத்துக்கு செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரச்செபம்.

எங்கள் திவ்விய இரட்சகராகிய சேசுக்கிறீஸ்துவின் திரு இருதயமே, நாங்கள் மிகவும் நீசப்பாவிகளாயிருந்தாலும் உம்முடைய தயையை நம்பிக்கொண்டு உமது சந்நிதியில் பயபத்தியுள்ள வணக்கத்தோடே சாஷ்டாங்கமாக விழுந்து நீர் எங்கள்பேரில் இரக்கமாயிருக்கப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். எங்கள் பாவங்களையும் நன்றிகெட்டதனத்தையும் நினைத்து மிகவும் மனஸ்தாபப்படுகிறோம். அதுகளை அருவருத்து என்றென்றைக்கும் விலகிவிடவும், எங்களாலே ஆனமட்டும் அதுகளைப் பரிகாரஞ் செய்யவும் துணிகிறோம் சுவாமீ. அடியோர்கள் உமக்குச் செய்த தோஷ துரோகங்களுக்காகவும், அஞ்ஞானிகள் பதிதர் பொல்லாத கிறீஸ்துவர்கள் முதலானவர்கள் உமக்குச் செய்கிற நிந்தை அவமானங்களுக்காகவும்; மிகுந்த துக்க மனஸ்தாபப்பட்டு அதுகளைத் தேவரீர் பொறுக்கவும், சகலரையும் நல்ல வழியிலே திருப்பி இரட்சிக்கவும் வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். உம்முடைய திரு இருதயத்துக்குச் செய்யப்பட்ட சகல நிந்தை அவமான அகோரங்களுக்குப் பரிகாரமாக அற்பமாகிய எங்கள் ஆராதனை வணக்க தோத்திரங்களையுமல்லாமல் மோட்சத்தில் வாழுகிற



சகல சம்மனசுக்கள் அர்ச்சியசிஷ்டவர்களின் ஆராதனைப் புகழ்ச்சிகளையும், பூலோகத்திலுள்ள சகல புண்ணியாத்துமாக்களின் ஸ்துதி நமஸ்காரங்களையும் மிகுந்த தாழ்ச்சி விநயத்தோடே தேவரீருக்குச் செலுத்துகிறோம். மீளவும் எங்கள் திவ்விய சேசுவே, எங்களுக்கு ஏக நம்பிக்கையே, அடியோர்கள் எங்களை முழுதும் இப்போதைக்கும் எப்போதைக்கும் உம்முடைய திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கிறோம் சுவாமீ. தேவரீர் எங்கள் இருதயத்தை உமது கைவசமாக்கிச் சுத்தப்படுத்தி அர்ச்சியசிஷ்ட இருதயமாகச் செய்தருளும். நாங்கள் சீவனோடே இருக்குமட்டும் எங்களைச் சகல சத்துருக்களுடைய சற்பனைகளிலேயும் நின்று காத்திரட்சியுஞ் சுவாமீ. தேவரீர் சகல மனுஷர்களுக்காகவும் சிலுவைமரத்தில் சிந்தின திரு இரத்தத்தைப் பார்த்து இந்த மன்றாட்டுக்களைத் தந்தருளுஞ் சுவாமீ. ஆமென்சேசு.

---

## முத்திப்பேறுபெற்ற மார்கரீத் மரியம்மாள் உண்டாக்கின சேசுநாதர் திரு இருதயத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுக்குஞ் செபம்.

சேசுநாதருடைய திரு இருதயத்துக்கு அடியாள் (இன்னாள்) என்னை முழுதும் கையளித்து ஒப்புக்கொடுக்கிறேன். என்னில் உள்ளதும் எனக்கு உள்ளதுமான சகலமும், அத்திரு இருதயத்தையே சிநேகித்து ஸ்துதித்து வணங்கும்படியாக என்னையும் என் சீவன் உயிரையும்

என் கிரியைகள் முதலிய எனக்கு வரும் துன்ப வருத்தங்கள் சகலமும் அத்திரு இருதயத்துக்குப் பாதகாணிக்கையாக வைக்கிறேன். திவ்விய இருதயத்துக்கு முழுதும் சொந்தமாயிருப்பதும், அதற்கு மனத்தாங்கல் வருவிக்கக்கூடிய சகலத்தையும் என் முழுமனதோடு அருவருத்துத்தள்ளி அத்திரு இருதயத்தின்மட்டில் எனக்குள்ள சிநேகத்தைக் காண்பிக்கச் சகலமும் செய்வேன் என்பதும், இதுவே சற்றும் மாறாத என் தீர்மானமாமே.

ஓ! மதுரமான சேசுவின் திரு இருதயமே! இனிமேலாக நீரே என் சிநேகத்துக்கெல்லாம் முற்றும் உரியவர். நீரே என் உயிரின் ஏக காவல். எனது இரட்சண்ணியத்தின் ஆதார நம்பிக்கை நீரே. நீரே என் பலவீனத்தைத் தாங்கும் அமிர்தம். என் சீவிய நாட்களில் நான் செய்த குற்றங்குறைகளைப் பரிகரிப்பவர் நீரே. நீரே என் உயிர்பிரியும் வேளையில் எனக்கு ஸ்திரமான அடைக்கலம். ஓ! தயாளம்நிறைந்த சேசுவின் திரு இருதயமே! உமது பிதாவின் சமுகத்தில் நீரே எனக்காக மன்றாடி அவருடைய நீதியின் கோபாக்கினை என்மேல் விழாதபடி தடுத்தருளும். ஓ! சிநேகப் பிரியமான சேசுவின் திரு இருதயமே! என் பலவீனத்தைப் பார்க்கையில் எனக்கு முற்றும் பயமும், உமது தயாளத்தை நினைக்கையில் எனக்கு முழு நம்பிக்கையும் வருவதினாலே என் நம்பிக்கை யாவும் உமதுபேரில் வைக்கிறேன்.



ஆனதினாலே உமக்குப் பிரியமற்றதும் விரோதமுமான எதுவும் என்னிடத்தில் இருந்தால் அதை உமது சிநேக அக்கினியினாலே சுட்டெரித்தருளும். நான் உம்மை என்றும் மறவாமலும் உம்மைவிட்டு என்றும் பிரியாமலும் இருக்கும்படி உமது தூய சிநேகத்தை என் இருதயத்தில் பதிப்பித்தருளும். நான் உமது சொந்த அடிமையாகச் சீவிப்பதும் சாவதுமே என் சர்வ பாக்கியமாகச்செய்ய ஆசிப்பதினாலே என் பெயரை உமது திரு இருதயத்தில் எழுதிவைத்தருளவேண்டுமென்று உமது தயாள இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறேன் சுவாமீ. ஆமென் சேசு.

---

**சேசுவின் திரு இருதயத்தைநோக்கி அர்ச். ஜேர்த்துருத்தம்மாள் தினந்தோறும் ஜெபித்த ஜெபம்.**

சேசுநாதருடைய திவ்விய இருதயமே! உயிருள்ளதும் உயிர் தருகிறதுமாகிய நித்திய சீவியத்தின் ஊறணியே! தெய்வீகத்தின் அளவில்லாப் பொக்கிஷமே! அவியாத தேவ சிநேக அக்கினிச் சூளையே வாழ்க! நீரே என் அடைக்கலமும் ஆதரவுமாமே. என் அன்புக்குரிய இரட்சகரே, உம்முடைய திருஇருதயத்தில் இடைவிடாமல் பற்றி எரிகிற திவ்விய அக்கினியினால் என் இருதயத்தையும் சுட்டெரியும். உமது அன்பினின்று ஏராளமாய்ப் பாய்கிற வரப்பிரசாத ஜலத்தை என் இருதயத்தில் பொழிந்தருளும். என் மனம் தேவரீருடைய திருவுளத்தோடு ஏகமாகி, எல்லாத்திலும் உமது

சித்தத்துக்கு ஒத்ததாயிருக்கத்தக்கதாக என் இருதயம் உமது திரு இருதயத்தோடு ஒன்றித்திருக்கச் செய்யும். உமது திருவுளமே என் ஆசைகளுக்கும் கிரியைகளுக்கும் திடமான மாதிரிகையும் பிரமாணமுமாய் இருக்கக்கடவதாக. ஆமென் சேசு.

## திவ்வியநற்கருணையின் சந்நிதியிலே வேண்டுதல்.

நிகரில்லாத பரம அன்பின் மிகுதியினாலே திவ்வியநற்கருணையில் எழுந்தருளி எங்கள் பீடங்களின்மேல் நிலையாயிருக்கத் தயைபுரிந்த மதுர சேசுவே! அன்புக்குரிய இரட்சகரே! தேவரீர் பரம கர்த்தனென்றுஞ் சர்வத்துக்கும் அதிபதியான கடவுளாகிய என் தெய்வமென்றும் விசுவசித்து நம்பி, இதிலே உம்மைமிகுந்த தாழ்ச்சி வணக்கத்தோடே ஆராதிக்கிறேன். பரம திவ்விய நற்கருணையிலிருக்கிற உமக்குப் பாவிகள் செய்கிற துரோகங்களைத் தேவரீர் பாராட்டாமல் தேவரீர் அடியோர்கள் மேலில் காண்பிக்கிற மட்டில்லாத பட்சத்தைப்பற்றி முழுமனதோடே உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறேன். எங்கள் நன்றிகெட்டதனத்தின்பேரில் மிகுந்த விசனப்பட்டு, அனந்த மகிமையுள்ள பரம தேவனே, ஆராதனைக்குரிய இந்தத் தேவதிரவிய அநுமானத்திலிருக்கிற உமக்குச் செய்யப்பட்டதும் இனிச் செய்யப்படுவதுமாகிய துரோகங்களுக்கும் அவமானங்



களுக்கும் நிந்தைகளுக்கும் பரிகாரமாக என்னாலியன்றமட்டும் பத்திவணக்கத்தோடும், என் இருதயத்திலுள்ள முழு பட்சத்தோடும் உமக்கு நமஸ்காரஞ்செய்ய வருகிறேன். ஆ! என் திவ்விய கர்த்தாவே, முன்னாள் நானே அநேகம் விசை உம்முடைய சந்நிதியில் வணக்கக்குறைச்சலாய் நடந்ததுக்குந் தேவபத்தி சிநேகமில்லாமல் அசட்டையாய் உம்மை வாங்கிக்கொண்டதுக்கும் அடியாள் படுகிற மிகுதியான வியாகுலத்தைத் தேவரீருக்கு எவ்விதமாய்ச் சொல்லப்போகிறேன்!

தயவுள்ள கர்த்தாவே! அடியோர்களுடைய பாவதுரோகங்களைப் பொறுத்து, உம்முடைய அளவில்லாத கிருபையை மாத்திரம் நினைத்தருளுஞ் சுவாமி. தேவரீருடைய மட்டற்ற அன்பு விளங்குகிற இந்தத் தேவதிரவிய அநுமானத்தில் உம்மை வணங்கவும், எல்லாருடைய வணக்கத்தையும் உமக்கு வருவிக்கவும் எனக்குள்ள பெரும் ஆசையை ஏற்றுக்கொள்ளுஞ் சுவாமி. மெய்யாகவே சம்மனசுக்களும் அர்ச்சியசிஷ்டவர்களும் இதிலே உம்மைச் சிநேகித்து ஸ்துதித்து ஆராதிக்கிறதுபோலே, நானும் என் முழுமனதோடே உம்மை நேசித்துத் தோத்தரித்து வந்தித்து வணங்க ஆசைப்படுகிறேன். மேலும் நான் சாஷ்டாங்கமாக விழுந்து ஆராதிக்கிற உமது இந்தத் திருச் சரீரத்தையும், விலைமதியாத இரத்தத்தையும்பற்றி, நான் இந்த திவ்விய நற்கருணையில் உம்மைப்

ப்பயபக்தி வணக்கத்தோடே நமஸ்கரிக்கிறதினாலும், அதைத் தகுந்த ஆயத்தத்தோடே வாங்கிக்கொள்ளுகிறதினாலும் உம்முடைய கிருபையடைந்து, என் மரணத்துக்குப் பின்பு சகல மோட்சவாசிகளோடேகூடப் பேரின்ப பாக்கியத்தில் நித்தியமாய் உம்மைத் தரிசித்து ஸ்துதிக்கிறதற்குப் பாத்திரவதியாகும்படியாக எனக்கு அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமி.—ஆமென்சேசு.

சர்வேசுரா சுவாமி! உம்முடைய திவ்விய குமாரனுமாய் எங்கள் பரம குருவுமாயிருக்கிற சேசுநாதர் அடியோர்கள் செய்த பாவங்களின் பரிகாரமாக உமக்குச் செலுத்துகிற பரிசுத்த பலியைப் உம்முடைய தேவாலயத்தில் நின்றுந் தேவரீர் பரமண்டலங்களில் வீற்றிருக்கிற உன்னத ஸ்தலத்திலே நின்றும் பார்த்து, எங்கள் எண்ணிறந்த அக்கிரமங்களைப் பொறுத்தருளும். சிலுவையினின்று எங்கள் திவ்விய இரட்சகரும், மனுஷாவதாரத்தால் எங்கள் சகோதரருமாகிய சேசுவினுடைய திரு இரத்தத்தின் சத்தம் உம்மை நோக்கிக் கூப்பிடுகின்றது. எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமி. சுவாமி, உம்முடைய கோபத்தை அமர்த்தியருளும். எங்கள்மேல் உம்முடைய கிருபாகடாக்ஷம் வைத்து நன்மைபுரியும்; என் கர்த்தாவே அதிக தாமதஞ்செய்யாதேயும்; இவ்வூரின்மேலும் இச்சனத்தின்மேலும் தேவரீர் தயவாயிருக்கும்படிக்கு உம்முடைய திருநாமம் பிரார்



த்திக்கப்பட்டபடியினாலே உமக்குத் தோத்திரமாகத்தானே எங்களுக்குக் கிருபைசெய்தருளும்.—ஆமென்சேசு.

பரிசுத்த பரம திவ்வியநற்கருணைக்கு எந்நேரமுந் தோத்திரமும் ஸ்துதியுமுண்டாகக்கடவது.

இப்படி மும்முறை சொல்லுகிறது.

¶ விபரம்.—முந்தின இவ்விரண்டு செபங்களைத் தகுந்த ஆயத்தத்தோடே சொல்லுகிறவர்களுக்கு அர்ச். பாப்பானவர் மிகுந்த பலன்களைக் கட்டளையிட்டார்

## மரண அவஸ்தைப்பட்ட சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய இருதயத்துக்குச் செலுத்தத் தகும் பலனுள்ள செபம்.

கருணாம்பர சேசுவே! ஆத்துமங்களை நேசிக்கிறவரே, தேவரீருடைய திவ்விய இருதயமானது பூங்காவனத்திலுஞ் சிலுவையிலேயும் பட்ட அவஸ்தையையும், தேவரீருடைய மாசில்லாத திருத்தாயானவள் அநுபவித்த வியாகுலங்களையும் பார்த்து இன்றுதானே பூமியிலெங்கும் அவஸ்தையாய்க்கிடந்து சாகப்போகிற பாவிகளைத் தேவரீருடைய திரு இரத்தத்தினால் சுத்திபண்ணியருளும்.

மரண அவஸ்தைப்பட்ட சேசுவின் திவ்விய இருதயமே! இன்று மரிக்கிறவர்களின்பேரில் இரக்கமாயிரும்.

ஆமென்சேசு.

☞ இந்தச் செபத்தைச் செபிக்கும் ஒவ்வொரு விசைக்கும் 100-நாள் பலனுண்டு. மீளவும் ஒவ்வொரு மாத முழுமையும் தினந்தோறும் வெவ்வேறு நேரத்தில் இச்செபத்தை மூன்று விசை சொன்னால் பரிபூரண பலன் அடையலாம். இந்தப் பரிபூரண பலன் அடைவதற்குப் பாவசங்கீர்த்தனம் பண்ணி, தேவநற்கருணை வாங்கி ஓர் கோவிலைச் சந்தித்து, அர்ச் பாப்பானவருடைய சுகிர்த கருத்துகளுக்காக வேண்டிக்கொள்ள வேண்டியது. இந்தப் பரிபூரண பலனை உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படுகிற ஆத்துமங்களுக்கு ஒப்புக்கொடுக்கலாகும்.

---

## சேசுநாதருடைய திவ்விய இருதயத்துக்குத் தன்னை முழுதும் ஒப்புக்கொடுக்கிற செபம்.

அநவரத காலமும் சம்மனசுக்களாலேயும் மனுஷராலேயும் உத்தமபிரகாரமாய் ஆராதிக்கப்படுகிறதற்குப் பாத்திரமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய இருதயமே! சகலமான இஷ்டப்பிரசாதமும் ஒழியாமல் ஊறுகிற ஊற்றே! சகல இருதயங்களையும் ஆளுகிறதற்கு மிகவும் யோக்கியமான அரசே! என் இருதயத்தையும் அதிலே உண்டான ஆசை, கருத்து, பட்சம் முதலிய எல்லாவற்றையும் உமக்கே முழுதும் ஒப்புக்கொடுக்கிறேன். அன்புக்குரிய சேசுவே! என் ஆண்டவராகிய இரட்சகரே! என் இருதயத்திலே எழுந்தருளிவாரும். சுவாமீ, அதிலே இராச்சியபாரம் பண்ணும். அதில் உமக்குப் பொருந்தாத துர்க்குணங்களைத் தள்ளி நிர்மூலமாக்கும்; குறைச்சல்



எல்லாத்தையும் தீர்த்துப்போடும். பின்னையும் என் இருதயம் தேவரீர்பேரிலே அத்தியந்த பத்தியாயிருக்கத்தக்கதாக எனக்கு அநுக்கிரகம் பண்ணியருளும். மதுரமான சாந்தகுணத்தையும், மாறாத பொறுமையையும், மட்டற்ற தாழ்ச்சியையும், இலௌகீகப் பொய்ச்சுகநன்மைகளின்பேரிலே மிகுந்த அருவருப்பையும், தேவரீருக்குப் பொருந்தின தர்மங்களைச் செய்வதற்கு மாறாத ஆசையையும், அதற்கு வேண்டிய பலத்தையும், எனக்குத் தந்தருளும். தேவரீர்தாமே சகலமான காரியங்களிலேயும் எனக்குத் துணையாயிருக்கவும், கஸ்தி நோவு முதலான துன்பதுரிதங்களிலே எனக்கு ஆறுதலாயிருக்கவுங் கிருபைசெய்தருளும். கடைசியாய்த் தேவரீருடைய விலைமதியாத திரு இரத்தத்தின் பலன்களைப் பார்த்துத் தேவரீரை ஒரு மன்றாட்டு கேட்கிறேன். அதேதென்றால் தேவரீருடைய திவ்விய சிநேக அக்கினியிலே என் இருதயத்தை எரியப்பண்ணியருளுஞ் சுவாமீ. இதல்லாமல் என்னுடைய பேரைத் தேவரீருடைய திரு இருதயத்திலே எழுதி வைத்து அடியானை இடைவிடாமல் அத்தியந்த தயாளத்தோடே நினைத்து நடத்தி இரட்சித்துக்கொள்ளும் சுவாமி. பிதாவுக்கும் சுதனுக்கும் இஸ்பிரீத்து சாந்துவுக்கும் தோத்திரமுண்டாகக்கடவது.

என் அன்பாகிய சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமி! இவ்வுலகத்தில் எனக்கு உண்டான

வஸ்துக்களுக்குள்ளே என் இருதயம் மாத்திரமே எனக்குச் சொந்தமாயிருக்கின்றது. எனக்குள்ள ஆஸ்தி பாஸ்தி முதலிய சகலத்தையும் அல்லாமல் என் பிராணனை முதலாய் நான் சம்மதியாதேபோனாலும் பிறத்தியார் பறிக்கக் கூடுமே; என் இருதயமென்கிற என் மனமோவெனில், நான் சம்மதியாதேபோனால் ஒருவராலும் பறிக்கக்கூடாது. ஆனபடியினாலே எனக்குச் சொந்தமாயிருக்கிற என் இருதயத்தைத் தேவரீருக்கு முழுதும் ஒப்புக்கொடுக்கிறேன். இனி என் துர்க்குணத்தினாலே அதைத் திரும்பத் தேவரீரிடத்தினின்று பறித்துக்கொள்ளுகிறதற்கு எனக்குக் கருத்துவந்தாலும், தேவரீர் அதற்கு உத்தாரங்கொடாமல் என் இருதயத்தை உமது வசத்திற் பத்திரமாய் வைத்துக் காப்பாற்றியருளும். அதைத் தேவரீருடைய திரு இருதயத்துக்கு ஒப்பாக்கித் தேவரீருக்குப் பிரியமாயிருக்கத்தக்கதாக அநுக்கிரகம் செய்தருளும் சுவாமி.—ஆமென் சேசு.

---

## சேசுநாதருடைய திரு இருதயத்தின் செபமாலை.

**திவ்விய கர்த்தர் பாடுபட்ட ஐந்து திருக் காயங்களைக் குறித்து ஐம்பதுமணிச் செபம்.**

முந்த முந்த சிலுவையின்மேலே "கிறீஸ்துவினுடைய ஆத்துமமானதே" என்கிற மந்திரத்தைச் சொல்லுகிறது.



கிறீஸ்துவினுடைய ஆத்துமமானதே, என்னை அர்ச்சியசிஷ்டவளாகப் பண்ணியருளும்.

கிறீஸ்துவினுடைய திருச்சரீரமே, என்னை இரட்சித்துக்கொள்ளும்.

கிறீஸ்துவினுடைய திரு இரத்தமே, என்னை உம்முடைய வசமாக்கி எனக்குத் திருப்தி உண்டாகப்பண்ணியருளும்.

கிறீஸ்துவினுடைய விலாவிலே நின்று ஓடி விழுந்த திருத்தண்ணீரே, என்னைக் கழுவும்.

கிறீஸ்துவினுடைய திருப்பாடுகளே, எனக்குத் தேற்றரவு உண்டாகப்பண்ணியருளும்.

நல்ல சேசுவே, நான் கேட்கிறதைத் தந்தருளும்.

உம்முடைய திருக்காயங்களுக்குள்ளே என்னை மறைத்துக்கொள்ளும்.

என்னை உம்மைவிட்டுப் பிரியவொட்டாதேயும்.

துஷ்ட சத்துருக்களிடத்திலே நின்று என்னை இரட்சித்துக்கொள்ளும்.

என் மரணத்தருவாயிலே நீர் என்னை அழைத்து, உம்முடைய சந்நிதியில் உட்பட்டு சகல அர்ச்சியசிஷ்டவர்களோடே ஊழியுள்ளகாலம் நான் உம்மைத் தோத்திரம் பண்ணும்படிக்கு அடியானை வரக் கற்பித்தருளும். ஆமென் சேசு.

¶ விவரம்.—இந்தச் செபம் செபிக்கிறவர்களுக்கு முந்நூறு நாட் பலனும், நன்மை வாங்கினபின் சொல்லுகிறவர்களுக்கு ஏழு வருஷம் ஏழு மண்டலப் பலனுமாம்.

பின்னும் பெரிய மணியில்: இருதயத்தில் தாழ்ச்சியுஞ் சாந்தமுமுள்ள சேசுவே! என் இருதயத்தைத் தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும்.

சிறு மணியில்: சேசுவினுடைய மதுரமான இருதயமே! என் சிநேகமாயிரும்.

பத்து மணி முடிந்தபின்: மரியாயின் மதுரமான இருதயமே! என் இரட்சணியமாயிரும்.

¶ விவரம்.—இம்மூன்று மனவல்லயச் செபங்களில் ஒவ்வொன்றுக்கும் முந்நூறுநாள் பலனுண்டு.

**ஐம்பதுமணி முடிந்தபின்பு.**

1-வது.—சேசுவின் திரு இருதயமே! எங்கள்பேரில் இரக்கமாயிரும்.

2-வது.—ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த அர்ச்சியசிஷ்ட மரியாயின் மதுரமான இருதயமே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

3-வது.—திரு இருதயத்தின் ஆண்டவளே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

4-வது.—சேசுநாதருடைய திரு இருதயமானது எங்கும் சிநேகிக்கப்படுவதாக.

5-வது.—என் சேசுவே இரக்கமாயிரும்.

6-வது.—திரு இருதயத்தின் சிநேகிதரான அர்ச். சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

¶ விவரம்.—இந்த ஆறு மனவல்லயச் செபங்களில் ஒவ்வொன்றுக்கும் ஆறுநாட் பலன்.



**சேசுநாதர் முத். மார்கரீத் மரியம்மாளுக்கு, தமது திரு இருதயத்தின்பேரில் பத்தியுள்ளவர்களுக்காக கொடுத்த வார்த்தைப்பாடுகள்.**

1-வது.—தங்கள் அந்தஸ்தின் கடமைகளெல்லாஞ் சுமுத்திரையாய் நிறைவேற்றவேண்டிய சகல வரப்பிரசாதங்களையும் அளித்தருளுவோம்.

2-வது.—அவர்களுடைய குடும்பங்களில் சமாதானத்தை விளைவிப்போம்.

3-வது.—அவர்களுடைய சகல துன்பங்களில் ஆறுதலாயிருப்போம்.

4-வது.—அவர்கள் உயிரோடிருக்கும்போதும் விசேஷமாய் அவர்களுடைய மரண சமயத்திலும் அவர்களுக்குத் தவறாத அடைக்கலமாயிருப்போம்.

5-வது.—அவர்கள் தொடங்குகிற சகல காரியங்களும் அனுகூலமாகும்படி திரளான வரப்பிரசாதங்களைப் பொழிந்தருளுவோம்.

6-வது.—நமது இருதயமானது பாவிகளுக்கு தயாளத்தின் ஊற்றுங் கரைகாணாத சமுத்திரமுமாயிருக்கும்.

7-வது.—புண்ணியத்தின் வழியில் சுறுசுறுப்பற்ற ஆத்துமாக்கள் சுறுசுறுப்பை அடைவார்கள்.

8-வது.—புண்ணியத்தின் வழியில் சுறுசுறுப்புள்ள ஆத்துமாக்கள் அதிசீக்கிரமாய் மேலான உத்தமதனத்தை அடைவார்கள்.

9-வது.—எந்தெந்த வீடுகளில் நமது திரு இருதயப் படத்தை ஸ்தாபித்து சங்கிப்பார்களோ அந்த வீடுகளை முதலாய் நாம் ஆசீர்வதிப்போம்.

10-வது.—பாவத்தில் முதிர்ந்து அதில் நிலைக்கொண்ட ஆத்துமாக்களைத் திருப்புகிறதற்கான வரத்தைக் குருக்களுக்குத் தந்தருளுவோம்.

11-வது.—நமது இருதயத்தின்பேரில் பக்தி மற்றவர்களிடத்திலும் உண்டாகப் பிரயாசப்படுகிறவர்களின் நாமங்களை நமது இருதயத்தில் ஒருக்காலும் அழிக்கப்படாத விதமாய் அச்சுப்போலே பதிப்பிப்போம்.

12-வது.—மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் ஒன்பது கிழமைகள் விடாமல் நன்மை வாங்குகிறவர்கள், சாகும்போது பாவத்துக்கு மனஸ்தாபப்பட்டு சாகும் வரம் அளவில்லா பிரிவுள்ள நமது இருதயத்தின் சிநேகம் கொடுக்குமென்று அவ்விருதயத்திலுள்ள இரக்க மிகுதியால் வார்த்தைப்பாடு கொடுக்கிறேன். இப்படிச் செய்பவர்கள் நமது சத்துருக்களாயாவது தேவதிரவிய அநுமானங்களின்றியாவது சாகமாட்டார்கள். அவர்கள் சாகும்வேளையில் நமது திரு இருதயம் அவர்களுக்கு நிச்சயமான அடைக்கலமாயிருக்கும்.



## காவலான சம்மனசைக் குறித்து செபம்.

எனக்குக் காவலாயிருக்கிற சர்வேசுரனுடைய சம்மனசானவரே, தெய்வீகக் கிருபையால் உம்மிடத்தில் ஒப்பிக்கப்பட்ட என்னை இன்று காத்து நடத்தி ஆண்டுகொண்டு என்னுடைய மரணவேளையிலும் ஆதரித்தருளும்.

¶ விவரம்.—இதைச் செபிக்கும் அந்தந்த விசைக்கு அறுநாட் பலனுண்டு.

## அர்ச். சவேரியார் அஞ்ஞானிகள் மனந்திரும்புகிறதற்காக உண்டாக்கின செபம்.

அநாதியுமாய்ச் சர்வத்தையும் படைத்தவருமாய் இருக்கிற சர்வேசுரா, அஞ்ஞானிகளுடைய ஆத்துமங்கள் உம்மால் சிருஷ்டிக்கவும் தேவரீருடைய இலட்சணச் சாயலாக ஏற்படுத்தவும் பட்டிருக்கிறதை நினைத்தருளும் சுவாமீ. இதோ தேவரீருடைய தோத்திரத்துக்கு விரோதமாய் நரக நிறைய அவர்கள் அதின் பயங்கரமான பாதாளத்திலே திரளாய் விழுந்து சேதமாய்ப் போகிறார்களே. ஆ! சுவாமீ, உமக்கு ஏக குமாரனாகிய சேசுநாதர் அவர்களை இரட்சிக்கத்தக்கதாகத் தம்முடைய விலைமதியாத திரு இரத்தத்தைச் சிந்தி எண்ணப்படாத கஸ்தி நோவுகளை அநுபவித்து மகா கடினமான மரணத்தையடைந்ததை நினைத்தருளும். ஆண்டவரே, அவர்கள் தங்கள் அஞ்ஞானங்களிலே மூர்க்கராய்ச் சகலருடைய திவ்விய இரட்சகராகிய உம்முடைய திருக்குமாரனை

நிந்திக்கவொட்டாமற் சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மன்றாட்டுக்களினாலும், உம்முடைய திருக்குமாரனின் பிரிய பத்தினியாகிய பரிசுத்த திருச்சபையின் வேண்டுதலினாலுந் தேவரீர் சித்தமிரங்கி அவர்களுடைய பாவ அக்கிரமங்களையுங் கீழ்ப்படியாமையையும் பாராமல் அவர்கள்மேற் கிருபைவைத்து அவர்கள் இப்போதாகிலும் முழுமனதுடனே திரும்பித் தேவரீரால் அனுப்பப்பட்டவரும் எங்கள் ஆண்டவருமாகிய சேசுக்கிறீஸ்துநாதரை வணங்கச் செய்தருளும். எங்களை மீட்டிரட்சித்த அந்தத் திவ்விய கர்த்தருக்குந் தேவரீருக்கும் முடிவில்லாத அநாதரகாலமுந் தோத்திரமுண்டாகக் கடவது.—ஆமென்சேசு.

மு.—சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களை நாங்கள் பேறுபெற்று அநுபவிக்கத்தக்கதாக,

து.—அர்ச். சவேரியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமீ, முத்திப்பேறுபெற்ற அர்ச். சவேரியாருடைய ஞானப்போதகத்தினாலேயும், அவர் பண்ணின அற்புதங்களினாலேயுஞ் சிந்துதேசத்திலுள்ள ஜனங்களைத் தேவரீருடைய திருச்சபையிலே அழைத்து உட்படுத்தச் சித்தமானீரே, அவருடைய பூச்சியமான புண்ணியபலன்களை ஸ்துதித்து வணங்குகிற



நாங்கள் அவருடைய சுகிர்த மாதிரிகைகளை அநுசரிக்க அநுக்கிரகஞ் செய்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்துத் தந்தருளும். —ஆமென்சேசு.

¶ விவரம்.—இந்தச் செபத்தை வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு ஒவ்வொரு விசைக்கும் முன்னூறு நாட் பலனுண்டு.

## இஸ்பிரீத்துசாந்துவின் மந்திரம்.

இஸ்பிரீத்துசாந்துவே, தேவரீரெழுந்தருளி வாரும், பரலோகத்திலே நின்று உம்முடைய திவ்விய பிரகாசத்தின் கதிர்களை வாவிடும்.

தரித்திரருடைய பிதாவே, கொடைகளைக் கொடுக்கிறவரே, இருதயங்களின் பிரகாசமே, எழுந்தருளிவாரும்.

உத்தம ஆறுதலானவரே, ஆத்துமங்களுக்கு மதுரமான விருந்தாடியே, பேரின்ப இரசமுள்ள இளைப்பாற்றியே,

பிரயாசத்திற் சுகமே, வெய்யிலிற் குளிர்ச்சியே, அழுகையிற் தேற்றரவே, எழுந்தருளி வாரும்.

வெகு ஆனந்தத்தோடே கூடியிருக்கிற பிரகாசமே, உமது விசுவாசிகளுடைய இருதயத்தின் உற்பனங்களை நிரப்பும்.

உம்முடைய தெய்வீகமின்றியே மனிதரிடத்திற் குற்றமில்லாததொன்றுமில்லை.

அசுத்தமாயிருக்கிறதைச் சுத்தம்பண்ணும், உலர்ந்ததை நனையும், நோவாயிருக்கிறதைக் குணமாக்கும்.

வணங்காததை வணங்கப்பண்ணும், குளிரோடிருக்கிறதைக் குளிர்போக்கும், தவறினதைச் செவ்வே நடத்தும்.

உம்மை நம்பின உம்முடைய விசுவாசிகளுக்கு உம்முடைய திருக்கொடைகள் ஏழையுங் கொடுத்தருளும்.

புண்ணியத்தின் பேறுகளையும், நல்ல மரணத்தையும், நித்திய மோட்சானந்தத்தையும் எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென் சேசு.

## அமிர்தநாதரும் அகுஸ்தீனும் என்கிற அர்ச்சியசிஷ்டவர்கள் உண்டாக்கின தோத்திரப்பாடல்.

கர்த்தரான சர்வேசுரா சுவாமீ, அடியோர்கள் தேவரீரைத் தேவனென்றும், ஆண்டவரென்றும் பாராட்டி ஸ்துதிக்கிறோம்.

தேவரீர் அநாதி பிதாவென்று பூலோகமெல்லாம் வணங்கித் தொழுகின்றன.

தேவரீரைச் சகல சம்மனசுக்களும் பரமண்டலங்களுஞ் சகல சத்துவகர் ஞானாதிக்கர் பத்திசுவாலகர் முதலானோரும் ஓயாத தொனியாய்ப் புகழ்ந்து, பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் சைனியத்துக்குக் கர்த்தராகிய சர்வேசுரனென்று கொண்டாடுகிறார்கள்.



பரலோக பூலோகமெங்கும் உமது மகிமைப் பிரதாபம் விளங்கி நிறைந்திருக்கின்றது.

தேவரீரைச் சுகுதிபெற்ற அப்போஸ்தலருடைய பிரதாபக் கூட்டமும், ஸ்துதிக்குரிய தீர்க்கதரிசிகளுடைய திரளும் வெண்டூய்மையணிந்த வேதசாட்சியர்தளமும் புகழ்கின்றது.

பூமண்டலமெங்கும் அர்ச். திருச்சபையானது அளவில்லாத மகிமைப்பிரதாபமுடைத்தான பிதாவாகிய தேவரீரையும், உம்முடைய பூச்சியமான ஏக திருச்சுதனையுந் தேற்றரவாகிய இஸ்பிரீத்துசாந்துவையும் ஸ்துதித்துக் கொண்டாடி வருகின்றது.

கிறீஸ்துவே, பரஞ்சோதி மகிமையுடைத்தான இராஜாவானவர் நீரே.

தேவரீரே பிதாவின் நித்திய சுதன்.

தேவரீர் மனுஷனை மீட்டிரட்சிக்கக் கன்னியாஸ்திரி உதரத்திற் சஞ்சரிக்கும் அருவருப்பைப் பாராமல் மனுஷாவதாரம் பண்ணினீர்.

தேவரீர் மரணத்தின் தாறுக்கோலை முறித்துச் செயித்து விசுவாசிகட்கு மோட்சராட்சியத்தைத் திறந்தீர்.

தேவரீர் பிதாவாகிய சர்வேசுரனுடைய ஆனந்த மகிமைப் பிரதாபத்தோடு அவருடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறீர்.

நடுத்தீர்க்க வருபவர் தேவரீர்தாமே என்று விசுவசிக்கிறோம்.

ஆதலால் தேவரீர் உம்முடைய விலைமதியாத திரு உதிரத்தால் மீட்டுக்கொண்ட தேவரீருடைய அடியோர்களுக்குக் கிருபை உதவிபண்ணியருள உம்மை மன்றாடுகிறோம்.

நித்திய மோட்சானந்த மகிமையில் அடியோர்களுந் தேவரீருடைய அர்ச்சியசிஷ்டவர்களோடே சேர்ந்திருக்கத் தயைபுரியும்.

ஆண்டவரே, உம்முடைய பிரிய சனத்தை இரட்சித்துக்கொள்ளும், உமது சுதந்தரமான திருச்சபையை ஆசீர்வதித்தருளும்.

நாங்கள் அநுதினமும் உம்மையே ஸ்துதிக்கிறோம்.

ஊழியுள்ளகாலம் என்றென்றைக்கும் உமது திருநாமத்தையே புகழுகிறோம்.

ஆண்டவரே, இன்று நாங்கள் பாவமின்றியே நடக்கத் தேவரீர் எங்களைக் காத்தருளும்.

எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமி, எங்கள்பேரில் தயையாயிரும்.

ஆண்டவரே, உம்மை நம்பியிருக்கிறேன், ஒருகாலும் அபசெய வெட்கப்படமாட்டேன்.—ஆமென்சேசு.

பிரார்த்திக்கக்கடவோம்.

கணக்காணாத தயைச் சமுத்திரமும் வற்றாத நன்மை ஊறணியுமாகிய சர்வேசுரா, தேவரீர் அடியோர்களுக்குத் தந்தருளின நல்லுபகாரங்களைப்பற்றி உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ்



செலுத்துகிறோம். வேண்டிக்கொள்ளுகிறவர்கள் கேட்கிற மன்றாட்டைத் தயைபுரிந்தளிக்கிறவராகிய தேவரீர் அடியோர்களைக் கைவிடாமற் பேரின்ப மோட்ச சம்பாவனைக்குப் பாத்திரவான்களாக்கி நித்திய காலத்துக்கு ஆசீர்வதித்தருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

## சிலுவைப்பாதை சேவிக்கிற சுருக்கமான வகை.

**பீடத்துக்கு முன்பாக சொல்லத்தகுஞ் செபம்.**

உத்தம மனஸ்தாப மந்திரத்தைச் சொல்லவும். பின்பு சொல்லத்தக்கதாவது: திவ்விய சேசுவே! எங்களுக்காகவும் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்காகவுஞ் சிலுவைப்பாதையைச் சேவிக்கிறவர்களுக்கு அளிக்கப்பட்ட பலன்களையடைய விரும்பித் தேவரீருடைய இரக்கத்தைக் கேட்டு மன்றாடுகிறோம்.

அர்ச். மரியாயே, வியாகுலமாதாவே! உம்மோடுகூடச் சிலுவைப்பாதையைச் சேவிக்க விரும்புகிற நாங்கள் அதினுடைய சகிர்த பலன்களை அடையும்படிக்கு எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

விவரம்.—1-வது.—ஒவ்வொரு ஸ்தலத்துக்கும் முன்பாக.

முதலோதி.—திவ்விய சேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறோம்.

துணைவர்.— அதேனென்றால் உம்முடைய அர்ச். சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர், என்னுஞ் செபத்தைச் சொல்லுகிறது.

2-வது.— ஒவ்வொரு ஸ்தலத்துக்கும் 1-பர. 1-பிரி. 1-திரி. சொல்லுகிறது.

### முதல் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையிலே அறையுண்டு மரணத்தையடையத் தீர்வையிடப்படுகிறதைத் தியானித்து நாங்கள் தேவரீரை வணங்கி நமஸ்கரிக்கிறோம். அகோரத் தீர்வையிலே நின்று எங்களை இரட்சிக்கருளுஞ் சுவாமீ.— 1-பர. 1-பிரி. 1-திரி.

### இரண்டாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீர் பாரமான சிலுவையைச் சுமந்துபோகிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். எங்களுக்கு இவ்வுலகில் வருகிற கஸ்தி பொல்லாப்புக்களைப் பொறுமையோடே அநுபவிக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.— 1-பர. 1-பிரி. 1-திரி.

### மூன்றாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின் கீழே முதல்விசை குப்புற விழுகிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் செய்கிற பாவங்களிலே மூர்க்கராய் நிலைக்கொள்ளாமல் உடனே அவைகளைவிட்டு எழுந்திருக்க அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.— 1-பர. 1-பிரி. 1-திரி.



### நான்காம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீருடைய பரிசுத்த மாதா உமக்கு எதிர்கொண்டு வருகிறதைக் கண்டு நீர் சொல்லிலடங்காத கஸ்தியை அநுபவிக்கிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் சாகும் வேளையிலே வியாகுலமாதாவின் அடைக்கலத்தை அடைய அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.— 1-பர. 1-பிரி. 1-திரி.

### ஐந்தாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவை சுமந்து போகிறதற்குச் சிரேனென்கிற சீமோன் உதவி செய்கிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். எங்களுக்கு நியமித்திருக்கிற சிலுவையாகிய துன்பங்களை உம்மோடுகூட நாங்கள் சுமக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.— 1-பர. 1-பிரி. 1-திரி.

### ஆறாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! வெரோணிக்கம்மாள் தேவரீருடைய திருமுகத்தைத் துடைக்கிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் முகத்தாட்சணியத்தைப் பாராமல் புண்ணியநெறியில் உறுதியாய் நடக்க அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.—1-பர. 1-பிரி. 1-திரி.

### ஏழாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின் கீழே இரண்டாம்விசை குப்புற விழுகிறதைக்

தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் எந்தப்பாவத்திலுந் திரும்ப விழாதபடிக்குக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ.—1-பர. 1-பிரி. 1-திரி.

### எட்டாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீர் உம்மைநோக்கி அழுகிற ஜெருசலேம் பட்டணத்து ஸ்திரீகளுக்கு ஆறுதல் சொல்லுகிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் பண்ணின பாவத் துரோகங்களுக்குத் துயரப்பட்டு அவைகளுக்காக எப்போதும் அழுதுகொண்டிருக்கக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ.—1-பர. 1-பிரி. 1-திரி.

### ஒன்பதாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின் கீழே மூன்றாம்விசை குப்புறவிழுகிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் சாவான பாவத்தோடே செத்து நித்திய நரகத்திலே விழாதபடிக்குக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ.— 1-பர. 1-பிரி. 1-திரி.

### பத்தாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீர் வஸ்திரங்கள் உரியப்படுகிறதையுந் தேவரீருக்குக் கசப்பான காடியைக் குடிக்கக் கொடுக்கப்படுகிறதையுந் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் சகலத்திலுந் தேவ சித்தத்துக்குக் கீழ்ப்



படிந்து பொறுமையோடே நடக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—1-பர. 1-பிரி 1-திரி.

### பதினோராம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையில் அறையப்படுகிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் இவ்வுலக செல்வங்களை வெறுத்துப் பரலோகத்தை மாத்திரமே நாடக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—1-பர. 1-பிரி. 1-திரி.

### பன்னிரண்டாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவைமரத்தில் உயிர்விடுகிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் உம்மை மாத்திரமே நேசித்து இஷ்டப்பிரசாதத்தோடே மரித்து பரகதியில் உம்மோடே வீற்றிருக்கக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ.—1-பர. 1-பிரி. 1-திரி.

### பதின்மூன்றாம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீருடைய திருச்சரீரஞ் சிலுவையினின்று இறக்கப்பட்டு வியாகுல மாதாவின் மடியிலே வளர்த்தப்படுகிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். எங்களுடைய இருதயத்திலே தேவரீருடைய திருக்காயங்களும் பரிசுத்த மாதாவின் வியாகுலங்களும் பதிந்திருக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—1-பர. 1-பிரி. 1-திரி.

### பதிநான்காம் ஸ்தலம்.

திவ்விய சேசுவே! தேவரீருடைய திருச்சரீரம் அடக்கம் பண்ணப்படுகிறதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் மரணபரியந்தம் தேவரீரை நேசிக்கவும், தேவரீருடைய பேரின்ப இராச்சியத்துக்குச் சேரவும் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—1-பர. 1-பிரி. 1-திரி.

சேசுக்கிறீஸ்நாதருடைய ஐந்து திருக்காயங்களைக் குறித்து —5-பர. 5-பிரி. 5-திரி.

அதன்பிறகு அர்ச். பாப்பானவருடைய சுகிர்த கருத்துகள் நிறைவேறும்படிக்கு—1-பர. 1-பிரி. 1-திரி.

---

### 113-ம் சங்கீதம்.

இஸ்ராயேல் இனத்தார் எஜிப்திலும் * யாக்கோபுடைய வீட்டார் துஷ்ட ஜனத்திலுமிருந்து புறப்படுகையில்:

யூதர் இனம் அவருடைய பரிசுத்த ஜனமும் * இஸ்ராயேல் அவருடைய இராஜாங்கமுமாயின.

கடல் அதைக்கண்டு ஓடி விலகிற்று. * யோர்தான் நதி பின்னிட்டுத் திரும்பிற்று.

மலைகள் ஆட்டுக்கிடாய்களைப்போலேயும் * குன்றுகள் ஆட்டுக் குட்டிகளைப் போலேயுந் துள்ளின.

கடலே நீ ஓடி விலகினதற்கும், * யோர்தான் நதியே நீ பின்னிட்டுத் திரும்பினதற்கும்,



மலைகளே! நீங்கள் ஆட்டுக்கிடாய்களைப்போலவும் * குன்றுகளே! நீங்கள் ஆட்டுக்குட்டிகளைப்போலவுந் துள்ளினதற்குக் காரணம் ஏது?

பூமியானது கர்த்தருடைய சமுகத்திலும் * யாக்கோபுடைய சர்வேசுரன் சந்நிதியிலும் அதிர்ந்தது.

அவரே கற்பாறையைத் தண்ணீர்த் தடாகங்களாகவும் * கன்மலையை நீர் ஊற்றுகளாகவும் மாற்றுகிறவர்.

எங்களுக்கு அல்ல கர்த்தாவே, எங்களுக்கு அல்ல; * உமது நாமத்துக்கே தோத்திரத்தைச் செலுத்தும்.

உம்முடைய தயாபரமும் உண்மையும் விளங்கவும் * அவர்களுடைய தேவன் எங்கே என்று பிறஜனங்கள் சொல்லாதபடிக்குந்தானே.

ஆனால் எங்கள் தேவன் பரமண்டலத்தில் வீற்றிருக்கிறார் * அவர் தமக்குச் சித்தமாயிருந்ததெல்லாஞ் செய்தார்.

ஜனங்களின் விக்கிரகங்கள் மனிதர்களுடைய கைகளின் வேலைகளான * வெள்ளியும் பொன்னுந்தானே.

அதுகளுக்கு வாயிருந்தும் பேசாது, * கண்ணிருந்தும் காணாது.

அதுகளுக்குக் காதிருந்துங் கேளாது, * நாசியிருந்தும் முகராது.

அதுகளுக்குக் கையிருந்தும் தடவாது, காலிருந்தும் நடவாது,* தங்கள் தொண்டையினாலே சத்தமிடாது.

அதுகளைச் செய்கிறவர்களும் அதுகளை நம்புகிற சகலரும்* அதுகளுக்குச் சமானமாகக் கடவார்கள்.

இஸ்ராயேல் வீட்டார் கர்த்தரை நம்பிக்கொண்டார்கள். * அவர் அவர்களுக்கு உதவியும் ஆதாரமுமாயிருக்கிறார்.

ஆரோன் வீட்டார் கர்த்தரை நம்பிக்கொண்டார்கள்.* அவர் அவர்களுக்கு உதவியும் ஆதாரமுமாயிருக்கிறார்.

கர்த்தருக்குப் பயந்தவர்கள் எவர்களோ அவர்கள் கர்த்தரை நம்பிக்கொண்டார்கள்.* அவர் அவர்களுக்கு உதவியும் ஆதாரவுமாயிருக்கிறார்.

கர்த்தர் நம்மை நினைத்து * நம்மை ஆசீர்வதித்தார்.

இஸ்ராயேல் வீட்டாரை ஆசீர்வதித்தார்.* ஆரோன் வீட்டாரை ஆசீர்வதித்தார்.

கர்த்தருக்கு அஞ்சுகிற * சிறியோரும் பெரியோருமாகிய சகலரையும் ஆசீர்வதித்தார்.

உங்கள்மேலேயும், உங்கள் மேலுமன்றி உங்கள் மக்கள்மேலேயும் * ஆண்டவர் மென்மேலும் நன்மை பொழிவாராக.

பரலோகத்தையும் பூலோகத்தையுஞ் சிருஷ்டித்தவராகிய கர்த்தராலே * நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்களாக.



பரமண்டலங்களில் உந்நதமான பரமண்டலமே கர்த்தருடையது.* பூமியையோவெனில் மனுமக்களுக்குத் தந்தருளினார்.

கர்த்தாவே, செத்தவர்களும் நரகத்தில் இறங்குகிற சகலரும் * தேவரீரை ஸ்துதியார்கள்.

ஜீவிக்கிற நாங்களோவென்றால் இப்பொழுதும், இதுமுதல் என்றென்றைக்கும் * கர்த்தரைத் தோத்தரிக்கிறோம்.

பிதாவுக்கும்.—மற்றதும்.

---

## அவஸ்தைப் பிரார்த்தனை.

சுவாமீ இவன்மேல் கிருபையாயிரும்.

கிறீஸ்துவே இவன்மேல் கிருபையாயிரும்.

சுவாமீ இவன்மேல் கிருபையாயிரும்.

பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,—இவனுக்குத் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,—இவனுக்குத் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா,—இவனுக்குத் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,—இவனுக்குத் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

அர்ச். மரியாயே,
தூதரும் அதிதூதருமாகிய சகல அர்ச். சம்மனசுக்களே,
அர்ச். அபேலே,
புண்ணியாத்துமாக்களான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
அர்ச். அபிராமே,
அர்ச். ஸ்நாபக அருளப்பரே,
அர்ச். சூசையப்பரே,
பிதாப்பிதாக்களுந் தீர்க்கதரிசிகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
அர்ச். இராயப்பரே,
அர்ச். சின்னப்பரே,
அர்ச். பெலவேந்திரே,
அர்ச். அருளப்பரே,
அப்போஸ்தலருஞ் சுவிசேஷகருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
ஆண்டவருடைய சகல பரிசுத்த சீஷர்களே,
மாசில்லாத சகல அர்ச். குழந்தைகளே,
அர்ச். முடியப்பரே,
அர்ச். செய்யப்பரே,
வேதசாட்சியான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
அர்ச். சில்வெஸ்திரியுவே,
அர்ச். கிறகோரியுவே,
அர்ச். அகுஸ்தீனுவே,

(எங்களுக்கு. சு. ணையாளி இரட்சியுஞ் சுவாமி.)



மேற்றிராணியாரும் ஸ்துதியருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
அர்ச். ஆசிர்வாதப்பரே,
அர்ச். பிரான்சீஸ்குவே,
குருக்களுந் தபோதனருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
அர்ச். மரியமக்தலேனையே,
அர்ச். பிரகாசியம்மாளே,
அர்ச். கித்தேரியம்மாளே,
கன்னியாஸ்திரிகளும் விதவைஸ்திரிகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,
ஆண்டவருடைய திருவடியார்களான ஸ்திரீ புமான்களாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,

(இவனை இரட்சியுஞ் சுவாமி.)

தயாபராயிருந்து,—இவனுடைய பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமி.

தயாபராயிருந்து,—இவனுடைய பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமி.

சகல பாவங்களிலே நின்று,
தேவரீருடைய கோபத்திலுந் தண்டனையிலும் நின்று.
தேவரீருடைய தயவின்மேல் அவநம்பிக்கையிலும் மரண அவஸ்தையிலும் நின்று,
சாவின் பயங்கரத்திலுஞ் சீவன் மேலுள்ள மிகுந்த ஆசையிலும் நின்று,
துர்மரணத்தில் நின்று,

(இவனை இரட்சியுஞ் சுவாமி.)

நரக வாதனையிலுஞ் சகல பொல்லாப்பிலும் நின்று,

பசாசின் சோதனையிலுந் தந்திரத்திலும் நின்று,

உலக காரியத்தில் ஒன்றி நித்தியத்திற்கு ஆயத்தப்படாத அசட்டையிலும் நின்று,

தேவரீருடைய திரு அவதாரத்தைப் பார்த்து,

தேவரீருடைய சிலுவையையும் பாடுகளையும் பார்த்து,

தேவரீருடைய திரு மரணத்தையும் அடக்கத்தையும் பார்த்து,

தேவரீருடைய மகிமையான உத்தானத்தைப் பார்த்து,

தேவரீருடைய அதிசயமான ஆரோகணத்தைப் பார்த்து,

தேற்றரவு பண்ணுகிறவரான இஸ்பிரீத்துசாந்துவின் வரப்பிரசாதத்தைப் பார்த்து,

இவளை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ.

மரணவேளையிலேயும், நடுத்தீர்க்கிற நாளிலேயும்,—இவளை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ.

பாவிகளாகிய நாங்கள் தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமீ.

இவளுடைய பாவங்களைப் பொறுத்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமீ.



உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே, இவளுடைய பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே, இவளுடைய பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளுஞ் சுவாமீ.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே, இவளுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ இவள்மேல் தயையாயிரும்—1-பர.

மு.—சுவாமீ எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

ஆ.—எங்கள் அபய சத்தம் உமது சந்நிதிமட்டும் வரக்கடவது.

---

## ஆத்துமங் கேவுகிறபோது

இவ்வுலகத்தை விட்டுப் பிரிகிற இந்தக் கிறீஸ்துவனுடைய ஆத்துமமே, உன்னைப்படைத்த சர்வவல்லப பிதாவாகிய சர்வேசுரனுடைய நாமத்தினாலும், அவருடன் நித்திய ஜீவியமுள்ள தேவனாகிய அவருடைய அமலசுதனுமாய் உனக்காகப் பாடுபட்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துவின் நாமத்தினாலும், உன்னிடத்தில் எழுந்தருளி வந்தவராகிய இஸ்பிரீத்து

சாந்துவின் நாமத்தினாலும், தேவமாதா பத்திச் சுவாலகர் ஞானாதிக்கர் முதலான நவகணவானோர்களுடைய நாமத்தினாலும், பிதாப் பிதாக்கள் தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர்கள் சுவிசேஷகர் வேதசாட்சிகள் ஸ்துதியர் கன்னியர் இவர்களுடைய நாமத்தினாலும், சுவாமியுடைய திருவடியாரான சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய நாமத்தினாலும், இந்த நிர்ப்பாக்கியமான பரதேசத்தை விட்டு நிறைந்த நம்பிக்கையோடு உனது நித்திய வீடாகிய பரகதிக்குப் புறப்படுவாயாக. இன்று நீ சமாதானத்தின் வாசமடைந்து, சியோனென்கிற மோட்ச இராச்சியத்திலே குடிகொண்டு இளைப்பாறக்கடவாய்.—ஆமென் சேசு.

---

## ஆத்துமம் பிரிந்தவுடனே சொல்லுகிறது.

சுவாமி கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமி இவள்மேல் தயையாயிரும். 1-பர.

சர்வேசுரனுக்கு உகந்த சகல அர்ச்சியசிஷ்டவர்களே, இவளுக்குச் சகாயமாக வாருங்கள். அர்ச்சிஷ்ட பிரபுத்துவங்களைக் கொண்டிருக்கிற பத்திசுவாலகரே, ஞானாதிக்கரே, பத்திராசனரே, நாதகிருத்தியரே, சத்துவகரே, பலவத்தரே, பிராதமிகரே, அதிதூதரே, தூதரே, இவளுக்கு எதிராக வந்து, இவளுடைய ஆத்துமத்தைக் கூட்டிக்கொண்டுபோய் பராபரக் கர்த்தருடைய சந்நிதியிலே விடுங்கள்.



இந்தப் பரதேசத்தை விட்ட ஆத்துமமே, அநந்த காருண்ணிய கிறீஸ்துவானவர் இன்றைக்கு உன்னைத் தம்முடைய திருவடியாராகிய அறவோருடைய சமுதாயத்தில் அழைத்தருளுவாராக, தமது தேவசந்நிதியில் உன்னை வைத்துக்கொள்ளுவாராக, சம்மனசுக்கள் அபிராமிருக்கிற ஸ்தலத்துக்கு உன்னை அழைத்துக் கொண்டுபோய் விடக்கடவார்களாக. 1-பர.

என் தேவனாகிய ஆண்டவரே! எவ்வகையான மரணத்தை எனக்கு அனுப்ப உமக்குச் சித்தமோ, அம்மரணத்தை அதைச் சேர்ந்த சகல துக்க துயர வேதனை நோக்காடுகளோடு கூட, இதோ இக்ஷணமே, உமது கரத்திலிருந்து சமாதான அமரிக்கையோடும் முழுமன சம்மதத்தோடும் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

குறிப்பு:—நமது பரிசுத்த தந்தையாகிய பத்தாம் பத்திநாதர் புதிதாய் இச்செபத்தை அங்கீகரித்து, இதற்கு ஒருமகா விசேஷித்த பலனையும் கட்டளையிட்டிருக்கிறார். இப்பலனையடைய விரும்புகிறவர்கள், பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நன்மை வாங்கியபின், சர்வேசுரன்மேல் மெய்யான நேசப் பற்றுதலோடு இச்செபத்தை ஒரு தடவையாகிலும் செபிக்க வேண்டும். தங்கள் ஆயுசுகாலத்தில் எப்போவாகிலும் ஒரு தடவை மேற்கூறியபடி செய்தவர்கள், மரண சமயத்தில் சாவான பாவமின்றி தேவ இஷ்டப்பிரசாத முடையவர்களாயிருப்பார்களேயாகில், வேறெதுவும் செய்யத்தேவையின்றி, அவர்களுடைய ஆத்துமம் சரீரத்தைவிட்டுப்பிரியும் வேளையில் அவர்களுக்கு ஒரு பரிபூரண பலன் கொடுத்தருளப்படும்.

## செபம்.

ஓ! மகா இரக்கம் நிறைந்த சேசுவே! உமது மட்டிலடங்காத ஞானத்தால் நானாகிலும் இன்னம் யாராகிலும் பரிஷ்காரமாய் அறியக்கூடுமானதைப்பார்க்கிலும், மனிதனுடைய பலவீனத்தின் விசாலத்தை நீர் நன்றாய் அறிகிறபடியால் என்னுடைய நானாவிதமான பலவீனத்தின்பேரில், பலவித இரக்கத்தைக் காண்பிக்கவும், என்னுடைய குறைகளைச் சரிப்படுத்தவும் கிருபை செய்ய உம்மை மன்றாடுகிறேன். மகா இரக்கமுள்ள சேசுவே! நான் கட்டிக்கொண்ட சகல பாவங்களுக்குப் பரிகாரமாகவும், வீணானதும் அற்பமானதுமான சம்பாஷணையினால் நான் செய்யத் தப்பிப்போன நன்மைகளுக்குப் பதிலாக உமது திருநாவின் மகா தகுதியான மவுனத்தைக் கிருபை நிறைந்த உமது பிதாவுக்கு ஒப்புக்கொடும்.

ஓ! நல்ல சேசுவே! நான் கேள்வி விசாரத்தினால் கட்டிக்கொண்ட பாவங்களுக்கெல்லாம் உமது திருச்செவிகளின் ஒழுக்கத்தை ஒப்புக்கொடும். அலங்கோலையாய்க் கெட்ட பார்வைகளினால் நான் கட்டிக்கொண்ட சகல பாவங்களுக்காக உம்முடைய கண்களை மூடிக்கொண்டதை ஒப்புக்கொடும். என்னுடைய தினைக்கிரியைகளிலும் எனது தின நடக்கையிலும் கட்டிக்கொண்ட பாவங்களுக்காக உமது கரங்களினுடையவும் உமது பாதங்களினுடையவும்



எச்சரிக்கையையும், தேர்ச்சியையும் ஒப்புக்கொடும். கடைசியாய் ஓ மகா சிநேகம் நிறைந்த சேசுவே! நினைவினாலும் மனதினாலும் இருதயத்தினாலும் நான் கட்டிக்கொண்ட பாவங்களுக்காக உமது தெய்வீக இருதயத்தை உமது பிதாவின் மகிமைக்குரிய சமுகத்தில் ஒப்புக்கொடும். ஆமென் சேசு.

சேசுநாதரில் என் கிரிகை முழுமையும் செய்யப்படுவதாக. நான் விழிப்பேனாகில் என் கண்கள் சேசுநாதரை மாத்திரம் பார்க்கும். நான் நித்திரை செய்வேனாகில் சேசுநாதரைக் குறித்துக் கனவு காண்பேன், எனக்குப் புத்தகமும், போதகரும், சேசுநாதர்தான். நான் எழுதுகையில் சேசுநாதர் என் கையை நடத்தி சேசுநாதரின் அலங்கிர்தமான நாமத்தை சேசுநாதர் என்னோடெழுதுவார். நான் செபிக்கும்போது அச்செபம் அவரிலிருக்கும். சேசுநாதரிடத்திலேயே நான் இளைப்பாறுவேன். நான் பசியுந் தாகமுமாயிருக்கும்போது சேசுநாதரிடத்தில் புசிப்பேன், என் வியாதியில் சேசுநாதரே என் வைத்தியராகவும், அவருடைய அன்பே எனக்கு அவுழ்தமாகவுமிருக்கும். நான் சாகிற தருவாயில் சேசுவென்பதே என்னுடைய கடைசி வார்த்தையாயிருக்கும். சேசுவே என்னுடைய கண்களை மூடுவார். என்னுடைய கல்லறை சேசுநாதருடைய இருதயமாயிருக்கும். நான் சேசுநாதரிடத்தில் சயனிப்பது என்னுடைய கல்லறையின் அடையாளமாயிரு

க்கும். சேசுவே! என் நல்ல சேசுவே, சேசுவே, என் இனிய சேசுவே! மரியாயே! மரியாயே, நீரே என் நல்ல மரியாயி. ஆமென்சேசு.

---

## ஆகமனகாலத்தில் செய்யத்தகும் வேறு செபம்.

* ஆதித்தாய் ஆதித்தகப்பன் ஜென்மத்திலே பிறக்கப்போகிற சகலரிலுந் திவ்விய குமாரனுக்குத் தாயாயிருக்கத் தெரிந்துகொள்ளப்பட்டவளுமாய், அதற்காக வேண்டிய சகல வரங்களையுஞ் சம்பூரணமாய் அடைந்தவளுமாய் அடைந்த வரங்களைக்கொண்டு நடத்தின உன்னதமான புண்ணியங்களால் திருச்சுதனாகிய சர்வேசுரன் உம்முடைய திருவயிற்றில் வெகு சந்தோஷத்துடன் தீவிரமாய் வரப்பண்ணினவளுமாய் இருக்கிற மாதாவே, உம்முடைய திருக்குமாரன் பிறக்கப்போகிற நாள் கிட்டி வருகிறதென்று நீர் அறிந்து, அவரைப் பார்க்கவும், அவருக்கு ஊழியஞ் செய்யவும், உமக்கிருந்த ஆசையைப்பார்த்து எனக்கும் இந்த திருநாளில் அவர்பேரில் ஆசை வரவேண்டுமென்றும். அவரைப்பார்த்து அவருக்கு ஊழியஞ்செய்ய நீர் பாத்திரமாய் இருக்கவேண்டுமென்றும் பண்ணின ஆயத்தத்தைத் தியானித்து நானும் அவருக்கு யோக்கியமான ஊழியஞ்செய்ய ஆயத்தப்படவேண்டுமென்றும் நீர் பண்ணின ஆயத்தத்தினால் உமது பேரில் திவ்விய குழந்தை பட்ட சந்தோஷம் ஒருக்காலும் என்பேரில்



அவருக்கு வரக்கூடாதிருந்தாலும் எப்படியாகிலும் நான் இந்தத் திருநாளைக் கொண்டாடுகிறதில் உம்முடைய திருக்குமாரனுக்கு என்பேரில் குறை வாராமல் சந்தோஷம் வரச்செய்யவேண்டுமென்றும் இந்த மூன்று முகாந்தரங்களைக் குறித்து நான் செய்யப்போகிற செபத்தை உம்முடைய திருப்பாதத்தில் அளித்து என்னுடைய கருத்து வியர்த்தமாய்ப் போகாதபடிக்கு நீர் காதிகொடுத்து என் மன்றாட்டைக் கேட்டருளவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன்.

ஆமென்சேசு.

அர்ச். மாதாவே, நீர் திவ்விய குமாரனுக்கு மாதாவாகக் குறிக்கப்பட்ட க்ஷணம் ஆசீர்வதிக்கப்பட்டதென்று சகலரும் ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணக்கடவோம்.—ஒரு தி. பத்து பிரி. ஒரு தி.

அர்ச். மாதாவே, நீர் திவ்விய குமாரனைப் பெற்ற க்ஷணம் ஆசீர்வதிக்கப்பட்டதென்று எல்லாரும் ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணக்கடவோம். ஒரு-தி. பத்து-பிரி. ஒரு தி.

அர்ச். மாதாவே, நீர் முதல்விசை உம்முடைய திருக்குமாரனைக் கட்டி ஆரவணைத்த க்ஷணம் ஆசீர்வதிக்கப்பட்டதென்று எல்லாரும் ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணக்கடவோம்.—ஒரு-தி. பத்து-பிரி. ஒரு-தி.

அர்ச். மாதாவே, நீர் உம்முடைய திருக்குமாரனுக்கு முதல் விசை பால் கொடுத்த க்ஷணம் ஆசீர்வதிக்கப்பட்டதென்று எல்லாரும்

ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணக்கடவோம்—ஒரு-கிரி. பத்து-பிரி. ஒரு-கிரி.

---

### கடைசி நாளிலே எல்லாவற்றையும் ஒப்புக்கொடுக்கும் செபம்.

அர்ச். தேவமாதாவே, இந்த ஆகமனகாலத்திலே நான் உம்முடைய பாதத்தில் வேண்டிக்கொண்ட ஆயிரம் பிரியதத்த மந்திரங்களை நீர் கைக்கொண்டு, அதினால் உம்முடைய திருக்குமாரனுக்கு ஒரு முடி செய்து சூட்டவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன். நான் ஒப்புவிக்கிற காணிக்கை வெறு வாஞ்சையாகி நிந்தைக்குப் பாத்திரமாயிருந்தாலும் அது உம்முடைய திருக்கையிலிருந்து வருகிறதினால் அவருக்கு விலையேறப்பெற்றதுமாய் பிரியமுமாயிருக்குமென்று நிச்சயத்துடனே நம்பியிருக்கிறேன். ஆகையால் இந்த முடியை நீர் சூட்டுவிக்கிறபோது அவரைப்பார்த்து எனக்காகக் கேட்கவேண்டியது யாதெனில், உம்முடைய திருக்குமாரனுக்கு ஓர் அற்ப காரியத்திலும் நான் ஒரு குறை வருத்துவிக்கிறதை விடவும், அவருடைய சித்தத்தை விட்டு எந்த காரியத்திலேயும் வேறே வழியாகப் போகிறதை விடவும், அவர் எனக்கு நல்ல மரணங் கொடுத்து என்னை அழைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள உம்மை மன்றாடுகிறேன். ஆமென் சேசு.

# இரண்டாம் காண்டம்.

---

## ஞானமுயற்சிகளைச் செய்யும் வகை.

---

### முதலும் பிரிவு.

---

### தியானஞ் செய்யும் வகை.

---

அர்ச். இஞ்ஞாசியாருடைய படிப்பினைப்படியே நினைவினாலே வேதசத்தியங்களில் யாதொன்றை ஞாபகப்படுத்திக்கொண்டு புத்தியினாலே அந்தச் சத்தியத்தின்பேரில் யோசனைசெய்து மனதைக்கொண்டு அந்தச் சத்தியத்துக்கொத்த பிரகாரந் தன் நடக்கையை ஒழுங்குப்படுத்துவதே தியானமாம்.

தியானமானது மூன்று வகுப்பாகப் பிரித்திருக்கின்றது. அவைகளாவன: தியான ஆயத்தமும், தியானமும், தியானத்தின்பேரில் யோசனையுமாம்.

---

## முதலாவது: தியான ஆயத்தம்.

---

தியான ஆயத்தமானது, தூர ஆயத்தமென்றும், கிட்டின ஆயத்தமென்றும் இருவகைப்படும்.

### தூர ஆயத்தம்.

தூர ஆயத்தத்துக்கு நான்கு காரியஞ் செய்யவேணும்:—முதலாவது. காலமே தியானஞ் செய்வதற்குக் குறிக்கப்பட்ட காரியத்தை அதற்கு முந்தினநாள் சாயங்காலமே கவனத்தோடு வாசிக்கிறது. அல்லது வாசிக்கக் கேட்கிறது. 2-வது. ஒவ்வொரு பிரிவிலுந் தான் என்ன பலனை அடையவேணுமென்று பார்த்துக்கொள்ளுகிறது. இதைச் செய்யும் விதம் எதென்றால், தன்னிடத்திலுள்ள எந்தத் துர்க்குணத்தை அல்லது எந்தக் குற்றத்தைத் தள்ளவேணுமென்றும், அல்லது எந்தப் புண்ணியத்தைப் பெற்றுக்கொள்ளவேணுமென்றும் நிர்மானித்துக்கொள்ளுகிறதாம். 3-வது. படுத்துக்கொண்டபின் நித்திரை வருமுன்னே தான் வாசித்ததைச் சுருக்கமாய் நினைத்துக்கொள்ளுகிறது. 4-வது. காலமே எழுந்திருந்தவுடனேயும் அப்படியே நினைத்துக்கொள்ளுகிறது.



### கிட்டின ஆயத்தம்.

முதலாவது. தியானத்துக்குக் குறித்த நே
மானவுடனே தியானஞ்செய்யவேண்டிய இட
த்துக்கு மூன்று நாலு அடிதூரம் அப்பாலே
நின்று ஒரு பரமண்டல மந்திரஞ் சொல்லுகிற
நேரம்வரையிலே தன் நினைவைச் சர்வேசுரனி
டத்திலே எழுப்பி அவர் தனக்குமுன்பாக இரு
க்கிறதாகவுந் தான் செய்கிறதையுந் தன் உள்
ளத்தில் நடக்கிறதையும் பார்க்கிறதாகவும்,
அத்தியந்த விநயத்தோடும் விசுவாசத்தோடும்
யோசித்துக்கொண்டு அவரைத் தாழ்ச்சியோடு
ஆராதிக்கிறது. 2-வது. முழங்காலிலிருந்து
ஆயத்தச் செபம் சொல்லுகிறது. அதாவது:
தியாள காரணரான சர்வேசுரா, இந்தத் தியா
னத்திலே அடியாள் செய்கிற கிரியைகளெல்
லாந் தேவரீருக்கு ஆராதனையாகவும் தோத்
திரமாகவும் உத்தமமான விதமாய் நடக்கும்
படியாய் அநுக்கிரகஞ் செய்தருளும். 3-வது.
ஆயத்த சிந்தனை செய்கிறது. அது என்ன
வென்றால், ஒவ்வொரு தியானத்துக்குக் குறிக்
கப்பட்ட சத்தியத்துக்குத் தக்கதுபோலே
அந்தச் சத்தியம் நடக்குமிடத்திலே தான் இரு
க்கிறதாகவும், பார்க்கிறதாகவும், கேட்கிறதாக
வும் கெட்டியாய் மனதிலே உருபிகரித்துக்
கொள்ளுகிறது. 4-வது. தியானச் செபஞ்
சொல்லுகிறது; அதென்னவென்றால், முந்தின
நாள் சாயங்காலமே நீ குறித்துக்கொண்ட

பலனை உனக்குத் தரும்படியாகச் சர்வேசுரனை ஆசையோடு மன்றாடுகிறது.

### உதாரணங்கள்.

இப்படியே தனித்தீர்வையைத் தியானிக்கவேணுமானால் ஆயத்த சிந்தனை செய்யும் விதமாவது: தான் செத்த அன்றையிலே சேசுநாதர்சுவாமி சிம்மாசனத்திலே நீதி கோபத்தோடு உட்கார்ந்திருக்கிறதாகவும், தான் சங்கிலிகளால் கட்டுப்பட்டுக் குற்றவாளியைப்போல் அவருக்குமுன் பயத்தோடு நிற்கிறதாகவும் பார்த்துக்கொள்ளுகிறது. அன்றியும் காவலான சம்மனசு ஒருபக்கத்திலே நின்றுகொண்டு தனக்காகப் பரிந்து பேசுகிறதாகவும், வேறுபக்கத்தில் பசாசு நீ உயிரோடிருக்கும்போது கட்டிக்கொண்ட பாவங்களையெல்லாம் இரட்டிப்பாய்ச் சொல்லுகிறதை நீ கேட்கிறதாகவும் உரூபிகரித்துக்கொள்ளுகிறது.

மேலும் சேசுநாதர் சிலுவையில் அறையுண்டதைத் தியானிக்கவேணுமானால், ஆயத்த சிந்தனை செய்யும் விதமாவது: தான் கபாலமலையில் இருக்கிறதாகவும், சேசுநாதர் இரண்டு கள்ளருக்கு நடுவே சிலுவையில் அறையுண்டிருக்கிறதையும், அவருடைய சர்வாங்கமும் ஏக காயமாயிருக்கிறதையும், இரத்தம் வெள்ளமாய் ஓடுகிறதையும், தேவமாதா அழுதுகொண்டு கிட்ட நிற்கிறதையும் தான் பார்க்கிறதாகவும், அவர் திருவுளம்பற்றுகிற ஏழு வாக்கியங்களைத் தான் காதாலே கேட்கிறதாகவும்



உரூபிகரித்துக்கொள்ளுகிறது. இப்படியே அந்தந்தத் தியானத்துக்குத் தகுந்ததுபோலே செய்யவேணும்.

## இரண்டாவது: தியானம்.

---

**தியானமானது, ஞாபகம், புத்தி, மனதென்னும் மூன்று புலன்களைக்கொண்டு செய்யப்படும்.**

### 1-வது. ஞாபகம்.

முதலாவது.—சாயங்காலந் தியானத்துக்காக வாசித்து ஆயத்தம் பண்ணின பிரிவுகளில் முதற்பிரிவை ஞாபகத்தில் வருவித்துக்கொள்ளுகிறது.

2-வது.—அதற்கடுத்த பற்பல விஷயங்களை நினைத்துக்கொள்ளுகிறது.

### உதாரணம்.

இப்படியே சேசுநாதர்சுவாமி சிலுவை சுமந்துகொண்டு கபாலமலையில் சேர்ந்தபின் யூதர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள் என்பது முதற்பிரிவாம். அதற்கடுத்த விஷயங்களை நினைக்கும் வகையாவது: ஆண்டவர் சிலுவையிலே தொங்கி எத்தனை உபாதைகளை அநுபவிக்கிறார். அவருடைய தலைதுவக்கிக் கால்பரியந்தம் ஏக காயமாயிருக்கிறது. இரத்தம் வெள்ளமாக ஓடுகிறது. அவருடைய திருத்தலையிலே பலத்த முள்ளுகள் பதிந்திருக்கின்றது. அவருடைய கண்களும் வாயும் ஓடுகிற இரத்தத்தால் கறைபிடித்திருக்கின்றது.

முகம் வெளுத்துப்போய் இருக்கின்றது. அவருடைய நெஞ்சும் முதுகும் விலாவும் கைகளும் கால்களும் பட்ட அடிகளால் கிழிந்து ஏகரணமாயிருக்கின்றது. கைகளிலும் கால்களிலும் உருவியிருக்கும் பெரும் ஆணிகளால் நரம்புகள் சுருங்கி ஆண்டவருக்கு வாக்குக்கெட்டாத கஸ்தி உண்டாக்குகின்றதென்று நினைத்துக்கொள்ளுகிறது.

¶ விபரம்.—இப்போது சொல்லப்பட்டது ஓர் உதாரணம். ஆகையால் அந்தந்த தியானத்துக்கும் அவனவனுடைய பத்திக்கும் தக்கதுபோலே இவ்விஷயங்களை வெவ்வேறு விதமாய் நினைத்துக்கொள்ளலாம்.

## 2-வது. புத்தி.

புத்தியைக்கொண்டு செய்யவேண்டியவைகள் பிரதானமாய் நான்கு. அவைகளாவன: ஞாபகத்தைக்கொண்டு முதற்பிரிவையும் அதற்கடுத்த விஷயங்களையும் நினைத்துக்கொண்டபின், முதலாவது.—புத்தியைக்கொண்டு அதின்பேரில் யோசிக்கிறது. 2-வது.—இப்படிப்பட்ட யோசனையினால் அறிந்துகொண்ட சத்தியத்துக்கு ஒத்தபிரகாரம் தான் நடக்கும்படியாய் என்ன செய்யவேணுமென்று யோசிக்கிறது. 3-வது.—இதுவரையில் தான் இப்படி நடந்ததுண்டோவென்று பார்க்கிறது. 4-வது.—இனிமேல் அப்படி நடக்கும்படியாய் எதைத் தள்ளவேணுமென்றும், என்ன செய்யவேணுமென்றும், இதுகளைச் செய்வதற்கு எந்தெந்தக்



காரியங்கள் தனக்கு உதவியாயிருக்குமென்றும் ஆராய்ந்து பார்க்கிறது. இந்நான்கு காரியங்களையும் உதாரணங்களைக்கொண்டு விளக்கிக் காட்டலாம்.

### உதாரணங்கள்.

சேசுநாதர்சுவாமி சிலுவையில் அறையுண்டதின்பேரில்: முதலாவது.—புத்தியைக்கொண்டு யோசிக்கும் வகை. என் சேசுநாதர் இத்தனைப் பாடுகளைப் படுகிறார்? தமக்காகவோ? இல்லை. ஏனென்றால் அவர் மாசற்றவர், அற்பக் குற்றத்தின் நிழல் முதலாய் அணுகாதவர். அவருக்கு அளவில்லாத பாக்கியங்களுண்டே. பின்னை எதுக்காகப் பாடுபடுகிறார்? எனக்காகத்தானே; என்னைப் பசாசின் அடிமைத்தனத்திலே நின்று இரட்சிக்கும்படியாகவும், நரகவாசலை அடைத்து எனக்கு மோட்சவாசலைத் திறக்கும்படியாகவுந்தானே இவ்வளவு பாடுபடுகிறார். ஆனால் அவர் ஒரு துளி கண்ணீர் மாத்திரஞ் சிந்தினால் என்னுடைய பாவங்களுக்குஞ் சகல மனிதருடைய பாவங்களுக்கும் உத்தரிக்க அது போதுமாயிருந்தாலும், என்பேரில் தமக்குள்ள சிநேகத்தின் மிகுதியினாலே தானே இத்தனைக் கொடூரமான பாடுகளைப்படுகிறார். இப்படிப்பட்ட சிநேகமுள்ள ஆண்டவரைச் சிநேகிக்க என்பேரில் அளவில்லாத கடனுண்டல்லவா? இவரை நான் சிநேகியாதே போனால் என்னைப்போலே நன்றியறியாதவன் உண்டோ? 2-வது.—ஆனால் ஆண்டவரைச்

சிநேகிக்கவேணுமாகில் அவருக்குப் பொருந்தாத ஓர் அற்பப் பாவமும் அற்பக் குற்றமுஞ் செய்யாமல் அவருக்குப் பிரியமான புண்ணியங்களைச் செய்யவேண்டுமே. இது எனக்கு வருத்தமாயிருக்கிறது மெய்தான்; ஆனால் சேசுநாதர் இதைப்பார்க்கக் கோடாகோடி விசை அதிகமான பாடுகளை எனக்காக அநுபவித்தாரே. இது இப்படியிருக்க, நான் அவருக்காக இந்தச் சொற்ப வருத்தத்தை அநுபவிக்கப் பின்னிடுகிறது ஞாயமோ? 3-வது.—இதுவரையிலே இப்படி அவரைச் சிநேகித்தேனோ? அவருக்குப்பொருந்தாத பாவமாகிலும் அற்பக் குற்றமென்கிலுங் கட்டிக்கொண்டு அதினால் அவருக்கு மனம் நோகப்பண்ணினேனோ? அவருக்குப் பிரியமான புண்ணியங்களைச் செய்துவருவேனோ இல்லையோ?

¶ விபரம்.—இவ்விடத்திலே தன் நடக்கையை நன்றாய்ச் சோதித்துப் பார்க்கவேணும்.

4-வது. இனிமேல் அவ்வளவு சிநேகமுள்ள ஆண்டவரை முழுமனதோடே சிநேகிக்கும்படியாய்த் தான் எந்தெந்தத் துர்க்குணத்தை அல்லது எந்தெந்த குற்றத்தைத் தள்ளவேணுமென்றும், எந்தெந்த புண்ணியத்தைச் செய்யவேணுமென்றும் ஆராய்ந்து பார்க்கிறது.

விபரம்.—இவ்விடத்தில் அவனவன் தன்னிடத்திலுள்ள பிரதான துர்க்குணத்தையும், அதினால் வருகிற குற்றங்களையும் ஆராய்ந்து பார்க்கிறதன்றியும்,



அவைகளைப் பொதுவிலே விசாரியாமல் தான் எந்தெந்தச் சமயங்களிலே அந்தந்தத் துர்க்குணங்களிலுங் குற்றங்களிலும் விழுகிறதென்றும், எந்தெந்தச் சமயங்களிலே அந்தந்தப் புண்ணியத்தைச் செய்யாமல் போகிறதென்றும் யோசித்துப் பார்க்கிறது. மேலுந் தான் அந்தந்தக் குற்றத்தைச் செய்வதற்கும், அந்தந்தப் புண்ணியத்தைச் செய்யாமல் போவதற்குங் காரணமென்னவென்று யோசிக்கிறது.

---

## 3-வது. மனது.

மனதைக்கொண்டு பிரதானமாய் மூன்று காரியஞ் செய்யவேண்டும். முதலாவது.—பற்பல புண்ணியங்களுடைய முயற்சியைச் செய்கிறது. 2-வது.—பிரதிக்கினை செய்கிறது. 3-வது.—இந்தத் தியானத்திலே தான் செய்த பிரதிக்கினைகளையெல்லாம் ஞாபகத்தில் வருவித்துக்கொண்டு அதுகளின்படி தான் நடப்பதற்கு வேண்டிய வரப்பிரசாதத்தைச் சர்வேசுரனிடத்தில் மகா ஆசையோடேயும் முழுமனதோடுஞ் சுறுசுறுப்போடும் மன்றாடுகிறது.

### உதாரணம்.

பொறுமையென்கிற புண்ணியத்தின்பேரில் முயற்சிசெய்யும் வகையாவது: ஐயோ! இதுவரையில் என் அகங்காரங் கோபத்தினாலே எத்தனைவிசை பொறுமைக்குக் குறைசெய்தேன்! * * * * என் கர்த்தராகிய சேசுநாதர்சுவாமி மாசற்றவரும் தேவனுமாயிருந்தாலும், மனிதர்கள் தமக்குச் செய்த நிந்தை அவமானங்களைச்

சொல்லிலடங்காத பொறுமையோடு சகித்ததுமல்லாமல் அவைகளைப் பொறுக்கும்படி நமது பிதாவாகிய சர்வேசுரனை முழுமனதோடே மன்றாடினார். மேலும் அவர்களுக்காகத் தம்முடைய திவ்விய இரத்தத்தைச் சிந்தி கடினமான மரணத்தையடைந்தார்! * * * * நான் பாவியும் ஒன்றுமில்லாததுமாயிருந்தாலும் புறத்தியார் எனக்கு வருத்தவிக்கிற சின்ன கஸ்தியாகிலும் எனக்குச் செய்கிற சொற்ப விரோதமென்கிலுஞ் சகிக்கமாட்டேன்! பெரியோர்கள் காமே மிகவும் ஞாயத்தோடே எனக்கு புத்தி கண்டிப்பு சொல்லும்போது அவர்கள் சொல்லுகிறதைக் கேளாமல் அவர்கள் பேரில் முறையிட்டு வர்மப்படுகிறேன் ஆ! என் யேசுவே, என் துர்க்குணத்தினாலே தேவரீருக்கு பெரிய கஸ்தி கொடுத்தேன்! இதற்காக மனஸ்தாபப்பட்டு உம்மிடத்தில் மகா தாழ்ச்சியோடே மன்னிப்புக் கேட்கிறேன். இனிமேல் நான் பொறுமைக்கு விரோதமான அந்தந்தக் குற்றம் அந்தந்தச் சமயத்திலே முழுதுந் தள்ள மனதாயிருக்கிறேன். என்பேரில் இரக்கமாயிருந்து உறுதியில்லாத எனக்கு உதவி ஒத்தாசை தந்தருளும் சுவாமி. * * * * அப்படி மற்றப் புண்ணியங்களின் பேரிலும் முயற்சி செய்யலாம்.

இதுவரையில் அவனவன் அந்தந்தத் துர்க்குணத்திலாவது குற்றங்களிலாவது விழுந்ததினாலேயாகிலும், அந்தந்தப் புண்ணியத்தைச் செய்ததினாலேயென்கிலும் கஸ்திப்படவேண்டியது. அந்தந்தத் துர்க்குணத்தின் பேரில் பகையும், அந்தந்தப் புண்ணியத்தின் பேரில் ஆசையுந் தன்னிடத்தில் வருவித்துக்கொள்ள வேண்டியது. இதுவரையில் நன்றாய் நடந்திருந்தால் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறது. * * * *



## விபரம்.

முதலாவது.—தியானத் துவக்கத்திலாகிலுங் கடைசியிலேயாகிலும் வேறே எந்தச் சமயத்திலென்கிலும் இந்தப் புண்ணியங்களின் முயற்சியைச் செய்வதற்கு ஞான ஏவுதல் வரும்போது தப்பாமல் அதைச் செய்வதுமன்றித் தியானம் முழுதும் அந்த முயற்சியைச் செய்வதிலே செலவழித்தாலும் அது மிகவும் நல்லதென்றறிக.

2-வது. பொதுவிலே பிரதிக்கினை செய்யாமல் அந்தந்த துர்க்குணத்தை அல்லது அந்தந்தக் குற்றத்தை இன்றைக்கு அந்தந்தச் சமயங்களிலே செய்யேனென்றும் பிரதிக்கினை செய்ய வேணும்.

3-வது. கடைசிச் செபஞ் செய்கிறபோது அந்தந்தத் தியானத்துக்கும் அவனவன் பக்திக்குந் தகுந்தபடியே சர்வேசுரனையாகிலும், யேசுநாதரையென்கிலும், தேவமாதாவையாகிலும், காவலான சம்மனசு அல்லது தான் விசேஷ பக்திவைத்திருக்கும் அர்ச்சியசிஷ்டவர்களையென்கிலும் வேண்டிக்கொள்ளலாம்.

ஆனால் இந்தச் செபத்தைத் தன்னால் கூடின மட்டும் அத்தியந்த பத்தியோடும், முழுமனதோடும், மகா ஆசையோடுஞ் செய்யவேண்டும். அதன்பின் ஒரு பரமண்டலமந்திரஞ் சொல்லித் தியானத்தை முடிக்கத்தகும்.

## மூன்றாவது: தியான யோசனை.

¶ தியானமுடிந்தபின் அதை நன்றாய்ச் செய்தாயோ இல்லையோவென்று யோசித்துப் பார்ப்பது தியான யோசனையாம்.

இதைச் செய்யும் விதமாவது:—

முதலாவது. நான் செய்யவேண்டிய தியானத்தை நேற்றுச் சாயங்காலம் கவனமாய் வாசித்தேனோ? அதிலே அடையவேண்டிய பலன் இன்னதென்று நிதானித்துக்கொண்டேனோ?

2.வது. நித்திரை வருமுன் வாசித்த தியானத்தைத் திரும்ப நினைத்துக்கொண்டேனோ? காலமே விழிக்கும்போது அப்படிச் செய்தேனோ?

3-வது. தியானநேரம் ஆனவுடனே சர்வேசுரன் எனக்குமுன்பாக இருந்து என் உள்ளத்தில் நடக்கிறவைகளைப் பார்க்கிறாரென்று பத்தி விநயத்தோடும் விசுவாசத்தோடும் யோசித்துக்கொண்டேனோ? ஆயத்தச் செபத்தைப் பத்தியோடு சொன்னேனோ? ஆயத்தச் சிந்தனையை நன்றாய்ச் செய்தேனோ? தியான செபத்தைப் பத்தியோடு சொன்னேனோ?



4-வது. தியானத்துக்குக் குறிக்கப்பட்ட முதற்பிரிவைத் திரும்ப ஞாபகத்தில் வருவித்துக் கொண்டேனோ? அதற்கடுத்த பற்பல விஷயங்களையும் நினைத்துக்கொண்டேனோ?

5-வது. ஞாபகத்திலே நினைத்துக்கொண்ட காரியத்தின்பேரில் புத்தியைக்கொண்டு யோசித்தேனோ? அந்த சத்தியத்துக்கொத்தபடி நடப்பதற்கு என்னசெய்யவேணுமென்று யோசித்தேனோ? இதுவரையில் இப்படி நடந்தேனோ இல்லையோவென்று பார்த்தேனோ? இனிமேல் எப்படி நடக்கவேணுமென்றும், அதற்கு எது உதவியாயிருக்குமென்றும் யோசித்தேனோ?

6-வது. மனதைக்கொண்டு பற்பல புண்ணிய முயற்சிகளைச் செய்தேனோ? யாதோர் ஞானப்பிரகாசம் அல்லது ஞான ஏவுதல் என்னிடத்திலே வந்ததோ? அதில் என்ன பிரதிக்கினைச் செய்தேன்? அந்தப் பிரதிக்கினைப் பிரகாரம் நடக்கும்படியாய்ச் சுறுசுறுப்போடும் ஆசையோடும் வேண்டிக்கொண்டேனோ?

7-வது. பராக்கு வந்ததோ? அதை உடனே தள்ளிப்போட்டேனோ? அந்தப்பராக்கு வருவதற்குக் காரணமென்ன?

¶ **விபரம்.**—இப்படிச் சோதித்தபின் இதிலே யாதொரு தப்பிதஞ் செய்திருந்தால் மனஸ்தாபப்பட்டு இனிமேல் அந்தத் தப்பிதஞ் செய்யமாட்டேனென்று பிரதிக்கினை செய்கிறது. தப்பிதஞ் செய்யா

விட்டால் சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரஞ் சொல்லி இனிமேல் அப்படி நடப்பேனென்று பிரதிக்கினை செய்கிறது.

---

## 2-ம். பிரிவு.

---

### ஆத்துமசோதனை செய்யும் வகை.

நீ சர்வேசுரனுடைய சந்நிதியில் இருக்கிறாயென்றும், அவர் உன்னைப் பார்க்கிறாரென்றும் யோசித்து, முழுமனதோடே முழங்காலிலிருந்து தலைகுனிந்து (உள்ளிந்திரியங்களைக் கொண்டும் பஞ்சேந்திரியங்களைக்கொண்டும்) அவரை ஆராதிப்பாயாக.

### 1-வது. நன்றியறிதல் முயற்சி.

முதலாவது சர்வேசுரன் உன்னை உண்டாக்கிக் காப்பாற்றி மிகுந்த தயாளகுணத்தோடு பராமரித்து வருகிற சுபாவ நன்மைகளுக்காகவும்,

2-வது. உன்னை இரட்சித்து, அர்ச்சித்து, தேவதிரவிய அநுமானங்களை ஸ்தாபித்து, மிகுந்த பொறுமையோடும் இரக்கத்தோடும் உன் குற்றங்களைப் பொறுத்து, சத்திய வேதத்துக்கும் உத்தம அந்தஸ்துக்கும் அழைத்து, விசேஷமாய் இன்று உனக்குச் செய்த நவமான மேலான உபகாரங்களுக்காகவும்,



3-வது. உனக்கு நித்திய சீவியத்தைக் கொடுக்க இருக்கிறதற்காகவும், அவருக்கு முழுமனதோடே நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.

### 2-வது. மன்றாட்டு முயற்சி.

உன் பாவங்களையுங் குற்றங்களையுங் குறைகளையும் நன்றாய் அறியவேண்டிய ஞானத் தெளிவும் அதுகளுக்காக மிகுந்த மனஸ்தாபப்பட்டு அழுது அதுகளை உன்னிருதயத்திலிருந்து வேரோடு பிடுங்கிப் போடவேண்டிய உதவி அநுக்கிரகத்தை உனக்குச் செய்தருளவேணுமென்று ஆண்டவரைப் பார்த்து மன்றாடு.

### 3-வது. ஆத்தும சோதனை.

முதலாவது.—தனியாத்தும சோதனை: நீ உன்னிடத்தில் நின்று பிடுங்கிப்போட விரும்புகிற விசேஷ துர்க்குணத்திலாவது குற்றத்திலாவது விழுந்தாயோவென்று ஒவ்வொரு மணி நேரமாய் ஆராய்ந்துபார். நீ எழுந்திருக்கும்போது அந்தத் துர்க்குணத்திலாவது குற்றத்திலாவது விழாதபடிக்கு மிகுந்த எச்சரிக்கையாயிருக்கப் பிரதிக்கினை செய்தாயோவென்றும், அந்தக் குற்றத்தில் திரும்ப விழும்போதெல்லாம் உன் கையை மார்பில் வைத்து அதற்காகச் சர்வேசுரனுடைய சமுகத்தில் மனஸ்தாபப்பட்டாயோவென்றுஞ் சோதித்துப்பார்.

கடைசியாய் எத்தனைவிசை குற்றத்தில் விழுந்தாயென்று காகிதத்தில் குறித்துக்கொண்டு, காலமே செய்த குற்றங்களை சாயந்தரஞ் செய்த குற்றங்களோடும், நேற்றுச் செய்த குற்றங்களை இன்றைக்குச் செய்த குற்றங்களோடும், போன வாரஞ் செய்த குற்றங்களை இந்த வாரஞ் செய்த குற்றங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கிறது.

2-வது.—பொது ஆத்துமசோதனை : நினைப்பினாலும் வாக்கினாலும் கிரியையினாலும் தரித்திரம், கற்பு, கீழ்ப்படிதல், பிறர்சிநேகம், தாழ்ச்சி, பொறுமை என்கிற புண்ணியங்களுக்கும், ஒழுங்குகளுக்கும், விசேஷமாய் மவுனம், அடக்க ஒடுக்கமென்கிற ஒழுங்குகளுக்கும் விரோதமாய் நீ கட்டிக்கொண்ட தப்பிதங்களையெல்லாம் அந்தந்த மணிப்பிரகாரம் சோதித்து உன் ஞாபகத்தில் வருவித்துக்கொள்.

மத்தியான ஆத்துமசோதனை : காலமே எழுந்திருத்தல், கிரியைகளைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தல், தியானம், பூசை, காலைப்போசனம், அந்தஸ்தின் கடமைகள், செபம், தேவநற்கருணைச் சந்திப்பு முதலியவைகளும்;

சாயங்கால ஆத்துமசோதனை : பகலசனம், பேசுகிற நேரம், அந்தஸ்தின் கடமைகள், செபமாலை, ஞானவாசகம், தேவநற்கருணைச் சந்திப்பு, திரிகாலச் செபம், இராப்போசனம், பேசுகிற நேரம், செபம், மறுநாள் தியானத்துக்கு ஆயத்தம், இவை முதலியவைகளின் பேரில் விசேஷமாய்ப் பரிசோதித்துக்கொள்.



## ௪-வது. மனஸ்தாப முயற்சி.

உன் பாவங்களுக்காகச் சர்வேசுரனிடத்தில் பொறுத்தலைக் கேள். மனஸ்தாபப்படுகிறதற்கு முகாந்தரங்கள் : உத்தரிக்கிற ஸ்தலத்தில் நீ படப்போகிற ஆக்கினையையும், மோக்ஷத்தில் நீ இழந்துபோகிற மேலான மகிமை வரிசையையும் நினைத்தும், நீ செய்கிற சொற்ப தப்பிதங்களால் பெரிய தப்பிதங்களில் விழநேரிட்டிருக்கிற ஆபத்தைப்பற்றியும், உன் அந்தஸ்தின் உத்தமதனத்தை அடையாமல் போகிறதை யோசித்தும், உன் தப்பிதங்களால் அநேக ஆத்துமங்கள் கரையேறச் செய்கிறதற்கு நீ அபாத்திரமாய்ப் போகிறதை விசாரித்தும், இஸ்பிரீத்து சாந்துவுக்கு மனநோகச் செய்ததினாலும், உன் நன்றிகெட்ட தனத்தால் சகல தகப்பன்மார்களிலும் உத்தம தகப்பனாகிய சர்வேசுரனை நிந்தைப்படுத்தினதினாலும், சேசுநாதருடைய திவ்விய மாதிரிகையைக் கண்டு பாவியாமல் போனதாலும், பாவமானது சர்வேசுரனுடைய அளவற்ற நன்மைத் தனத்துக்கும், அழகு சவுந்திரியத்துக்கும், மகத்துவத்துக்கும் நிந்தையாயிருப்பதினாலும், இவை முதலிய முகாந்தரங்களைப்பற்றியும் மனஸ்தாபப்படு.

ஞானப்பற்றுதல்கள் : பாவத்தின் பேரில் பயம், வெட்கம், மனஸ்தாபம், அருவருப்பு, சர்வேசுரன்பேரில் சிநேகம், நம்பிக்கை முதலிய

முயற்சிகளை உன் இருதயத்தில் எழுப்பக்கடவாய்.

நமது ஆண்டவராகிய சேசுநாதருடைய திரு இருதயத்தையும், தேவமாதாவின் மாசற்ற இருதயத்தையும், சம்மனசுக்கள், உனக்குப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவர்கள், இன்று திருநாள் கொண்டாடப்படுகிற அர்ச்சியசிஷ்டவர்களையும் குறித்து உன் பாவங்களுக்குப் பொறுத்தலைக் கேள்.

### 5-வது. பிரதிக்கினை முயற்சி.

தேவ அநுக்கிரகத்தின் உதவியைக்கொண்டு உன் குற்றங்களைத் திருத்திக்கொள்ள உறுதியான பிரதிக்கினை பண்ணு.

நீ அந்தந்தப் பாவங்களிலும் குற்றங்களிலும் விழுகிறதற்குக் காரணமும் சமயமும் ஏதென்றும், அதை விலக்குகிறதற்கு உபாயமென்னவென்றும் நுணுநுணுக்கமாய் ஆராய்ந்து இனிமேலாக அதிகத் தாராள குணத்தோடு அதுகளுக்கு விரோதமாய்ப் போராடக் கெட்டியான பிரதிக்கினை பண்ணுவாயாக. உன் நல்ல பிரதிக்கினைகளுக்குச் சாட்சியாகவும், அதுகளை நிறைவேற்ற உதவியாகவும் வரும்படியாய் நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரையும், பரிசுத்த கன்னிமரியாயியையும், காவலான சம்மனசுக்களையும், உனக்குப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரையும் பார்த்து மன்றாடி முடிவில் பரமண்டலமந்திரஞ் சொல்லவும்.



விபரம்:—முதலாவது. ஒவ்வொருத்தி தன் அவசரத்துக்குத் தக்கதுபோல் தெரிந்துகொள்ளும்படியாக முதற்பிரிவையும், நாலாம் பிரிவையும் விபரமாய்ச் சொல்லிக்காட்டினோம்.

2-வது. நாலாம் பிரிவும், அஞ்சாம் பிரிவும், அதிகப் பிரதானமானதுகளானபடியால், அதுகளின்பேரில் விசேஷ கவனம் வைக்கவேண்டும்.

---

## 3-ம் பிரிவு.

---

### மாதந்தோறும் தன் நடக்கையைச் சீர்ப்படுத்தும் வகை.

ஒவ்வொரு மாதத்தின் கடைசியில் அல்லது முதல் வாரத்தில் தகுந்த ஒருநாளைத் தெரிந்துகொண்டு அதிலே போனமாதத்தில் உன் நடக்கை எப்படி இருந்ததென்று உன் ஆத்துமத்தைச் சோதித்துப் பார்க்கவேணும். ஆகையால் உன் நடக்கையெல்லாம் உத்தமமான விதமாய்ச் சீர்ப்படுத்திக்கொள்ளும்படியாய், உன்னிருதயத்திலே மிகுந்த ஆசையை வருவிப்பதற்காக அதற்குத் தகுந்த தியானத்தை அன்றைக்குக் காலமே செய்யவேண்டும். இதற்காக அர்ச்சியசிஷ்ட இஞ்ஞாசியாருடைய தியானங்களிலே ஒன்றாகிலும், உனக்குப் பிரியமான வேறே எந்தத் தியானமென்கிலுஞ் செய்யலாம்.

போன மாதத்திலே தான் நடந்த நடக்கையெல்லாம் மகா நுணுநுணுக்கமாய்ச் சோதிப்பதே

இந்த நாளிலே செய்யவேண்டிய பிரதான காரியமாம். இப்படிச் சோதிப்பதற்குத் தன் அலுவல் நிமித்தமாக ஒழிந்த நேரம் இல்லாவிட்டால், காலமே கொஞ்ச நேரமாத்திரம் தியானஞ் செய்து, உன் நடக்கையை நன்றாய் ஒழுங்குப் படுத்திக் கொள்ளும்படியாய் உன் இருதயத்தில் ஆசையை வருவித்துக்கொண்டபின், தியானத்தின் மீதியான நேரமெல்லாம் மேற்சொல்லிய ஆத்தும சோதனையிலே செலவழிக்கவேண்டியது. இப்படிப்பட்ட சோதனையைத் துவக்குவதற்கு முன், உனக்கு ஞான தெளிவைத் தந்து உன் ஆத்துமத்திலுள்ள நிர்ப்பாக்கியங்களை எல்லாம் நீ அறிந்துகொள்ளும்படியாய் "இஸ்பிரீத்து சாந்துவே எழுந்தருளி வாரும்" என்னுஞ் செபத்தைச் சொல்லக்கடவாய்.

---

## ஆத்துமத்தைச் சோதிக்கும் வகையாவது.

### 1-வது. சர்வேசுரனைப்பற்றின கடமைகள்.

முதலாவது. காலமே எழுந்திருந்த நேரந் துவக்கிப் படுக்கும்வரையிலே குறிக்கப்பட்ட ஞானக்காரியங்களையெல்லாம் ஒன்றும் விடாமல் செய்தாயோ? அதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலே செய்தாயோ? நேரத்தைக் குறையாமல் முழுதும் அந்த ஞானக்காரியங்களிலே



செலவழித்தாயோ! பக்திவிநயத்தோடுங் கவனத்தோடும் உன்னால் கூடினமாத்திரஞ் சுறுசுறுப்போடுஞ் செய்தாயோ?

☞ விபரம்:—இதை நன்றாய் அறிவதற்குப் பொதுவிலே விசாரியாமல், தியானம், செபம், பூசை, பொது ஆத்துமசோதனை, தனி ஆத்துமசோதனை, ஞானவாசகம், திவ்வியநற்கருணை வாங்குதல், திவ்விய நற்கருணை சந்தித்தல், வழக்கமாய் நீ தனியே செய்து வருகிற ஜெபம் முதலான ஞானக் காரியங்களையெல்லாம் ஒவ்வொன்றாய் யோசித்துப் பார்க்கவேணும்.

2-வது. பிரதான காரியங்களைத் துவக்குவதற்குமுன் அதுகளைச் சர்வேசுரனுக்கு ஒப்புக் கொடுத்தாயோ? அந்தக் கிரியைகள் முடிந்தபின் அவைகளை நன்றாய்ச் செய்தாயோ இல்லையோவென்று சுருக்கமாய் யோசித்தாயோ? கூடினமட்டும் எப்பொழுதுஞ் சர்வேசுரனுடைய சமுகத்திலே இருக்கிறேனென்று நினைத்து யாதோர் மனவல்லயச் செபத்தை அடிக்கடி சொன்னாயோ?

### 2-வது. புறத்தியாரைப்பற்றின கடமைகள்.

முதலாவது. சகல மனிதரிலும் நீ தாழ்மையானவனென்றும், நிந்தை அவமானத்துக்குப் பாத்திரமானவனென்றும், உன் உள்ளத்தில் மெய்யாகவே எண்ணிக்கொண்டு வந்தாயோ? மற்றவர்கள் உனக்கு மேலானவர்களென்று எண்ணி அவர்கள்மட்டில் சங்கை மரியாதையோடு நடந்தாயோ? சபை ஒழுங்குகளுக்கும் மடத்தின் ஒழுங்குகளுக்கும் விரோதமாயிராத

சமயங்களில் மற்றவர்கள் மனதுபோல நடக்கப் பிரயாசப்பட்டாயோ?

2-வது. மற்றவர்கள் உனக்கு விரோதஞ் செய்கிறபோது அதைப் பொறுமையோடு சகித்தாயோ? யாதொருத்திபேரிலே வேண்டா வெறுப்பாயிருந்தாயோ? யாதொருத்தி செய்கிற தப்பிதங்களைப் பொறுமையோடு சகிக்காமலிருந்தாயோ!

3-வது. மற்றவர்கள் என்ன ஜாதியென்றும் எப்பேர்ப்பட்டவர்களென்றும் பாராமல், சகலரையுஞ் சரிசமானமாய் அத்தியந்த சிநேகத்தோடு சிநேகித்தாயோ? யார்பேரிலேயாகிலும் முறைப்பட்டுக் கோள் குண்டணி சொன்னாயோ? விசேஷமாய்ப் பெரியவர்கள்பேரிலே வீணாய் முறைப்பட்டாயோ?

4-வது. இளைப்பாறிப் பேசுகிற நேரத்திலே வாக்குவாதம்பண்ணிக் கோபித்தாயோ? ஞான காரியங்களின்பேரில் அடிக்கடி பேசினாயோ? பெரியவர்கள்மட்டில் மேனை மரியாதையோடு நடந்தாயோ? உன் அந்தஸ்துக்குத் தகுந்தது போலே மற்றவர்கள் நன்றாய் நடக்கும்படியாய் நன்மாதிரிகைகளாலும் புத்திமதிகளாலும் பிரயாசப்பட்டாயோ?

## 3-வது. தன்னைப்பற்றின கடமைகள்.

¶ இன்னம் அதிகக் கவனத்தோடு உன் உள்ளத்தில் இறங்கி அங்கே எவ்வளவு வர்த்தித்திருக்கிறாயென்று பார்.



முதலாவது. உன் ஐம்பொறிகளை மனம் பொருந்தி ஒடுக்கி, விசேஷமாய் நாக்கை மௌனங் காப்பதாலும், பேசும்போது எச்சரிக்கையாயிருப்பதினாலும் அடக்கி, உன் சுயமனதை உன்னால் கூடியமட்டும் எல்லாக் காரியத்திலும் இடைவிடாமல் ஒறுத்து, இவ்விதமாய் உன்பேரில்தானே பரிசுத்த பகை வைத்திருக்கிறாயோ?

2-வது. உலக காரியங்கள், மகிமை, சுகம், மனிதாறுதல் முதலியவைகள்பேரில் இருதயத்தில் உண்டாகும் பற்றுதல், நாட்டங்களைக் கண்ணுண்டாய்ப் பார்த்து உன் இருதயத்தைக் காத்துவந்தாயோ?

3-வது. உனக்குக் கொடுக்கப்பட்ட அலுவலை செய்ததெப்படி? அதை மற்றவைகளுக்கு முந்திச் செய்தாயோ? அதின் ஒழுங்குகளை நீ அநுசரித்து, மற்றவர்களையும் அநுசரிக்கப் பண்ணினாயோ? சரியாகவும் அவாவோடேயும் அதைச் செய்தாயோ?

4-வது. சுத்தத் தரித்திரம்: உன் அறையிலிருக்கிறதெல்லாத்தையுங் கவனமாய்ப் பரிசோதித்து அதில் வேண்டியதுக்குமேல் ஏதாகிலுமிருக்கிறதோவென்று பார். அர்ச். இஞ்ஞாசியாருடைய முதல் சீஷனை முத்திப்பேறு பெற்ற பாவெர் இராயப்பர் இவ்விதமாய்த் தமது தரித்திரத்தைச் சோதித்து வருவார். அர்ச். பஸ்ஸி மரியம்மாள் தமது நவகன்னியாஸ்திரிகள் மாதந்தோறும் தங்கள் தரித்திரத்தைச்

சோதித்து அவசரமில்லாததெல்லாம் நீக்கும் படியாய்ப் புத்தி சொல்லுவார்.

5-வது. கற்பென்கிற புண்ணியத்தை மாசு படாமல் காப்பாற்ற பிரயாசப்பட்டாயோ? எப்பொழுதும் விசேஷமாய் வெளியிலே போகும்போதும் பார்வையின்பேரில் எச்சரிக்கையாயிருந்தாயோ? உன் உள்ளத்தில் நடக்கிறதெல்லாம் உன் ஆத்தும குருவுக்குத் தெளிவாய் வெளிப்படுத்தினாயோவென்று சோதித்துப்பார்.

6-வது. பரிசுத்த கீழ்ப்படிதல்: கட்டளை நிறைவேற்றுவதிலுஞ் சிரேஷ்டருடைய மனதுக்கும் புத்திக்கும் உன் புத்தி மனதை ஒத்திருக்கப்பண்ணுகிற பிரமாணிக்கத்திலும் இன்னம் எந்த வகையிலுங் கீழ்ப்படிதல் உத்தமமாயிருக்கிறதோவென்று பார். சேசுக்கிறீஸ்துநாதரிடமாய்ச் சிரேஷ்டர்கள் இருக்கிறார்களென்று நினைத்தாயோ? ஒரு காரியஞ் செய்ய முதல் அடையாளங் கொடுத்த க்ஷணமே, எல்லாத்தையும், பாதி எழுதின எழுத்தையுமே விட்டுவிட்டாயோ? பரிசுத்த கீழ்ப்படிதல் உனக்கு ஒப்புவித்த அலுவல்களை எவ்வளவு ஜாக்கிரதையோடும், மனதுக்கந்தோடுஞ் செய்தாயோவென்று பார்.

7-வது. சபை ஒழுங்குகளையும், மடத்தின் ஒழுங்குகளையும், நன்றாய் அநுசரித்தாயோவென்று ஒவ்வொன்றாய்ப் பரிசோதித்துப்பார்.



கடைசியாய் மாதத்துக்கு மாதம் நீ புண்ணியத்திலே அதிகம் அதிகமாய் வர்த்திக்கிறாயோ? அல்லது உன்னுடைய புண்ணியங்கள் குறைந்துபோகிறதோவென்றுஞ் சர்வேசுரன் உனக்குக் கொடுக்கிற ஞான ஏவுதல்களைப் புறக்கணித்துப் போனதினால் உன்னிடத்திலுள்ள புண்ணிய சுறுசுறுப்புக் குறைந்துபோகிறதோவென்றும் நுணுக்கமாய்ச் சோதித்துப்பார்.

அன்றியும் தனி ஆத்துமசோதனை செய்த பின், நீ குறித்துக்கொண்ட தப்பிதங்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துபோயிருக்கிறதோ அல்லது அதிகப்பட்டிருக்கிறதோவென்று பார்.

---

## மரணத்துக்கு ஆயத்தம்

நீ அமரிக்கையான இடந்தேடி படைக்கப்பட்ட சருவஸ்துக்களையெல்லாம் மறந்துவிட்டுப் பாடுபட்ட சுரூபத்துக்கு முன்பாக முழங்காலிலிருந்து பின்வரும் யோசனைகளைச் செய்யக்கடவாய்.

இப்போது உனக்கு மரண நேரமாச்சுதென்றும், முன்காலத்திலே ஒரு தீர்க்கதரிசி எசக்கியாசென்னும் அரசனண்டையில் வந்து உன் வாழ்நாள் முடிந்து போயிற்று, உன் காரியங்களை ஒழுங்குசெய், நீ சாகப்போகிறாயென்று அறிவித்தாற்போல, உன் காவலான சம்மனசானவரும் உனக்குச் சொல்லுகிறாரென்றும் உருபிகரித்துக்கொள். மரணத்தை நினைக்கப் பயப்படாதே. அதை எம்மாத்திரம் அதிகமாய் நினைப்பாயோ அம்மாத்திரம் அதினால் வரும் பயங் குறைந்து

போகும். ஆகையால் அந்த நினைவை அகற்றிப்போடாமல், அது உன் உள்ளத்திலே ஆழமாய்ப் பதியும்படி செய்து நான் சாகவேணுமேயென்கிற வாக்கியத்தை மனதிலே இரட்டித்து இரட்டித்துச் சொல்லக்கடவாய்.

## முதல் யோசனை.—சாகிறதென்றாலென்ன?

1. நான் சாவேன்—இதற்கு அர்த்தமென்னவென்றால் எல்லாத்தையும் ஒன்றும் பாக்கியிராமல் எல்லாத்தையும் விட்டுப் பிரிவேன். என் சுற்றத்தார் சிநேகிதர் எல்லோரையும் விட்டுப் பிரிவேன். வீடு வாசல், நிலம், சாமான், ஆஸ்திபாஸ்தி, எனக்குச் சொந்தமான சகலத்தையும் விட்டுப் பிரிவேன். என் இருதயத்துக்கு அதிக பற்றுதலுள்ள காரியங்கள் என்ன இருக்குதோ அதுகளையும் விட்டுப் பிரிவேன். ஒன்றும் பாக்கியில்லாமல் சகலத்தையும் விட்டுப் பிரிவேன். என் ஆத்துமமே, இப்படி எல்லாத்தையும் கைவிடவேணுமென்று நினைக்கும்போது மனத்திகிலடைகிறாயல்லோ. அப்படியிருந்தாலுஞ் சகலத்தையும் விட்டுப் பிரியத்தான்வேணும். ஐயோ! இத்தனை சீக்கிரமாய் ஒழிந்துபோகிற காரியங்களின்பேரில் பற்றுதல் வைக்கிறது எப்படிப்பட்ட பைத்தியம். எனக்குச் சொந்தமாகிய பொருளையெல்லாம் சம்பாதிக்க வெகு பிரயாசப்பட்டேனே. இப்போது எல்லாத்தையும் விட்டுப் பிரியவேணும்......

2. நான் சாவேன்.—இதற்கு அர்த்தமென்னவென்றால், என்னாத்துமம் என் சரீரத்தை விட்டுப் பிரிந்துபோகும். அந்த க்ஷணமுதற்கொண்டு என் பந்துக்களுஞ் சிநேகிதரும் அந்தச் சரீரத்தைச் சீக்கிரமாய் அப்புறப்படுத்தத் தேடுவார்கள். அதை மண்ணிற் புதைப்பார்கள். நான் இப்போது வெகு கவலையாய்ப் போஷித்துவருகிற இந்தச் சரீரம் அந்த மண்ணுக்குள்ளே என்னமாய்ப் போகும்? இந்த கை கால் சிரசு என்னமாய்ப் போகும்? ஐயோ கொஞ்சத்துக்குள்ளே ஊத்தையும் தூசியுமாகப்போகிற இந்தச் சரீரத்தை நான் இம்மாத்திரம் போஷிப்பது என்ன மதியீனம். இந்தச் சரீரத்தைப்பற்றி என் ஆத்துமத்தையும், நித்திய பாக்கியத்தையும் இழந்துபோகிற ஆபத்துக்குள்ளாகிறது எப்படிப்பட்ட பைத்தியம். நான் இறந்துபோனபின்பு என்னை மனிதர்கள் நினைப்பார்களோ? ஐயோ இறந்துபோனவர்களை எவ்வளவோ அரிதாக நினைக்கிறார்கள். இன்னாரின்னார் இறந்துபோகக் கண்டேனே. அவர்களை இப்போது நினைக்கிறது யார்? ஐயோ மனிதருடைய எண்ணம் எவ்வளவோ சொற்பக் காரியம்.



3. நான் சாவேன்.—இதற்கு அர்த்தம் என்னவென்றால், என் ஆத்துமம் தீர்வையிடப்படத் தேவசந்நிதிக்குப் போகும். ஆ! பயங்கரத்துக்குரிய நேரமே! சர்வேசுரனுடைய சமுகத்திலே நான்மாத்திரந் தனியாய்ப்போய் நிற்கவேணுமே. அளவில்லாத நீதியுள்ளவருமாய், சகலத்தையும் தெளிவாய் அறிந்திருக்கிறவருமாய், பாவத்துக்கு முழுதும் சத்துராதியுமாய், அந்த நேரத்திலே சற்றும் இரக்கமில்லாதவருமான சர்வேசுரன் என் சீவியகாலமெல்லாத்தையுங் குறித்து என்னைக் கணக்குக் கேட்பாரே.

---

## இரண்டாம் யோசனை.—எப்போது சாவேன்? என்னமாய்ச் சாவேன்?

இன்னம் நான் உயிருடன் எத்தனை காலமிருப்பேனோ தெரியமாட்டாது. எந்தப் பிராயத்திலும் சாகலாமே. மரணத்துக்காயத்தம் செய்ய எனக்கு நேரமிருக்குமோ தெரியாது. அநேகம் பேர் வெகுநாள் வியாதியிருந்தும் நினையாத நேரத்தில் சாகக்கண்டிருக்

கிறேன். அவஸ்தையிலே தேவதிரவிய அநுமானங்களைப் பெறுவேனோ? பாவசங்கீர்த்தன முதலாய்ச் செய்யாமற் சாவேனோ? தெரியாது? திடீரென்று பேச்சடங்கிப் போகக்கூடுமே. இதுவுமன்றி வியாதி அகோரமாயிருக்கிற நேரத்திலே என்ன செய்யக்கூடுமாயிருக்கும்? இரட்சண்ணியமென்பது நித்தியகாலத்தைச் சேர்ந்த காரியமாயிற்றே. அதை மரண நேரத்திலே விசாரித்துக்கொள்ளலாமென்றிருப்பது எப்படிப்பட்ட பயித்தியம்!

---

மூன்றாம் யோசனை.—இப்போது சாக முஸ்திப்பாயிருக்கிறேனோ?

இந்த நிமிஷத்திலே நான் சாகவேணுமாகில், சகலத்தையும் விட்டுப் பிரிய முஸ்திப்பாயிருக்கிறேனோ? விசேஷமாய்ச் சர்வேசுரனுடைய சமுகத்திலே தீர்வைக்குப்போக முஸ்திப்பாயிருக்கிறேனோ? எனக்கு ஒரு கலக்கமுமில்லையா? என் மனச்சாட்சி அமரிக்கையாயிருக்குதா? நான் பாவசங்கீர்த்தனஞ் செய்ததின்பேரிலும் தேவநற்கருணை வாங்கினதின்பேரிலும், என் அந்தஸ்தின் கடமைகளைச் செய்ததின்பேரிலும் எனக்கு ஒரு பயமுமில்லையா? மரணத்துக்கு முஸ்திப்பாயிராத அந்தஸ்திலேயிருக்கிறது எப்படிப்பட்ட மதியீனம்! இந்த உத்தம யோசனைகளைக் கூடினமாத்திரம் செபநேரஞ்செய்து இதினால் உனக்குண்டாகிற பிரதிக்கினைகளைப் பண்ணினபின்பு, பாடுபட்டசுரூபத்தைக் கையிலே பிடித்துக்கொண்டு பின்வரும் இரண்டு செபங்களையும் பத்தியோடே சொல்லக்கடவாய்:—

---



## மாத ஒடுக்கநாளிலே படிக்கிறதற்கு முந்திச் செய்யவேண்டிய மரணத்துக்கு அமைவு பிரகரணம்.

சீவியத்துக்கும் மரணத்துக்கும் அதிபதி கர்த்தாவான சர்வேசுராசுவாமி! பாவத்துக்கு ஆக்கினையாகச் சகல மனிதரும் ஒருவிசை சாகவேணுமென்று மாறாத தீர்ப்பு செய்த ஆண்டவரே! இதோ உமது சந்நிதியிலே தாழ்ச்சியோடே சாஷ்டாங்கமாக விழுந்து உமது நீதியால் செய்யப்பட்ட இந்த முறைமைக்குக் கீழ்ப்படிய அமைந்திருக்கிறேன். நான் கட்டிக்கொண்ட அக்கிரமங்களையெல்லாம் நினைத்து முழுமனதோடே மனஸ்தாபப்பட்டுப் பிரலாபிக்கிறேன். உமதுபேரில் எதிர்த்துநின்ற பாவியாகிய நான் ஆயிரம்விசை மரணத்துக்குப் பாத்திரவானானேனே. என் எண்ணிறந்த பாவங்களுக்குப் பரிகாரமாக அந்தச் சாவைக் கையேற்றுக்கொள்ளுகிறேன். உம்முடைய ஆராதனைக்குரிய திருவுளத்துக்குக் கீழ்ப்படிதலாக அதைக் கையேற்றுக்கொள்ளுகிறேன். என் இரட்சகருடைய மரணத்தோடு அதை ஒன்றித்துக் கையேற்றுக்கொள்ளுகிறேன். என் சர்வேசுரா, உமக்குச் சித்தமான காலத்திலும் இஷ்டமான இடத்திலும் பிரியமான விதத்திலும் நான் சாவேனாக. உமது கிருபையால் நான் இன்னும் உயிர் வாழ்ந்திருக்கவேண்டிய காலத்தை எனக்குள்ள பிரபஞ்ச பற்றுதல்களையெல்லாம் ஒழிக்கவும், உமது பயங்கரத்துக்குரிய தீர்வைக்கு வர என் ஆத்துமத்தை ஆயத்தப்படுத்தவும் நான் உபயோகப்படுத்துவேன். உமது உத்தம திருவுளத்தின் கையில் என்னை முழுதும் ஒப்புக்கொடுக்கிறேன். எப்போதும் எல்லாத்திலும் உம்முடைய சித்தம் நிறைவேறக்கடவது. ஆமென் சேசு.

### நல்ல மரணத்தின் அநுக்கிரகத்தைக் கேட்கிற செபம்.

என் சர்வேசுரா! நானுமது ஆராதனைக்குரிய மகத்துவமுள்ள சன்னிதியிலே சாஷ்டாங்கமாக விழுந்து சகல வரப்பிரசாதங்களுக்கும் கடைசி வரப்பிரசாதமாகிற நல்ல மரணத்தின் அநுக்கிரகத்தைக் கேட்க வருகிறேன். நீர் எனக்குத் தந்தருளின இந்தச் ஜீவிய காலத்தை நான் எவ்வளவு நகாதவகையாய்ச் செலவழித்திருந்தபோதிலும் அதை உத்தமவிதமாய் முடிக்க உமதுபேரில் நேசமாய் உயிர்விட எனக்கு அநுக்கிரகஞ் செய்தருளும்.

---

## அர்ச். தேவமாதாவின் மந்திரமாலை.

இதுக்குமுன் சொல்லவேண்டிய மந்திரம்.

ஆண்டவரே, உமது திருநாமத்தை நான் வாழ்த்த என்னிதழ்களைத் திறந்தருளும். சகலமான வீண் பொல்லாத புறத்தி விசாரங்களில் நின்று என்னிருதயத்தைப் பரிசுத்தப்படுத்தும்.

நான் இந்த மந்திரமாலையைச் சரியான கவனத்தோடும் பத்தியோடுஞ் செபிக்கும்படிக்கும், தேவரீருடைய திருச்சமுகத்தில் நான் கேட்கும் மன்றாட்டை அடையும்படிக்கும், ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதரைப்பற்றி, என் புத்திக்குப் பிரகாசத்தையும், என் நேசத்துக்கு அக்கினியையுங் கொடுத்தருளும் சுவாமி.

ஆமென் சேசு.



ஆண்டவரே, நீர் பூமியிலிருக்கும்போது எந்தக் கருத்தோடு சர்வேசுரனுக்குப் புகழ்புரிந்தீரோ, அந்த கருத்தோடு இச்செபத்தை நான் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.—பா. பிரி.

மு.—சர்வேசுரா, எனக்கு உதவியாக நோக்கியருளும்.

து.—கர்த்தாவே, எனக்கு ஒத்தாசை செய்யத் தீவிரியும்.

மு.—பிதாவுக்கும் சுதனுக்கும் இஸ்பிரீத்து சாந்துவுக்குந் தோத்திரமுண்டாகக்கடவது.

து.—ஆதியிலேயும் இப்பொழுதும் எப்பொழுதும் அநாதி சதாகாலமும் இருக்கும்படியே ஆமென் சேசு.

### சங்கீதஞ்சேர் வசனம்.

ஓ! ஸ்திரீகளுக்குள் ரூபலாவண்ணியமுள்ளவளே, உமது அன்பர் எங்கே போனார்? ※ உமது அன்பர் எவ்விடம் மறைந்தொளிந்தார்? உம்முடன் அவரை நாங்களுந் தேடுவோம்.

## 109-ம் சங்கீதம்.

ஆண்டவர் என்னாண்டவருக்குத் திருவுளம் பற்றினதாவது: ※ நாம் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதங்களுக்கு மணையாகப் போடுமட்டும் நமது வலது பாரிசத்தில் உட்காருமென்றார்.

ஆண்டவர் சியோனில் நின்று உமது வல்லமையின் செங்கோலைப் புறப்படச் செய்வார் * உம்முடைய சத்துருக்களின் நடுவே அரசாளும்.

உமது வல்லமையின் நாளிலே அர்ச்சியசிஷ்டவர்களின் சோதி மகிமையில் இராஜாதிபத்தியம், உம்முடனே * விடியற்காலத்தின் நட்சத்திரத்துக்கு முன் உம்மை நமது உதரத்தில் நின்று ஜெனிப்பித்தோம்.

நீர் என்றென்றைக்கும் மெல்கிசெதேக் என்பவருடைய முறைமையின்படி குருவாயிருக்கிறீரென்று ஆண்டவர் ஆணையிட்டார் * அதுவும் அவருக்கு மனஸ்தாபமாயிராது.

ஆண்டவருமது வலதுபாரிசமாயிருக்கிறார். * தமது கோப நாளில் இராஜாக்களை முறித்தார்.

அவர் ஜனங்களில் நடுத்தீர்த்துக் கேடுகளை நிறைவேற்றி * பூமியில் அநேகருடைய தலைகளை நசுக்குவார்.

வழியிலே வெள்ளத்தில் குடிப்பார். * ஆகையால் தலையெடுப்பார்.

பிதாவுக்குஞ் சுதனுக்கும்—மற்றதும்.

சங்கீதஞ்சேர் வசனம்.

ஓ! ஸ்திரீகளுக்குள் ரூபலாவண்ணியமுள்ளவளே, உமது அன்பர் எங்கே போனார்? * உமது அன்பர் எவ்விட மறைந்தொளிந்தார்? உம்முடன் அவரை நாங்களுந் தேடுவோம்.



சங்கீதஞ்சேர் வசனம்.

என்னைவிட்டு அகன்று போங்கள், நான் உள்ளங் கசிந்து அழப்போகிறேன்; * எனக்கு ஆறுதல் சொல்ல நீங்கள் வருந்தவேண்டாம்.

## 112-ம். சங்கீதம்.

பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள். * ஆண்டவருடைய நாமத்தைப் புகழுங்கள்.

ஆண்டவருடைய நாமம் * இப்பொழுதும் இதுமுதல் என்றென்றைக்குந் தோத்தரிக்கப்படக்கடவது.

சூரியனுதிக்கிற திசை துவக்கி அஸ்தமிக்கிற திசைமட்டும் * ஆண்டவருடைய நாமந் துதிக்குரியதாமே.

ஆண்டவர் சகல ஜனங்கள்மேலு முயர்ந்தவர் * அவருடைய மகிமை வானங்களினும் மேலானதாமே.

உன்னத ஸ்தலங்களில் வசிக்கிறவருமாய் * பரலோகத்திலும் பூலோகத்திலுந் தாழ்வானதுகளை முதலாய் நோக்குகிறவருமாய்,

எளியவனை மண்ணிலிருந்து எடுக்கிறவருமாய் * தரித்திரனைப் பிரபுக்களோடுந் தமது ஜனத்தின் தலைவர்களோடும் ஸ்தாபிக்கும்படி அவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறவருமாய்,

மலடியை அநேக பிள்ளைகளுடைய சந்தோஷமுள்ள தாயாக வீட்டிற் குடியிருக்கப்பண்ணுகிறவருமாயிருக்கிற * எங்கள் சர்வேசுரனாகிய கர்த்தருக்கு நிகராயிருப்பவனார்?

பிதாவுக்குஞ் சுதனுக்கும்.—மற்றதும்.

சங்கீதஞ்சேர் வசனம்.

என்னைவிட்டு அகன்று போங்கள், நான் உள்ளங் கசிந்து அழப்போகிறேன்; * எனக்கு ஆறுதல் சொல்ல நீங்கள் வருந்தவேண்டாம்.

சங்கீதஞ்சேர் வசனம்.

அவரிடத்திலிருந்த அழகுஞ் சவுந்தரியமும் அற்றுப்போச்சுது. * அவரைக் கண்டோம், அவருடைய ரூபம் தெரியவில்லை.

---

## 121-ம். சங்கீதம்.

ஆண்டவருடைய வீட்டுக்குப் போவோமென்று * எனக்குச் சொல்லப்பட்டதுகளைப்பற்றிச் சந்தோஷப்பட்டேன்.

எருசலேம் நகரே, எங்கள் பாதங்கள் * உன்னுடைய வாசல்களில் நிலைநின்றன.

எருசலேந் தன்னில் ஒற்றுமைக்குரியவையாக * பட்டணமாகக் கட்டப்பட்டிருக்கிறதாமே.

அங்கே கர்த்தருடைய கோத்திரங்களாகிய கோத்திரங்கள் * இஸ்ராயேலுக்கு இடப்பட்ட



கட்டளையின்படியே கர்த்தருடைய நாமத்தைத் தோத்தரிப்பதற்கு ஏறிப்போயின.

ஏனெனில் அங்கே தாவீதுடைய வீட்டின் மேலான ஆசனங்களாகிய * நியாயாசனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

எருசலேம் நகருடைய சமாதானத்துக்கான வைகளை மன்றாடிக் கேளுங்கள், * உன்னைச் சிநேகிக்கிறவர்களுக்குப் பூரிப்புண்டாக்கடவது.

உன் வீரத்திற் சமாதானமும் * உன் கோட்டைகளிற் சம்பூரணமும் உண்டாவதாக.

என் சகோதரரையும் என் சேர்ந்தாரையும் பற்றி * உனக்காகச் சமாதானம் பேசினேன்.

நம்முடைய சர்வேசுரனாகிய கர்த்தாவின் தேவாலயத்தைப்பற்றி * உனக்குச் சகல நன்மையுந் தேடினேன்.

பிதாவுக்குஞ் சுதனுக்கும்.—மற்றதும்.

சங்கீதஞ்சேர் வசனம்.

அவரிடத்திலிருந்த அழகுஞ் சவுந்தரியமும் அற்றுப்போச்சுது. * அவரைக் கண்டோம், அவருடைய ரூபம் தெரியவில்லை.

சங்கீதஞ்சேர் வசனம்.

பாதாதிகேசம் வரைக்கும் * அவருடைய மேனியிற் காயமில்லாத இடமில்லை.

## 126-ம். சங்கீதம்.

ஆண்டவர் ஒரு வீட்டைக் கட்டாராகில், * அதைக் கட்டுகிறவர்கள் வீணாய் உழைக்கிறார்கள்.

ஆண்டவர் ஒரு பட்டணத்தைக் காக்காரானால், * அதைக் காக்கிறவன் விருதாவாய் விழித்திருந்து பராமரிக்கிறான்.

விடிகிறதற்குமுன் நீங்கள் எழுந்திருக்கிறது வியர்த்தம் * துயரமுள்ள அப்பத்தைச் சாப்பிடுகிறவர்களே, நீங்கள் இளைப்பாறின பின்பு எழுந்திருங்கள்.

தமக்குப் பிரியமானவர்களுக்கு நித்திரை தந்தருளின பின்பு, * இதோ கர்த்தருடைய சுதந்தரமாகப் புண்ணிய பலனும் உதரத்தின் கனியுமாகிய புத்திரர் ஆவார்கள்.

உபத்திரவப்பட்டவர்களுடைய புத்திரர் * பலசாலியின் கையிலுள்ள அம்புகளுக்குச் சமானம்.

அவர்களால் தன்னாசைக்குத் திருப்தியடைந்த மனிதனே பாக்கியவான், * ஒலிமுக வாசலில் தன் சத்துராதிகளோடே பேசும்பொழுது வெட்கத்துக்குள்ளாகான்.

பிதாவுக்குஞ் சுதனுக்கும்.—மற்றதும்.

சங்கீதஞ்சேர் வசனம்.

பாதாதிகேசம் வரைக்கும் * அவருடைய மேனியிற் காயமில்லாத இடமில்லை.



சங்கீதஞ்சேர் வசனம்.

புஷ்பங்களால் என்னைத் தாங்குங்கள். மாதளம் பழங்களை என்னைச்சுற்றித் தூவுங்கள், ஏனென்றால் நேசத்தால் நான் சோபிக்கிறேன்.

---

## 147-ம். சங்கீதம்.

எருசலேம் நகரே, ஆண்டவரைத் துதி * சீயோனே, உன் சர்வேசுரனைத் தோத்தரி.

ஏனெனில் உன் வாசற் கதவுகளின் தாட்பாள்களைப் பலப்படுத்தினார், * என்னிலுள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதித்தார்.

அவர் உன் எல்லைகளுக்குச் சமாதானங் கட்டளையிட்டு, * கோதும்பையின் கொழுமையினால் உன்னைத் திருத்தியாக்கினார்.

அவர் தமது வார்த்தையைப் பூமிக்கு அனுப்புகிறார்; * அவருடைய வாக்கியந் தீவிரமாய் ஓடுகின்றது.

அவர் பஞ்சடைவாக உறைந்த மழையைத் தருகிறார்; சாம்பலடைவாக மூடுபனியைத் தூவுகிறார்.

தமது கன்மழையைத் துணிக்கைகளாக அனுப்புகிறார்; * அவருடைய குளிரின் முன்பாக நிற்பவனார்?

தமது வார்த்தையை அனுப்பி அதுகளை உருக்குவார்; * அவருடைய காற்று வீசினமாத்திரத்தில் தண்ணீர் ஓடும்.

இயாகோப்பு என்பவருக்குத் தமது வார்த்தையையும் * இசிராயேலுக்குத் தம்முடைய நீதிப்பிரமாணங்களையும் நடுத்தீர்வைகளையும் அறிவிக்கிறார்.

அவர் எல்லாச் சனத்துக்கும் இப்படிச் செய்ததுமில்லை; * அவர்களுக்குத் தம்முடைய நடுத்தீர்வைகளை வெளிப்படுத்தவுமில்லை.

பிதாவுக்குஞ் சுதனுக்கும்.—மற்றதும்.

சங்கீதஞ்சேர் வசனம்.

புஷ்பங்களால் என்னைத் தாங்குங்கள்; * மாதளம்பழங்களை என்னைச்சுற்றித் தூவுங்கள்; * ஏனென்றால் நேசத்தால் நான் சோபிக்கிறேன்.

கப்பித்துலென்னும் மந்திரம்.

எருசலேங் குமாரத்தியே, உம்மை யாருக்கு ஒப்பிடுவோம்? அல்லது உம்மை எவரோடு இணையாக்குவோம்? சீயோனின் குமாரத்தியாகிய கன்னிகையே, உம்மை யாருக்குச் சரியிட்டு ஆறுதல் சொல்லுவோம்? உம்முடைய துக்க துயரஞ் சமுத்திரம்போல் பிரளயமாயிருக்கின்றது.

சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரமுண்டாக.



# சேசுநாதருடைய திரு இருதயத்துக்குத் தன்னை ஒப்புக் கொடுக்கிற செபம்.

சேசுவின் திரு இருதயமே! இந்தத்துவ சகோதரிகள் குடும்பங்களுக்கும், மடங்களுக்கும் தேவரீர் செய்துவரும் சகல உபகாரங்களையும் சொல்லி முடியாத உமது நன்மைத்தனத்தையும் நினைத்து, பட்சத்தோடு உமது பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கிறோம். நேசமுள்ள சேசுவே! எங்கள் மடங்களையும், எங்கள் குடும்பங்களையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். சகோதரிகள் ஒவ்வொருவரையும் தேவரீர் ஆசீர்வதித்து, இப்போதும் எப்போதும் உமது இருதய நிழலில் நாங்கள் இளைப்பாறச் செய்தருளும். தவறி எங்களில் எந்த சகோதரியாவது உமது திரு இருதயத்தை நோகச் செய்திருந்தால், அவள் குற்றத்திற்காக நாங்களே நிந்தைப் பரிகாரம் செய்கிறோம். உமது திரு இருதயத்தைப் பார்த்து எங்கள் பரிகாரத்தை ஏற்றுக்கொண்டு அவளுக்குக் கிருபை செய்தருளும். இதுவுமன்றி உலகத்திலிருக்கும் சகல சகோதரிகள் குடும்பங்களுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம். பலவீனர்களுக்குப் பலனும்,

விருத்தாப்பியருக்கு ஊன்றுகோலும், விதவைகளுக்கு ஆதரவும், அனாதப் பிள்ளைகளுக்குத் தஞ்சமுமாயிருக்கத் தயைபுரியும். ஒவ்வொரு வீட்டிலும் மடங்களிலுமுள்ள நோவாளிகள் அவஸ்தைப்படுகிறவர்கள் தலைமாட்டில் தேவரீர் தாமே விழித்துக் காத்து இருப்பீராக. சேசுவின் இரக்கமுள்ள இருதயமே! சிறு பிள்ளைகளை நீர் எவ்வளவு பட்சத்தோடு நேசித்தீரே. இந்த விசாரணையிலுள்ள ஒவ்வொரு மடத்திலுள்ள சகல பிள்ளைகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்களெல்லாரையும் நவகன்னியாஸ்திரிகளையும் ஆசீர்வதியும். அவர்கள் இருதயத்தில் விசுவாசத்தையும், புத்தியையும், தெய்வ பத்தியையும் வளரச்செய்யும். சீவியகாலத்தில் அவர்களுக்கு அடைக்கலமாகவும், மரண சமயத்தில் ஆறுதலாகவும் இருக்கும்படி உம்மை மன்றாடுகிறோம். திவ்விய சேசுவே முறை முறையாய் உமது திரு சிநேகத்தில் சீவித்து மரித்து, நித்தியகாலமும் எங்கள் மடம் குடும்ப முழுதும் உம்மோடு இளைப்பாறக் கிருபை புரிந்தருளும்.

ஆமென் சேசு.

---



## ஆத்துமகணக்கு கொடுப்பதற்கான விவரம்.

ஆத்துமகணக்கு சில சமயங்களில் கொடுக்கிறது உத்தமமாயிருக்கும். ஆத்துமகணக்குக் கொடுப்பதில் ஒன்றும் மறைக்காமல் தன்னுடைய குற்றங்குறைகளை மாத்திரமல்ல, தனக்கு வரும் சோதனைகளையும், தன்னிடத்திலுண்டாகும் கெட்ட இச்சைகளையும், தன்னுடைய புண்ணியங்களையும் நல்ல ஆசைகளையும், வெளிப்படுத்தக்கடவார்கள். தங்களுடைய ஆத்துமகணக்கை பாவசங்கீர்த்தனம் போலாகிலும், அல்லது பொதுவான ரகசியம்போலென்கிலும் கொடுக்கலாம். பாவசங்கீர்த்தனத்தில் சொல்லுகிறதுபோலே வெளிப்படுத்துகிறேனென்று சொல்லாதேபோனால், பொதுவான ரகசியம் போலே தன் ஆத்தும கணக்குக் கொடுத்ததாக எண்ணப்படும். இப்போது சொல்லப்போகிற பிரகாரம் தன் ஆத்துமகணக்கு கொடுக்கவேணும்.

1. என்னுடைய அந்தஸ்தின்பேரில் சந்தோஷமாயிருக்கிறேனோ?

2. கீழ்ப்படிதலின்பேரிலும், தரித்திரம், விரத்தத்துவம், இது முதலான புண்ணியங்களின்பேரிலும் எந்தப்பிரகாரம் நடந்துகொண்டு வருகிறேன்?

எந்த புண்ணியத்தை அடைவதற்கு விசேஷமாய் பிரயாசப்பட்டேன்?

3. மனதில் யாதொரு கலக்கம், கனமான சோதனை வருகிறதோ? இதுகளை எளிதாய் ஜெயிக்கிறேனோ? அதுகளுக்கு இடங்கொடாமலிருக்கும்படியாய் எந்தப்பிரகாரமாய் நடக்கிறேன்? எந்த ஆசாபாசத்தின்பேரில் அல்லது பாவத்தின்பேரில் அதிக மனச்சார்பாயிருக்கிறேன்?

4. சிரேஷ்டருடைய கட்டளை நல்லதல்லவென்று மனதறிய ஸ்திரமாய் எண்ணினேனோ?

5. ஞானக்காரியங்களின்பேரில் எவ்வளவு பற்றுதலுள்ளவளாயிருக்கிறேன்? செபத்தியானத்தில் எவ்வளவு நேரம் செலவழிக்கிறேன்? வாய்ச்செபமோ, அல்லது தியானமோ இவ்விரண்டில் எதிலே அதிக நேரஞ் செலவழிக்கிறேன்?

6. ஞானக்காரியங்களில் எனக்கு ஆறுதலும் பக்தியும் உண்டாகிறதோ? அல்லது சலிப்பும் வீரட்சியும் பராக்கும் வருகிறதோ? இதுகளின் மட்டில் எந்தப்பிரகாரமாய் நடந்து வருகிறேன்?

7. திவ்வியநற்கருணை வாங்குவதிலும், பாவசங்கீர்த்தனம் செய்வதிலும், ஆத்தும சோதனையிலும், நான் அடையும் பலனென்ன?



8. போன ஆத்துமகணக்கு கொடுத்த பின் நானடைந்த பலன் முன்னிலும் அதிகமானதோ? குறைந்துபோனதோ? உத்தமதனத்தை அடைய எனக்குண்டான மனதெப்படி?

9. ஒழுங்கு முதலான காரியங்களையும் எப்படி அனுசரிக்கிறேன்

10. ஒறுத்தல் தபசு முதலான ஆத்தும பிரயோசனத்துக்கு உதவியான காரியங்களை எவ்விதமாய்ச்செய்கிறேன்? விசேஷமாய் சேசுநாதருடைய பாடுகளைச் சேர்ந்த நிந்தை அவமானத்துக்கு அடுத்தவைகளை அனுசரிக்க ஆசையாயிருக்கிறேனோ?

11. சகோதரிகளோடு சஞ்சரிப்பதில் ஆத்தும பிரயோசனப்படுகிறேனோ? மற்றவர்களைப்பார்க்க யாதொருவர் பேரிலே அதிக சிநேகமாயிருக்கிறேனோ?

12. யாதொருவர்பேரிலே மனத்தாங்கலாயிருக்கிறேனோ? சிரேஷ்டர்மட்டில் எப்படிப் பற்றுதலாயிருக்கிறேன்?

13. என்னிடத்திலுண்டான யாதொரு சோதனையை மற்றவர்கள் அறிந்திருக்கிறார்களோ? விசேஷமாய் என்னுடைய சந்நியாச அந்தஸ்துக்கு விரோதமான சோதனைகளை யாராவது அறிந்திருக்கிறார்களோ?

### மனதைத் திறந்து வெளிப்படுத்துவதில் செய்யவேண்டிய விதம்.

கபடற்றவிதமாயிருக்கவேண்டியது. அதாவது:—வெட்கத்தினாலாகிலும் பயத்தினாலென்கிலும் ஒன்றும் மறைக்காமலிருக்கிறது. எரேமியாஸ் என்னும் தீர்க்கதரிசியானவர் வசனித்ததாவது: "ஆண்டவர் சமுகத்தில் ஜலத்தைப்போல் உன் மனதை ஊற்றுவாயாக," என்றார். நாம் ஒரு குடத்திலுள்ள தண்ணீரை ஊற்றினால் எப்படியோ, அப்படியே நமது சிரேஷ்டர்களிடத்தில் நமது உள்ளத்தைத் திறந்து காட்டவேண்டும்.

---

### தியான காலங்களிற் செய்யும் ஆத்தும சோதனையின் விவரங்கள்.

1. அவசரமான நேரத்தில் மாத்திரம் வெளியிற் புறப்பட்டு மற்ற நேரமெல்லாம் எனக்குக் குறிக்கப்பட்ட இடத்திலிருந்தேனோ.
2. சரியாய் மவுனமாயிருந்தேனோ.
3. அடக்கவொடுக்கமாயிருந்தேனோ.
4. உலோக தொல்லைக்கடுத்த யாதோர் விசாரத்தையும் புத்தியைவிட்டு விலக்காதிருந்தேனோ.
5. நானிருக்கும் ஸ்தலத்தின் சன்னல் வாசல்களைச் சாத்திக்கொண்டிருந்தேனோ.



6. நாளொழுங்கைச் சரியாய் அனுசரித்தேனோ.
7. மணிச்சத்தங் கேட்டவுடனே சுறுசுறுப்போடு கீழ்ப்படிந்தேனோ.
8. ஒழிந்த நேரத்தை வீணிலே போக்கினேனோ.
9. ஆத்தும குரு கொடுத்த புஸ்தகத்தைத் தவிர வேறே புஸ்தகத்தை வாசித்தேனோ.
10. அந்தக் குருவானவரோடு என்னாத்தும காரியத்தை ஒன்றும் ஒழியாமற் சொல்லிக் காண்பித்தேனோ.
11. பத்தியோடு பூசை கண்டேனோ. ஒடுக்கத்தில் பலனடையவும் அந்தந்த நாளிலே விசேஷ பலனடையவும் அந்தப் பூசையை ஒப்புக்கொடுத்தேனோ.
12. பத்தியோடேயுங் கவனத்தோடேயுஞ் செபமாலை சொன்னேனோ.
13. பத்தி விநயத்தோடே திவ்விய நற்கருணை சந்தித்தேனோ.
14. பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவர்களை வேண்டிக்கொண்டேனோ.
15. அந்தந்த நாள் தியானத்துக் கடுத்த நினைவை விட்டு வேறே பரிசுத்தமான நினைவு முதலாய் நினைத்தேனோ.

16. சரச பரியாச நகைப்புகளைச் சொன்னேனோ.

17. ஒவ்வொரு தியானத்துக்குப்பின் தியானச் சோதனை பண்ணினேனோ.

18. அந்தந்தத் தியானத்தில் சர்வேசுரன் எனக்குத் தந்தருளின ஞானத்தெளிவு பற்றுதல் நல்ல. பிரதிக்கினைகளை எழுதிக்கொண்டேனோ.

19. ஒடுக்கத்தின்போது தனியாத்தும சோதனையோடு தியானச் சோதனையுஞ் சேர்த்துக் கொள்ளவேண்டும். தனியாத்தும சோதனைக்கு விரோதமான யாதோர் குற்றங்கண்டால் அந்த குற்றம் எத்தனையென்று ஒரு எட்டிற் குறித்துக் கொள்ளுகிறது.

257

# மூன்றாம் காண்டம்.

---

## சந்நியாச வார்த்தைப்பாடுகளின்பேரில் உபதேசச் சுருக்கம்.

---

## முதல் அதிகாரம்.

---

### வார்த்தைப்பாட்டின்பேரிலுஞ் சந்நியாச அந்தஸ்தின் பேரிலும் பொதுவான விளக்கம்.

---

குரு.—வார்த்தைப்பாடாகிறதென்ன?

சிஷ்ன்.—யாதோர் உத்தம கிரியையைச் செய்வேனென்று மனம்பொருந்திச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்த கேர்ச்சியே வார்த்தைப்பாடென்று சொல்லப்படும்.

கு.—உத்தம கிரியையென்று சொல்லுவானேன்?

சி.—வார்த்தைப்பாட்டினால் ஒப்புக்கொடுக்கப்படுகிற நற்கிரியை தனக்கெதிரான கிரியையைப்பார்க்க நல்லதாயிருக்கவேணும்.

கு.—மனம்பொருந்தியென்று சொல்லுவானேன்?

சீ.—வார்த்தைப்பாடு செய்கிறவன் தான் சுமக்கவேண்டிய கடமையை அறிந்தும், யாதொரு கட்டாயம் படாமலும் முழுமனதோடு நேர்ந்துகொள்ளவேணும்.

கு.—சர்வேசுரனுக்கென்று சொல்லுவானேன்?

சீ.—வார்த்தைப்பாடானது தேவ ஆராதனைக்கடுத்த கிரியையாயிருக்கிறபடியால், சர்வேசுரனுக்கு மாத்திரம் ஒப்புக்கொடுக்கத் தகும்.

கு.—இந்த வார்த்தைப்பாட்டின் கடமையென்ன?

சீ.—வெறும் பிரதிக்கினையல்லாத இப்படிப்பட்ட வார்த்தைப்பாடு பாவமில்லாமல் மீறப்படாத கடனும். அதெப்படியென்றால், வார்த்தைப்பாட்டைச் செலுத்துகிறது தேவாராதனைக்கடுத்த புண்ணியக் கிரியையாயிருக்கிறது போலே வார்த்தைப்பாட்டை மீறுகிறது இப்புண்ணியத்துக்கு விரோதமான பாவமாயிருக்கின்றது.

கு.—வார்த்தைப்பாடுகளிலே மேன்மையான வார்த்தைப்பாடுகளென்ன?

சீ.—தரித்திரம், விரத்தத்துவம், கீழ்ப்படிதலாகிய மூன்று சந்நியாச வார்த்தைப்பாடானது



மற்ற வார்த்தைப்பாடுகளைப்பார்க்கிலும் மேன்மையாயிருக்குமென்கிறதற்குச் சந்தேகமில்லை.

கு.—சந்நியாச அந்தஸ்தாகிறதென்ன?

சீ.—திருச்சபை அங்கீகரித்த ஒழுங்கின்படியே தரித்திரம், விரத்தத்துவம், கீழ்ப்படிதலாகிய மூன்று வார்த்தைப்பாடுகளைக்கொண்டு சாங்கோபாங்கத்தை அடையும்படிக்கு நிலைமைக் கருத்தோடே சந்நியாசக் குடும்பமாக ஒன்றித்திருக்கிறவர்களுடைய அந்தஸ்தே சந்நியாச அந்தஸ்தென்று சொல்லப்படும்.

கு.—திருச்சபை அங்கீகரித்ததென்று சொல்லுவானேன்?

சீ.—ஒவ்வோர் அந்தஸ்து மெய்யாகவே சுவிசேஷ சாங்கோபாங்கத்துக்கு ஒப்பாயிருக்குமென்று தீர்மானிக்கிறதும், சிரேஷ்டருக்கு வேண்டிய அதிகாரத்தைக் கொடுக்கிறதும் கீழ்ப்படிதலென்கிற கடமையை மற்றவர்களின் மேற் போடுகிறதும் திருச்சபைக்கு மாத்திரந் தகுமொழிய மற்றப்படியல்ல.

கு.—ஒழுங்கின்படியேயென்று சொல்லுவானேன்?

சீ.—அவனவன் தான் பிரவேசிக்கிற சபையிலே இருக்கும் கடமையைச் சுமந்துகொள்ளக்கடவான். மனம்பொருந்தி மூன்று வார்த்தைப்பாடுகளைக் கொடுத்தபின், பிறகு தன்

மனதின்படி அதின் கடமையை அதிகரிக்கவுங் குறைக்கவுங் கூடாது.

கு.—சாங்கோபாங்கத்தை அடையும்படிக் கென்று சொல்லுவானேன்?

சி.—சந்நியாச அந்தஸ்திலிருக்கிறவர்கள் ஒரு குற்றமுங் கட்டிக்கொள்ளாமலிருக்கக் கூடாததாயிருந்தாலுந் தினந்தோறுஞ் சாங்கோபாங்கத்தை அடைய இடைவிடாத பிரயாசப்படக்கடவார்கள்.

கு.—எப்படிச் சாங்கோபாங்கத்தை அடையவேணுமென்கிற விசேஷமான கடன் தீர்க்கப்படும்?

சி.—ஒழுங்கை அநுசரித்தலினாலே தீர்க்கப்படும்.

கு.—நிலைமைக்கருத்தோடே யென்று சொல்லுவானேன்?

சி.—நிலைமைக் கருத்தில்லாவிட்டால் அது அந்தஸ்தென்று சொல்லக்கூடாது. மீளவுஞ் சந்நியாச அந்தஸ்து சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரனுக்கு மகிமையான சேவிதமாயிருக்கிறபடியினாலேயும், இவ்வுத்தியோகத்திலே தைரியம் விடாத நிலைமையினாலேயும் மேன்மையாயிருக்குமென்கிறதற்குச் சந்தேகமில்லை.

கு.—நவ சந்நியாசிகளுக்குப் பிரதான கடனென்ன?



சி.—மூன்று பிரதான கடனுண்டு. அதின் முதலாவது:—தேவ அழைத்தலைக் காப்பாற்ற வேணுமென்று யோசித்து, அசட்டைத்தனத்தினாலே இந்த வரப்பிரசாதத்தைப் போக்கடிக்காமலும், மடத்திலே நின்று தள்ளும்படிக்குப் பாத்திரமான குற்றங்களைக் கட்டிக்கொள்ளாமலுந் தேவபயத்தோடே நடந்து எச்சரிக்கையாயிருக்கிறது.

2-வது.—சந்நியாச அந்தஸ்துக்குரிய போதனைகளைப் படித்துச் சகல புண்ணிய வழியிலே அப்பியாசத்தினாலே சுறுசுறுப்பான விதமாய் நடக்கிறது.

3-வது.—சிரேஷ்டருக்குக் கீழ்ப்படிந்து சகல ஒழுங்குகளை அநுசரிக்கத்தக்கதாகப் பிரயாசப்படுகிறது.

அநேக சமயங்களில் இந்த மூன்றுங் கடனை மீறுகிறது பாவமாயிருக்கும்.

---

## 2-ம் அதிகாரம்.

### தரித்திர வார்த்தைப்பாடாவது.

---

### முதல் பிரிவு.

#### வார்த்தைப்பாட்டுக் கடமையின்பேரில்.

கு.—சந்நியாச வார்த்தைப்பாட்டிலே யிருக்குங் கடமை யெத்தனை?

சீ.—ஒவ்வொரு சத்தியாச வார்த்தைப்பாட்டிலே பாவமில்லாமல் மீறப்படாத கடனாயிருக்கிற வார்த்தைப்பாட்டுக் கடமையும், இதுக்கடுத்த புண்ணியக் கடமையுமாகிய இரண்டு கடமையுமிருக்கிறதாம்.

கு.—தரித்திர வார்த்தைப்பாட்டின் கடமையென்ன?

சீ.—உடைமையெல்லாத்தையும் விட்டுவிட்டு, சிரேஷ்டர் உத்தரவில்லாமல் சொந்தக்காரனுக்குத் தகுந்ததாயிருக்கிற எந்தக் கிரியையையுஞ் செய்யாமலிருக்கிறதே தரித்திர வார்த்தைப்பாட்டின் கடமையாம்.

கு.—சொந்தக்காரனுக்குத் தகுந்ததாயிருக்கிற கிரியைகளைச் சொல்லு?

சீ.—முதலாவது:—சொந்தமாகவாகிலும், இரவலாகவென்கிலும் வாங்கவும் கொடுக்கவும், மற்றவர்களிடத்தில் கேட்கவும், தன்னிடத்தில் எனக்குச் சொந்தமாயிருக்குமென்கிற கருத்தோடே வைத்துக்கொள்ளவும், குறிக்கப்பட்ட பொருட்களை மாற்றி வேறே காரியத்துக்காகச் செலவழிக்கவும், ஒரு மடத்திலிருக்கிற எந்தப் பண்டத்தையும் எடுத்து வேறே மடத்துக்குக் கொண்டுபோகவும், அனுப்பவும், சேதமாக்கவுஞ் சேதமாகக் காரணமாயிருக்கவுஞ் செலவழித்தலுக்குச் சேர்ந்திருக்கிற இது முதலானதுகளைச் செய்யவுங் கூடாது.



2-வது.—விற்கவுங் கொள்ளவும் மாற்றிக்கொள்ளவுங் கடனாகக் கொடுக்கவும் வாங்கவும் வியாபாரத்துக்குச் சேர்ந்திருக்கிற இது முதலானதுகளைச் செய்யவுங் கூடாது.

3-வது.—பிறருடைமையைத் தன்னிடத்தில் வைத்துக் காப்பாற்றவும், கடன் வாங்குகிறவனுக்காகப் பிணைப்பட்டுக்கொள்ளவும், கடனுக்கேதுவான உடன்படிக்கையாயிருக்கிற இது முதலானதுகளைச் செய்யவுங் கூடாது.

ஏனெனில் இப்படிப்பட்ட கிரியை சொந்தக்காரனுக்குத் தகுமொழிய மற்றப்படியல்ல.

கு.—இதுவுமல்லாமல் இந்த வார்த்தைப்பாட்டுக்கு விரோதமாயிருக்கிற வேறே பாவமுண்டோ?

சீ.—உண்டு. களவாண்கிறதும், பிறருடைமையை அபேட்சிக்கிறதும், ஏழாம் பத்தாங் கற்பனைக்கு விரோதமாயிருக்கும். இது முதலானதுகள் தரித்திர வார்த்தைப்பாட்டின் மட்டிலும் பாவமாயிருக்கின்றது. அல்லாமலும், இவ்விரு கற்பனையும் மீறுகிற சாவான பாவமெல்லாந் தரித்திர வார்த்தைப்பாட்டுக் கடமைக்கும் விரோதமாய்ச் சாவான பாவமாயிருக்குமென்கிறதற்குச் சந்தேகமில்லை.

கு.—சிரேஷ்டர் உத்தரவில்லாமலென்று சொல்லுவானேன்?

சீ.—சிரேஷ்டர் உத்தரவைப் பெற்றிருக்கிறவன் தன் மனதின்படி செய்யாமல் ஊழியக்காரனைப்போலே செய்கிறதுமொழியச் சொந்தக்காரனாகச் செய்கிறதல்ல.

கு.—தரித்திர வார்த்தைப்பாட்டைக் குறித்து சிரேஷ்டருக்குக் கடனென்ன?

சீ.—சிரேஷ்டரானவர் தரித்திர வார்த்தைப்பாட்டைக் கொடுத்ததினாலே தாமும் வீணான செலவு செய்யவும், மற்றவர்கள் செய்ய உத்தரவைக் கொடுக்கவும், ஒழுங்குக்கு விரோதமான செலவழித்தலுக்கு இடங்கொடுக்கவுங்கூடாது.

---

## 2-ம் பிரிவு.

### தரித்திரமென்கிற புண்ணியத்தின்பேரில்.

கு.—தரித்திரமென்கிற புண்ணியமாவதென்ன?

சீ.—உலோக ஆஸ்தியின்பேரிலே இருக்கிற பற்றுதலைத் தள்ளுகிற புண்ணியம்.

கு.—இப்புண்ணியத்தின் கடமைக்கு விரோதமாயிருக்கும் விசேஷமான பாவமென்ன?

சீ.—முதலாவது.—தான் விட்டுவிட்ட உடைமையின்பேரில் மனஸ்தாபத்தோடு நினைத்துத் தன் அந்தஸ்துக்குத் தகாத பண்டங்களை அபேட்சிக்கிறது.

2-வது.—தன்னிடத்திலிருக்கும் பொருட்களின்பேரில் மிஞ்சின பற்றுதலாயிருக்கிறது.



3-வது.—அவசரமில்லாத காரியங்களையும், விலையுயர்ந்த பொருட்களையுந் தன்னிடத்தில் வைத்துக்கொள்ளுகிறது.

அதுவும் இதுவும் எல்லாந் தரித்திரனுக்குத் தகாத பற்றுதலாயிருக்கிறபடியால், தரித்திரமென்கிற புண்ணியத்துக்கு விரோதமான பாவமாயிருக்கும்.

கு.—தரித்திரமென்கிற புண்ணியத்துக்கடுத்த பிரதான கடமையென்ன?

சீ.—பொதுச் சீவியமாய்ச் சீவித்தலாமே.

கு.—பொதுச் சீவியமாகிறதென்ன?

சீ.—அன்னவஸ்திரம் படுக்கை முதலானதுகளையுங் குறித்து விசேஷ சுதந்தரமில்லாமலும், அவசரமில்லாத உத்தரவைப் பெற்றுக்கொள்ளாமலும், ஒரு சபையிலே இருக்கிறவர்களெல்லாருஞ் செலுத்துகிற ஒழுங்குகளைத் தானும் அநுசரித்து நடக்கிறதே பொதுச் சீவியமென்று சொல்லப்படும்.

கு.—தரித்திரமென்கிற புண்ணியத்திலே உத்தமதனத்துக்கு ஏறுகிற படிகளெவை?

சீ.—நாலு. அதில்

முதலாவது.—தனக்குச் சொந்தமான பொருட்களை விட்டுவிட்டு எந்த உடைமையையும் தன் வசப்படுத்திக்கொள்ளமாட்டேனென்று உறுதியாயிருக்கிறது.

௨-வது.—அவசரமில்லாத பண்டங்களைத் தள்ளி வேண்டிய காரியமாத்திரம் அநுபவிக்கிறது.

௩-வது.—மடத்திலே இருக்கிறதுகளுக்குள்ளே தாழ்வான பொருட்களைத் தனக்காகத் தெரிந்துகொள்ளுகிறது.

௪-வது.—தன்னாலியன்றமாத்திரந் தரித்திரவருத்தங்களை அநுபவித்து, இச்சமயத்திலே யேசுக்கிறீஸ்துநாதர் அநுபவித்த எளிமைக்குப் பங்காளியாயிருக்கிறேனென்று எண்ணிச் சந்தோஷப்படுகிறது.

கு.—தரித்திரமென்கிற புண்ணியத்தின் உத்தமதனத்தை அடையத்தக்கதாகச் செய்ய வேண்டியதென்ன?

சி.—முதலாவது:—மடத்திலாகிலுந் தன்னிடத்திலென்கிலும் இருக்கிறதெல்லாஞ் சர்வேசுரனுக்குச் சொந்தமாயிருக்கிறதென்று நினைத்துக்கொள்ளவேணும்.

௨-வது.—எந்தெந்தப் பண்டத்தின்பேரிலும் ஆசைப்படாமல் எல்லாத்தையும் விட்டுவிடுகிறதற்கு ஆயத்தமாயிருக்கவேணும்.

௩-வது.—நான் ஒன்றுமில்லாமல் பிச்சை வாங்கிப் பிழைக்கிறேனென்றெண்ணி நன்றியறிதலோடு கொடுக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளவேணும்.



௪-வது.—கடைசியாய் ஒறுத்தலின்பேரில் ஆசைப்பட்டுத் தான் செய்த பாவங்களுக்குத் தகுந்த அபராதம் பண்ணவேணுமென்றறிந்து, அழிந்துபோகிற உலக நன்மையை நிந்தித்து, அழியாத மோட்ச நன்மையை ஆசித்து, எளிமையைத் தெரிந்துகொண்ட யேசுக்கிறீஸ்துநாதரை எல்லாத்தையும் பார்க்க நேசித்து எந்தக் காரியத்தின்பேரிலும் பற்றுதலில்லாதிருக்கவேணும்.

## ௩-ம் அதிகாரம்.

### விரத்தத்துவ வார்த்தைப்பாட்டின்பேரிலுங் கற்பென்கிற புண்ணியத்தின்பேரிலும்.

கு.—விரத்தத்துவ வார்த்தைப்பாட்டின் கடமையென்ன?

சி.—கலியாணம் பண்ணாதிருக்கிறது விரத்தத்துவ வார்த்தைப்பாட்டின் விசேஷமான கடமையாகிறதுமல்லாமல், தன் சிந்தையிலேயும் வாக்கிலேயுங் கிரியையிலேயுங் கற்புக்கு விரோதமான பாவங்களுக்குக் கவனமானவிதமாய் விலகவேணுமென்பது வார்த்தைப்பாட்டின் கடமையுமாய்ப் புண்ணியக் கடமையுமாய் இருக்கின்றது.

கு.—கற்பென்கிற புண்ணியத்துக்கு விரோதமான பாவமெல்லாம் விரத்தத்துவ வார்த்

தைப்பாட்டுக் கடமைக்கும் விரோதமான பாவமாயிருக்குமோ?

சீ.—ஆம். கற்பென்கிற புண்ணியத்துக்கு விரோதமான பாவமெல்லாம் விரத்தத்துவ வார்த்தைப்பாட்டுக் கடமைக்கும் விரோதமாயிருக்கும். ஆகையால் சந்நியாச அந்தஸ்திலிருக்கிறவர்கள் தங்களுடைய ஆத்தும சரீரத்தின் பரிசுத்ததனத்தைக்கொண்டு சம்மனசுக்களுக்கடுத்த பரிசுத்ததனத்தைக் கண்டுபாவிக்கத் தங்களாலானமட்டும் பிரயாசப்படக்கடவார்கள்.

கு.—இந்தப் பரிசுத்ததனத்தைக் காப்பாற்றத்தக்கதாக அநுசரிக்கவேண்டியதென்ன?

சீ.—முதலாவது—மற்றவர்களை மிகவுஞ் சங்கித்துத் தாழ்ச்சியோடு நடக்கிறது.

2-வது.—தபசு ஒறுத்தலின்பேரிலும் செபத்தியானத்தின்பேரிலும் பற்றுதலாயிருக்கிறது.

3-வது.—அடக்கவொடுக்க ஒழுங்குகளைக் கவனமான விதமாய்க் காப்பாற்றுகிறது.

4-வது.—சகல ஒழுங்குகளையும், விசேஷமாய் மவுனத்தை, அநுசரித்துக்கொள்ளுகிறது.

5-வது.—சம்மனசுக்களுடைய இராக்கினியுமாய்க் கன்னியர்களை ஆதரிக்கிறவளுமாயிருக்கிற தேவமாதாவின்பேரிலே மகா பத்தியாயிருக்கிறது.



## 4-ம் அதிகாரம்.

## கீழ்ப்படிதலின் வார்த்தைப்பாடாவது.

---

### முதல் பிரிவு.

### வார்த்தைப்பாட்டுக் கடமையின்பேரில்.

கு.—சந்நியாச அந்தஸ்திலே செய்யப்படுகிற கீழ்ப்படிதலின் வார்த்தைப்பாடாவதென்ன?

சீ.—சிரேஷ்டருக்குக் கொடுக்கப்பட்ட வார்த்தைப்பாடுகளை நிறைவேற்றுவேனென்று சர்வேசுரனுக்கு நேர்ந்துகொள்ளுகிறதே கீழ்ப்படிதலின் வார்த்தைப்பாடென்று சொல்லப்படும்.

கு.—கீழ்ப்படிதலின் வார்த்தைப்பாட்டைக் கொடுத்தவனுக்குக் கடனென்ன?

சீ.—சந்நியாச அந்தஸ்திலே கீழ்ப்படிதலின் வார்த்தைப்பாடு கொடுத்தவன் சிரேஷ்டர் ஒழுங்கின்படியே கற்பிக்கிறதெல்லாத்துக்கும் கீழ்ப்படிந்து நடக்கக்கடவான்.

கு.—ஒழுங்கின்படியே என்று சொல்லுவானேன்?

சீ.—சிரேஷ்டருடைய அதிகாரம் ஒழுங்குகளில் அடங்கியிருக்கிற விவரங்களைக் கற்பிக்கிறதிலே செல்லுகிறதுமல்லாமல் ஒழுங்கு உத்தம அநுசரித்தலின்மட்டிலும் படர்ந்திருக்

கிறவர்கள் விசாரிக்கிற தொழில் தருமக்கிரியை முதலானதுகளை நடப்பிக்கவின் மட்டிலும் வேண்டிய கட்டளை யிடுகிறதிலேயுஞ் செல்லுமென்கிறதற்குச் சந்தேகமில்லை.

கு.—இந்த வார்த்தைப்பாட்டுக் கடமைக்கு விரோதமாய்ச் சாவானபாவங் கட்டிக்கொள்ளுவதார்?

சி.—கீழ்ப்படிதலின் பேராலே கனமான கட்டளையிடுகிற சிரேஷ்டருக்குக் கீழ்ப்படியமாட்டாமலிருக்கிறவன் இவ் வார்த்தைப்பாட்டுக் கடமைக்கும் விரோதமாய்ச் சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளுவான்.

கு.—கனமான கட்டளையென்று சொல்லுவானேன்?

சி.—சிரேஷ்டரானவர் மிகவுங் கனமான முகாந்தரத்தைப்பற்றி மாத்திரம் இப்படிப்பட்ட கட்டளை யிடுகிறதொழிய மற்றப்படியல்ல.

---

## 2-ம் பிரிவு.

### கீழ்ப்படிதலென்கிற புண்ணியத்தின்பேரில்.

கு.—கீழ்ப்படிதல் என்கிற புண்ணியமாவதென்ன?

சி.—சிரேஷ்டருக்குக் கீழ்ப்படிந்திருக்க மனதைச் சம்மதிக்கப்பண்ணுகிற புண்ணியம்.



கு.—வார்த்தைப்பாட்டுக் கடமைக்கு விரோதமான பாவங் கட்டிக்கொள்ளாமல் புண்ணியக் கடமைக்கு விரோதமான பாவங் கட்டிக்கொள்ளுவார்களோ?

சி.—மகா எச்சரிக்கையோடு நடவாவிட்டால் சிந்தையினாலாகிலும், வாக்கினாலாகிலும், கிரியையினாலாகிலும் கீழ்ப்படிதலென்கிற புண்ணியத்துக்கு விரோதமாய் எண்ணப்படாத பாவங் கட்டிக்கொள்ளுவார்கள்.

கு.—எந்தப் பாவம் இப்புண்ணியக் கடமைக்கு விரோதமாய்ச் சாவான பாவமாயிருக்கும்?

சி.—முதலாவது.— சிரேஷ்டரிடத்திலிருக்கிற அதிகாரத்தைப் பகைப்பொருந்திப் புறக்கணித்துக் கீழ்ப்படியமாட்டாமலிருக்கிறதும்,

2-வது.—தான் கீழ்ப்படியாததினாலே மடத்துக்காகிலும் பிறத்தியாருக்காகிலும் கனமான சேதமாகக் காரணமாயிருக்கிறதும், அதுவும் இதுவும் கீழ்ப்படிதலென்கிற புண்ணியக் கடமைக்கு விரோதமாய்ச் சாவான பாவமாயிருக்கின்றது.

கு.—சிரேஷ்டர் நியமிக்கிற கீழான விசாரணைக்காரருக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடனோ?

சி.—அவர்கள் தன் அதிகாரத்தின் மட்டிற் கற்பிக்கிறதற்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடனும்.

கு.—கீழான சிரேஷ்டர் ஓரோ உத்தரவைக் கொடுக்கமாட்டாமலிருந்து மேலான சிரேஷ்டரிடத்தில் இந்த உத்தரவை மறுபடி கேட்கக்கூடுமோ?

சீ.—கீழான சிரேஷ்டர் எந்த முகாந்தரத்தைப்பற்றி உத்தரவைக் கொடுக்கமாட்டாமலிருந்தாரோவென்றும் மறுமொழிக்காக என்ன சொன்னாரோவென்றும் மேலான சிரேஷ்டருக்கு விவரமாய்ச் சொன்னதுக்குப் பிறகுமாத்திரம் கேட்கக்கூடுமொழிய மற்றப்படியல்ல.

கு.—சிரேஷ்டர் கற்பித்தது என்னாலே சரியாய் நிறைவேற்றக்கூடாதென்று நினைத்துச் சிரேஷ்டரிடத்திலே போய் இருக்கிற விக்கினங்களை அறிவிக்கக்கூடுமோ?

சீ.—கூடும். சகலமும் விவரமாய்த் தமக்குத் தெரியும்படிக்குச் சிரேஷ்டர் அதுகளைக் கேட்கப் பிரியப்படுவார். ஆனால் இந்தச் சமயத்திலே சிரேஷ்டர் தீர்மானிப்பதற்கு முழுதுங் கீழ்ப்படிந்து நடப்பேனென்கிற மனதோடு ஆயத்தமாயிருக்கவேணும்.

கு.—கீழ்ப்படிதலின் உத்தமதனத்துக்கு ஏறுகிற படி எத்தனை?

சீ.—நிறைவேற்றத்தின் கீழ்ப்படிதலும், மனதின் கீழ்ப்படிதலும், புத்தியின் கீழ்ப்படிதலும் ஆகிய மூன்று படியுண்டு.

கு.—நிறைவேற்றத்தின் கீழ்ப்படிதலாவது என்ன?



சீ.—சிரேஷ்டர் கற்பித்ததெல்லாத்தையுந் தீவிரமுமாய் முழுமையும் பழுதற்றதுமாய் நிறைவேற்றுகிறதாம்.

கு.—மனதின் கீழ்ப்படிதலாவதென்ன?

சீ.—நம்முடைய மனது சிரேஷ்டருடைய மனதோடு ஒன்றித்து அவர் கற்பிக்கிறதுபோலவும், விரும்புகிறதுபோலவும் நாமுஞ் சந்தோஷதைரியத்தோடே முழுமனதாயிருக்கிறதாம்.

கு.—புத்தியின் கீழ்ப்படிதலாவதென்ன?

சீ.—மேற்சொன்ன மனதின் கீழ்ப்படிதலை அடைந்து, சிரேஷ்டருடைய புத்திக்கு தன் சொந்தப் புத்தியைக் கீழ்ப்படுத்தி, அவர் நினைக்கிறதுபோலே நினைக்கவும், அவர் மதிக்கிறதுபோலே மதிக்கவும் வேணுமென்கிறதே புத்தியின் கீழ்ப்படிதலாம்.

கு.—உத்தம கீழ்ப்படிதலை அடையத்தக்கதாகச் செய்யவேண்டியதென்ன?

சீ.—அவனவன் தாழ்ச்சி சற்குணத்தோடே நடந்துகொண்டு சிரேஷ்டர் இன்னாரென்று பாராமற் சர்வேசுரனுடைய ஸ்தானத்திலிருக்கிறவரென்று நினைக்கவும், சர்வேசுரன் கற்பிக்கிறதுபோல அவருடைய கட்டளை ஆகாதென்று நினையாமலும், ஏதென்று விசாரியாமலும் தீவிரமாய் நிறைவேற்றவுங்கடவான்.

# நமது பரிசுத்த தந்தையாகிய அர்ச். இஞ்ஞாசியார் கீழ்ப்படிதலென்னும் புண்ணியத்தின்பேரில் எழுதிய நிருபம்.

போர்த்துக்கல் தேசத்திலுள்ள சேசுசபைச் சகோதரருக்கு, லொயோலா இஞ்ஞாசியார், நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துவின் கிருபையும் அன்புமுண்டாக ஆசீர்வதித்து எழுதுவது என்னவென்றால்:

1. சேசுக்கிறீஸ்துவில் மிகவும் பிரியமுள்ள சகோதரரே, ஆண்டவருடைய கிருபையாலே நீங்கள் எவ்வித புண்ணியத்திலும் பக்தியிலும் சாங்கோபாங்கத்தை அடைய, நீங்கள் எவ்வளவோ உருக்கமான ஆசையோடும் முயற்சியோடும் பிரயாசப்படுகிறீர்களென்று நாம் கேள்விப்பட்டு மிகவும் ஆறுதலடைகிறோம். ஆண்டவர் உங்களை இவ்விதச் சிவியத்துக்கு அழைத்ததுபோல, அதிலே உங்களை இரக்கமாய் வைத்துக்காப்பாற்றி, அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் போய்ச் சேரும் பாக்கியமான கதியை நோக்கி எங்களையும் நடத்தி வருகிறார்.

2. நீங்கள் எவ்வித ஞான வரங்களிலும் புண்ணியங்களிலும் உத்தமர்களாக நாம் ஆசைப்பட்டாலும், இதற்குமுன் நாம் உங்களுக்கு



சொல்லியிருப்பதுபோல, கீழ்ப்படிதலென்னும் புண்ணியத்தின்மட்டில் மிகவும் கீர்த்திபெற்றவர்களாகிறதைப் பார்க்கவேண்டுமென்று நாம் விசேஷ வகையாக ஆசைப்படுகிறோம். இதுவும், பழைய புதிய ஏற்பாடுகளின் உதாரணங்களிலும், சத்தியவேத அநேக அத்தாட்சிகளிலும் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறதுபோல, அந்தப் புண்ணியத்தால் உண்டாகும் விசேஷித்த உத்தம பலன்களைப்பற்றிமாத்திரமல்ல; இன்னம் "கீழ்ப்படிதலென்னும் புண்ணியமே மற்றும் சகல புண்ணியங்களையும் மனதில் ஊன்றி, ஊன்றினபின் அவைகளைக் காப்பாற்றுகிறது," என்று அர்ச். கிறகோரியார் சொல்வதினாலேயுமாம். இப்புண்ணியம் செழித்தோங்கி வளரும் காலத்தில், மற்றப் புண்ணியங்களெல்லாம் சந்தேகமின்றி வேரூன்றி வளர்ந்து நமது ஆசைக்கு ஒத்த பலன்களை உங்கள் இருதயத்தில் விளைவிக்கும். "மரணமட்டும், இன்னும் சிலுவை மரணமட்டும் கீழ்ப்படிதலுள்ளவராகி" கீழ்ப்படியாமையென்னும் பாவத்தால் தாக்கித்தீ, மனுக்குலம் இழந்துபோன நன்மைகளையெல்லாம், நமதாண்டவர் தமது சுகிர்த கீழ்ப்படிதலைக்கொண்டு பரிகரித்தபடியால், இவ்விதக் கீழ்ப்படிதலை நம்மிடத்தில் அவர் கேட்பது ஞாயந்தானே.

3. மற்றும் சந்நியாச சபைகள் ஒருசந்தி உபவாசத்திலும், நித்திரை ஒறுத்தல் உணவு உடைகளின் குறைகளைச் சகித்தலிலும், அவர

வர்களுடைய சபை ஒழுங்குப்பிரகாரம், அவரவர்கள் பக்தியாய் அநுசரித்துவருகிற புண்ணியங்களைக்கொண்டு எளிதாய் மேன்பாடடையலாம். ஆனால், மிகவும் பிரியமுள்ள சகோதரரோ, இந்தச் சேசுசபையில் சர்வேசுரனுக்கு ஊழியம் பண்ணுகிறவர்கள், உண்மையான உத்தம கீழ்ப்படிதலிலும், சுய மனத்தீர்மானத்தை மறுத்தலிலும் பேர்பெற்றவர்களாக வேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோம். மேற்படி சபையின் உத்தம பிள்ளைகளாயிருக்கப்பட்டவர்களுடைய விசேஷ அடையாளம் ஏதென்றால், தாங்கள் யாருக்குக் கீழ்ப்படிகிறோமென்று பாராமல், சுவாமியின் நேசத்தைப் பற்றி நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருக்குக் கீழ்ப்படிகிறோமென்று நினைப்பதில் அவர்கள் பேர்பெற்றிலங்கவேண்டும். ஏனென்றால், சிரேஷ்டர் விவேகத்திலும் புண்ணியத்திலும் மற்றும் சகல தேவ வரங்களிலும் சிறந்தவராயிருப்பதினாலே அவருக்கு நாம் கீழ்ப்படியக்கடவோமல்ல, ஆனால் அவர் சர்வேசுரனுடைய ஸ்தானத்திலிருக்கிறபடியினாலேயும் "உங்களுக்குச் செவி கொடுக்கிறவன் நமக்கே கீழ்ப்படிகிறான், உங்களைப் பிரக்கணிக்கிறவன் நம்மையே பிரக்கணிக்கிறான்" என்று திருவாக்கருளிய சுவாமியால் அவர் அதிகாரம் பெற்றிருப்பதினாலேயுந்தான் அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். அதற்கு விரோதமாய்ச் சிரேஷ்டர் புத்தி விவேகம் இவற்றில் குறைவுள்ளவரா



யிருந்தால் அவருடைய சிரேஷ்டத்துவத்துக்கு நமது கீழ்ப்படிதல் குறைவாயிருக்கத் தகுமோ? அல்ல. வியக்கப்படாத ஞானமுடைத்தான ஆண்டவருடைய பதிலாளியாயிருப்பதினாலேயும், அந்த ஆண்டவர் தமது பதிலாளியிடத்தில் உள்ள புண்ணிய முதலிய சற்குணக்குறைகளை நிவர்த்தி பண்ணுவாரென்பதினாலேயுந்தான் அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். ஆகையால் "மோயீசனுடைய ஆசனத்தில் பரிசேயரும் சதுசேயரும் வீற்றிருக்கிறார்கள்" என்றபின் "அவர்கள் சொல்லுகிறதெல்லாவற்றையும் அநுசரித்து நிறைவேற்றுங்கள். ஆனால் அவர்களுடைய கிரிகைகளை நீங்கள் கண்டுபாவியாதேயுங்கள்" என்று தெளிவாய் நமது ஆண்டவர் திருவுளம்பற்றியிருக்கிறார்.

4. ஆகையால் நீங்கள் எந்தச் சிரேஷ்டரையும் சேசுக்கிறீஸ்துநாதராகப் பாவிக்க மிகுந்த ஜாக்கிரதை, பக்தி சுறுசுறுப்போடே முயற்சி செய்யவேண்டுமென்றும், அவரில் அறிகுறியாயிருக்கும் தேவ மகத்துவத்துக்கு அதிமிகப் பற்றுதலோடு பணிந்து நடக்கவேண்டுமென்றும் விரும்புகிறோம். சகல ஒழுங்கமைந்த அதிகாரமெல்லாவற்றிற்கும் ஊற்றணியான சேசுக்கிறீஸ்துநாதருக்குக் கீழ்ப்படிவதுபோலே, உலக சிரேஷ்டருக்கும் அஞ்ஞான உத்தியோகஸ்தருக்கும் கீழ்ப்படியவேண்டுமென்று அப்போஸ்தலராகிய அர்ச். சின்னப்பர் கற்பிக்கும் விசேஷத்தை உற்றுக்கவனித்தால் இது அவ்

வரைவு விபரீதமாக உங்களுக்குத் தோன்றும். ஏனெனில் அந்த அப்போஸ்தலர் எபேசியர்களுக்கு எழுதுகிறதாவது: "சரீரப்பிறப்பின் படியில் பிரபஞ்ச அதிகாரிகளுக்குப் பயந்து நடுங்கி, உண்மையான இருதயத்தோடு, ஆண்டவருக்குக் கீழ்ப்படிவதுபோல் கீழ்ப்படிந்து நடங்கள், மனிதருக்குப் பிரியப்படும்படி நடப்பதுபோல் கண்ணுக்கு முன்னே மாத்திரம் கீழ்ப்படியாதேயுங்கள்; ஆனால் சேசுக்கிறீஸ்துநாதருடைய ஊழியர்கள் முழு இருதயத்தோடு சர்வேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதைப் போலவும், மனிதருக்கல்ல ஆண்டவருக்குத்தானே நல்ல மனதோடு ஊழியம் பண்ணுகிறவர்களைப்போலவும் செய்யுங்கள்." இதினாலே ஒரு சந்நியாசியானவர், தமது சிரேஷ்டரை எப்படி மதிக்கவேண்டுமென்று நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள். ஏனெனில் சந்நியாசியானவன் தன்னை ஆண்டு நடத்த ஒரு சிரேஷ்டருக்குத் தன்னை ஒப்புக்கொடுப்பதுபோல மாத்திரமல்ல, ஆனால் சேசுக்கிறீஸ்துநாதருடைய ஸ்தானத்திலிருப்பவருக்குத்தானே விசேஷணையாகத் தன்னை ஒப்படைத்திருப்பதினால் அவரை மனிதனைப் பாவிக்கவேண்டுமோ அல்லது சேசுக்கிறீஸ்துநாதராகப் பாவிக்கவேண்டுமோ தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

5. இதன்றியே, கற்பிக்கப்பட்டதை வெளிப்பார்வைக்கு மாத்திரம் செய்து முடிக்கிறது, என்ற கீழ்ப்படிதலானது மிகவும் குறைவுள்ளதென்றும் ஈனமுள்ளதென்றும் நீங்கள் நன்றாய்க் கண்டுபிடிக்கவும், உங்கள் மனதில் ஸ்திர



மாய்ப் பதித்துக்கொள்ளவும் வேண்டும். இப்பேர்ப்பட்ட புண்ணியமானது கற்பனையை வெளிப்பார்வைக்கு முழுதும் நிறைவேற்றுகிறதில் மாத்திரமல்ல, இன்னம் ஒரே காரியத்தை விரும்புவதிலும் வெறுப்பதிலும் இருவரும் ஒருமனதாயிருக்கும்படிக்கு மனதையும் சிரேஷ்டருடைய மனதுக்கு முழுதும் ஒத்திருக்கப்பண்ணுவதிலேயுந்தான் அடங்கியிருக்கின்றதும், இப்படிப்பட்ட மேலான படிக்குச் செல்லாவிட்டால் அப்புண்ணியம் புண்ணியமென்ற பேருக்குப் பாத்திரமல்லவென்றும் அறிக. இதைப்பற்றியே வேத புஸ்தகத்தில் சொல்லுகிறதாவது: "பலியிலும் கீழ்ப்படிதலே சிறந்தது" ஏனெனில் அர்ச். கிறகோரியார் படிப்பிக்கிறதாவது: "பலியில் வேறு வஸ்துவின் மாங்ஷத்தைப் பலியிடுகிறோம், கீழ்ப்படிதலிலோ நமது சுய மனதைப் பலியிடுகிறோம்." ஆத்துமத்தின் இந்தப் பாகமானது மிகவும் மேன்மையுடையதாய் இருப்பதினாலே, கீழ்ப்படிதலைக்கொண்டு அதை நமது சிருஷ்டிகர்த்தருக்கு நாம் காணிக்கையாக ஒப்புக்கொடுப்பது மிகவும் விலைபொருந்தியதாயிருக்கின்றது.

6. பிரபஞ்ச காரியங்களிலே சிரேஷ்டருடைய சித்தத்தையும் நியமனத்தையும் மீறி நடக்கலாமென்று நினைக்கிறவர்கள் மாத்திரமல்ல, இன்னம் செப தப முதலிய ஞானக் காரியங்களில் மீறி நடக்கலாமென்று எண்ணுகிறவர்களும், எவ்வளவோ ஆபத்தான தப்பிதத்துக்

குன்னாகிறார்கள். கசியான் என்பவர் தனியேல் என்ற மடாதிபதியோடு சம்பாஷிக்கையில் சொன்ன விசேஷமான வாக்கியத்தை இவர்கள் கேட்கக்கடவார்கள். அதாவது: "வேலையின் அவசரத்திலாவது தன் சுதந்தை விரும்பியாவது சிரேஷ்டருடைய கட்டளையைமீறுகிறதும், கவனமில்லாமையாலும் சோம்பலினாலும் மடத்தின் ஒழுங்குகளுக்கு விரோதமாய் நடந்து குற்றவாளியாகிறதும் ஒழுங்கீனமான கீழ்ப்படியாமை என்று பாவித்தான். கடைசியாய் வாசிப்பதற்கு மாத்திரம் கொடுத்த கற்பனையை மீறுவதுக்கு சரி, நித்திரை செய்ய அவர் கொடுத்த கட்டளையை அநுசரியாதிருப்பதும் சரி." மார்த்தாளுடைய வேலையும் மரியமதலேனாளுடைய தியானமும் பரிசுத்தமானதுதான். திவ்விய கர்த்தருடைய பாதத்தைக் கழுவின இவளுடைய கண்ணீரும் இயற்றிய தவமும் பரிசுத்தமானதுதான். ஆனால் இதெல்லாம் கீழ்ப்படிதலின் விடென்ற பெத்தானியாவிலே செய்யப்படவேண்டியதாயிருந்தது. இதினாலே ஆண்டவர் படிப்பிப்பது என்னவென்றால், அர்ச். பெர்நர்து என்பவர் சொல்லுவதுபோல "பெத்தானியாவிந்த வெளியிலே, தற்கிரிசையின் முயற்சியானது தியான யோக அமரிக்கையாவது தபசின் கண்ணீராவது ஆண்டவருக்குப் பிரியமாயிராது."

7. ஆகையால், பிரியமான சகோதரிகளே, உங்கள் சுயமனதை முழுதும் தள்ளிவிடுங்கள். உங்களுக்கு சர்வேசுரன் கொடுத்த மனச்சுயாதீனத்தை அவருடைய ஸ்தானாதிபதியிடத்தில் மனப்பூரணமாய் ஒப்பித்துவிடுங்கள். உங்கள்



சுய மனதை உங்களுக்குக் கொடுத்த ஆண்டவருக்குத்தானே கீழ்ப்படிதலைக்கொண்டு நீங்கள் திரும்ப அதை முழுதும் கொடுக்கக்கூடியதாயிருப்பது சொற்பப் பிரயோசனமுள்ளதல்லவென்று நினைத்துக்கொள்ளுங்கள். இப்படி நீங்கள் செய்வதினாலே அதை நீங்கள் இழந்து போகாதிருப்பதன்றியே, அதை அதிகரித்து விருத்தியாக்குவீர்கள். ஏனெனில் இந்த வழியாய் எதார்த்தமென்கிற மிகவும் உண்மையான சட்டப்பிரமாணத்தைக்கொண்டு சர்வேசுரனுக்குப்பதிலாய் உங்களை ஆண்டு நடத்துகிறவரால் உங்களுக்குக் காண்பிக்கப்படும் அவருடைய சித்தத்துக்கு இசையவே உங்கள் மனதையும் நடத்துகிறீர்களாமே.

8. இதற்காகவே சிரேஷ்டருடைய சித்தத்தைத் தேவசித்தம்போல் நீங்கள் எண்ணவேண்டியிருப்பதால் அதை உங்கள் மனப்பிரியத்துக்கு இசைத்துக்கொள்ளாதபடிக்கு நீங்கள் எப்போதும் மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஏனெனில் இப்படிச்செய்வது, தேவசித்தத்துக்கு ஒத்த நடத்தையல்ல. தெய்வீக ஞான நியமனத்தைத் தலைகீழாய் மாற்றி; அவருடைய சித்தத்தை உங்கள் மனதால் ஆண்டு நடத்துவதுபோலாகும். ஓ! இது எவ்வளவோ பெரிய தப்பிதம்! இதன்றியே தாங்கள் ஆசைப்படும் விஷயத்துக்குச் சிரேஷ்டருடைய மனதை எந்த உபாயத்தாலாவது உடன்படுத்தினாயின், தாங்கள் கீழ்ப்படிதலுள்ளவர்க

ளென்று நினைப்பது எப்பேர்ப்பட்ட தப்பிதம். இது சுயபட்சத்தால் குருட்டாட்டமுள்ளவர்களுக்குரிய தப்பிதமாம். இந்த விஷயத்தில் மிகவும் அநுபோகமுள்ளவரான அர்ச். பெர்நர்து என்பவர் சொல்லுவதைக் கேளுங்கள்: "எவனுகிலும் தான் ஆசைப்படுவதையே தன் ஆத்தும குருவானவர் கற்பிக்கவேண்டுமென்று, பிரசித்தமாயாவது இரகசியமாயாவது பிரயாசப்படுகிறவன், தான் கீழ்ப்படிதலை உண்மையாய் பின்செல்லுகிறவனென்று நினைத்தால் மோசம் போகிறான். ஏனெனில் இந்தவிஷயத்தில் சிரேஷ்டருக்கு இவன் கீழ்ப்படிகிறதில்லை; சிரேஷ்டரோ இவனுக்குக் கீழ்ப்படிகிறாரே." ஆகையால் கீழ்ப்படிதலென்னும் புண்ணியத்தின்பேரில் ஆசையுள்ளவன் செய்யவேண்டியது என்னவென்றால், சிரேஷ்டருடைய கட்டளையை நிறைவேற்றுகிறது மாத்திரம் பத்தாது. இன்னம் கீழ்ப்படிதலின் இரண்டாம் படியில் சேரத்தக்கதாக, சிரேஷ்டருடைய மனதைத் தன் மனதாக்கிக்கொள்ளவும் அல்லது சிரேஷ்டரால் காண்பிக்கப்படும் தேவ சித்தத்தைத் தன்மேல் போட்டுக்கொள்ளும்படிக்கு தன் மனதை முழுதும் வெறுத்துத் தள்ளிவிடுவதும் அவசரமாம்.

9. ஆனால் தன்னை முழுதும் சர்வேசுரனுக்கு பலியாக்கிப்போடுகிறவன் தன் மனதை மாத்திரமல்ல, இன்னம் தன் புத்தியையுங்கூட அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். இதுவே உத்தம கீழ்ப்படிதலின் மூன்றாம் படியாம். அதெப்படியென்றால் சிரேஷ்டருடைய சித்தம்



போலவே சிந்திப்பதுமல்லாமல் அவருடைய எண்ணம்போலவே நாமும் எண்ணிக்கொள்ள வேண்டும். ஒரு பத்தியுள்ள மனமானது புத்தியை எவ்வளவு அடக்கி இருப்பக்கூடுமோ, அவ்வளவு, நாமும் நமது தீர்மானத்தைச் சிரேஷ்டருடைய தீர்மானத்துக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். ஏனெனில் புத்தியென்னும் புலனானது, மனப் புலனைப்போல சுயாதீனமுள்ளதாயிராதபோதிலும், உண்மைபோல தனக்குக் காண்பிக்கப்படும் விஷயங்களுக்கெல்லாம், தற்சுபாவமாய் இணங்கக்கூடியதாய் இருந்தாலும் அநேக காரியங்களிலே, தான் அறிந்துகொண்ட விஷயத்தின் திருஷ்டாந்தமானது அதைக் கட்டாயப்படுத்தாவிட்டால், மனதின் பிலனைக்கொண்டு ஒரு பக்கத்தைவிட மறுபக்கத்தில் அதிகமாய் அது சாயக்கூடும். இப்பேர்ப்பட்ட காரியங்கள் நேரிடுகையில் கீழ்ப்படியும் வார்த்தைப்பாடு கொடுத்தவன் சிரேஷ்டருடைய தீர்மானத்துக்கு தன்னை முழுதும் உடன்படுத்தவேண்டும். ஏனெனில் கீழ்ப்படிதலானது தகனப்பலியாகையால், எவ்வளவேனும் பொருள் விலக்கின்றி மனிதன் முழுவதும் கர்த்தரின் பிரதிநிதியானவருடைய கரங்களைக் கொண்டு தேவ சிநேக அக்கினியில் நமது சிருஷ்டிகராகிய ஆண்டவருக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கப்படுகிறானே. இன்னம் சந்நியாசியானவன், சிரேஷ்டர் மூலியமாய்த் தன்னை சர்வேசுரனுக்குச் சொந்தமாக்கி அவரமேலே

ஆண்டு நடத்தப்படும் பொருட்டு தன்னை ஆண்டவருக்கு வசீகரம்பண்ணி அவருடைய திருப்பாதத்தில் பந்தனமாக்கத்தக்கதாக தன் சுயாதீனத்தையெல்லாம் மனதாரக் கொடுத்துவிடுகிறபடியால், இது சம்பூரண சுய மறுத்தலாம். ஆகையால் கற்பிக்கப்படுவதை மனது வைத்து முழுமனதோடே செய்துமுடிப்பதில் மாத்திரம் கீழ்ப்படிதல் அடங்கியிருக்கிறதல்ல, இன்னமும் சிரேஷ்டர் கற்பிப்பதிலும், சந்நியாசிக்கு நல்லதென்று அவர் நினைப்பதிலும், நீதி நியாயத்துக்கு ஒத்ததாக அவருக்குத் தோன்றுவதிலும், நாம் முன் சொன்னதுபோல, மனதானது தன் சக்தியினாலும் பலத்தினாலும் புத்தியை அடக்கக்கூடிய அளவாக மனத்தீர்மானத்தை ஒழுங்குப்படுத்துவதிலுங்கூட அடங்கியிருக்கிறது என்பதற்கு எவ்வளவேனும் சந்தேகமில்லை.

10. இப்பேர்ப்பட்ட புத்தி மனக்கீழ்ப்படிதலானது, சந்நியாசத்தில் சீவிக்கிற எல்லாருக்கும் எத்தன்மையான அவசரமாயிருக்கிறதோ, சர்வேசுரனுக்கு இது எத்தன்மையான பிரியமுள்ளதாயிருக்கிறதோ, அத்தன்மையாக, யாவரும் இதை சரிவரக் கண்டுபிடித்து அநுசரிக்கக்கடவார்களாக. எனெனில் வானசோதி வஸ்துக்கள் ஒன்றை ஒன்று ஒட்டி நடத்தத்தக்கதாக ஒருவித ஒழுங்கு இணக்க முறையில் கீழ்த்தரமானது மேல்த்தரமானதுக்கு அமைந்து செல்லுவதுபோல, மனிதர்களுக்குள்ளும், கீழ்



ப்படிதலில் நேரிடுகிறவண்ணமே, ஒருத்தருடைய அதிகாரத்தால் மற்றொருவர் நடத்தப்படுகையில், கற்பிப்பவராலே நடக்கு சுகிர்தமும் தூண்டுதலும் உண்டாகத்தக்கதாக, கீழ்த்தரமான ஸ்திதியிலிருப்பவன், மேல்த்தரமான அதிகாரமுள்ளவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டியது அவசரமாமே. மேலதிகாரமுள்ளவருடைய சித்தத்துக்கும், தீர்மானத்துக்கும், கீழ் ஸ்திதியிலிருப்பவனுடைய மனதுந் தீர்மானமும் ஒத்து இசைந்திருந்தால் அல்லாமல், மேற்சொன்ன அடக்கமும் சிரவணமும் ஒருபோதும் நிலைத்திராது.

11. இதன்றியே கீழ்ப்படிதலின் கருத்தையும் கதியையும் நோக்கிப்பார்க்கையில், நமக்கு நன்மையான விஷயத்தில் நமது மனது பிசகக்கூடியதாயிருப்பதுபோல, நமது புத்தியும் பிசகிப்போகலாமென்பதினாலே, அப்படிப்பட்ட பிசகு வாராதபடிக்கு, சிரேஷ்டருடைய மனதுக்கு நமது மனதையும் ஒத்திருக்கச் செய்தால், நாம் தவறிப்போகாதிருக்க அவருடைய புத்தியாலே நமது புத்தியும் நடத்தப்பட வேண்டியது அவசரமாமே. எனெனில் "உன் சுய விவேகத்தில் ஊன்றியிராதே" என்று வேத புஸ்தகம் சொல்லுகிறது. பிரபஞ்ச காரியத்திலே முதலாய், விசேஷமாய் தனக்கு அடுத்த விஷயத்திலே, மனக்கலக்கமாயிருக்கும்போது எவனும் தானே நல்ல தீர்மானம்பண்ணிக்கொள்ள முடியாதாகையால், தன் ஞான

த்தை நம்பக்கூடாதென்பது, விவேகசாலியின் கடமையாமென, ஞானவான்கள் தீர்மானிக்கிறார்கள். நம்மைப் பற்றின காரியங்களில் நமது தீர்மானத்தைவிட நமக்குப் பெரியோரல்லாத பிறத்தியாருடைய தீர்மானத்தையும் ஆலோசனையையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தால், நம்மை ஆண்டு நடத்தத் தக்கதாக நம்மை நாமே யார் கையில் ஒப்புக்கொடுத்தோமோ, அவர் அல்லது அந்த ஸ்ரேஷ்டர் சர்வேசுரனுடைய ஸ்தானத்தில் வீற்றிருந்து அவருடைய திவ்விய சித்தத்தை நமக்கு காட்டுகிறபடியால், அவருடைய ஆலோசனையையும் தீர்மானத்தையும் நாம் எவ்வளவோ மேலாக மதித்து ஏற்றுக்கொள்ளவேண்டியது. விவேக ஆலோசனை என்னும் கடிவாளமின்றி ஒருவன் ஞான மார்க்கத்தின் வழியாய் நடந்து செல்லுகையில், அதில் வரக்கூடிய ஆபத்து கனமான ஆபத்தானபடியால், ஞானக்காரியங்கள் மட்டிலும், அதிலுடன்பட்டிருப்பவர்கள் மட்டிலும், அதிகமான எச்சரிக்கை வேண்டியது நிச்சயம். ஆகையால் கஸியான் என்பவர் மோசேஸ் என்னும் மடாதிபதியோடு நடத்திய சம்பாஷணையில் சொல்லுகிறதாவது: "சந்நியாசியானவன் தன் சுய புத்தி தீர்மானத்தை நம்பிக்கொள்ளவும், தன் பெரியோர்களுடைய ஆலோசனையை அலட்சியஞ் செய்யவும் பிசாசு துர்ப்புத்தி படிப்பித்து, இப்படியாய் அவனை அதிக்கிரமம் மதியீனத்தின் கேட்டுக்குள்ளாக்கிவிடுமே தவிர, அவனைக்



கெடுப்பதற்கு வேறே துர்க்குணத்தை அது உபயோகிக்கிறதில்லை."

12. இதன்றியே நமது சுய மனதானது, இவ்விதக் கீழ்ப்படிதலென்னும் புண்ணியம் நம்மிடத்தில் இருந்தாலல்லாமல் கட்டளைக்கு முழுமனச் சம்மதமாவது, அதைச் செய்து முடித்தாலாவது, தக்கபிரகாரம் நிறைவேறுவது கூடாதகாரியமாமே; ஏனெனில் அறிவுக்குப் பிறகுதான் ஆசையென்பதும், கட்டாயமின்றி மனப்புலன் புத்திக்கு வெகுநேரம் கீழ்ப்படிந்திருக்க முடியாதென்பதும் சுபாவ நியமனமாம். தப்பிதமாய்க் கற்பிக்கப்பட்டபோதிலும் கீழ்ப்படியத்தான் வேண்டுமென்னும் இப்பேர்ப்பட்ட சாதாரண எண்ணத்தால் தூண்டப்பட்டுச் சிலகாலமளவும் கீழ்ப்படிகிறவர்கள் உண்டானால், இவர்களுடைய கீழ்ப்படிதல் உறுதியாகவும் நிலவரமாகவும் இராது. இப்படியாய்ச் சிரவணை நிலைமை சீர்குலையும், அல்லது தாமதமின்றித் தீவிரமாய் நிறைவேற்றுவதிலடங்கிய சிரவணைச் சாங்கோபாங்கமாய்க் குறையும். ஏனெனில் ஒவ்வாமனமும் பின்னபேதமான அபிப்பிராயமும் இருக்குமிடத்தில் தீவிரமும் சுறுசுறுப்பும் சிதையாமலிராது. நமக்குக் கற்பிக்கப்பட்டதை நிறைவேற்றுவது நமக்குப் பிரயோசனமாயிருக்குமோ இல்லையோவென்று நாம் சந்தேகப்படும்போது அதைச் செய்து முடிப்பதில் தீவிர சுறுசுறுப்பு சிதைந்தேபோகும். கட்டளை நீதிநியாயத்துக்கு ஒத்ததோ

என்று நாம் விசாரிக்கத் தொடங்கினால், குருட்டுக் கீழ்ப்படிதலென்னும் பேர்பெற்ற எதார்த்த மனம் கெட்டுப்போகும். நமக்கு எவ்வளவேனும் பிரியமில்லாததைச் சிரேஷ்டர் கற்பிக்கிறாரென்று சொல்லிச் சிலவிசை அவரைப்பற்றிக் குறைபேசுகிறோம். இதனால் தாழ்ச்சியற்றுப் போகிறது. ஏனெனில் ஒரு பக்கத்திலே நாம் கீழ்ப்படிந்தாலும், மற்றொரு பக்கத்தில் நமது சிரேஷ்டரைவிட நம்மை அதிகமாய் மதிக்கிறோம். வருத்தமுள்ள முயற்சிகளில் மனத்திடனும் அற்றுப்போகிறது. இன்னம் சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமாகில், இந்தப் புண்ணியத்தின் சக்தியும் மேன்மையும் வியர்த்தமாய்ப் போகிறது. அதற்குப் பதிலாய் வருத்தமும் தொந்தரவும், மனவெறுப்பும், சலிப்பும், முறுமுறுப்பும், சாக்குபோக்கும் மற்றும் பெரிய துர்க்குணங்களும் எழும்புகிறது. இதனாலே சிரவணத்தின் மதிப்பும் பேறுபலனும் முழுதும் அழிந்துபோகிறது.

ஆகையால் வருத்தமான காரியங்கள் கற்பிக்கப்படுகையில் அதைப் பொல்லாப்பாக எண்ணிக்கொள்ளுகிறவர்களைப்பற்றி அர்ச். பெர்னர்து என்பவர் சொல்லுகிறதாவது: "இதைப்பற்றி நீங்கள் கஸ்திப்படத்துவக்கினால், சிரேஷ்டருடைய மனதை அளவிடத் துணிந்தால், உங்கள் இருதயத்திலே முறையிட்டால், கற்பிக்கப்பட்டதை வெளிப்பார்வைக்கு நீங்கள் செய்தபோதிலும், இது பொறுமை என்னும் புண்ணியமல்ல. இது உங்கள்



துர்க்குணப் போர்வையாமே." மனச் சமாதானமும் அமரிக்கையும் வேண்டுமானால் மனக்குழப்பத்துக்கும் தொந்தரவுக்கும் காரணமானதைத் தன் இருதயத்தில் வைத்திருக்கிறவன், அதாவது கீழ்ப்படிதலின் சட்டத்துக்கு அடுத்தது போலே தன் மனத் தீர்மானத்தை இசைத்து நடத்தாதவன், மேற்சொன்ன மனச்சமாதானத்தை அடையவேமாட்டான்.

13. ஆகையால் சகல சபைகளின் கட்டுப்பாடாகிய ஒற்றுமையைக் காப்பாற்றத்தக்கதாக சகலரும் தங்கள் மனதையும் தீர்மானத்தையும் ஒன்றித்து ஒருவருக்கொருவர் பொறுத்துச் சகித்து தேற்றரவாயிருப்பதற்கு, ஒரேவிதமான எண்ணமும் சொல்லும் உள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று, அர்ச். சின்னப்பர் மிகுந்த ஆசையோடே போதிக்கிறார். தலைவருக்கும் சபையாருக்கும் ஒரேவிதமான அபிப்பிராய உணர்ச்சி இருக்கவேண்டுமாகில் தலைவர் சபையாருக்கு அமைந்து நடக்கவேண்டுமோ, சபையார் தலைவருக்கமைந்து நடக்கவேண்டுமோ, எது அதிக நியாயமென்று நீங்களே எளிதாய்த் தீர்மானித்துக்கொள்ளலாம். ஆகையால் இந்தப் புத்திக் கீழ்ப்படிதல் எவ்வளவு அவசரமென்று நாம் இதுவரையில் சொல்லியதைக்கொண்டு திருஷ்டாந்தமாய்த் தெரியவருமாமே.

14. ஆனால் இந்தக் கீழ்ப்படிதலின் வழியாய் முந்த முந்த மனிதனிடத்திலுள்ள அதிகா

உத்தம விலைபொருந்திய அம்சம் ஆண்டவருக்கு வசீகரஞ் செய்யப்படுகிறதினாலேயும், இரண்டாவது, கீழ்ப்படிகிறவன் தனக்கென்றும் மீதி வைத்துக்கொள்ளாமல், தேவ மகத்துவத்துக்கு மிகவும் பிரியமான சிறிய தானப்பலியாகிறதினாலேயும், கடைசியாய், இதில் நேரிடும் வருத்தமான யுத்தத்தினாலேயும், இந்தப் புண்ணியம் தன்னிலே தானே எவ்வளவு சாங்கோபாங்கமுள்ளதென்றும் சர்வேசுரனுக்கு எவ்வளவு பிரியமுள்ளதென்றும் நாம் அறிந்துகொள்ளலாம். ஏனென்றால் கீழ்ப்படிகிறவன் முந்த முந்த, தேவ சிநேகத்தினிமித்தம் தன்னை செயிக்கிறான். இன்னம் சுய அபிப்பிராயத்தை அங்கீகரித்து அநுசரிக்க யாவருக்குமுள்ள சுபாவ மனச்சார்பை எதிர்த்துப் போராடுகிறான். இதனால் சிரவணமானது சிரேஷ்டருடைய சித்தத்தின் அடையாளத்தை அறிந்த மாத்திரத்தில் மனதை ஆயத்தப்படுத்திக் கீழ்ப்படியத் தீவிரமுள்ளதாக்குவதினாலே, மன உத்தமதனம் அந்தப் புண்ணியத்தினால் உண்டாகும் பலனாயினும், நாம் முன் சொன்னதுபோல அந்தச் சிரவணமான புத்தியையும் சீர்படுத்தி, சிரேஷ்டருடைய சித்தத்துக்கு இணங்கிச் சகலத்திலும் அவருடைய அபிப்பிராயத்துக்கு ஒத்திருக்கும்படியாய் அதை உடன்படுத்த வேண்டும். இவ்விதமாய் நமது புத்தி மனச் சக்தியெல்லாம் ஒன்றித்து நிற்க, நமக்குக்



கற்பிக்கப்பட்டதை முழுத் தீவிரத்தோடும் பிரமாணிக்கத்தோடும் நிறைவேற்றுவோமாக.

15. மிகவும் பிரியமான சகோதரரே, இந்தப் புண்ணியத்தின் அவசியத்தைப்பற்றி இனி நீங்கள் சந்தேகப்படுவதில்லையென்றும், ஆனால் அந்தப் புண்ணியத்தில் தேர்ச்சி அடையும் வகையை மாத்திரம் அறிய மிகவும் ஆசையாயிருக்கிறீர்களென்றும் சொல்லுவீர்களாக்கும். இந்தக் கேள்விக்கு அர்ச். லேயோ என்பவர் சொல்லும் மறுமொழியைக் கேளுங்கள்: "தாழ்ச்சியுள்ளவர்களுக்குக் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. சாந்தகுணமுள்ளவர்களுக்கு வருத்தமானது ஒன்றுமில்லை" என்பதாம். ஆகையால் உங்களுக்கு எள்ளளவேனும் தாழ்ச்சியாவது சாந்தகுணமாவது இருக்குமாகில், நீங்கள் சர்வேசுரனுக்குக் கொடுத்த வாக்கை, பொறுமையோடும் மனச்சந்தோஷத்தோடும் நிறைவேற்றுவதற்கு அவர் தமது அளவில்லாத நன்மைத்தனத்தால் உங்களுக்கு உதவிசெய்ய பின்வாங்குவாரல்ல.

16. இதன்றியே இந்தப் புத்திக் கீழ்ப்படிதலை அடைவதில் உங்களுக்கு மிகவும் உற்சாகமுண்டாகத்தக்கதாக இவ்விடத்தில் மூன்று விசேஷங்களை உங்களுக்குச் சொல்லிக்காட்டுவோம்.

முதலாவது, நாம் முன் சொன்னதுபோல உங்கள் சிரேஷ்டரிடத்தில் அறிகுறியாயிருப்பவர், தப்பித முதலிய நிர்ப்பாக்கியங்களுக்குள்

ளான மனிதனல்லவென்றும், உந்த ஞானமும் மட்டற்ற நன்மைத்தனமும் அளவற்ற நேசமுமாய் அமைந்திருக்கும் ஆண்டவர் தானென்றும், ஒருவரையும் ஏமாற்றாதவரும், ஏமாற்றப்படக்கூடாதவருமாகிய சுவாமிநாதனென்றும், நீங்கள் எண்ணிக்கொள்ளவேண்டியது. சிரேஷ்டருடைய மனதைப் பின்செல்லுவதில் தேவ சித்தத்தையே நிச்சயமாய்ப் பின்சென்று அநுசரிக்கிறதாக நீங்கள் தேவசினேகத்தைப்பற்றி இந்தக் கீழ்ப்படிதலின் சுமையை மேற்போட்டுக்கொண்டீர்களென்றும் நன்றாய் அறிந்து உணர்ந்திருக்கிறீர்கள். அதியுத்தம உண்மை நேசமுள்ள ஆண்டவர்தாமே உங்களுக்குச் சிரேஷ்டராக நியமித்திருக்கிறவருடைய கரங்களைக்கொண்டு நேர்மையான நெறியில் உங்களை இடைவிடாமல் வழிநடத்தி வருகிறாரென்பதற்கு நீங்கள் எள்ளளவேனும் சந்தேகப்படவேண்டாம். சேசுக்கிறீஸ்துநாதருடைய குரலொலியைக் கேட்பதுபோல, சிரேஷ்டர்களுடைய சத்தத்துக்குக் காதுகொடுங்கள். " அர்ச். சின்னப்பர் கொலோசியருக்கு எழுதிய நிருபத்தில் பிரசைகளானவர்கள் தங்கள் அதிபதிகளுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டியதென்று போதித்து உணர்த்துவதை அறிந்துகொள்ளுங்கள். அதாவது: "நீங்கள் என்னசெய்தாலும் மனிதருக்காகச் செய்வதுபோலச் செய்யாதேயுங்கள்; ஆண்டவருக்காக முழு இருதயத்தோடு அதைச் செய்யுங்கள். சுதந்தர வேதமதி



யை ஆண்டவரிடத்தில் பெற்றுக்கொள்வீர்களென்று அறிந்திருங்கள். சேசுநாதர்சுவாமிக்கு ஊழியம் பண்ணுங்கள்." மேலும் அர்ச். பெர்நார்து என்பவர் சொல்லுகிறதாவது: "சர்வேசுரனாகிலும் சரி அவருடைய பதிலாளியான மனிதனாகிலும் சரி வேசுரனுக்கு விரோதமில்லாத எதைக் கற்பித்தாலுஞ் சரியே, நாம் ஒத்த நிகராகிய சுறுசுறுப்போடு அதற்குக் கீழ்ப்படிந்து சங்கையோடு அதை நிறைவேற்றவேண்டும்." இப்படியாய், சரீரக்கண்களால் மனிதனைப் பாராமல், ஆத்துமக் கண்களால் சர்வேசுரனை நோக்கினால், நீங்களே தெரிந்துகொண்ட ஒழுக்குக்கு, உங்கள் புத்தி மனத்தத்துவங்களை இசைந்து நடத்த வருத்தமாயிராது, என்பது நிச்சயம்.

17. வேறோர்வகை ஏதென்றால், உங்கள் சிரேஷ்டர் கற்பிப்பதை அல்லது அவர் நல்லதென்று எண்ணுவதைப் பயபக்தியோடு உங்கள் மனதில் ஏற்றுக்கொள்ளவேண்டுமேதவிர அவருடைய கற்பனை சரியல்லவென்று ஒருபோதும் அலட்சியம்பண்ணலாகாது. அவர் என்ன கற்பித்தாலுஞ் சரியே, அதன்மட்டில் மனப்பிரியமாயிருப்பது இந்தச் சுகிர்த சித்திக்கு உதவியாயிருக்கும். இதனாலே நீங்கள் மனக்கலக்கமின்றி கீழ்ப்படிகிறதுந் தவிர, பணிந்து பிரியத்தோடும் மனமகிழ்ச்சியோடும் நடப்பீர்கள். ஏனெனில் அர்ச். லெயோ என்பவர் சொல்லுவதுபோல, "கற்பிக்கப்படுவதை நாம் நேசிக்குமிடத்தில் கீழ்ப்படிந்து நடப்பது வருத்தமாயிராது."

18. கடைசியாய், உங்கள் புத்தியைக் கீழ்ப்
படுத்த அதிக சுளுவும் சுகிரமுள்ளதும் பரிசு
த்த முனிவர்களுக்குள் வழங்கிவந்ததுமான
வகை ஏதென்றால், கிறோஷ்டர் கற்பிப்பதெல்
லாம் சர்வ வல்லபமுள்ள சர்வேசுரனுடைய
சித்தமும் கற்பனையுமாமென்று உங்கள் உள்
ளத்தில் தீர்மானித்துக்கொள்வதாம். சத்திய
திருச்சபை காண்பிப்பதை நீங்கள் விசுவசிப்ப
தற்காக உங்கள் மனச் சக்திகளையெல்லாம்
அடக்கி ஒடுக்கிறதுபோல, கிறோஷ்டர் கற்பிப்
பதைச் செய்வதிலும் கீழ்ப்படிய ஆசையுள்ள
வர்களாய் ஓர்விதக் குருட்டு உற்சாகத்தால் நீங்
கள் நடத்தப்பட வேண்டியதாமே. அபிரா
மென்பவர் தன் குமாரன் ஈசாக்கைப் பலியி
டக் கற்பிக்கப்பட்டபோது நடந்துகொண்ட
வகை இதுவேயென்று நினைக்கத்தக்கதாம்.
புது ஏற்பாட்டிலும் சுகியானென்பவர் எடுத்
துச் சொல்லும் பரிசுத்த முனிவர்களில் சிலர்
செய்ததும் இவ்விதமே. மடாதிபதியான அரு
ளப்பர் தமக்குக் கற்பிக்கப்பட்டது பிரயோசன
முள்ளதோ அல்லவோ என்று விசாரியாமல்
மிகுந்த பிரயாசத்தோடும் இடைவிடாத முயற்
சியோடும் பட்டுப்போன ஒரு குச்சிக்கு ஒரு
வருஷமளவும் தண்ணீர் ஊற்றினபோது இவர்
செய்ததும் இவ்விதமே. அன்றியும் தமக்குக்
கட்டளையிடப்பட்டது இயலுங்காரியமோ இய
லாத செய்கையோ என்று நினையாமல், அனே
கர் கூடியும் அசைக்க முடியாத ஒரு பெருங்



கற்பாறையை அடியோடே பெயர்க்க ஆவ
லோடு முயன்றபோது இன்னொருவர் செய்த
தும் இவ்விதமே. இப்பேர்ப்பட்ட கீழ்ப்படி
தல் சில சமயத்தில் அற்புதத்தாலும் ஸ்திரப்
படுத்தப்பட்டதை அறிந்திருக்கிறோமே. நீங்
களே நன்றாய் அறிந்திருக்கிற மற்ற அனேகரு
டைய வரலாறுகள் இருக்கட்டும். அர்ச். ஆசீர்
வாதேந்திரருடைய சீஷனாகிய மவுருஸ் என்ப
வர் கிறோஷ்டருடைய கட்டளையால் ஒரு ஏரி
நீரில் இறங்கியும் அமிழ்ந்திப் போகாதிருந்தா
ரே; இன்னொருவர் ஒரு பெண் சிங்கத்தைப்
பிடித்துவர கிறோஷ்டரால் கற்பிக்கப்பட்ட
போது அதை அவர் கையால் பிடித்து இழுத்
துக்கொண்டு வந்தாரே. ஆகையால் இப்படி
நமது புத்தியைக் கீழ்ப்படுத்தும் வகையானது
கிறோஷ்டர் நமக்குக் கற்பிக்கும் காரியங்கள் எல்
லாவற்றையும் மறுபேச்சுப் பேசாமல் அங்கீ
கரித்து ஏற்றுக்கொண்டு செய்துமுடிப்பதாம்.
இது அர்ச்சியசிஷ்டவர்களுக்குள் நடந்துவந்த
சாதாரண வழக்கமாயிருப்பதுமல்லாமல், பாவ
ம் நிச்சயமாய் நேரிடாதென்று தோன்றும் விஷ
யங்களிலே எல்லாம் உத்தம கீழ்ப்படிதலை
அடைய ஆசையுள்ள சகலரும் பாவித்து நடக்
கவேண்டிய வகை இதுவாம்.

19. கிறோஷ்டருடைய அபிப்பிராயத்துக்கு
விரோதமானது ஏதாவது உங்கள் புத்தியில்
வந்தால் அதனால் நீங்கள் பின்தாங்கவேண்டிய
தில்லை. தாழ்ச்சியோடு அதை சர்வேசுரனுக்கு

ஒப்புக்கொடுத்து வேண்டிக்கொண்ட பிறகு அதைச் சிரேஷ்டருக்குத் தெரியப்படுத்தவேண்டுமென்று தோன்றினால் அவருக்குச் சொல்லிக்காட்டலாந்தான். ஆகிலும் உங்கள் சுயபட்சமும் உங்கள் சுய புத்தியும் உங்களை ஏய்த்துப்போடாதபடிக்கு, நீங்கள் அநுசரிக்கவேண்டிய எச்சரிக்கை என்னவென்றால், அந்தக் காரியத்தைச் சொல்லிக்காட்டுவதற்கு முந்தியும், பிந்தியும், குறிக்கப்பட்ட காரியத்தைச் செய்வதும் விட்டுவிடுவதுஞ் சரியே என்பதிலும், எது எது நல்லதென்று சிரேஷ்டருக்குத் தோன்றுமோ அதெல்லாவற்றையும் உத்தமமென்று நீங்கள் நினைத்து அங்கீகரிப்பதிலும் நீங்கள் வித்தியாசமற்றவர்களாயிருக்க வேண்டும்.

20. கீழ்ப்படிதலின் விஷயத்தைப்பற்றி நாம் இப்போது சொன்னது சகல சாதாரண மனிதரும் தங்கள் சமீப சிரேஷ்டர்கள் மட்டிலும், மடாதிபதி முதலிய அவ்விடத்துக்குரிய சிரேஷ்டர்கள்* தங்கள் தேசாதிபதி சிரேஷ்டர்கள் (Provincials) மட்டிலும், இவர்கள் சபை அதிசிரேஷ்டர் (General) மட்டிலும், இவர் தமக்கு மேலதிகாரியாக சர்வேசுரனால் பூவுலகில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் திவ்விய ஸ்தானாதிபதி (Vicar) ஆனவர்மட்டிலும் அநுசரித்து நடந்துகொள்ளவேண்டிய வகையாம். இதனால் அந்தஸ்துத் தரங்களுக்குரிய உத்தம வித்தியாசம் விளங்கிச் சிநேக சமாதானம் நிலைத்திருக்க



வதுவாகும். இதில்லாவிட்டால் நமது சேசசபையாவது மற்றெந்த சபையாவது ஆண்டு நடத்தப்படவும் நிலைபெறவும் மாட்டாது. சகல காரியங்களையும் சீராய் ஒழுங்குப்படுத்துவதில் தாழ்ந்த தரம் மத்திய தரத்துக்கும், மத்திய தரம் உயர்ந்த தரத்துக்கும், அதது தத்தம் முடிவுக்கும் இசைந்து ஒத்துவர சர்வேசுரன் உபயோகித்துக்கொள்ளும் நடபடிக்கை இதுவே. சம்மனசுகளுக்குள் ஒரு விலாச சபை, மற்றொன்றுக்குப் பணியுஞ் சிரவணமும், தத்தம் இடத்திலும் ஸ்திதியிலும் சென்றமையும் சகல சலன வஸ்துக்கள், வானசோதிகள், இவற்றினுடைய ஒழுங்கு முறையும் உண்டாவது இவ்விதமே. அந்த வஸ்துக்களின் சுழற்சி நடையும் ஓட்டமும் ஒரு பெரிய காரணத்தால் மற்றுஞ் சிறிய வஸ்துக்களுக்குப் படிப்படியாய் ஒழுங்கு முறையோடே இறங்கி வருகிறதும் இவ்விதமே. அப்படியே பூலோகத்திலும் ஒழுங்கமைந்த சகல இராச்சியங்களிலும் சத்திய திருச்சபை அரசாட்சியை நடத்தும் கூட்டத்திலும் நடப்பதும் இவ்விதமே. ஏனெனில் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களும் அவர்களுடைய தொழில்களும் எல்லாம் நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரின் பொதுப் பிரதிநிதி ஒருவரால் உண்டாகின்றன. இந்தக் குணகுணமும் இதற்குரிய ஒழுங்கும் எவ்வளவுக்கு அதிக நுணுக்கமாய் அநுசரிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கு அந்த அர

சாட்சி முழுதும் உத்தமமாயிருக்கும். அதற்கு விரோதமாய் மேற்படி ஒழுங்கை அசட்டைபண்ணினதினால் எவ்வளவோ கனமான சேதபாதங்கள் பற்பல சபைகளுக்கு நேரிட்டதென்று அறியாதவர் ஒருவருமில்லை. ஆகையால் நமது கர்த்தரால் அதிகாரம்பெற்று நாம் நடத்திவரும் இந்தச் சேசுசபையிலும் இந்தப் புண்ணியமானது சுறுசுறுப்போடு அநுசரிக்கப்படவும், நமது சபையின் நன்மையும் சுகக்ஷேமமும் முழுதும் இதிலே சார்ந்திருப்பதுபோல, உத்தமமாய் அது செழித்தோங்கவும் நாம் தாற்பரியமாயிருக்கிறோம்.

21. ஆகையால் நமது நிருபம் துவக்கின பொருளாலேயே முடிவுபெறத்தக்கதாக நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரைப்பற்றி நாம் உங்களைக் கேட்டுக்கொள்வதென்னவென்றால்: கீழ்ப்படிதலைப் படிப்பிக்கும் உபாத்தியாயராகவும், அந்தப் புண்ணியத்துக்கு மாதிரிகையாகவும் தம்மைத்தாமே தந்தருளின சுவாமியைக்குறித்து, நீங்களும் அந்தப் புண்ணியத்தை அடைவதில் உங்கள் மனச் சக்திகளை எல்லாம் உபயோகிப்பீர்களென்று எண்ணுகிறோம். இதற்காக உங்கள் ஆத்துமத்தின் அதியுத்தமமும் வருத்தமுமான அம்சங்களாகிய உங்கள் புத்தி மனதை முழுதும் கீழ்ப்படுத்தி, இப்படிப்பட்ட மகிமையுள்ள ஜெயத்தின்பேரில் ஆசை ஆவலுள்ளவர்களாகி, உங்களை ஜெயித்தடக்க முயலுவீர்களென்று நம்பியிருக்



கிறோம். ஆகையால் சர்வவல்லபரான நமது ஆண்டவர்பேரில் உங்களுக்குள்ள உண்மையான அறிவினாலும் ஸ்திரமான நேசத்தாலும் அவர்மட்டில் நீங்கள் முழுப்பற்றுதல் அடைந்து இரு யாத்திரையென்னும் இப்பிரபஞ்ச ஜீவிய காலமெல்லாம் அவராலே நீங்கள் ஆண்டு நடத்தப்படவும் விரும்புகிறோம். இப்படியாய் உங்கள் மாதிரிகையாலும் ஞானயேதுகரத்தாலும் சுகிர்த நலம்பெற்ற மனிதரோடுகூட உங்களையும் அவர் நித்திய பேரின்ப பாக்கியத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பாராக.

உங்கள் செபதபத்தில் நமக்காக நீங்கள் வேண்டிக்கொள்ள மிகவும் உருக்கமாய் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

1553-௵ மார்ச்சு-௴ 26-௳
உரோமாபுரி.





# இவ்வியநற்கருணை ஆசீர்வாத நேரத்திலும் மற்ற பொதுவான சமயங்களிலும் பாடப்படும் இலத்தின் பாட்டுகள்.

## 1. ஓ! சாலுத்தாரிஸ் ஒஸ்தியா.

1. ஓ! சாலுத்தாரிஸ் ஒஸ்தியா,
குவே சேலி பாந்திஸ் ஒஸ்தியும்,
பெல்லா பிரேமுந்த் ஒஸ்திலியா,
தா ரோபுர் ஃபெர் ஔக்ஸீலியும்.

2. ஊனித் திரினோக்குவே தோமினோ
ஸித் செம்பித்தேர்னா குளோரியா,
குயி வீத்தாம் சினே தேர்மினோ,
நோபிஸ் தோனெத் இன் பாத்ரியா.

ஆமென்.

## 2. லெளதா சியோன்.

1. லெளதா சியோன், சால்வாத்தோரெம், லெளதா தூசெம் எத் பாஸ்தோரெம், இன் ஹிம்மிஸ் எத் காந்திசிஸ்.



2. குவாந்தும் போத்தெஸ், தாந்தும் ஔதே: குய்யா மாஜோர் ஒம்னி லெளதே, நெக் லெளதாரே ஸுஃபிசிஸ்.
3. லெளதிஸ் தேமா ஸ்பேசியாலிஸ், பானிஸ் வீவுஸ் எத் வீத்தாலிஸ் ஹோதியே புரோபோனித்துர்.
4. குவெம் இன் சாக்ரே மென்சா சேனே, துர்பே ஃபிராத்ரும் துவோதேனே தாத்தும் நோன் அம்பீஜித்துர்.
5. சித் லெளஸ் ப்லேனா, சித் சோனோரா, சித் ஜுக்குந்தா, சித் தெக்கோரா மெந்திஸ் ஜுபிலாசியோ.
6. தியெஸ் எனிம் சோலம்னிஸ் ஆஜித்துர், இன் குவா மென்சே பிரிமா ரெக்கொலித்துர் ஹுஜுஸ் இன்ஸ்திதுசியோ.
7. இன் ஹாக் மென்சே நோவி ரேஜிஸ், நோவும் பாஸ்கா நோவே லேஜிஸ், பாசே வேத்துஸ் தெர்மினாத்.
8. வேத்துஸ்தாத்தெம் நோவித்தாஸ், அம்ப்ராம் ஃபூகாத் வேரித்தாஸ், நோக்த்தெம் லுக்ஸ் எலிமினாத்.
9. குவோத் இன் சேனா கிறீஸ்துஸ் ஜெஸ்ஸித், ஃபாசியெந்தும் ஹோக் எக்ஸ்பிரசித் இன் சுயி மெமோரியாம்.
10. தொக்தி சாக்ரிஸ் இன்ஸ்திதூத்திஸ், பானெம், வீனும், இன் சாலூத்திஸ் கொன்செக்ராமுஸ் ஒஸ்தியாம்.

11. தோக்மா தாத்துர் கிறீஸ்தியானிஸ், குவோத் இன் கார்னெம் த்ரான்சித் பானிஸ், எத் வீனும் இன் சாங்குயினெம்.

12. குவோத் நொன் காப்பிஸ் குவோத் நொன் வீதெஸ், அனிமோசா fவிர்மாத் fவீதெஸ், பிரேத்தர் ரேரும் ஓர்தினெம்.

13. சுப் தீவர்சிஸ் ஸ்பேசியேபுஸ், சிக்னிஸ் தாந்தும், எத் நொன் ரேபுஸ், லாத்தெந்த் ரெஸ் எக்சிமியே.

14. காரோ சிபுஸ், சாங்குயிஸ் போத்துஸ், மானெத் தாமென் கிறீஸ்துஸ் தோத்துஸ் சுப் உத்ராக்குவே ஸ்பேசியே.

15. ஆ சுமெந்தே நொன் கொன்சிசுஸ், நொன் கொன்fவிராக்துஸ், நொன் திவிசுஸ், இந்தேஜர் அக்சிப்பித்துர்.

16. சுமித் ஊனுஸ், சுமுந்த் மில்லே: குவாந்தும் இஸ்தி, தாந்தும் இல்லே: நெக் சும்த்துஸ் கொன்சுமித்துர்.

17. சுமுந்த் போனி, சுமுந்த் மாலி: சோர்த்தே தாமென் இன்எக்குவாலி, வீத்தே வெல் இந்தேரித்துஸ்.

18. மோர்ஸ் எஸ்த் மாலிஸ், வீத்தா போனிஸ், வீதே பாரிஸ் சும்சியோனிஸ், குவாம் சித் திஸ்பார் எக்சித்துஸ்.

19. fவிராக்த்தோ தேமும் சாக்ராமெந்தோ, நே வாசில்லெஸ், செத் மெமெந்தோ, தாந்தும் எஸ்ஸே சுப் fவிராக்மெந்தோ குவாம் தோத்தோ தேஜித்துர்.

20. நுல்லா ரேயி fவித் சிஸ்ஸூரா, சிக்னி தாந்தும் fவித் fவிராத்தூரா: குவா நெக் ஸ்தாத்துஸ், நெக் ஸ்தாத்தூரா சிக்னாத்தி மினுயித்துர்.

21. எக்சே பானிஸ் ஆன்ஜெலோரும், fவாக்துஸ் சிபுஸ் வியாத்தோரும்: வேரே பானிஸ் fவிலியோரும், நொன் மித்தெந்துஸ் காணிபுஸ்.

22. இன் fவீகுரிஸ் பிரேசிக்னாத்துர், கும் ஈசாக் இம்மோலாத்துர்: ஆக்னுஸ் பாஸ்க்கே தெப்புத்தாத்துர்: தாத்துர் மன்னா பாத்ரிபுஸ்.

23. போனே பாஸ்தோர், பானிஸ் வேரே, ஜேசு, நோஸ்த்ரி மிசெரேரே: து நோஸ் பாசே, நோஸ் துவேரே: து நோஸ் போனா fவாக் வீதேரே இன் தெற்ரா வீவென்சியும்.

24. து, குயி குந்தா சிஸ் எத் வாலெஸ், குயி நோஸ் பாசிஸ் இக் மோர்த்தாலெஸ்: துவோஸ் இபி கொம்மென்சாலெஸ், கோஹேரேதெஸ், எத் சொதாலெஸ் fவாக் சாங்தோரும் சீவியும். ஆமென்.

---

## 3. ஆவே மாரீஸ் ஸ்தெல்லா.

1. ஆவே மாரீஸ் ஸ்தெல்லா,
தேயி மாத்தெர் ஆல்மா,

ஆத்குவே செம்ப்பர் வீர்கோ,
fேவலிக்ஸ் சேலி போர்த்தா.

2. சூமென்ஸ் இல்லுத் ஆவே,
காபிரியேலிஸ் ஒரே,
fுவந்தா நோஸ் இன் பாசே,
மூத்தான்ஸ் எவே நோமென்.

3. ஸொல்வே விங்க்ளா ரேயிஸ்,
புரோfெவர் லூமென் ஸெஸிஸ்,
மாலா நோஸ்த்ரா பெல்லே,
போனு குந்த்தா போஸ்ஸே.

4. மோன்ஸ்த்ரா தே எஸ்ஸே மாத்ரம்,
சூமாத் பேர் தே பிரெசெஸ்,
குயி புரோ நோபிஸ் நாத்துஸ்,
தூலித் எஸ்ஸே தூவுஸ்.

5. வீர்கோ சிங்குலாரிஸ்,
இன்த்தெர் ஒமென்ஸ் மீத்திஸ்,
நோஸ் குல்ப்பிஸ் சொலூத்தோஸ்,
மீத்தெஸ் fாக் எத் காஸ்தோஸ்.

6. வீத்தாம் ப்ரேஸ்தா பூராம்,
ஈத்தெர் பாரா தூத்தும்,
உத் வீதென்தெஸ் ஜேஸூம்,
ஸெம்ப்பெர் கொல்லே தேமுர்.

7. ஸித் லௌஸ் தேயோ பாத்ரி,
சும்மோ கிறீஸ்தோ தேக்குஸ்,
ஸ்பீரித்தூயி சாங்த்தோ,
திரீபுஸ் ஒனோர் ஊனுஸ். ஆமென்.



## 4. அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனை.

கீறியே எலேயிசன்.
கிறீஸ்தே எலேயிசன்.
கீறியே எலேயிசன்.
கிறீஸ்தே ஔதி நோஸ்.
கிறீஸ்தே எக்ஸவுதி நோஸ்.
பாத்தெர் தே சேலிஸ் தேயுஸ்.
fீலி ரெதெம்த்தோர் முந்தி தேயுஸ்,
ஸ்பீரித்துஸ் சாங்த்தே தேயுஸ்,
சாங்த்தா திரீனித்தாஸ் ஊனுஸ் தேயுஸ்.
மிசெரே நோபிஸ்.

சாங்த்தா மரியா,
சாங்த்தா தேயி ஜெனித்திரிக்ஸ்,
சாங்த்தா வீர்கோ வீர்ஜினும்,
மாத்தெர் கிறீஸ்தி,
மாத்தெர் திவீனே கிருசியே,
மாத்தெர் பூரிஸ்ஸிமா,
மாத்தெர் கஸ்தீஸ்ஸிமா,
மாத்தெர் இன்வியோலாத்தா,
மாத்தெர் இன்தெமராத்தா,
மாத்தெர் அமாபிலிஸ்,
மாத்தெர் அத்மிராபிலிஸ்,
மாத்தெர் போனி சொன்சீலியி
மாத்தெர் கிரேயாத்தோரிஸ்,
மாத்தெர் சால்வாத்தோரிஸ்,
வீர்கோ புருதென்திஸ்ஸிமா,
வீர்கோ வெனேராந்தா,
வீர்கோ பிரேதிக்காந்தா,
வீர்கோ போத்தென்ஸ்,
வீர்கோ கிளெமென்ஸ்,
வீர்கோ fீதேலிஸ்,
ஸ்பேக்குலும் ஜுஸ்திசியே,
சேதெஸ் ஸாப்பியென்ஸியே,
ஓரா ப்ரோ நோபிஸ்.

கௌஸா நோஸ்திரே லெத்திஸியே,
வாஸ் ஸ்பிரீத்துவாலே,
வாஸ் ஒனோராபிலே,
வாஸ் இன்சிக்னே தேவோஸியோனிஸ்,
ரோஸா மிஸ்திக்கா,
துர்ரிஸ் தாவீதிக்கா,
துர்ரிஸ் எபூர்னெயா,
தோமுஸ் ஔரெயா,
ஃபெதெரிஸ் ஆர்க்கா,
ஜானுவா சேலி,
ஸ்தெல்லா மத்தூதீனா,
சாலுஸ் இன்ஃபிர்மோரும்,
ரெஃபூஜியும் பெக்காத்தோரும்,
கொன்ஸொலாத்ரிக்ஸ் அஃப்ஃபிலிக்த்தோரும்,
அவுக்ஸீலியும் கிறீஸ்தியானோரும்,
ரெஜீனா ஆஞ்ஜெலோரும்,
ரெஜீனா பாத்ரியார்க்காரும்,
ரெஜீனா புரோஃபேத்தாரும்,
ரெஜீனா அப்போஸ்தொலோரும்,
ரெஜீனா மார்த்திரும்,
ரெஜீனா கொன்ஃபெஸ்ஸோரும்,
ரெஜீனா வீர்ஜீனும்,
ரெஜீனா சங்த்தோரும் ஒம்னியும்,
ரெஜீனா சினே லாபே ஒரிஜினாலி கொன்ஸெப்தா,
ரெஜீனா சாக்ராத்திஸ்ஸிமி ரோஸாரீயி,

ஓரா ப்ரோ நோபிஸ்.

ஆக்னுஸ் தேயி குயி தோல்லிஸ் பெக்காத்தா முந்தி, பார்சே நோபிஸ் தோமினே.

ஆக்னுஸ் தேயி குயி தோல்லிஸ் பெக்காத்தா முந்தி, எக்ஸவுதி நோஸ் தோமினே.

ஆக்னுஸ் தேயி குயி தோல்லிஸ் பெக்காத்தா முந்தி, மிசெரேரே நோபிஸ்.



ஞ.—ஓரா ப்ரோ நோபிஸ் சாங்தா தேயி ஜெனித்ரிக்ஸ்.

சீ.—உத் திக்னி எஃப்ஃபிசியாமூர் புரோமிஸ்ஸியோனிபுஸ் கிறிஸ்தி.

(ஓரேமுஸ்)................................ஆமென்.

## 6. தாந்தும் எர்கோ.

தாந்தும் எர்கோ சாக்ராமெந்தும்
வெனரேமூர் செர்னுயி;
எத் ஆந்திக்கும் தொக்குமெந்தும்
நோவோ செதாத் ரீத்துயி:
பிரெஸ்தெத் ஃபீதெஸ் ஸுப்ளெமெந்தும்
ஸென்ஸுவும் தெஃபெக்த்துயி.

ஜெனித்தோரி, ஜெனித்தோக்குவே
லௌஸ் எத் ஜூபிலாஸியோ;
ஸாலுஸ், ஒனோர், வீர்த்துஸ் குவோக்குவே
ஸித் எத் பெனெதிக்ஸியோ:
புரோஸெதெந்தி ஆப் உத்ரோக்குவே
கொம்பார் ஸித் லௌதாஸியோ. ஆமென்.

ஞ.—பானெம் தே ஸேலோ பிரெஸ்திதிஸ்தி எயிஸ். (அல்லேலுயா.)

சீ.—ஓம்னெ தெலெக்தாமெந்தும் இன் ஸெ ஹாபெந்தெம். (அல்லேலுயா.)

(ஓரேமுஸ்)................................ஆமென்.

## 7. லௌதாத்தே தோமினும்.

லௌதாத்தே தோமினும், ஓம்னெஸ் ஜென்தெஸ்: லௌதாத்தே எயும், ஓம்னெஸ் போப்புலி:

சோனியாம் கொன்fிர்மாத்தா எஸ்த் குப்பெர்னோஸ் மிஸெரிகோர்தியா எஜூஸ்: எத் வெரித்தாஸ் தோமினி மானெத் இன் எத்தேர்னும்.

குளோரியா பாத்ரி, எத் fீலியோ, எத் ஸ்பிரீத்துயி ஸாங்த்தோ.

ஸீக்குத் எருத் இன் பிரின்சிப்பியோ, எத் நுங்க், எத் ஸெம்ப்பெர், எத் இன் ஸேக்குலா ஸேக்குலோரும்.

ஆமென்.

## 8. தே தேயும்.

தே தேயும் லௌதாமுஸ் * தே தோமினும் கொன்fித்தேமூர்.

தே எத்தேர்னும் பாத்ரெம் * ஓம்னிஸ் தெர்ரா வெனேராத்துர்.

தீபி ஓம்னெஸ் ஆஞ்ஜெலி * தீபி ஸேலி, எத் யூனிவெர்ஸெ பொத்தெஸ்தாத்தெஸ்.

தீபி கெருபீம் எத் ஸெராfீம் * இன்செஸ்ஸாபிலி வோஸே புரோக்ளாமாந்த்.

ஸாங்த்துஸ், ஸாங்த்துஸ், ஸாங்த்துஸ் * தோமினுஸ் தேயுஸ் ஸபாஓத்.

பிளேனி ஸுந்த் ஸேலி எத் தெர்ரா * மாஜெஸ்தாத்திஸ் குளோரியே தூவே.

தே குளோரியோஸுஸ் * அப்போஸ்தோலோரும் கோருஸ்.

தே புரோfேத்தாரும் * லௌதாபிலிஸ் நூமெருஸ்.

தே மார்த்திரும் காந்திதாத்துஸ் * லௌதாத் எக்ஸெர்ஸித்துஸ்.



தே பேர் ஓர்பெம் தெர்ராரும் * ஸாங்த்தா கோன்fித்தேத்துர் எக்லேஸியா.

பாத்ரெம் * இம்மென்ஸெ மாஜெஸ்தாத்திஸ்.

வெனெராந்தும் தூவும் வேரும் * எத் ஊனிக்கும் fீலியும்.

ஸாங்த்தும் கோக்குவே * பாராக்ளித்தும் ஸ்பிரீத்தும்.

தூ ரெக்ஸ் குளோரியே * கிறீஸ்தே.

தூ பாத்ரிஸ் * ஸெம்பித்தேர்னுஸ் எஸ்த் fீலியுஸ்.

தூ ஆத் லிபெராந்தும் ஸுஸெப்தூருஸ் ஓமினெம் * நோன் ஹொர்ருயிஸ்தி வீர்ஜினிஸ் உத்தெரும்.

தூ தெவிக்தோ மோர்த்திஸ் அக்குலெயோ * அப்பேருயிஸ்தி கிரேதெந்திபுஸ் ரெக்ஞ ஸேலோரும்.

தூ ஆத் தெக்ஸ்தெராம் தேயி ஸேதெஸ் * இன் குளோரியா பாத்ரிஸ்.

ஜூதெக்ஸ் கிரேதெரிஸ் * எஸ்ஸெ வெந்தூருஸ்.

தே எர்கோ, குவேசுமுஸ் தூயிஸ் fாமுலிஸ் ஸுப்வெனி * குவோஸ் பிரேஸியோஸோ ஸாங்குயினே ரெதெமிஸ்தி.

எத்தேர்னா fாக் கும் ஸாங்த்திஸ் தூயிஸ் * இன் குளோரியா நூமெராரி.

ஸால்வும் fாக் போப்புலும் தூவும், தோமினே * எத் பெனதிக் ஹெரேதித்தாத்தி தூவே.

எத் ரேஜெ வயோஸ், எத் எச்ஸ் தொல்லே இல்லோஸ்
* உஸ்குவே இன் எத்தெர்னும்.
பெர் ஸிங்குலோஸ் தியெஸ் * பெனெதிஸிமுஸ் தே.
எத் லௌதாமுஸ் நோமென் துவும் இன்சேக்குலும்
* எத் இன் ஸேக்குலும் ஸேக்குலி.
திக்னரே, தோமினெ, தியெ இஸ்தோ * ஸீனெ பெக்காத்தோ நோஸ் குஸ்தோதிரே.
மிஸெரேரே நோஸ்திரி, தோமினே * மிஸெரேரே நோஸ்திரி.
fியாத் மிஸெரிக்கோர்தியா துவா, தோமினே, ஸுப்பெர் நோஸ் * குவெம் ஆத்மொதும் ஸ்பேராவிமுஸ் இன் தே.
இன் தே, தோமினெ, ஸ்பெராவி * நோன் கொன்fுந்தார் இன் எத்தேர்னும்.
கு.—பெனெதிக்காமுஸ் பாத்ரெம் எத் fீலியும் கும் ஸாங்க்தோ ஸ்பீரித்து.
ஜ.—லௌதேமுஸ் எத் ஸுப்பெர் எக்ஸால்த்தேமுஸ் எயும் இன் ஸேக்குலா.
(ஓரேமுஸ்)..................................ஆமென்.

## 9. வேனி க்ரேயாத்தோர் ஸ்பீரித்துஸ்.

1. வேனி க்ரேயாத்தோர் ஸ்பீரித்துஸ்,
மெந்தெஸ் துவொரும் விஸித்தா,
இம்ப்லே ஸுப்பெர்னா க்ராஸியா
குவே து க்ரேயாஸ்தி பெக்தோரா.
2. குவி திஸெரிஸ் பாராக்லித்துஸ்,
அல்திஸ்ஸிமீ தோனும் தேயி,



fோன்ஸ் வீவுஸ் இக்னிஸ் காரித்தாஸ்,
எத் ஸ்பிரித்தாலிஸ் உங்ஸியோ.
3. து ஸெப்திபொர்மிஸ் முனெரெ,
திஜித்துஸ் பாத்தெர்னே தெக்ஸ்த்தெரே,
து ரித்தெ ப்ரொமிஸ்ஸும் பாத்ரிஸ்,
ஸெர்மோனெ தித்தான்ஸ் குத்துரா.
4. அக்ஸெண்தெ லுமென் ஸென்ஸிபுஸ்,
இன்புந்தெ அமோரெம் கோர்திபுஸ்,
இன்fிர்மா தெஸ்த்ரி கொர்போரிஸ்,
வீர்த்துத்தெ fிர்மான்ஸ் பேர்ப்பெத்தி.
5. ஒஸ்த்தெம் ரெபேல்லாஸ் லூங்ஜியுஸ்,
பாஸெம்குவெ தோனெஸ் ப்ரோத்தினுஸ்,
துக்தோரே ஸிக் தே ப்ரேவியொ,
வித்தேமுஸ் ஒம்னெ நோக்ஸியும்.
6. பெர் தே ஸியாமுஸ் தா பாத்ரெம்,
நோஸ்காமுஸ் அத்குவெ fீலியும்,
தெகுவெ உத்ரியுஸ்குவே ஸ்பீரித்தும்,
க்ரேதாமுஸ் ஒம்னி தெம்பொரெ.
7. தேயோ பாத்ரி ஸித் க்ளோரியா,
எஜுஸ்குவே ஸோலி fீலியோ
கும் ஸ்பிரித்து பாராக்லித்தோ,
நுங் எத் பெர் ஒம்னே ஸேக்குலும்—ஆமென்.

## 10. இன் எக்ஸித்து இஸ்ரயேல்.

(சங்கீதம் 113.)

1. இன் எக்ஸித்து இஸ்ராயேல் தே எஜிப்தோ * தோமுஸ் ஜாகோப் தே போப்புலோ பார்பாரோ.

2. fபாக்த்தா எஸ்த் ஜூதெயா ஸாங்திfபிகா
ஸியோ எஜூஸ் * இஸ்ருயேல் போ
தேஸ்தாஸ் எஜூஸ்.

3. மாரே வீதித் எத் fபூஜித் * ஜோர்தானிஸ்
கொன்வெர்ஸுஸ் எஸ்த் ரெத்ரோர்ஸும்.

4. மோந்தெஸ் எக்ஸுல்தாவெருந்த் உத் ஆரி
யெத்தெஸ் * எத் கொல்லெஸ் ஸிக்குத்
ஆக்ஞியோவியும்.

5. குவித் எஸ்த் தீபி மாரே ருவோத் fபூஜிஸ்தி
* எத் து ஜோர்தானிஸ், குயியா கொன்
வெர்ஸுஸ் யெஸ் ரெத்ரோர்ஸும்.

6. மோந்தெஸ், எக்ஸுல்தாஸ்திஸ் ஸிக்குத்
ஆரியெத்தெஸ், * எத் கொல்லெஸ்,
ஸிக்குத் ஆக்னியோவியும்?

7. ஆ fபாஸியே தோமினி மோத்தா எஸ்த்
தெர்ரா * ஆ fபாஸியே தேயி ஜாகோப்.

8. குயி கொன்வெர்த்தித் பெத்ராம் இன்
ஸ்தாக்ஞா ஆக்குவாரும் * எத் ருபெம்
இன் fபோந்தெஸ் ஆக்குவாரும்.

9. நொன் நோபிஸ், தோமினே, நொன் நோ
பிஸ் * ஸெத் நோமினி துஓ தா க்ளோரி
யாம்.

10. ஸுப்பெர் மிஸெரிகோர்தியா துவா எத்
வெரித்தாத்தே துஆ * நெக்குவாந்தோ
திக்காந்த் ஜெந்தெஸ்: உபி எஸ்த் தேயுஸ்
எயோரும்?



11. தேயுஸ் அவ்த்தெம் நோஸ்த்தேர் இன் ஸே
லோ * ஓம்னியா க்வேக்கும்க்குவே வோ
லுயித், fபேஸித்.

12. ஸிமுலாக்ரா ஜெந்ஸியும் ஆர்ஜெந்தும் எத்
அவ்ரும் * ஓப்பெரா மானும் உம் ஹோமி
னும்.

13. ஓஸ் ஹாபெந்த், எத் நோன் லோக்குவெந்தூர்
* ஒக்குலோஸ் ஹாபெந்த், எத் நோன்
வீதெபுந்த்.

14. அவ்ரெஸ் ஹாபெந்த், எத் நொன் அவ்தி
யெந்த் * நாரெஸ் ஹாபெந்த், எத் நொன்
ஓதொராபுந்த்.

15. மானுஸ் ஹாபெந்த், எத் நொன் பால்பா
புந்த் பேதெஸ் ஹாபெந்த், எத் நொன்
ஆம்புலாபுந்த் * நொன் க்லாமாபுந்த் இன்
குத் துரே ஸுஓ.

16. ஸிமிலெஸ் இல்லிஸ் fபியாந்த் குயி fபாஸி
யுந்த் ஏயா * எத் ஓம்னெஸ் குயி கொன்
fபிதுந்த் இன் ஏயிஸ்.

17. தோமுஸ் இஸ்ருயேல் ஸ்பெராவித் இன்
தோமினோ * அஜூத்தோர் எயோரும்
எத் ப்ரோதெக்தோர் எயோரும் எஸ்த்.

18. தோமுஸ் ஆரோன் ஸ்பெராவித் இன் தோ
மினோ * அஜூத்தோர் எயோரும் எத்
ப்ரோதெக்தோர் எயோரும் எஸ்த்.

19. குயி திமெந்த் தோமினும், ஸ்பெராவெருந்த் இன் தோமினோ * அஜூத்தோர் எயோரும் எத் புரோதெக்தோர் எயோரும் எஸ்த்.

20. தோமினுஸ் மெமோர் fவூயித் நோஸ்த்ரீ * எத் பெனெதிக்ஸித் நோபிஸ்

21. பெனெதிக்ஸித் தோமுயி இஸ்ராயேல் * பெனெதிக்ஸித் தோமுயி ஆரோன்.

22. பெனெதிக்ஸித் ஒம்னீபுஸ் குயி தீமெந்த் தோமினும் * புஸில்லிஸ் கும் மாஜோரிபுஸ்.

23 அத்ஜீஸியாத் தோமினுஸ் ஸூப்பெர் வோஸ் * ஸூப்பெர் வோஸ், எத் ஸூப்பெர் fபீலியோஸ் வெஸ்த்ரோஸ்.

24. பெனெதிக்தி வோஸ் ஆ தோமினோ * குயி பெஸித் ஸேலும் எத் தெர்ராம்.

25. ஸேலும் ஸேலி தோமினோ * தெர்ராம் அவ்த்தெம் தெதித் fபீலியுஸ் ஹோமினும்.

26. நோன் மோர்த்துயி லவ்தாபுந்த் தே, தோமினே * நெக் குவே ஒம்னெஸ் குயி தெஸ்செந்துந்த் இன் இன்fபெர்னும்.

27. ஸெத நோஸ் குயி வீஸிமுஸ், பெனெதிஸிமுஸ் தோமினோ * எக்ஸ் ஹோக் னுங், எத் உஸ்குவே இன் ஸேக்குலும்.

28. குளோரியா பாத்ரி எத் fபீலியோ * எத் ஸ்பீரித்துயி ஸாங்தோ.



29. ஸிக்குத் எராத் இன் ப்ரின்ஸிப்பியோ எத் னுங் எத் ஸெம்பெர் * எத் இன் ஸேக்குலா ஸேக்குலோரும், ஆமென்.

## 11. மிஸேரே.

(சங்கீதம் 50.)

1. மிஸேரே மேயி தேயுஸ், * ஸெக்குந்தும் மாக்னம், மிஸெரிகோர்தியாம் தூவாம்.

2. எத் ஸெக்குந்தும் முல்திதூதினெம் மிஸெராஸியோனும் துவாரும் * தேலே இனிகுயித்தாதெம் மேயாம்.

3. ஆம்பிலியுஸ் லாவா மே அப் இனிக்குவித்தாத்தே மேயா * எத் ஆ பெக்காத்தோ மேயோ முந்தா மே.

4. குவோனியாம் இனிக்குயித்தாதெம் மேயும் * எகோ கோக்னோஸ்கோ * எத் பெக்காதும் மேயாம் கொந்த்ரா மே எஸ்த் ஸெம்பெர்.

5. திபி ஸோலி பெக்காவீ, எத் மாலும் கோராம் தேfபெஸி * உத் ஜூஸ்திfபெஸெரிஸ் இன் ஸெர்மோனிபுஸ் துயிஸ், எத் விங்காஸ் கும் ஜூதிக்காரிஸ்.

6. எக்ஸே எனிம் இன் இனிகுயித்தாத்திபுஸ் கொன்ஸெப்துஸ் ஸூம் * எத் இன் பெக்காத்திஸ் கொன்ஸெபித் மெமாத்தர் மேயா.

7. எக்ஸே எனிம் வெரித்தாத்தெம் திலெக்ஸிஸ்தி * இன் ஸெர்த்தா எத் ஒக்குல்த்தா

ஸாப்பியன்ஸியே துவே மானிபெஸ்த் தாஸ்த்தி மீஹீ.

8. ஆஸ்பெர்ஜெஸ் மே ஹிஸ்ஸோப்போ, எத் முந்தாபோர் * லாவாபிஸ்மே, எத் ஸுப்பெர் னிவெம் தேயால்பாபோர்.

9. அவ்திதுயி மேயோ தாபிஸ் கவ்தியும் எத் லேத்திஸியா * எத் எக்ஸுல்தாபுந்த் ஒஸா ஹுமிலியாத்தா.

10. அவெர்த்தே பாஸியாம் தூஆம் ஆ பெக்காத்திஸ் மேயிஸ் * எத் ஒம்னெஸ் இனிக்குயித்தாத்தெஸ் மேயாஸ் தேலே.

11. கோர் முந்தும் க்ரேயா இன் மே தேயுஸ் * எத் ஸ்பீரித்தும் ரெக்த்தும் இன்னோவா இன் விஸ்ஸேரிபுஸ் மேயிஸ்.

12. நே புரோஜீஸியாஸ் மே ஆ ஃபாஸியே தூஆ * எத் ஸ்பீரித்தும் ஸாங்த்தும் தூவும் நே அவ்ஃபெராஸ் ஆ மே.

13. ரெத்தே மீஹி லேத்திஸியாம் ஸாலுத்தாரிஸ் தூயி * எத் ஸ்பீரித்து பிரின்ஸிப்பாலி கொன்ஃபிர்மா மே.

14. தொஸெபோ இனிக்குவோஸ் வியாஸ் தூஆஸ் * எத் இம்பீயி அத் தே கொன்வெர்தெந்தூர்.

15. லிபெரா மே தே ஸாங்குயினிபுஸ் தேயுஸ், தேயுஸ் ஸாலுத்திஸ் மேயே * எத் எக்ஸுல்த்தாபித் லிங்குவா மேயா ஜுஸ்தீஸியாம் தூஆம்.



16. தோமினே, லாபியா மேயா ஆப்பெரிஸ் * எத் ஓஸ் மேயும் அன்னுன்ஸியாபித் லவ்தெம் தூஆம்.

17. குவோனியாம் ஸி வோலுயிஸ்ஸெஸ், ஸாக்ரிஃபிஸியும் தேதிஸ்ஸெம் உத்திக்குவே * ஹோலோகாஸ்திஸ் நொன் தெலெக்த்தாபெரிஸ்.

18. ஸாக்ரிஃபிஸியும் தேயோ ஸ்பீரித்துஸ் கொந்த்ரிபுலாத்துஸ் * கோர் கொந்த்ரீத்தும் எத் ஹுமிலியாத்தும், தேயுஸ் நோன் தெஸ்பீஸியெஸ்.

19. பெனிக்னே ஃபாக், தோமினே, இன் போனா வோலுந்தாத்தே தூஆ ஸியோன் * உத் எதிபிசெந்தூர் முரி ஜெருஸலேம்.

20. துங்க் அக்செப்தாபிஸ் ஸாக்ரிஃபிஸியும் ஜுஸ்தீஸியே ஒப்லாஸியோனெஸ் எத் ஹோலோகாவ்ஸ்த்தா * துங்க் இம்போனெந்த் ஸுப்பெர் அல்த்தாரே தூஉம் வித்துலோஸ்.

21. குளோரியா பாத்ரீ எத்...

22. ஸிக்குத்......

## 12. மாக்னிபிகாத்.

1. மாக்னிஃபிகாத் : அனிமா மேயா தோமினும் :
2. எத் எக்ஸுல்தாவித் ஸ்பீரித்துஸ் மேயுஸ் : இன் தேயோ ஸாலுத்தாரி மேயோ.

3. குரீஸியா [illegible] ஹூமிலிதாத்தெம் ஆன் ஸில்லே சூவே: எக்ஸெ எனிம் எக்ஸ்ஹக்பேயாத் தாம் மே திசெந்த் ஓம்னெஸ் ஜெனராசியோனெஸ்.

4 க்வீயா fேசித் மீஹி மாக்ன குவீ போத்தென்ஸ் எஸ்த்: எத் ஸாங்த்தும் நோமென் எஜூஸ்.

5. எத் மிஸெரி கோர்தியா எஜூஸ் ஆ ப்ரோஜெனியே இன் ப்ரோஜெனியஸ்: திமெந்திபுஸ் எயும்.

6. fேசித் போத்தென்ஸியாம் இன் பிராகியோ சூவோ: திஸ்ப்பர்ஸித் சுப்பெர்போஸ் மெந்தே கோர்திஸ் சூயி.

7. தேப்போஸுயித் போத்தெந்தெஸ் தே ஸேதே: எத் எக்ஸல்தாவித் உமிலேஸ்.

8. எஸூரியெந்தெஸ் இம்ப்ளேவித் போனிஸ்: எத் திவித்தெஸ் திமிஸித் இனானெஸ்.

9. சுஸ்ஸெபித் இஸ்ராயேல் பூவெரும் சூவும்: ரெக்கோர்தாத்துஸ் மிஸெரிகோர்தியே சூவே.

10. ஸிக்குத் லோக்குத்துஸ் எஸ்த் ஆத் பாத்ரெஸ் நோஸ்த்ரோஸ்: ஆப்ரகாம் எத் ஸெமினி எஜூஸ் இன் சேக்குலா.

11. குளோரியா பாத்ரி, எத் fீலியோ, எத் ஸ்பிரீத்தூயி ஸாங்த்தோ.

12. சிக்குத் எறாத் இன் பிரின்ஸிப்பியோ, எத் நுங்க், எத் ஸெம்ப்பெர், எத் இன் ஸேக்குலா ஸேக்குலோரும். ஆமென்.



## 13. லிபேரா.

லிபெரா மே தோமினே தே மோர்த்தே எத்தெர்ன இன் தியே இல்லா த்ரமெந்தா * குவாந்தோ ஸேலி மோவெந்தி ஸுந்த் எத் தெர்ரா † தூம் வேனெரிஸ் ஜூதிக்காரே ஸேக்குலும் பெர் இக்னெம்.

திரமென்ஸ் fாக்துஸ் ஸூம் எகோ எத் திமெயோ தூம் திஸ் [illegible] வெனெரித் அத்குவே வெந்தூரா இரா * குவாந்தோ....

தியெஸ் இல்லா தியெஸ் இரே காலாமித்தாத்திஸ் எத் மீஸெரியே, தியெஸ் மாக்ன எத் [illegible] வால்தே. † தூம்வேனெரிஸ் ..

ரெகுயியெம் எத்தெர்னம் தோன எயிஸ் தோமினே எத் லுக்ஸ் பெர்பெத்துவா லூஸெயாத் எயிஸ். லிபெரா...

கீரியெ யெலேயிஸோன்
கிரிஸ்தே யெலெயிஸோன்
கீரியெ யெலேயிஸோன் ...(பாத்தர்...)

கு. எத் நே நோஸ்...
சி. ஸெத் லீபெரா நோஸ் ஆ மாலோ

கு. ஆயோர்த்தா...
சி. எஸுயெ தோமினே அனிமாம் எஜூஸ்
(அல்லது: அனிமாஸ் எயோரும்.)

கு. ரெக்குயிஸ் காத்.........
சி. ஆமேன்.

கு. தோமினே...

சி. எத் இலாமோர் மேயுஸ் அத்தேவேனியாத்

கு. தோமினுஸ்............

சி. எத்கும் ஸ்பிரித்து துஓ.

கு. ஒரேமுஸ்............

சி. ஆமென்.

கு. ரேக்குயியெம்............

சி. எத் லுக்ஸ் பெர்பெத்துவா லூசெயாத் எயிஸ்

கு. ரெக்குயியெஸ்கான் த் பாசே

சி. ஆமேன்.

### 14. பார்ஸே தோமினே.

பார்ஸே தோமினே பார்ஸே போப்புலோ, தூவோ ரே இன் எத்தெர்னும் இரொஸ்காரிஸ் நோபிஸ்.

(3-தரம்)

---

## பொருள் அட்டவணை.

—⁘—

பொருள். பக்கம்.

### முதல் காண்டம்.


எழுந்திருக்கும் வகையும், காலைச் செபமும் ... 1
விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகமுயற்சி ... 5
செப அப்போஸ்தல சபைக்குப் பொதுவான
செபம் ... ... ... ... 6
திரிகாலச் செபம் ... ... ... 7
நித்திரையொழுக்கம் ...
யாதொரு வேலை ஆரம்பிக்குமுன் சொல்ல ... 8
வேண்டிய செபம் ... ... ... 9
வேலை முடிந்தபின் செபம் ... ... 9
அசனத்துக்குமுன் சொல்லவேண்டிய செபம் 10
அசனத்துக்குப்பின் நன்றியறிந்த தோத்திரம்
அர்ச். அன்னம்மாளைக் குறித்த ... 11
மன்றாட்டு ... ... 16
அர்ச். அன்னம்மாள் பிரார்த்தனை ... 22
அர்ச். அன்னம்மாள் செபம் ... ... 24
அர்ச். சுவக்கின் பிரார்த்தனை ... ... 29
அர்ச். சுவக்கின் செபம் ... ... 30
அர்ச். வியாகுல மாதாவின் செபமாலை

அர்ச். வியாகுல மாதாவைக்குறித்துப் பாடல் ... 36
அர்ச். வியாகுல மாதாவின் பிரார்த்தனை ... 40
ஐம்பத்துமூன்றுமணிச் செபம் ... ... 43
ஐம்பத்துமூன்றுமணிச் செபம் செய்து முடிக்கிற வகையாவது ... ... ... 53
திருவைதயாபத்து மந்திரம் ... ... 54
அர்ச். பெர்நர்து தேவமாதாவை நோக்கி வேண்டின செபம் ... ... ... 57
அர்ச். தேவமாதாவினுடையவும் சகல அர்ச்சிய சிஷ்டவர்களுடையவும் பிரார்த்தனை ... 59
69-ம் சங்கீதம் ... ... ... 69
தேவமாதாவைக்குறித்துப் பாடல் ... 76
ஒவ்வொரு நாளிலும் தேவமாதாவைப் பார்த்து வேண்டிக்கொள்ளும் செபம் ... ... 80
அர்ச். தேவமாதா சுவாமியைப் புகழ்ந்து வசனித்த பத்து வாக்கியங்கள் ... ... 81
அர்ச். சூசையப்பருடைய எழு வியாகுலங்களையும் எழு சந்தோஷங்களையும் குறித்து மன்றாட்டு ... ... ... 83
அர்ச். சூசையப்பருக்குத் தோத்திரப்பாடல் ... 86
அர்ச். சூசையப்பரைக் குறித்து சுகிர்த மன்றாட்டு ... ... ... ... 88
அர்ச். சூசையப்பருக்கு தன்னை முழுதும் ஒப்புக்கொடுக்கிற செபம் ... ... 88
அர்ச். சூசையப்பரைக் குறித்து செபம் ... 90
நன்மரணமடைய அர்ச். சூசையப்பரைப் பார்த்து வேண்டிக்கொள்ளும் செபம் ... 91



பரிசுத்த பிதா 10-ம் பத்திநாதரால் அங்கீகரிக்கப்பட்ட அர்ச். சூசையப்பர் பிரார்த்தனை ... 93
பூசைக்குமுன் ஆயத்த செபம் ... ... 96
பூசை ஒப்புக்கொடுக்கவேண்டிய கருத்து ... 98
பூசை ஒப்புக்கொடுக்கிற செபம் ... ... 98
திவ்விய பூசை காணச் சுருக்கமான வகை ... 101
தேவநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கிறபோது செபம் ... ... ... 112
திவ்விய நற்கருணை வாங்குமுன் சேசுவை அழைத்தல் ... ... ... 113
சேசுநாதரை நோக்கி விடும் மூன்று நேசப் பெருமூச்சு ... ... ... 119
தக்க ஆயத்தத்தோடு தேவநற்கருணை வாங்குகிறதற்கு தேவமாதாவை நோக்கிக் கேட்கும் மூன்று மன்றாட்டு ... ... ... 120
திவ்விய நற்கருணை வாங்கினபின் செபம் ... 121
அர்ச். இஞ்ஞாசியார் செய்த செபம் ... 130
பெரிய புதன்கிழமை திரிகாலச் செபம் ... 131
பெரிய வியாழக்கிழமை பூசை செபம் ... 132
பெரிய வெள்ளிக்கிழமை காலை உற்சவம் 137
தேவமாதாவின் ஐந்து துயரத்தைக் குறித்து வேண்டிக்கொள்ளும் செபம் ... ... 159
சேசுவின் திரு இருதயத்திற்கு நவநாள் செபம் 161
அர்ச். பாப்பானவரால் புதிதாய் அங்கீகரிக்கப்பட்ட சேசுநாதருடைய திரு இருதய பிரார்த்தனை ... ... ... 163

சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய இருதயத்துக்குச் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்கு பரிகாரச் செபம் ... ... 165
முத். மார்கரீத் மரியம்மாள் உண்டாக்கின சேசுநாதர் திரு இருதயத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கிற செபம் ... ... ... 169
சேசுவின் திரு இருதயத்தை நோக்கி அர்ச். ஜெர்த்ருத்தம்மாள் தினந்தோறும் செபித்த செபம் ... ... ... 171
திவ்விய நற்கருணை சந்நிதியிலே வேண்டுதல் 172
மரண அவஸ்தைப்பட்ட சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய இருதயத்துக்கு செலுத்தத்தகும் பலனுள்ள செபம் ... ... 175
சேசுநாதருடைய திவ்விய இருதயத்துக்குத் தன்னை முழுதும் ஒப்புக்கொடுக்கிற செபம். 176
சேசுநாதருடைய திரு இருதயத்தின் செபமாலை 178
சேசுநாதர் முத். மார்கரீத் மரியம்மாளுக்கு தமது திரு இருதயத்தின் பேரில் பத்தியுள்ளவர்களுக்குக் கொடுத்த வார்த்தைப்பாடுகள் ... 181
அர்ச். சவேரியார் அஞ்ஞானிகள் மனந்திரும்புகிறதற்காக உண்டாக்கின செபம் ... 183
இலைபிரீத்துசாந்துவின் மந்திரம் ... ... 185
அம்பிர்தநாதரும், அகுஸ்தீநும் என்கிற அர்ச்சியசிஷ்டவர்கள் உண்டாக்கின தோத்திரப் பாடல் ... ... ... ..., 186
சுருக்கமான திவுவைப்பாதை ... ... 189
113-ம் சங்கீதம் ... ... ... 194



அவஸ்தைப் பிரார்த்தனை ... ... 197
ஆத்துமம் கேவுகிறபோது ... ... 201
ஆத்துமம் பிரிந்தவுடனே சொல்லுகிறது ... 202
அடக்கமனகாலத்தில் செய்யத்தகும் வேறு செபம் 206
கடைசிநாளிலே எல்லாவற்றையும் ஒப்புக்கொடுக்கும் செபம் ... ... ... 208

## இரண்டாம் காண்டம்.

தியானஞ் செய்யும் வகை ... ... 209
மரணத்துக்கு ஆயத்தம் ... ... 233
மரண ஒடுக்கநாளில் படுக்கிறதற்கு முந்தி செய்யவேண்டிய மரணத்துக்கு அமைவு பிரகரணம் ... ... ... 237
நல்ல மரணத்தின் அநுக்கிரகத்தைக் கேட்கிற செபம் ... ... ... ... 238
அர்ச். தேவமாதாவின் மந்திரமாலை ... 238
109-ம் சங்கீதம் ... ... ... 239
112-ம் ,, ... ... ... 211
121-ம் ,, ... ... ... 242
126-ம் ,, ... ... ... 244
147-ம் ,, ... ... ... 245
சேசுநாதருடைய திரு இருதயத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கிற செபம் ... ... 247
ஆத்தும சலைக்கு கொடுப்பதற்கான விவரம் ... 249
தியான காலங்களில்செய்யும் ஆத்தும சோதனை 252

## மூன்றாம் காண்டம்.

**1-ம் அதிகாரம்.** வார்த்தைப்பாட்டிலும் சன்னியாச அந்தஸ்தின் பேரிலும் பொதுவான விளக்கம் ... ... ... ... 255
**2-ம் அதிகாரம்.** தரித்திர வார்த்தைப்பாடாவது ... ... ... ... 259
**3-ம் அதிகாரம்.** விசுத்தத்துவ வார்த்தைப் பாட்டின் பேரிலும் கற்பென்கிற புண்ணியத்தின் பேரிலும் ... ... ... 265
**4-ம் அதிகாரம்.** கீழ்ப்படிதலின் வார்த்தைப் பாடாவது ... ... ... 267
நமது பரிசுத்த தந்தையாகிய அர்ச். இஞ்ஞாசியார் கீழ்ப்படிதலென்னும் புண்ணியத்தின் பேரில் எழுதியிருப்பது ... ... 272
திவ்விய நற்கருணை ஆசீர்வாத நேரத்திலும் மற்றும் பொதுவான சமயங்களிலும் பாடப்படும் இலத்தீன் பாட்டுகள் ... ... 298

முற்றிற்று.